



# பூக்குழி



## லக்ஷ்மி

# பூக்குழி

## 1

அன்று செவ்வாய்க்கிழமை. வழக்கத்தைவிடச் சற்று முன்னதாகவே அகல்யா விழித்துக் கொண்டு விட்டாள். மங்கலாக அறைக்குள் விடிவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. மெல்லத் திரும்பிப் பார்த்தாள். அந்தப் பெரிய ஹைதர் காலத்துத் தேக்குமரக் கட்டிலின் மீது வாயைப் பிளந்து கொண்டு பஞ்சரத்தினம் விடியற்காலை வேளையின் இனிமை கலந்த உறக்கத்திலே லேசாகக் குறட்டை எழுப்பிக் கொண்டிருந்தான். சப்தமிடாது தனது படுக்கையைச் சுருட்டிப் பெஞ்சியின் ஓரத்தில் சுவரை யொட்டினாற்போல் வைத்து விட்டு மெல்ல நடந்து கதவருகே வந்தாள்.

அந்த வீடு அவளது கணவனது பாட்டன் காலத்தில் கட்டப்பட்ட அழுத்தமானதொரு காரைக் கட்டிடம். கோயில் அடைப்புக் கதவுபோல வேலைப்பாடமைந்த தேக்கு மரத்தில் குறுக்குத் தண்டுகளின் மீது வெண்கலக் குமிழ்கள் பளபளத்தன. அந்தக் கதவின் தாழ்ப்பாளை நீக்கி மெல்லத் திறப்பதற்குள் அவள் தோள்பட்டையே கழன்றுவிடும் போன்ற கனம். வீட்டின் எல்லாக் கதவுகளுமே எக்கச்சக்க மானதொரு கனம். திருடன் இலேசில் உடைத்து விட

முடியாது. கோடாலி கொண்டு பிளந்து ஊரையே கூட்டி விட்டுத்தான் உள்ளே நுழைய முடியும். அப்படி ஒரு பாதுகாப்பு.

முன்கட்டு, பின்கட்டு என்று பழைய பாணியில் புழக்கடை வரை ஓடிய அந்தக் கட்டிடத்தில், தன் என்ஜினீயர் மூளையைச் செலவழித்துப் பலமாற்றங்கள் செய்திருந்தான் ராஜ்குமார். அனாவசியத் தடுப்புக்களை இடித்துத் தள்ளி விட்டுப் பெரியதொரு ஹால். அதற்கு எதிரும் புதிருமாக இரண்டு பெரிய அறைகள்-பின்னால் ஒரு தாழ்வாரம்-சமையலறை-பூஜையறை-சற்றுத் தள்ளி குளியலறை என்று வீட்டை மாற்றி, சீராகக் கட்டி விட்டிருந்தான். செங்கல் பாவிய தரை முழுவதையும் மொசைக்கினால் இழைத்து விட்டிருந்தான்.

தனக்குக் கல்யாணம் நிச்சயமானவுடன், உடனடியாகத் தங்கள் உபயோகத்துக்கென மொட்டையாக இருந்த மாடியில் ஒரு சிறு முன்னறையும், குளியலறையையும் உள்ளடக்கிக் கொண்ட பெரியதொரு படுக்கையறையும் கட்டிவிட்டிருந் தான். கட்டில்கள், மேஜை நாற்காலிகள், சோபாக்கள், ஜன்னலுக்கு அழகான திரைச்சீலை என்று பட்டணத்துப் பணக்காரர் வீட்டைப் போல் அலங்கரித்து விட்டிருந்தான். ஆறு மாதம்தான் அவர்கள் அந்த அறையை உபயோகித்தனர். அதற்குப் பின்னர் அது பூட்டிக் கிடந்தது.

திருநல்லூர் கிராமத்துக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னமே மின்விசை அமைப்பு வந்துவிட்டிருந்தது. அந்த வீட்டின் எந்தப் பகுதியிலும் அந்த வசதிக்குக் குறைவே இருக்கவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காவேரி நீரைக் குழாய் இணைப்பு மூலம் குடி தண்ணீராக மக்களுக்குக் கிடைக்கும் வசதியும் வந்து விட்டிருந்தது.



கணவன் ஊரில் அவளுடன் தங்கியிருந்த காலத்தில் அவன் துணைக்கு வருவான். இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் ஓடிக் கொண்டிருந்த காவேரியில் தலைமுழுகிக் குளித்துவர கருக்கலுடன் கிளம்புவார்கள். விடியற்காலை வேளையில் துறையில் யாருமே இருக்க மாட்டார்கள். தண்ணீரும் வெதுவெதுவென்று உடம்புக்கு இதமாக இருக்கும். ஆசை தீர முங்கி அவள் வெகு நேரம் நீரில் துளைந்து குளிப்பாள். கீழ்வானத்திலே செம்மை கட்டிக் கொண்டு சூரியன் புறப்படத் தொடங்கியதும் மனமில்லாது தண்ணீரை விட்டு வருவாள். ஒரு பாதிப்புடவையை இடுப்பில் சுற்றிக் கொண்டு மறு பாதியைத் துவைத்து அலசிப் பிழிந்துவிட்டு, அதை லாவகமாக உடலில் நன்றாக மூடி மறைத்துக்கொண்டு, மறு பாதியைத் துவைத்துப் பிழிந்து உடலைச் சுற்றி அவள் இறுக்கிக் கட்டிக்கொள்வதைக் காணாதது போல் அவன் கண்டு வியப்பான்.

இருள் பிரிந்து புது வெளிச்சம் பரவத் தொடங்கியதும், அங்கே குளிக்க ஊர் மக்கள் பலர் வந்து விடுவார்கள். அதற்குள் அவள் பொன்னாகத் தேய்த்துக் கழுவிய குடத்தில் நீரை மொண்டு கரை ஏறிவிடுவாள். எல்லோருக்கும் முன் வீடு திரும்பிவிட வேண்டும் என்பது அவன் உத்தரவு. தன் அழகு மனைவியை நீர்த் துறையில் யாரும் வெறித்துப் பார்ப்பதை அவன் விரும்பியதில்லை. அவளுக்கும் அது பிடிக்காத விஷயமே.

ஊருக்குப் போகுமுன் அவன் சொல்லி விட்டிருந்தான். 'நீ கால் வைச்ச வேளை, குழாயிலே காவிரித் தண்ணியே வீட்டுக்குள் வந்து கொட்டுது. துணை இல்லாம நீ கருக்கலில் காவேரிக்குப் புறப்படத் தேவையில்லை. ஆழந் தெரியாமல் இறங்கிட்டா உனக்கு என்னைப் போல நீஞ்சக்கூடத் தெரியாது, பத்திரம்.'

'தன்னந் தனியாக அவள் இங்கு மட்டும் வெளியே போவதை கணவன் விரும்பவில்லை' அவள் சட்டென்று புரிந்து கொண்டு விட்டாள்; கெட்டிக்காரி.

''மாரியம்மன் கோயிலுக்கு வெள்ளி-செவ்வாய்களில் நம்ப தோட்டக்காரன் சிங்காரத்தைத் துணைக்குக் கூட்டிக்கிட்டுப் போய் வரத்தைப் பத்தி?''

''கோயிலுக்குப் போகக் கூடாதுன்னா சொல்வேன்? முத்துமாரி நம்ம குலதெய்வமாச்சே!'' என்று அவள் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினான்.

விமானப் பையைத் தோள் மீது போட்டுக் கொண்டு, பெட்டியைச் சிங்காரம் தூக்கிக் கொண்டு செல்ல வாசலில் காத்திருந்த மாட்டு வண்டியில் ஏறி அவன் கிளம்பிச் சென்றது இப்போதுதான் நடந்தது போல் இருந்தது. வருஷம் ஒன்றரையாகிவிட்டிருந்தது.

ஏனோ, அவளுக்கு, அன்று காலை அவனது நினைவு நெஞ்சைக் கனமாக அழுத்தியது. மெல்லக் கதவை ஒருக்களித்து வீட்டு ஹால் விளக்கைப் போட்டுவிட்டுக் குளியலறைக்குள் புகுந்தாள்.

எப்பொழுதும் அவள் குளிர்ந்த நீரில் தான் முழுகுவது வழக்கம். அதுவும் இரண்டு நாட்களாக எரிந்த வெய்யிலில் சில்லென்ற நீரைத் தலையில் ஊற்றிக் கொள்வது இனிமையாகத் தான் இருந்தது. ஈரம் போகத் தலையைத் துவட்டி முடியின் நுனியில் சிறு முடிச்சிட்டுக் கொண்டாள். கொடியில் கிடந்த மாற்றுப் புடவை உள் ஆடைகள் அனைத்தையும் எடுத்துப் பரபரப்பாக உடுத்திக் கொண்டாள்.

கண்ணாடியில் முகத்தைப் பார்த்து நெற்றி மீது குங்குமப் பொட்டை வைத்துச் சிராக்கிக் கொண்டு அவள் வெளியே வருவதற்குள், தோட்டத்துக் கதவு இலேசாகத் தட்டப்படும் ஓசை கேட்டது.



சிங்காரம் பல் துலக்கிக் குளித்து விட்டுச் சுத்தமான காக்கிச் சட்டையும் வேட்டியும் அணிந்து நெற்றி நிறைய விபூதியும் கையிலே தடியுமாகத் தயாராக நின்று கொண்டிருந்தான். அவன் மனைவி பூரணியும் குளித்து முடித்து மஞ்சளும் குங்குமமுமாகப் பளிச் சென்று பூக்கூடையுடன் அவன் அருகே நின்று கொண்டிருந்தாள்.

சிங்காரம் தம்பதிகள் அவளது மாமனார் காலத்திலிருந்து தோட்ட வேலையும் வீட்டுவேலையும் செய்து கொண்டு தோட்டத்திலிருந்த ஒரு வீட்டில் வசித்துக் கொண்டிருந்தனர். பேரன் பேத்திகள் எடுத்து விட்டிருந்தனர். ஆனாலும் யஜமான விசுவாசம், இந்த வீட்டையும் பெரிய அம்மாளையும் விட்டுப் போக மனமின்றி ஒட்டிக் கொண்டிருந்தனர்.

இருவரும் உள்ளே வந்தனர். அவள் பின் கதவை அடைத்தாள். ''பூரணி, பெரிய அம்மாவைக் கவனிச்சுக்கோ. பால் கறந்து முனியாண்டி கொண்டு வந்து கொடுத்தா வாங்கி உள்ளே வை. சிங்காரத்தோட கோயிலுக்குப் போயிட்டுப் பத்து நிமிஷத்திலே வந்துடறேன்.'' உத்தரவிட்டபடி பூக்கூடையுடன் பூஜை அறைக்குள் நுழைந்தாள்; கழுவித் துடைத்துப் பொட்டிட்டு எண்ணெய் வார்த்துத் திரியிட்டுக் குத்து விளக்கை ஏற்றினாள். கூடையிலிருந்த ரோஜா மலர் ஒன்றை அருகில் வைத்தாள். ஒரு பிடி மல்லிகை மலரை எடுத்து சலவைக் கல் மேடையிலிருந்த தெய்வங்களின் திருவுருவங்கள் மீது தூவினாள். மீதமிருந்த பூவை தேங்காய் பழங்கள் வைத்திருந்த பித்தளைக் கூடைக்குள் கொட்டிக் கொண்டு தரையில் விழுந்து கும்பிட்டு விட்டு வெளியே வந்தாள்.

ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்தில் ஆலமரங்கள் நெருக்கமாக வளர்ந்திருந்த முடக்குக்குச் சற்றுத் தள்ளிச் சிறிது

தூரத்தில் தான் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில் இருந்தது. அவர்கள் வீட்டிலிருந்து அது கொஞ்ச தூரம் தான். பொடி நடையாக வெய்யில் கிளம்புமுன் போய் வருவது சிரமமாகத் தெரியவில்லை. மேலும் வாரத்துக்கு இருமுறை தவறாது போய் வந்த பழக்கம். கோவில் தொலை தூரத்தில் இருப்பதாகவே தோன்றவில்லை.

தோளில் கிடந்ததுண்டை காக்கிச்சட்டை மீது இறுக்கிக் கட்டிக் கொண்டு, கையில் தடியுடன் சிங்காரம் முன் நடந்தான். தேங்காய் பழக் கூடையுடன் அவள் வேகமாகப் பின்னால் விரைந்தாள்.

கோவில் வெளிப் பிரகாரத்தில் ஒரு மூலையில் ஒரு சிறு கிணறு இருந்தது. தண்ணீரை வாளியில் சேந்தி காலைக் கழுவிக் கொண்டாள். சிங்காரமும் அவ்வாறே செய்தான். பின்னர் அவள் கர்ப்பக்கிரகத்தின் முன்னால் வந்து நின்ற போது பார்த்தாள். அவளையும் முந்திக் கொண்டு அங்கே சில பெண்கள் நின்று கொண்டிருந்தனர்.

அபிஷேக ஆராதனை முடிந்து அம்பிகை சந்தனக் காப்பு அணிந்து கனகசபை வீட்டின் காணிக்கையான தங்கக் காசு மாலை அணிந்து அழகாக நின்று அருள் பொழிந்து கொண்டிருந்தாள். அகல்யா கொண்டு வந்த கூடையை வாங்கி, தேங்காய் உடைத்து அர்ச்சனை செய்து தீபாராதனை காட்டி தட்டுடன் வெளியே வந்தார் அர்ச்சகர். கூடியிருந்த பெண்கள் ஜோதியை வணங்கி, கும்பிட்டுப் பிரசாதம் பெற்றுக் கொண்டு கோவிலை வலம் வரப் புறப்பட்டனர்.

''பெரியம்மா எப்படி இருக்காங்க?''-கேட்டபடி கற்பூரத் தட்டை அவள் முன் நீட்டினார் அர்ச்சகர்.

''அப்படியே தான் இருக்காங்க. போன வருஷம் ஆபரேஷன் செய்த கண்ணில் இப்பப் பார்வையே இல்லை.



இன்னொரு கண்ணிலும் காடராக்ட் ஆரம்பிச்சிடுச்சு பழுக்கணும், உடனே ஆபரேஷன் செய்யணும்னு டாக்டர் சொல்லிட்டார். அவங்களைப் பார்க்க மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு'' கூறிக்கொண்டே கையிலிருந்த சில்லறையைத் தட்டில் போட்டு கற்பூர ஜோதியை வணங்கினாள்.

''ஆத்தாளுக்குத் தங்கத்தாலே கண் அடக்கம் போடறதாக வேண்டிக்குங்க.''

'வேண்டிக்கிட்டிருக்கேன்!''

''அவர்...உங்க வீட்டார் அவர் எப்படி அம்மா இருக்கார்?''

''பிள்ளையைப் பத்தித்தான் அத்தைக்குச் சதா விசாரம். புலம்பிக்கிட்டே இருக்காங்க. அவங்களுக்கு ஏதாச்சும் ஆகுமுன் அவர் ஊர் வந்து சேர்ந்துட்டா நல்லதுன்னு ஆத்தாளை வேண்டிக் கொண்டிருக்கேன்.''

''வந்துடுவார் கவலைப்படாதீங்க'' தீபாராதனைத் தட்டை சிங்காரத்தின்முன் நீட்டினார் அர்ச்சகர்.

''அவர் நல்லபடியா ஊர் வந்து சேர்ந்துட்டா, அவர் கூட நானும் இந்த வருஷம் அம்மனுடைய பூக்குழியிலே இறங்கறதாக வேண்டுதலை'' சொல்லி முடிக்கு முன் வார்த்தைகள் தடுமாறித் தழுதழுத்தன. விழிக்கடையில் அரும்பிய நீரில் அவள் கண்கள் பளபளப்பதைக் கண்டு அர்ச்சகர் நெஞ்சம் நெகிழ்ந்தது.

பெரிய தனக்காரர் கனகசபை, 'அய்யாவின் மரு மகளுக்கு எத்தனை பக்தி? பொறுமையான பொண்ணு! பஞ்சரத்தனம்மாள் கொடுத்து வச்சவுங்க...' தமக்குள்ளே எண்ணிக் கொண்டார்.

''சின்னவர் எப்ப வருவார்னு கடிதாசி போட்டிருக்கார்?''

''அத்தையோட உடம்பு நிலவரம் பற்றி விவரமா எழுதிப் போட்டிருக்கேன். அம்மான்னா அவருக்கு உயிராச்சே...புறப்பட்டு வந்துடுவார்.'' பிரசாதக் கூடையை வாங்கிக் கொண்டாள்.

'தங்கச் சிலை போல இந்த அழகு மனைவியை நினைத்துக் கொண்டாவது மனுஷன் பறந்து வரமாட்டான்? என்ன வேண்டியிருக்கு வெளியூர் உத்தியோகம்?' என்று எண்ணியபடி அர்ச்சகர் உள்ளே திரும்பினார், கோயிலை வலம் வந்துவிட்டு அவள் வீட்டுக்கு விரைந்தாள்.

பஞ்சரத்தினம் பூரணியின் உதவியுடன் தட்டுத் தடுமாறி எழுந்து பல்விளக்கி முகத்தைக் கழுவிக் கொண்டு ஊஞ்சலில் வந்து உட்கார்ந்திருந்தாள். செம்பு நிறைந்து வழிந்த பசும் பாலை பூரணி கொண்டு வந்து அடுப்பு அருகே மேடை மீது வைத்து விட்டிருந்தாள். உள்ளே நுழைந்து அவசரமாக அடுப்பை மூட்டிப் பாலைக் காய்ச்சி காப்பியைக் கலந்தாள் சர்க்கரைக்குப் பதில் செயற்கை இனிப்புச் சொட்டுகளைத் துளி ஊற்றிக் கொண்டு வந்து மாமியாருக்கு அருகே காப்பி டம்ளரை வைத்தாள். பூரணிக்கும் சிங்காரத்துக்கும் இரண்டு டம்ளர் நிறையக் காப்பியை சர்க்கரை போட்டு கலக்கிக் கொண்டு வந்து கொடுத்தாள். தனக்கும் ஒரு டம்ளர் எடுத்து வைத்துக் கொண்டாள்.

என்னவோ யோசனையுடன் பஞ்சரத்தினம் காப்பியை ஒரே வாயாகப் பருகி முடித்தாள்.

அதற்குப் பின்னர் அகல்யாவுக்குத் தொடர்ந்து வேலைகள் இருந்தன. அவசரமாக அவளும் காப்பியை விழுங்கிவிட்டு மாமியாரைக் கையைப் பிடித்து அழைத்து குளியலறைக்குள் உட்கார வைத்தாள். இளம் சூடான வெந்நீரை பச்சைப் பிள்ளைக்குக் குளிப்பாட்டுவது போல் ஊற்றி பஞ்சரத்தினத்துக்கு குளிக்க உதவினாள். வேறு உடுத்தச் செய்து நெற்றியில் திருநீறைக் கோடாக இட்டு மாமியாரைக் கைப்பிடியாக அழைத்து வந்து நாற்காலியில் உட்கார வைத்தாள்.



பின்னர் ஒரு சிறு கிண்ணத்தில் கொதிக்க வைத்துத் தயாராக வைத்திருந்த ஊசிக் குழாயில் வைத்தியர் கற்றுக் கொடுத்தபடி இன்சுலீன் மருந்தை அளவோடு இழுத்து மாமியாருக்கு ஊசி ஏற்றினாள். கேழ்வரகு மாவில் தயாரித்த கஞ்சியை ஆறவைத்து எடுத்து வந்து சாப்பிடச் சொல்லி வற்புறுத்தினாள்.

''படுதாமறைச்சாப்பலகண்ணை என்னவோ மறைக்குது. ஒண்ணுமே தெரியலை'' என்று கிழவி புலம்பினாள் கஞ்சியைக் குடித்துவிட்டு.

''இந்தக் கண்ணை ஆபரேஷன் செய்தால நல்ல பார்வை வந்துடும் அத்தே-நம்ப ஆத்தாளிடம் வேண்டிக் கொண்டிருக் கேன்... பூரணி உங்களோடு துணையா இருப்பா...நான் தென்னந் தோப்பு வரை சிங்காரத்தோட போயிட்டு வரேன். தென்னை இறக்க ஆளுங்க காத்துக்கிட்டு இருக்காங்க'' என்று கூறிவிட்டுக் கிளம்பினாள்.

சிங்காரம் காய் இறக்கும் ஆட்களை முதல் நாளே ஏற்பாடு செய்து விட்டிருந்தான். அவர்கள் திமுதிமுவென்று புழக்கடைப் பக்கம் வந்து நின்று கொண்டிருந்தனர். சிங்காரம் மேற்பார்வையில்தான் என்றாலும் எஜமானியின் கண் காணிப்பும் தேவையாயிற்றே? ஒரு மணி நேரத்துக்குள் பல நூறு காய்களை அவர்கள் இறக்கித் தள்ளி அவைகளைப் பின்னால் இருந்த அறைக்குள் கொண்டு குவித்து விட்டனர். அவர்களுக்கு பேசிய கூலியைப் பட்டுவாடா செய்ய அவள்

உள்ளே வந்து எதிர்புறத்து அறைக்குள்ளிருந்த பெரிய இரும்புப் பீரோவைத் திறந்தாள். வரிசையாக ஒரு பக்கத்தில் கம்பியில் தொங்கிய பல சேலைகளின் சூழலில் அந்த நீல வண்ண ஷிபான் சேலை அவள் கண்களில் சட்டெனப் பட்டது.

புகை போல் அத்தனை மெல்லிய துணி, உடல் முழுவதும் வாரி இறைத்தாற் போல ஊதா வண்ணப் பூக்கள் யாரோ பம்பாய் வரை வந்த நண்பரிடம் அந்தச் சேலையையும், ஒரு டப்பா லாவண்டர் பவுடரையும் அவள் கணவன் அவளுக்காக அனுப்பியிருந்தான் இரண்டு மாதங்களுக்கு முன்னர். அவை அவள் பெயருக்குத் தபாலில் பம்பாயிலிருந்து வந்தன. புடவையை அவள் அணிந்து கொள்ளவேயில்லை. அவன் வந்த பிறகு உடுத்திக்கொள்வதாக உத்தேசித்திருந்தாள். புடவை புறாவின் அடிவயிற்றைத் தொட்டது போல் மிருவாகக் கைக்குள் அடங்கிவிடும் அளவிற்குப் புழுவாகத் துவண்டு கசங்காது இருந்ததை அவள் பலமுறை சோதித்து வியந்திருக்கிறாள். இன்று அதைத் தொட்ட போது அந்தப் புடவையைக் கடையில் வாங்க அவன் நின்று கொண்டு யோசித்து வண்ண வண்ணக் குவியல்களிடையே அதைத் தேர்ந்தெடுத்துப் புன்முறுவலிப்பது போன்றதொரு கற்பனை உள்ளத்திலே எழவே, அவன் கைபட்ட அந்தச் சேலையைத் தன் முகத்தோடு அழுத்திக் கொண்டாள். நெஞ்சைப் பிரிவின் துன்பம் பாறையாக அழுத்தியது. கண் கலங்கிப் போனாள்.

''அகல்யா!'' மாமியாரின் அதட்டல் குரல்.

விழிப்புற்று மேல் தட்டிலிருந்த பணத்தை எடுத்துக் கொண்டு விரைவாக வெளியில் வந்தாள். கூலி பட்டு வாடா செய்து விட்டு அவள் உள்ளே வந்த போது மாமியார் கேட்டாள்.

''ராஜா கிட்டேயிருந்து கடிதாசி வந்து எத்தனை நாளாகுது?''



சுவரில் தொங்கிய காலண்டரில் அவள் கண்கள் பாவின. ''ஒரு மாசத்துக்கு மேல் ஆகிறது.''

''வாரத்துக்கு ஒரு முறை எழுதினவன் ஏன் இப்படிக் கம்முன்னு இருக்கான்?''

அதே கேள்விதான் அகல்யாவின் உள்ளத்திலும்... ஏன் கடிதமே காணவில்லை? ''ஊருக்குக் கிளம்பறதுக்கு முந்தி வேலைகள் அதிகப்படியா இருக்கும்-கடிதாசி போட நேரமிருக்காது... அதனால்...''

''உன் புருசனுக்கு நல்லாச் சப்பைக் கட்டு கட்டிப் பேசறே... ராஜு இப்படி சோம்பேறியா இருக்கப்படாது. இங்கே நமக்கு என்ன இல்லை? கண்காணாத் தேசத்திலே போய் மண்டை வெடிக்கிற வெய்யிலிலே வேலை பார்க்கணும்னு விதியா?'' என்று கிழவி முணுமுணுத்தாள்.

அதற்கு மேல் கேட்டுக் கொண்டிருந்தால் அவளுக்கு அழுகையே வந்து விடும் போன்ற துக்கம்.

தாய்க்குப் பிள்ளையைப் பிரிந்த தவிப்பு; தாரத்துக்கு ஆசைக் கணவனைப் பிரிந்திருக்கும் தாபம்.

## 2

சிறிது பொழுதில் தெருவில் புழுதியைப் பரப்பிக் கொண்டு ஒரு கார் வந்து நிற்பதை நடையில் நின்றபடியே அகல்யா கவனித்து விட்டாள்.

மாமியார் பஞ்சரத்தினத்துக்கு எப்பொழுதுமே காது கூர்மை அதிகம். அதுவும் கண்பார்வை மங்கத் தொடங்கியதி லிருந்து அது இரட்டிப்பாகி விட்டிருந்தது.

''வாசல்ல என்ன சத்தம்? யார்னு பார்?'' மருமகளை அதட்டினாள். சேலத்திலிருந்து அவர்களது தூர உறவுக்காரி

பார்வதி வந்திருந்தாள். அவளது கணவனுக்கு அங்கே பெரிய அளவில் சாய வியாபாரம். பங்களா-கார்- என்று தனது மூன்று பிள்ளைகள்; அவர்களது மனைவிகள் வீடு கொண்ட மட்டில் பேரப் பிள்ளைகள் என அவள் 'ஓகோ' என்று வாழ்ந்து கொண்டிருப்பவள். நான்கு மாதத்திற்கொரு தடவையாவது தங்கள் வீட்டு அம்பாசிடரில் பேரப் பிள்ளைகளை வாரிப் போட்டுக் கொண்டு அருள்மிகு முத்து மாரியம்மனைத் தரிசிக்க அவள் சேலத்திலிருந்து வந்து விடுவது வழக்கம்.

வருகிறவள் பஞ்சரத்தினத்துக்குச் சாப்பிட முறுக்கு, மைசூர்பாகு என்று எதையாவது கட்டிக் கொண்டு வருவதுடன் கூட, ஒரு மூட்டை ஊர்வம்பையும் எடுத்து வருவாள்.

அரை மணிக்கு மேல் அவளால் இருக்க முடியாது. கோவிலில் அர்ச்சனை, ஆராதானைகளை முடித்துக் கொண்டதுமே, அண்ணி பஞ்சரத்தினத்தைப் பார்த்துப் பேசிவிட்டு உடனடியாக ஊருக்குத் திரும்பி விட வேண்டும். மொட்டையடித்துக் காது குத்தியிருந்த தன் கடைக்குட்டிப் பேரனை இடுப்பில் சுமந்து கொண்டு, பெரியவனின் இளைய மகளைக் கையில் பிடித்துக் கொண்டு அவள் காரிலிருந்து இறங்கினாள். வீட்டு முன் படிகள் மீது ஏறி வராந்தாவிற்குள் வருவதற்குள் அவளுக்கு மூச்சு வாங்கியது.

''குழந்தையைக் கொடுங்க நான் தூக்கிக்கறேன்!'' ஓடிச் சென்று அவளிடமிருந்த மொட்டைப் பையனை வாங்கித் தன் இடுப்பில் வைத்துக் கொண்டாள் அகல்யா.

வந்தவள் அவளை ஏற இறங்கப் பார்த்தாள். ''ம் எப்ப இந்த வீட்டில் இப்படி ஒரு சின்னப் பையன் விளையாடப் போறான்? ஆமாம்! ராஜ் எப்போ ஊருக்கு வரப்போகுதாம்?'' உரிமையுடன் அதட்டிக் கேட்ட வண்ணம் பார்வதி பேத்தியை இழுத்துக் கொண்டு உள்ளே வந்தாள்.



முகம் சிவந்து போன அகல்யா மௌனமாகத் தொடர்ந்தாள்.

''தங்கசாமி, அந்தக் கூடையையும் தூக்குசெம்பையும் கொண்டு வந்து உள்ளே வை'' என்று டிரைவருக்கு உத்தரவிட்ட பார்வதி, வேகமாக ஹாலுக்குள் சென்றாள்.

''பார்வதியா, வா, உட்காரு...'' வாய் நிறைய சிரித்துக் கொண்டு வரவேற்றாள் பஞ்சரத்தினம். மகிழ்ச்சியுடன் சோடா பாட்டில் கண்ணாடி வழியே உறுத்துப் பார்த்தாள்.

உகும்-பார்வதி அவளுக்கு நிழலாகத்தான் தெரிந்தாள்.

வேலைக்காரி பூரணியிடம் குழந்தையைக் கொடுத்து விட்டு, விருந்தாளி அம்மாள் உட்கார ஒரு நாற்காலியைத் தூக்கி வந்து மாமியார் எதிரே போட்டாள் அகல்யா. பின்னர் புடைவைத் தலைப்பை இழுத்துச் செருகிக்கொண்டு சமைய லறைக்குள் ஓடினாள்-தொலை தூரத்திலிருந்து வந்திருக்கும் விருந்தாளிகளுக்குக் காப்பி பலகாரம் தயாரிக்க வேண்டாமா?

''பெரியவன் மகளுக்கு இரண்டு மாதத்துக்கு முந்தி காய்ச்சல் வந்து ஆச்சுபோச்சுன்னு போயிடுச்சு மாவிளக்குப் போட்டு பாவாடை சாத்துறதாக வேண்டிக்கிட்டேன். அப்படியே உன்னையும் பார்க்கலாம்னு வந்தேன். நமக்கெல்லாம் முத்துமாரி தானே குலதெய்வம்?'' படபடவென்று அவள் பேசியது அடுப்பருகில் நின்ற அகல்யாவுக்கு நன்றாகக் கேட்டது.

''இருந்து சாப்பிட்டுப் போயேன்; எப்ப வந்தாலும் இப்படி கொதி கஞ்சியைக் காலில் ஊத்திக்கிட்டு'' என்று அன்போடு கடிந்து கொண்டாள் பஞ்சரத்தினம்.

தன்னைக் காண யாராவது உறவினர்கள் வெகு தொலைவிலிருந்து வந்து விட்டால், அவளுக்குப் பெருமை பிடிபடாது. மகிழ்ச்சியில் மூழ்கிப் போய் விடுவாள்.

''உனக்கு ஊரிலிருந்து சாத்துக்கொடிப் பழமும் வீட்டிலே சுட்ட நெய் அப்பமும் கொணர்ந்திருக்கிறேன். அத்தோட அம்மன் பிரசாதமும் கொஞ்சம் வைச்சிருக்கேன் எல்லாத்தையும் எடுத்து உள்ளே வைக்கச் சொல். அர்ச்சனை ஆன கையோட ஊருக்குத் திரும்பிடணும்னு இவர் உத்தரவு போட்டிருக்கிறார்.'' குளியலறைப் பக்கம் பேத்தியுடன் விரைந்தாள் பார்வதி.

முகத்தைக் கழுவி தலை சீராக்கிக் கொண்டு, பேத்தியின் முகத்தைக் கழுவித் துடைத்து விட்டபடியே பார்வையைச் சுழற்றினாள். பெருக்கித் துடைத்த வீடு... எங்கு திரும்பி னாலும் சுத்தமாகக் காணப்பட்டது.

அவளுக்கு மூன்று மருமகள்மார்கள் இருந்தனர். ஏகப்பட்ட வேலையாட்கள் வேறு. ஆனாலும் அவர்கள் பங்களா இப்படி ஒரு நாளும் சுத்தமாகவே இருந்ததில்லை. இங்கே அழுக்குத் துணி, அங்கே புஸ்தகக் குவியல், காலில் இடறும் பொம்மைகள்-ரேடியோப் பெட்டியின் அலறல் ஒரு புறம். வயது காலத்திலே அமைதியும் நிம்மதியும் துளியாவது அவளுக்கு இருந்தனவா?

அகல்யா அவர்களுக்கு உப்புமா தயாரித்துக் கொண்டிருந்தாள். ஆனாலும் பார்வதியின் ஓங்கிய குரல் அவளுக்குக் கேட்கத்தான் செய்தது.

''பாலக்கரை அண்ணன் மகள் நிர்மலாவை உன் மகனுக்கு கட்டணும்னு ஒத்தைக் காலில் நின்னியே... இப்ப சேதி தெரியுமா'' பஞ்சரத்தினம் வம்பைக் கேட்க நாற்காலியை இன்னும் சற்று அருகில் நகர்த்திக் கொண்டாள்.

''அந்தப் பெண்ணை கடைசியிலே எங்க ஊரில்தான் நம்ப உறவுக்காரப் பையன் ராமலிங்கத்துக்குக் கட்டிக் கொடுத்தாங்க. தாய்க்கு அவன் ஒரே பிள்ளை. ரொம்பப் படிச்சவன்-சொந்த வியாபாரம்-வீடு வாசல்னு வசதியாத்தான்



இருக்கிறவங்க-என்னலாபம்! அந்தப் பொண்ணு மாமியாரைச் சீராகவே கவனிக்கறதில்லை. அந்தம்மாளை அது என்ன பாடுபடுத்தறது தெரியுமா?''

''அப்படியா?'' மூச்சை இழுத்துக் கொண்டாள் பஞ்சரத்தினம்.

''உன் மகன் நிர்மலாவைக் கட்டிக்க மாட்டேனுட் டான்னு நீ மூஞ்சியைத் தூக்கி வச்சுட்டு இருந்தே. அவன் கல்யாணத்தின் போது கூட நீ கலகலப்பா இருக்கலே. நீ தப்பிச்சுக் கொண்டதுக்கு ஆத்தாளுக்குக் கும்பிடு போட்டுக்கோ...''

''நிர்மலாவுக்குப் படிச்சிட்டோம்னு ரொம்பத் திமிர். படுக்கையைவிட்டு எழுந்திருக்க மணி எட்டாகுதாம். மாமியார்க்காரிதான் இந்த வயசிலே முட்டி நோவோட எழுந்திருச்சு காப்பிப் பலகாரம் பண்ணி மருமகளுக்கு ரெடியா வைக்கறா. கேட்டுக்கோ கதையை. சதா அந்த வீட்டிலே புருஷனுக்கும் மனைவிக்கும் சண்டை, மண்டை உடையுதாம்''

''அட பாவமே!''

''நம்ப குல தெய்வம்தான் உனக்கு ஒரு நல்ல மருமகளைத் தேடிக் கொடுத்திருக்கான்னு நினைச்சுக்கோ. அகல்யா உன்னை ரொம்ப நல்லா கவனிக்கிறதுன்னு அங்கெல்லாம் ஒரே பேச்சா இருக்கு. பஞ்சா! நீ கொடுத்து வச்சவ. பொண்ணு மட்டும் என்ன? பார்க்கறத்துக்குத் துடைச்சுவச்ச குத்துவிளக்கு மாதிரி பளிச்சுனு எத்தனை அழகா இருக்கா? அப்படியே உன்னைப் பார்த்துக்கறா- வீட்டை எப்படி நகநகன்னு வச்சிருக்கா?'' பஞ்சரத்தினத்தின் காதுகள் குளிர்ந்தன. நெஞ்சு பெருமிதத்திலே விம்மித் தணிந்தது.

நீ சொல்றது அத்தனையும் உண்மை. ''ஒண்ணை எடுத்துக்கிட்ட மகமாயி எனக்கு இன்னொண்ணைக்

கொடுத்துவிட்டிருக்கா. கண் பார்வை மங்கின சமயம், அகல்யா மட்டும் என்னைக் குழந்தைபோல் கவனிச்சுக்காட்டி, நான் என்ன கதியாயிருப்பேனோ தெரியாது.'' ஒப்புக் கொண்டாள்.

சாப்பாட்டறையில் மேஜைமீது இலைகளைப் பரப்பி நீர் தெளித்து உப்புமாவையும் தேங்காய்ச் சட்டினியையும் பரிமாறி அவர்களைச் சாப்பிடச் சொல்லி உபசரித்தாள் அகல்யா. காப்பி டம்ளர்களைக் கொண்டு அருகில் வைத்து விட்டு, மாமியாரின் கரத்தைப் பிடித்து அன்புடன் அழைத்து வந்து மேஜையருகே இன்னொரு நாற்காலியில் உட்கார்த்தினாள். ''உங்களுக்குச் சாப்பிடச் சாத்துக்கொடி புழிஞ்சு டம்ளரில் வச்சிருக்கேன் இன்னிக்கு மட்டும் போனால் போகுதுன்னு அம்மன் பிரசாதம் ஒரு ஸ்பூன். மாவிளக்கு மாவைத் தட்டியே வைச்சிருக்கேன். சாப்பிடுங்க'' சிரித்துக் கொண்டே சொன்னாள்.

பின்னர் அந்த மொட்டைப் பையனை வேலைக்காரி யிடமிருந்து வாங்கி எடுத்துக் கொண்டு டம்ளரில் தயாராக வைத்திருந்த பசும்பாலை வற்புறுத்தி அவனைக் குடிக்கச் செய்தாள். ஈரத்துணியால் அவன் வாயைத் துடைத்துச் சுத்தம் செய்தாள். விடுவிடுவென்று அவள் செய்த அனைத்தையும் வாயைப் பிளந்தபடி வியப்புடன் பார்வதி கவனித்தாள். அவளுக்கும் இருக்கிறார்களே மருமகப் பெண்கள். யாரிடமாவது இந்தச் சுறுசுறுப்பு இருக்கா? ...உள்ளூற ஏக்கப் பெருமூச்சுடன் அவசரமாக உப்புமாவை விழுங்கி, காபியைப் பருகினாள்.

பின்னர் விருந்தாளி அவர்களிடம் வெற்றிலை பாக்கு, குங்குமம் பெற்றுக் கொண்டு பிரியாவிடை கொண்டு புறப்பட்டு விட்டாள். ''பார்வதிகூட கேட்டுட்டா, ராஜா ஏன்



கடுதாசி போடலைன்னு...ம்...'' கிழவி முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

அதற்குப் பின்னர் சமையல் வேலையில் அகல்யா மும்முரமாக ஈடுபட்டு விட்டாள். தளதளவென்று உலையில் பொங்கிய அரிசியைப் போல் அவள் உள்ளத்து உணர்வுகள் பொங்கி அலைமோதின. 'ஒரு மாதத்துக்கு மேலாகி விட்டதே. ஏன் இவர் எழுதலை... உடம்புக்கு ஏதாச்சும்...?' சாதத்தைக் கரண்டியால் கிளறிவிட்டுக் கொண்டிருந்தாள். காதில் 'போஸ்ட்!' என்ற வார்த்தை தேனாக ஒலித்தது. அவ்வளவு தான், ஒரே பாய்ச்சலாக வாசலுக்கு வந்து விட்டாள். தபால்காரர் கையில் கண்ட அந்த வெளிநாட்டுக் கடித உறை அவளது மூச்சை மகிழ்ச்சியில் அமுக்கிப் பிடித்தது.

கடிதத்தை வாங்கிக் கொண்டு கதவைத் தாழிட்டு விட்டு உள்ளே வந்தாள்.

''ராஜ்கிட்டேயிருந்தா கடிதாசு வந்திருக்கு? படி?'' நாற்காலியிலிருந்து கிழவி தள்ளாடிக் கொண்டு எழுந்து நின்றாள். விழுந்துவிடா வண்ணம் மேஜையைப் பிடித்துக் கொண்டாள்.

உறைக்குள் இரண்டு கடிதங்கள் இருந்தன. ஒன்று அவன் தாயாருக்கு. மற்றொன்று அவளுக்கு.

அவள் முதலில் பஞ்சரத்தினத்தின் கடிதத்தைப் பிரித்து உரக்கப் படித்தாள். மிகவும் சுருக்கமாகத்தான் எழுதி யிருந்தான்.

''அன்புள்ள அம்மா அவர்களுக்கு-ராஜ்குமார் வணக்கம் பல செய்து எழுதிக் கொண்ட கடிதம். நான் விரைவில் ஊருக்குத் திரும்ப இருக்கிறேன். இன்னும் சில வாரங்களில் என் ஒப்பந்தம் முடிவடைந்து விடுகிறது. உடனே கிளம்பி விடுவேன். ஊருக்குப் புறப்படுமுன் கவனிக்க வேண்டிய

வேலைகள் பல இருக்கின்றன. அவைகளை முடிக்க வேண்டும் என்று நான் அவசரப்படுவதால் தான் கடிதம் எழுதக் கூடப் பொழுது இருக்கவில்லை. தாமதத்துக்கு மன்னிக்கவும். உங்கள் உடம்பு இப்போது எப்படி இருக்கிறது? அகல்யா உங்களை அப்போதைக்கப்போது டாக்டரிடம் அழைத்துச் சென்று கவனித்துக் கொள்கிறாள் என்று நம்புகிறேன். நான் சுகம், ஆனால் உங்கள் நினைவாகவே இருக்கிறேன். மற்றவை பின்னர்.''

அன்புள்ள

ராஜ்

கிழவி கடிதத்தை இருமுறை படிக்கச் சொல்லி விட்டுக்கேட்டாள். நெஞ்சை அடைத்த ஆசை கண்களில் நீராகப் பெருகவே கண்ணாடியைக் கழற்றி விட்டு புடவைத் தலைப்பால் மெல்லத் துடைத்துக் கொண்டாள்.

''சாப்பாட்டுக்கு நாக்கு செத்துப் போய் வரப் போகிறான். என்னத்துக்குத் தன்னைத் தண்டிச்சுக்கணும்? கடல் போல் வீடு இருக்கு. நஞ்சை புஞ்சையினு நிலமிருக்கு. உன் மாமனார் பாடுபட்டுச் சேர்த்துவச்ச பணம் பாங்கியிலே வட்டி போட்டுக்கிட்டுக் கிடக்கு. கவனிச்சுக்க நீ இருக்கே. இத்தனையும் விட்டுட்டு...'' கிழவி பெருமூச்செறிந்தாள். தனக்குக் கணவன் எழுதியிருந்த கடிதத்தைச் சப்தமிடாமல் பிரித்து அவள் மௌனமாகக் கவனித்தாள். இன்ப உணர்வில் நெஞ்சு படபடவென்று துடித்துக்கொண்டது.

''அன்புமிக்க என் அகல்யா எப்போது ஊருக்கு வருவோம் என்று துடித்துக் கொண்டிருக்கிறேன். உங்களை யெல்லாம் விட்டு இங்கே வந்தது பிசகுதான்; ஒப்புக் கொள்கிறேன். 'படித்து விட்டோம். கட்டடக்கலை நுணுக்கங் களை சரவணம் அவர்களிடம் பயிற்சி பெற்றோமே, அவர்



கூப்பிடுகிறார் எப்படி மறுப்பது? என்று நன்றிக் கடனுக்காக ஒப்புக் கொண்டு புறப்பட்டு வந்தேன். வருஷங்கள் இரண்டு ஓடி விட்டன. வீட்டையும் அம்மாவையும் நினைக்காத நாள் இல்லை. உன் அழகு முகத்தை எண்ணி ஏங்காத நேரம் இல்லை.

''நாட்கள் நெருங்க நெருங்க என்னுள்ளே ஒரு பரபரப்பு ஏற்பட்டு விட்டிருக்கிறது. அவசரமாக இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். மூச்சுவிட நேரமின்றி வேலைகள் என்னை அழுத்திக்கொண்டிருக்கின்றன. பகலில் வெயில் மண்டையைப் பிளக்கிறது. இரவில் ஒரே குளிர். ஊசி குத்துவதைப்போல் காற்று உடலைக் குத்தும் போது, நானாகத் தேடிக் கொண்ட வம்பு இது என்று நொந்து கொள்கிறேன். யாரையும் குற்றம் சொல்வதற்கில்லை. என் தொழிற் திறமையை நிரூபிக்க வேண்டுமென்ற பிடிவாதம் என்னைக் கொண்டு வந்து பஹ்ரெய்னில் நிறுத்தி வைத்திருக்கிறது. நீ உடனடியாகப் பதில் போட வேண்டும். ஏனெனில் நான் வர நாட்கள் சிலவே தான் இருக்கின்றன.

உனக்கு இங்கிருந்து நான் என்ன வாங்கி வர வேண்டும்? இங்கு என்ன என்ன கிடைக்கின்றன என்பதைப் பற்றி ஏற்கனவே உனக்கு விவரமாக நான் பல தடவைகள் எழுதியிருக்கிறேன். எனக்குப் பிடித்தமான 'மிட் நைட்' செண்ட் பாட்டில் ஒன்றை உனக்கு வாங்கி வைத்து விட்டேன். என் பயணம் வாசனையாக ஆரம்பிக்கட்டும் என்ற கருத்தில். கடைசி கடைசியாக இன்னொரு விஷயம். நான் ஊருக்கு வந்ததும் நேரில் சொல்லி ஆச்சரியமூட்ட விரும்பு கிறேன். அதுவரை அது ஒரு ஸஸ்பென்ஸாக இருக்கட்டும். கடிதம் தொடரும் என்று முடிக்கவா? உன் அன்புள்ள கணவன்-ராஜ்''

அடுப்பில் கொதித்த சாதத்தின் நினைப்பு வந்ததும் அவள் உள்ளே ஓடினாள். சாதத்தை வடித்துப் பானையை இறக்கி மேடையின் மீது வைத்து விட்டு கடிதத்தை மறுபடியும் படித்தாள். பகல் உணவுக்குப் பின் இருமுறை படித்தாள். மாலையில் மாடியறையைச் சுத்தம் செய்து படுக்கை விரிப்புகளை உதறிக் கட்டிலின் மீது விரித்து விட்டு, மறுபடியும் அந்தக் கடிதத்தைப் படித்தாள். அருகே தலைமாட்டில் சாய்ந்த வாக்கில் இருந்த புகைப்படத்தில் சிரித்துக்கொண்டிருந்த கணவனைப் பரிவுடன் பார்த்தாள். படத்தை எடுத்து புடவைத் தலைப்பால் அதன் மீது இல்லாத தூசியை மெல்லத் துடைத்த போது அந்த நினைவு வந்து விட்டது. சாப்பிட்டு விட்டுக் கையைக் கழுவிக்கொண்டு நிற்பவனிடம் அவள் துவாலையை நீட்டுவாள். அவன் வேடிக்கையாக அவள் முன்றானையிலேயே துடைத்துக் கொண்டு அவளை அப்படியே தன் அருகில் இழுத்து விளையாடுவான். அந்த நினைவு நெஞ்சக் கிளர்ச்சி ஊட்டவே அவள் மறுபடியும் போட்டோவைப் பரிவுடன் பார்த்தாள்.

''என்ன வேணும்? நீங்க சுகமா ஊருக்கு வந்தால் அதுவே போதும்'' என்று சொல்லி முடிப்பதற்குள் அவள் கண்கள் கனத்து விட்டன.

## 3

இப்பொழுதெல்லாம் பஞ்சரத்தினத்துக்கு மருமகள் தான் ஊன்றுகோல். காலை வந்த பத்திரிகை, வாரம் வாரம் அவள் கேட்டு வரும் அந்தத் தொடர்கதை கொஞ்சம் கந்தபுராணம் இத்தனையும் ஒட்டு மொத்தமாக இரவு உணவுக்குப் பின் படுக்கையில் சாய்ந்தபடி மருமகளைப் படிக்கச் சொல்லிக் கேட்பது வழக்கமாகிவிட்டிருந்தது.



கந்தராணம் முழுவதையும் கேட்க விரும்புகிறவள் போல், உறக்கமின்றி சில நாட்கள் படுக்கையில் புரண்டு எழுந்து உட்கார்ந்து கொண்டு விடுவதும் உண்டு.

அகல்யாவுக்கு உரக்கப் படிப்பதினால் தொண்டை காய்ந்து விடும். ஆனாலும் அலுத்துக் கொண்டதில்லை. ''அம்மாவுக்குப் பார்வை குறைந்துவிட்டது. தானே படிக்க முடியாது. நீ தான் அவர்களுக்குக் கண்களாக இருந்து உதவணும்'' என்று அவள் கணவன் பல கடிதங்களில் அதைப் பற்றி வற்புறுத்தி எழுதியிருந்தான். தொலை தூரத்திலிருந்து கொண்டு கடிதம் மூலம் அவன் விடுத்த அந்த வேண்டுகோளை அவள் மறுத்ததேயில்லை. தான் இல்லாத போது மனைவி தாயை நன்றாகக் கவனித்துக்கொள்வாள் என்றதோர் ஆழமான நம்பிக்கை அவனுக்கு. அதில் துளியும் பங்கப்படக் கூடாது என்ற ஆவேசம் அவளுக்கு. அதனால் பஞ்சரத்தினத்தை அவள் குழந்தையைப் போல் பரிவுடன் பாதுகாத்து வந்தாள்.

''அகல்யா நல்ல பொண்ணு மகராசியா இருக்கட்டும்.'' கிழவி மனத்தினுள் மருமகளை நித்தமும் வாழ்த்திக் கொண்டுதான் இருந்தாள்.

''பாவம் அத்தை! வியாதியோட, கண் வேறு மங்கித் தள்ளாடிப் போயிட்டாங்க'' என்று, பரிவினால் உள்ளம் நெகிழ்ந்து போனாள் அகல்யா.

இரண்டு ஆண்டுக் கால நெருக்கமான பழக்கம் மருமகள் மாமியாரிடையே ஒரு நேசப்பிடிப்பைத் தானாக ஏற்படுத்தி விட்டிருந்தது.

அன்று இரவு பஞ்சரத்தினம் படுக்கையில் விழுந்தது தான் தாமதம். சிறிது பொழுதில் உறங்கிப் போனாள். பத்திரிகைத் தாளின் முதல் பக்கத்திலிருந்த செய்தியை மருமகள் முடிக்கு முன்பே அவளுக்குத் தூக்க மயக்கம்

நெஞ்சினின்றும் ஒரு பெரும் சுமையை இறக்கி விட்டது போல் மகனது கடிதத்தை வாசிக்கக் கேட்ட இன்ப மயக்கம். வைத்தியர் கொடுத்திருந்த தூக்க மருந்து வேறு! சில விநாடிகளில் அவள் குறட்டை விட ஆரம்பித்து விட்டாள்.

பத்திரிகையை மடித்து அப்பால் வைத்து விட்டுக் குழல் விளக்கை அணைத்தாள் அகல்யா. மின் விசிறியை நிதானமாகச் சுழலவிட்டாள். துப்பட்டியை எடுத்து மாமியார் மீது போர்த்தி விட்டு, கதவை ஒருக்களித்துக் கொண்டு வெளியே வந்தாள்.

அவளுக்கு உறக்கம் வர மறுத்தது. உற்சாகத்தில் உள்ளம் பல இன்ப எண்ணங்களில் கும்மாளமிட்டது. சாப்பாட்டு அறை விளக்கைப் போட்டுக் கொண்டு அலமாரியைத் திறந்தாள். மேல்தட்டிலிருந்த சிறு சந்தனப்பேழையை எடுத்தாள். திருமணமான புதிதில் தேனிலவுக்கு மைசூருக்குப் போன போது, அவள் கணவன் அவளுக்காக வாங்கி அளித்த முதல் பரிசு, அந்த நகைப்பெட்டி. அவனது கடிதங்களை அதில் தான் அவள் பாதுகாப்பாக வைத்துக் கொண்டிருந்தாள். அவனிடமிருந்து பதில் வரத் தாமதமானால் பழைய கடிதங்களையெல்லாம் மீண்டும் ஒருமுறை தேதி வாரியாகப் படித்து விட்டு, தன்னையே சமாதானப் படுத்திக்கொள்வது அவளது வழக்கமாகி விட்டிருந்தது.

மாமியார் தூங்காவிடில் அவளால் அதைக் கூடச் செய்ய முடியாது. கந்த புராணத்தைத்தான் படிக்க வேண்டியிருக்கும். இன்று ஏற்பட்டிருந்த மகிழ்ச்சியில் அவள் அந்தக் கடிதங்கள் அனைத்தையும் மறுபடியும் ஒரு முறை படிக்க விரும்பி மேஜையின் மீது அவற்றை ஒழுங்காகப் பரப்பிக் கொண்டு உட்கார்ந்தாள். ஒவ்வொன்றையும் புதிது போல் படித்துக் கொண்டிருந்தவளுக்கு நேரம் நழுவிச் செல்வதே தெரியாமல் உணர்வுகளுள் ஒன்றிக் கரைந்து கொண்டிருந்தாள்.



''நான் வசிக்கும் மணாமாப் பகுதியில் ஒரு பெரிய ஷாப்பிங் சென்டர்' இருக்கிறது என்று முன்பே எழுதினேன் அல்லவா? இங்கேதான் நான் எனக்குத் தேவையான உணவுப் பொருட்களை வாங்குகிறேன். பால் பவுடர், காபித் தூள், சர்க்கரை போன்றவை. நான் தான் தனிக்குடித்தனம் செய்கிறேனே! சில சமயங்களில் நானே சமையலும் செய்வேன்.

'காபியைப் போட்டு வைத்துக் கொண்டு நான்கு சுவர்களையும் வெறித்தபடி மெல்லக் குடிக்கும்போது (அது காபியா? கேட்காதே! அப்படி ஒரு திரவம்.) 'ஏண்டா பயலே, ராஜ்குமார்! உனக்கு ஏன் இந்தக் கஷ்டம்? நீயாகத் திமிர் பிடித்து ஏற்றுக் கொண்ட தண்டனை' என்று நான் நினைக்காத நேரம் இல்லை. அதனாலோ என்னவோ நாட்கள் நீண்டு பொழுது யுகம் போல் தெரிகிறது.''

இன்னொரு கடிதம். அதிலும் பிரிவின் தாபத்தை முடிப்பதற்குள் அவள் கண்களில் நீர் ததும்பியது. பெருமூச்சுடன் பல மாதங்களுக்கு முன் எழுதியிருந்த கடிதம் ஒன்றை எடுத்தாள்.

''கேரளா ஹோட்டல்கள் சில இங்கே இருக்கின்றன என்று உனக்குக் குறிப்பிட்டிருந்தேன். பெரும்பாலும் அங்கேதான் என் சாப்பாடு. எனக்கு சமையல் கற்றுக் கொள்ள நீ எங்கே அனுமதி கொடுத்தாய்? சமையலறைப் பக்கம் வந்தாலே என்னை விரட்டி விடுவாய், அதன் பலன், சிவசங்கர நாயர் ஹோட்டலில் ஒரு தட்டுச் சாதமும் ரசமும் பப்படமும் கிடைத்தாலே சாம்ராஜ்யம் கிடைத்த மகிழ்ச்சியில் சாப்பிட்டு விடுகிறேன்.''

அவன் பிறந்த வீட்டுக் 'கை' முறை இஞ்சியும் மிளகும் தட்டிப் போட்டு வைக்கும் காரமான ரசம், டம்ளர் டம்ளராக

ஊற்றிக் குடிப்பான். அவன் சிவந்த முகம் மேலும் மேலும் சிவந்து போகும். கண்களில் கரகரவென்று நீர் வழியும். மூக்கு சிவப்பு மிளகாயாகப் போய் விடும். பொருத்தியிருக்கும் கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டே அவன் சிரிப்பான்.

''எத்தனை காரமாக நீ சமைத்துப் போட்டாலும் இந்த ராஜ்குமாருக்கு உன்னைக் காரமாகப் பேசத் தோணாது. ஏன் தெரியுமா?''

''விடுங்க, எச்சிக் கையோடு! அத்தை பாத்துட்டாங் கன்னா?'' அவள் திமிறிக் கொண்டு உள்ளே விரைவாள். அந்த நினைவு கண்களைப் பனித்தது. அதில் ஓர் இன்பமும் தாங்க முடியாத துன்ப உணர்வும் சேர்ந்து உருண்டையாகத் தொண்டையை அடைக்கவே அவள் செருமிக் கொண்டாள்.

இன்னொரு கடிதத்தில் தான் அந்த மர்மமான செய்தியைத் துவங்கியிருந்தான் ''மணாமா ஷாப்பிங் சென்டரில் நான் ஓர் அதிசயத்தைச் சந்தித்தேன். சில கணங்கள் என்னையே மறந்து சிலையாகிப் போனேன். இந்த அதிசயம் என் உணர்வுகளை அப்படியே ஆட்கொண்டு விட்டது. பிறகு விவரம் சொல்கிறேன்''

அந்த மர்மம் என்ன? அழகானதொரு பெண்ணா? அன்று வந்த கடிதத்திலும், அதற்கு முன்பும் அந்த மர்மத்தை விளக்காமலே தொடர்ந்து எழுதியிருந்தான். ஏன்?

அகல்யா மனம் கலங்கினாள். 'அப்படி யெல்லாம் நடக்கக் கூடியவரில்லையே. அதுவும் அந்த நாடுகளில் தப்புத் தண்டாவிலே இறங்கினால் கடுமையான தண்டனை என்பார்களே! முத்துமாரி! அவரிடமிருந்து கடிதம் வராதா என்ற ஆவலில் அதைப் படிக்கும் போது இப்படி ஒரு விஷயம் இருக்கலாம் என்ற எண்ணமே ஏற்பட்டதில்லையே? அதிசயம்



என்று குறிப்பிட்டிருந்த அந்த விஷயத்தை அத்தனை ஆழமாக வேறு கோணத்திலே பார்க்கவே இல்லை. தவறான காரியமாக இருந்தால் மனைவியிடம் இப்படி வெளிப்படையாக விவரிப்பாரா? வேறு ஏதாக இருக்கும்?''

படுக்கையறையிலே பஞ்சரத்தினம் இருமுவது கேட்டது. பரபரப்பாகக் கடிதங்களைப் பெட்டியில் வைத்துப் பூட்டினாள். அதை அலமாரியில் பழையபடி வைத்து மூடிவிட்டுத் திரும்பினாள்.

''அகல்யா!'' மாமியார் கூப்பிட்டு விட்டாள். கடிகாரத்தை அவசரமாகப் பார்த்தபோது மணி பன்னிரண்டு 'ஐய்யய்யோ! இத்தனை நேரமாக அவள் உட்கார்ந்து கொண்டிருந்தாள்?'

விளக்கை அணைத்து விட்டு வேகமாக ஓடி வந்தாள். 'நீ தூங்கலையா? கொஞ்சம் தண்ணி குடு.''கிழவி கேட்டபடி எழுந்து படுக்கையின் மீது சாய்ந்து கொண்டாள்.

நீரைத் தம்ளரில் ஊற்றிக் கொண்டு வந்து மாமியாரிடம் குடிக்கக் கொடுத்தாள்.

''அவன் சீக்கிரம் வந்துடப் போறான். இப்பவே சொல்லிட்டேன். திங்கட்கிழமை விரதம், சனிக்கிழமை ஒரு பொழுதுன்னு நீ உன் உடம்பைக் கெடுத்துக்க வேணாம். நல்லாச் சாப்பிட்டுக்கிட்டு இரு. எங்க வீட்டு மருமகளா வரும்போது ஊரே உன்னைப் பார்த்துக் கண்ணை வெச்சுது. தளதளன்னு கொல்லைக் கீரைத்தண்டு போலச் செழுமையா இருந்தே. பார்வதி என்னை ரகசியமாக் கேட்டா, 'உன் மருமவளுக்கு உடம்புக்கு என்ன? பாதியாப் போயிட்டாளே'ன்னு. எனக்கே ஒரு மாதிரியா ஆயிடுச்சு. நான் பதில் சொல்றதுக்கு முன்னே அவளே சொல்லிட்டா, 'புருஷனை நினைச்சுக்கிட்டு இந்தப் பொண்ணு துரும்பாத் தேயுது. கொஞ்சம் புத்தி சொல்லுங்க'ன்னாள். ஆமாம், இப்ப

மணி என்ன? தூங்காம என்ன செய்துகிட்டிருந்தே? அதட்டினாள் பஞ்சரத்தினம்.

''ஒண்ணுமில்லை. அலமாரியில் இருந்த சாமான்களை எடுத்துச் சுத்தப்படுத்திக்கிட்டிருந்தேன்.''

''அதுக்கு நேரம் காலம் கிடையாதா? கதவைச் சாத்திக்கிட்டுப் படும்மா. நேரம் இல்லாம இப்படித்தான் நான் அந்தக் காலத்திலே உன்னைப் போலக் கடுமையா உழைச்சேன்-பலன்? வயசுக் காலத்திலே இப்போ உதைக்குது. எல்லாத்துக்கும் ஒரு அளவு இருக்கும்மா போய்ப் படு.'' கடிந்து கொண்டாள்.

சப்தமிடாது கதவைத் தள்ளித் தாழிட்டுவிட்டுப் படுக்கை மீது சாய்ந்து கொண்டு போர்வையைக் கழுத்து மட்டும் இழுத்து விட்டுக் கொண்டு சுவரின் பக்கம் திரும்பிக் கொண்டாள். அந்தச் சுவரில் ஒரு திரைப்படம் பார்ப்பது போல் ஓடிய அந்தக் காட்சியில் தன்னை மறந்து லயித்துப் போனாள். முதல் முதலாக அவனைச் சந்தித்த நிகழ்ச்சி ஏதோ இப்போது ஓடத் தொடங்கியது.

அப்போது அவள் அந்தத் தனியார் பள்ளியிலே ஒரு தற்காலிக ஆசிரியை. முதல் வகுப்பு சிறுமிகளுக்கு ஆங்கிலமும் கணக்கும் போதித்துக் கொண்டிருந்தாள். அந்த வேலை கிடைத்ததே ஒரு விந்தைதான். அவள் தான் குடும்பத்தில் கடைக்குட்டி. திருச்சியில் பி.யூ.ஸி.வரை படித்து விட்டுச் சொந்த ஊருக்குத் திரும்பியிருந்தாள். அதற்கு மேல் படிப்புக்கு வசதி செய்ய தபால்கார குருநாதனுக்கு வசதியில்லை. அந்தப் படிப்புக் கூட நகரத்திலிருந்த அவள் அத்தையின் உபயம். வயது வந்த பெண்ணை நீடித்துத் தன் பொறுப்பில் வைத்துக்கொள்ள அத்தைக்கு மனமிருக்க வில்லை. பி.யூ.சியுடன் முற்றுப்புள்ளி வைத்துத் தம்பியிடம் திரும்ப அனுப்பி விட்டிருந்தாள்.



ஒரு வருட காலம் வீட்டிலேயே சும்மா அடுப்பங் கரையை வளைய வந்து கொண்டிருந்தவளுக்கு அதிர்ஷ்ட வசமாக அந்தப் பள்ளியில் தற்காலிகமாக ஒரு வேலை கிடைத்தது. தலைமை ஆசிரியைக்கு தபால்காரர் மீது கொஞ்சம் மதிப்பு உண்டு. அவரது வறுமையைக் கண்டு பரிதாபமும் உண்டு. கணக்கும், ஆங்கிலமும் போதித்த ஆசிரியை, கல்யாணம் செய்து கொண்டு திடீரென்று வேலையை ராஜிநாமாச் செய்து விட்டுப் போய் விட்டிருந் தாள். தகுந்தவளைத் தேடிப் பிடிக்கும் வரை தற்காலிகமாக என்றுதான் அந்த வேலை அவளுக்குக் கிடைத்திருக்கிறது. எத்தனையோ முறை அவள் உள்ளம் அந்தப் பள்ளித் தலைமை ஆசிரியையை வாழ்த்திக் கொண்டிருந்தது.

அந்த வேலை அவளுக்கு எத்தனை பெரியதொரு வாய்ப்பை வழங்கி விட்டிருந்தது? அவள் உத்தியோகம் பார்த்து முதல் மாதச் சம்பளத்தைக் கையில் வாங்கி முடிக்கு முன், அதிர்ஷ்டம் வேறு ஓர் உருவில் அவளைத் தானாகவே தேடிக் கொண்டு, ராஜ்குமார் என்கிற என்ஜினியராகப் பள்ளிக்கூடத்துத் தோட்டத்திலே அந்தப் பெரிய வேப்ப மரத்தடியில் வந்து நின்றதே!

உடம்பெல்லாம் சிலிர்க்க, தன்னுள்ளே மெல்லச் சிரித்தபடி அவள் அந்தக் காட்சியைக் கற்பனையில் தொடர்ந் தாள். ''தலைமை ஆசிரியை திருமதி காந்தாமணியை இப்போது பார்க்க முடியுமா?'' வெயிலுக்காக அந்த மரத்தடியில் இடைவேளையின் போது உட்கார்ந்திருந்த வளிடம் கேட்ட குரல், பட்டுப் போல் காதுகளைத் தழுவத் திகைப்புடன் திரும்பினாள்.

'திருமதி காந்தாமணியைப் பிறகு பார்த்துக் கொள்கிறேன். இப்போது உன்னைப் பார்த்து முடிக்கவே இந்த யுகம் வரை காலம் போதாது போலிருக்கிறதே, என்று

சொல்லாமல் கண்களால் அவளை எப்படித்தான் விழுங்கினான்!

அவள் மட்டும் என்ன? நிமிர்ந்து அவனைப் பார்த்து விட்டு, பேசத் தோன்றாமல் தடுமாறிக் கொண்டு நின்றாளே? ஏன்?

வேப்ப மரத்திலிருந்த குயில் கூவிக் கொண்டு சிறகடித்து வேறு பக்கம் பறந்த போதுதானே இந்த உலக நினைப்பு வந்தது?

''அப்போ உன் முகம் ஏன் அப்படிச் சிவந்து போச்சு?'' என்று அந்தக் கதையை நினைவூட்டி, அவள் கன்னங்கள் சிவக்க அழுத்திக் கிள்ளி விளையாடுவானே...ம்...

''அகல்யா! தூங்கிட்டியா?'' மாமியார் மெல்லக் கூப்பிட்டதும், அவள் மூச்சைப் பிடித்துக் கொண்டு தூங்குவது போல் மௌனம் சாதித்தாள்.

தூக்கம் வருமா? அவன் வந்து அந்த அதிசயத்தை நேரில் சொல்லும் வரை? என்ன என்னவோ எண்ணிக் குழம்பிப் போகும் அவள் விரைவில் உறங்குவாளா? சந்தேகந்தான்.

## 4

அவள் தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள் மீண்டும் உறங்கிப் போகக் கூட மனம் இல்லை. அழகிய நினைவுகள் துண்டித்துப் போகுமே? எண்ணிப் பார்க்கும் போது எத்தனை இன்பம்...ம்! மெல்லப் படுக்கையில் இலேசாகப் புரண்டாள். நினைவுகளும் புரண்டு கொடுத்தன.

அன்று மாலை அவள் பெற்றோர்கள் பக்கத்து ஊரில் வியாதியாக இருந்த நண்பரைப் பார்த்து வரச் சென்றிருந்தார்கள். ''விளக்கு வைப்பதற்குள் வந்துடுவேன். சமையலை



மட்டும் கவனிச்சுடு'' என்று தாயார் உத்தரவிட்டிருந்தாள்? இளம் பெண்ணைத் தனியாக விட்டிருக்கிறோமே என்ற கவலை வேறு.

''கவனமா வாசல் கதவைத் தாழ் போட்டுக்க'' என்று நூறு தடவை எச்சரித்திருந்தாள்.

வேலையினின்று திரும்பினவள் குளித்து வேறு உடுத்திக் கொண்டுதான் சமைக்கத் துவங்கினாள். அவர்கள் வீட்டில் இரவு சாப்பாடுதான் முக்கியமான உணவு. அப்பாவுக்குப் பருப்பு சாம்பார், காரமாக ஏதாவது துவையல் என்பது கட்டாயம். அம்மாவிற்குப் பொரியல் அப்பளம் இருந்தாக வேண்டும். சமையல் விரைவில் முடிந்து விட்டது. பொழுது போனதே தெரியவில்லை. அப்படி ஒரு கவனம்... யார் அவர்? முன்பின் தெரியாது திருநல்லூர்க்காரன், என்ஜினியர் என்று பின்னர் கணக்கர் பேசியதில் புரிந்து கொண்டாள்.

மோட்டார் சைக்கிளில் வந்திருந்தார். தலைமை ஆசிரியையிடம் பேசிவிட்டு கையோடு கொணர்ந்திருந்த சுருள் நாடாவை இழுத்து அந்த தோட்டத்தில் வெறுமையாகக் கிடந்த பூமியை அளந்து கணக்கிட்டு ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறிப்பெழுதுவதை அவளது வகுப்பறை ஜன்னல் வழியே பார்த்தாள். குழந்தைகள் சிலேட்டுக்களில் எச்சிலைத் துப்பி அழித்துக் கொண்டு, அவள் கொடுத்த கணக்கை வைத்துக் கொண்டு குழம்பிக் கொண்டிருந்தனர். அவள் மெல்ல நாற்காலியை விட்டு எழுந்து ஜன்னலருகே வந்து எட்டிப் பார்த்தாள். அவனும் ஜன்னலையே வெறித்துக் கொண்டிருந்தான்!

கல்யாணத்திற்குப் பிறகு தேனிலவின் போது அந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டுச் சிரித்த போதுதான் அந்த ரகசியம் நன்கு விளங்கியது.

தலைமை ஆசிரியையிடம் பேசிவிட்டு, மோட்டார் சைக்கிளில் ஏறப் போனவன், தற்செயலாகத் திரும்புவது போல் ஜன்னல் பக்கம் திரும்பியதும்... அவள் மெய் சிலிர்க்க மேனி படபடக்க... குற்ற உணர்வில் சட்டெனத் திரும்பி வந்து ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

''யார் அவர்?'' பெயர் என்ன என்று கூட தெரிந்து கொள்ளவில்லையே என்ற தாபம். ஏதோ அவளுக்கு வேலையே ஓடவில்லை.

மோட்டார் சைக்கிளின் படபட ஒலி வாயிலில் கேட்டது. ''என்ன இது? ஒரு வேளை அவளது மனத்தின் பிரமையா?'' இன்பமான எதிர்பார்ப்பில், குழம்பைக் கிளறிய கரண்டியுடன் அவள் ஓடி வந்து புழக்கடை வழியாக எட்டிப் பார்த்தாள்.

சந்தேகமில்லை! அவரேதான்! அவர்கள் வீட்டு வாயிலில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு கதவுப் பக்கம் போவதைக் கவனித்து விட்டாள். அம்மா சொன்ன ஜாக்கிரதைத் தனமெல்லாம் மறந்து விட்டது. ஒட்டமாக ஓடி வந்து கதவைத் திறந்தாள்.

''தபால்காரர் குரு நாதன் வீடு இது தானே?'' அவன் கேட்டபடி, அவளைப் பார்வையில் விழுங்கினான். அவளால் பேசவே முடியவில்லை.

''நீங்க... நீங்க...''

''முதல்லே கையில் பிடிச்சிருக்கிற அந்தப் பயங்கர ஆயுதத்தைக் கீழே வைக்கறீங்களா? நான் யார்னு சொல்றேன். எங்கே தலைக்குமேலே ஓங்கிப் போட்டு விடுவீங்களோன்னு பயமா இருக்குது'' கேலி பேசியது அவன் குரல்.

அவளுக்கே வெட்கமாகி விட்டது. கையில் பிடித்த கரண்டியுடன், முகம் சிவக்க தடுமாறியபடி, கதவின் பின் தன்னை மறைத்துக் கொண்டாள்.



''ம்! நீங்க தானே அந்தப் பள்ளிக் கூடத்திலே வேலை பார்க்கிற மிஸ் அகல்யா? கணக்கிலே பெரிய புலியாமே. கேள்விப்பட்டேன். இங்க பள்ளியிலே ஒரு சிறு மண்டபம் கட்ட வேணுவாம். அதுக்காக நான் திருநல்லூரிலேயிருந்து வந்திருக்கேன். என் பெயர் ராஜ்குமார். நான் ஒரு ஏழை என்ஜினியர்'' என்று குறும்பாகச் சிரித்தான்.

''என்ன வேணும்? அப்பா அம்மா வீட்டிலே இல்லை'' அவள் வெளியே முழுமையாகத் தன்னைக் காட்டிக் கொள்ளாமல் பேசினாள். அவனிடம் பேசிக் கொண்டே நிற்க வேணும் என்ற ஆசை வேறு. அதே சமயம் அவன் யாரோ? எதிர் வீடு, அக்கம்பக்கம் யாராவது பார்த்து விட்டால் என்ன செய்வது என்ன அச்சம் வேறு.

''அப்பா வர நேரமாகுமா?'' அவனும் கேட்டபடி நின்றான்.

''பக்கத்து ஊருக்குப் போயிருக்காங்க. நீங்க பிறகு வாங்க.'' கதவை மூடிக் கொண்டு உள்ளே போய்விட்டாள்.

தேன் நிலவின் போது அந்த நிகழ்ச்சியும் அவர்களது இன்பப் பரிகசிப்புக்கு உதவியது.

''படார்னு கதவை மூடிக்கிட்டுப் போயிட்டியே. நிறையப் பத்திரிகைகள் படிக்கிறே போலிருக்குது. இது மாதிரிப் பேச ஆரம்பிச்சு; அது எக்கச்சக்கமா எங்கேயோ போய் முடிகிற கதைகளைப் படிச்சிட்டு அரண்டு போய் விட்டிருக்கேன்னு நினைச்சுக்கிட்டேன். வழியெல்லாம் நானே சிரிச்சுக்கிட்டிருந்தேன்.''

''முன் பின் தெரியாதவங்ககிட்ட வெகு நேரம் பேசிக் கிட்டிருந்தா நல்லாவா இருக்கும்? அம்மா வேற எச்சரிக்கை செய்திருந்தாங்க. அப்புறம், நீங்க தாகத்துக்குத் தண்ணி கேப்பீங்க. அதே சாக்கா உள்ளே வந்துட்டா?'' பதிலுக்கு அவளும் கிண்டல் செய்தாள்.

''தாகம் நாக்கை வறட்டினது உண்மைதான். உங்கப்பா இருந்தா, பேச்சுக்குடுத்து, சுத்தி வளைச்சு நாம் சொந்தம்னு நிரூபிச்சு, சூடா காபி வாங்கிக் குடிச்சிருப்பேன். தண்ணி வேணும்னா நீ பயந்துடுவேன்னு பேசாமப் போயிட்டேன்.''

''போனீங்களா, மறுநாளு பள்ளிக்கூடத்திலே அந்த வேப்ப மரத்தடியில் என்னைத் தேடிக்கிட்டு வரலே? ரொம்ப தந்திரம்? 'ஒரு வெள்ளைக் கடுதாசி குடுக்க முடியுமா? நோட்புக்கை வீட்ல விட்டுட்டேன்னு' இன்னொரு ஆசிரியையைக் கண்டதும் சமாளிச்சீங்களே!''

''அப்புறம்தான் குளிர் விட்டுப் போச்சே! நேரே உங்கப்பாவைப் பார்க்க வீடு தேடியே வந்திட்டேன். உறவுக் காரப் பையன்னு, சாப்பிடற அளவுக்கே வந்துட்டேனே'' அவன் சிரித்தான். உல்லாசமாக அருகில் நின்று சிரிப்பதைப் போல, இன்னமும் அவள் மனத்தில் அது பசுமையாக இருந்தது. கண்களில் துளிர்த்த நீர் தலையணை மீது உதிர, அவளும் நெஞ்சு விம்மி, அவனைப் பற்றியே சிந்தித்தாள்.

கண்டவுடன் காதலித்தான்! ஏன் அவள் மட்டும் என்ன? பார்த்த அளவிலேயே மனத்தைப் பறி கொடுத்தாள்.

அதற்குப் பின் அந்தக் கட்டடத்தைக் கட்டி முடிக்கும் வரை, மேற்பார்வையிட மேஸ்திரி இருந்தும் அவனே தினமும் வந்து போனான். 'பாவம், பையன் ஹோட்டல் சாப்பாடு எதுக்குன்னு கூட்டியாந்தேன்' எனப் பத்தாம் பசலி அப்பா அடிக்கடி அவனைச் சாப்பிட அழைத்து வருவார். அம்மாதான் சாப்பாடு பரிமாறுவாள். ஆனால் இவர்கள் கண்கள் எத்தனையோ விஷயங்களை அதற்குள் பரிமாறி விடும்.

''உங்கப்பாவே தபால்காரர். காதல் கடுதாசு எழுதி னால்... பயம்மா இருக்கு. உன்னை எனக்குப் பிடிச்சிட்டுது.



என்னைக் கல்யாணம் செய்துக்கறயா?'' வேப்ப மரத்தடி சாட்சியாக ஒருநாள் அவன் கேட்டே விட்டான்.

மகிழ்ச்சியில் மனம் துள்ள அவள் 'சரி' என்று தலையை ஆட்டிவிட்டுச் சுற்றுமுற்றும் பயத்துடன் ஒது நோட்டம் விட்டாள்.

பின்னர், பெண் பார்க்கும் படலம். பஞ்சரத்தினத்திற்கு அப்போது பார்வைக் கோளாறு ஆரம்பமாகி இருக்கவில்லை. பக்கத்து வீட்டுக் கட்டுக்கழுத்தியுடன் வெற்றிலைபாக்கு சகிதம் வந்திருந்தாள். பெண்ணைப் பிடித்திருந்தது. உறவு முறை வேறு. ஆனால் அந்தஸ்து? வேண்டாம் இந்த இடம் என ஒதுக்கிவிட்டதாகப் பிறகு ஒரு சேதி, அவள் காதுகளுக்கு எட்டியது.

''பணக்காரின்னா அவங்கமட்டில். எம் பொண்ணைக் கண்டேன் கண்டேன்னு கொண்டு போக எத்தனையோ பேரு வருவாங்க.'' குருநாதன் கோபத்தில் மீசையை முறுக்கினார்.

''அழகு மட்டும் இருந்திட்டாப் போதுமா? சம்பந்தின்னு சொல்லிக்கிடச் சமநிலை வேணாமா? நான் ஒத்துக்கிட மாட்டேன்.'' பஞ்சரத்தினம் பிடிவாதம் பிடித்தாள்.

''அகல்யாவை நீங்க மருமகளா ஏத்துக்கறதா இருந்தா எனக்குக் கல்யாணம். இல்லாட்டி இப்படியே கால முச்சூடும் இருந்துடுவேன்'' என்று மகன் பயமுறுத்தினான்.

''எனக்குக் கல்யாணம் வேணும்னு நானா கேட்டேன்?'' அகல்யா அழுதாள்.

முடிவில் பஞ்சரத்தினம் விட்டுக் கொடுத்தாள். ஆனால் முழு மனத்துடன் இல்லை. அவர்கள் திருமணம் வெகு விமரிசையாகவே நடந்தது. தேனிலவிற்கு மைசூருக்குப் புறப்பட்டுப் போன போது, அவளுக்கே மலைப்பாக இருந்தது.

ஜகஜ்ஜோதியாக விளக்குகள் எரிந்து கொண்டிருந்த பிருந்தாவனம் பூங்காவில் கணவன் அருகில் உட்கார்ந்த அவள், ''இது உண்மையா?'' என்று திகைத்தாள்.

''நான் இதுவரை இங்கே வந்ததே இல்லீங்க, என்ன அழகா இருக்கு இந்த விளக்கு ஜோடனை?'' கணவனது அருகே தோள் மீது இடித்தபடி கேட்டாள். சூடான அவன் மூச்சுக் காற்று கன்னத்திலே பட்டது.

''நான் சில தடவைகள் வந்திருக்கிறேன். ஆனால் இப்ப என் கண்ணில தெரியறது ஒரே ஒருவிளக்குத்தான். அகல்யா! உன்னை நான் எவ்வளவு ஆழமா நேசிக்கிறேன்னு தெரியுமா? நீ என் உயிர்.''

''நானுந்தான் உங்களை...'' அருகில் யாரோ வருவதைப் பார்த்து அவள் சட்டென எழுந்தாள், முடிக்காமல், அவள் நினைவில் நினைவுகள் மீண்டும் மீண்டும் ஒளிந்து விளையாடின.

மிக நெருக்கமாக நேசித்த அவர்களிடையே இப்போது ஏதாவது வந்து கொண்டிருக்கிறதா? வேற்று நாட்டில் தனியே வசிக்கும் கோளாறினால்... துணையைத் தேடி விட்டாரா?

''முத்துமாரித் தாயே!'' கண்கள் முத்துமுத்தாக நீரைச் சொரிந்தன.

ஹால் கடிகாரம் டாண், டாணென்று அடித்தது. ஒன்று, இரண்டு என எண்ணத் துவங்கியவள் ஐந்து என்றதும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். விடிந்து ஐந்து மணி. அப்படியானால் அவள் உறங்கவே இல்லையா?

படுக்கையில் இருந்த பஞ்சரத்தினம் இருமினாள். ''அதுக்குள்ளாற எழுந்திட்டியா? என்ன அவசரம்?''

''இன்னிக்கு வெள்ளிக்கிழமை. ஆத்தாளுக்கு அபிஷேகத்துக்கு இளநீரும், பன்னீரும் அனுப்பி வைக்கறதாச்



சொல்லி இருந்தேன். கோயிலுக்குச் சீக்கிரம் போயிட்டு வரணும்.'' சட்டெனப் போர்வையை உதறியவள் அதை மடித்துத் தலையணை மீது வைத்துச் சுருட்டினாள்.

கனகசபை வீட்டிலிருந்து வந்த இளநீர், பன்னீர், பசும் பால், சந்தனம் என்று முத்துமாரி, குளிர குளிர மூழ்கிக் கொண்டிருந்தாள். அவளது திரு உருவின் மீது பால் செம்பை அர்ச்சகர் சாய்த்தபோது, ''தாயே முத்து மாரி! எங்க வாழ்க்கையில் இடைஞ்சல் எதையும் செய்திடாதேம்மா. என் வயத்திலே பாலை வார்த்திடுதாயே!'' என்று வேண்டினாள். அகல்யா மனமுருகி. ஏனோ அவளுக்கு அப்படி ஒரு தவிப்பு மனத்தினுள்.

## 5

ஆபீஸிலிருந்து வெளியே வந்தான் ராஜ்குமார். மாலை பொழுதாகியும் இன்னமும் வெய்யிலின் கடுமை தணிந்த பாடில்லை. வேர்வையில் பிசுபிசுத்த சபாரியைக் களைந்து விட்டு உடனடியாக வேறு உடுத்திக் கொண்டால் தேவலை போன்றதொரு தவிப்பு. அந்த நிர்வாகத்தின் கார்களை நிறுத்துமிடத்தில் காலையிலிருந்து நின்று கொண்டிருந்த தனது ஆட்டமேடிக் டாட்சனில் வந்து ஏறிக் கொண்டான். எத்தனையோ முறை அவன் நினைத்துக் கொண்டதுண்டு இப்படிப்பட்டதொரு காரில் அகல்யாவை ஏற்றிக் கொண்டு சேலம் வரை போய் வந்தால்...? அவனது ஆசையைக் கடிதத்திலும் எழுதி விட்டிருந்தான். ஆனால் அவளிடமிருந்து வந்த பதில்?

''நம்ம வீட்டுக் காங்கேத்துக் காளைமாட்டு வண்டியில் சேலம் போகும் நெடுஞ்சாலை வரை உங்களுடன் சவாரி

போய் விட்டு வந்தாலே எனக்குப் போதும். கன்கார்டு விமானத்திலே உலகத்தையே சுற்றி வந்த ஆனந்தம் அதில் அடங்கியிருக்கும் அத்தான். எதற்காக இப்படி அங்கலாய்க்கிறீங்க? சீக்கிரம் ஊர் வந்து சேரும் வழியைப் பாருங்கள்.''

ஆரம்பத்தில் இடது கை ஸ்டீயரிங் வண்டியை ஓட்ட அவனுக்குப் புதுமையாகத்தான் இருந்தது. வண்டி வாங்கிய கையுடன் அங்கே அதை ஓட்ட மறுபடியும் அவன் லைசென்ஸ் எடுக்க வேண்டியிருந்தது. அதற்கெல்லாம் அவன் சளைக்கவில்லை. ஆனால் நீடித்து இனியும் தனியாக அங்கே தங்கி வாழ முடியாது என்றவரை கொஞ்ச காலமாக அவன் மனம் உளைந்து கொண்டிருந்தது உண்மையே.

கழிநீர்க் குழாய் பதிப்பதில் ஈடுபட்டிருக்கும் ஒரு பிரபலமான பொறியியல் நிறுவனத்தில் தான் அவன் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். நல்ல சம்பளம். ஆபிசுக்குச் சிறிது தொலைவிலிருந்த குடியிருப்புப் பகுதி ஒன்றில் ஓர் அராபியர் வீட்டு அறைகளை வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்தான். வண்டியை நிறுத்தி விட்டு மாடிப்படிகளில் விரைந்து கதவைத் திறந்தான். எல்லா வசதிகளையும் கொண்டதொரு சிறிய ஃபிளாட் அது. உள்ளே இருந்த குளிர் சாதன அமைப்பு குளிரக் குளிர அவனை வரவேற்றது. அப்பாடா என்று தன்னையும் மீறி ஒரு பெருமூச்சு விட்டான். கதவைத் தாளிட்டுக் கொண்டு முதல் காரியமாகக் குளிக்க சோப்பும் துவாலையுமாகப் புறப்பட்டான்.

அருவி போல் குழாயில் கொட்டிய நீரைக் கையில் ஏந்தி, என்னவோ யோசனையுடன் வாயில் ஊற்றிக் கொண்டவன், தூ...தூ என்று துப்பி விட்டான். இருபத்து நான்கு மணி நேரமும் தங்க தடையின்றிக் குழாய் சுத்தப்படுத்திய கடல் நீரைக் கொட்டிக் கொண்டிருந்தது. ஆனால் காவிரித் தண்ணீரின் ருசி அதில் இல்லையே என்ற ஏக்கம் நெஞ்சைப்



பிசையவே... தாயகத்தின் நினைவு உள்ளத்தைக் குடைந்தது. தாயும் மனைவியும் சிந்தனையை வியாபித்துக் கொண்டனர்.

இன்னும் சில மாதங்கள் தாம் இருந்தன. வேலையின் ஒப்பந்த காலம் முடிந்ததும், அடுத்த விமானத்தில் பறந்து விட மாட்டோமா என்றதொரு தவிப்பு அவனுக்குள், நாளுக்குநாள் அது புழுவாக மனத்தை அரித்துக் கொண்டிருந்தது.

துவாலையால் உடலைத் துடைத்துக் கொண்டு அதை இடையில் அணிந்தபடி படுக்கை அறைக்குள் புகுந்தான். அலமாரியில் தொங்கிய சுத்தமான உடையில் ஒரு பாண்டையும் ஷர்ட்டையும் எடுத்து அணிந்து கொண்டான். தாகம் நாக்கை வறட்டியது. குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து தண்ணீர் பாட்டிலைக் கையில் எடுத்த போதுதான் கவனித்தான். குடிநீர் மீதி ஒரே ஒரு பாட்டில் தான் இருந்தது. மடமடவென்று கையிலிருந்த பாட்டில் தண்ணீரையும் குடித்து விட்டு அலுப்புடன் ஓர் ஆசனத்தின் மீது அமர்ந்து கொண்டான்.

வீட்டைச் சுத்தப்படுத்துவதிலிருந்து படுக்கையைத் தட்டிப் போடுவது, காபி போடுவது, குடிநீர் வாங்கிச் சேமித்துக் கொள்வது வரை எல்லாம் அவனே செய்தாக வேண்டிய நிர்ப்பந்தம். வெளியே வேலையும், செய்து விட்டு வீட்டிலும் வந்து பாடுபட்டுக் குடிக்கத் தண்ணீரைத் தேடிக் கொண்டு பிளாஸ்டிக் கான்களுடன் ஓட வேண்டிய கட்டாயம் அவனுக்குத் தேவையில்லை தான். தானாகத் தேடிக் கொண்ட தண்டனை!

இப்படித்தான் ஒரு நாள் அவன் மனம் புழுங்கிப் போயிருந்த போது, குடிநீர் கொண்டு வரப் பிளாஸ்டிக் கானுடன் புறப்பட்டான். ஏதாவது செய்து கொண்டிருந்தால் ஊர் நினைப்பு உள்ளத்தை வருத்தாது என்ற எண்ணம். கம்பெனி மூலமாகத் தபால் பெட்டி எண்ணுக்குத்தான்

அவனுக்குக் கடிதங்கள் வருவது வழக்கம். அன்று பகல் வந்த கடிதங்களில் அகல்யாவிடமிருந்து பதிலைக் காணவில்லை.

அம்மாவுக்கு இப்போது உடம்பு எப்படி இருக்கிறது? அகல்யாவுக்கு இது பற்றிக் கடிதம் எழுதுவதைவிடத் தலைகொண்டு போகிற வேலை என்ன இருக்கும்? கோபமும் தாபமுமாக அவன் சிறிது நேரம் ஆபீஸினின்று கிளம்ப மனமின்றிச் சுவரைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவளது கடிதம் வந்து பல நாட்களாகிவிட்டன என்று நினைக்க நினைக்க ஊர் நினைப்பு நெஞ்சை இறுக்கியது. ஓங்கித் தலையில் அடித்துக் கொண்டு வாய்விட்டு அழ வேண்டும் போன்றதோர் இனம் விளங்காத தாபத்துடன் தான் வரும் வழியில் குடிநீர் வாங்க, காரை வாட்டர் பியூரிஃபிகேஷன் சென்டர் அருகே நிறுத்தி, டிக்கியிலிருந்த கான்களை எடுத்து இரண்டு கான்கள் நிறைய குடிநீரை வாங்கி நிரப்பிக் கொண்டான். சட்டைப் பைக்குள் பர்சைப் பத்திரமாக வைத்துக் கொண்டு நின்ற போதுதான் யாரோ தோளைத் தொடுவதாக உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினான்.

''ஹாய் நீயா!'' என்று முதுகில் செல்லமாகத் தட்டிய அந்த அமெரிக்க இளைஞனை, அவன் முன்பின் பார்த்ததில்லை. வியப்புடன் அவன் எதுவும் பேசுமுன் அந்த வாலிபன் அவனைப் பார்த்து முறுவலித்தான்.

''அவசரம், பிறகு பார்க்கிறேன். மார்க்கரட் காரில் காத்திருக்கிறாள்'' என்றபடி குடிநீர் கொண்ட கான்களுடன் வேகமாக அப்பால் நகர்ந்து விட்டான்.

''மிஸ்டர்!'' என்று அவனைக் கூவி அழைத்துப் பேச வேண்டும் என்ற ஆவலுடன் ராஜ்குமார் வாயைத் திறக்குமுன் அந்த வாலிபனின் கார் நகர்ந்து விட்டது.

வீட்டுக்கு வந்த அவனுக்கு அன்று வெகுநேரம் ஒரே குழப்பம்.



''யார் அந்த அமெரிக்க வாலிபன்? அறிமுகமில்லாதவன், தெரிந்தவன் போல் தோளைத் தட்டி 'நீயா' என்றானே, ஏன்?

வெகு நேரம் குழம்பிக் கொண்டு உட்கார்ந்தவனுக்கு அகல்யாமீது திடீரென்று எரிச்சல் பொங்கிக் கொண்டு வந்தது. நாயர் ஹோட்டலுக்குச் சாப்பிட போகுமுன் கட்டாயம் அவளுக்கு ஒரு கடிதம் எழுதி விட்டுத்தான் மறு வேலை. மேஜையருகே உட்கார்ந்தான். கோபத்துடன் அவசரமாக விடுவிடுவென்று தலையை நிமிர்த்தாது எழுதி முடித்தான். ஒரு முறை படித்துப் பார்த்தான்.

''தனியாக ஒரு மனிதன் வெளியூரில் சோற்றுக்கும் தண்ணீருக்கும் எப்படித் தவிக்கிறானோ என்ற நினைவு கூடவா உன் நெஞ்சிலிருந்து மறைந்து விட்டது? கடிதம் எழுத அத்தனை சோம்பலா? அசட்டையா? இல்லை. நிற்க நேரமில்லாது அத்தனை வேலையா? உன்னிடமிருந்து கடிதம் வரும் என்று ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்து ஏமாந்து அம்மாவை நினைத்துக்கொண்டு நான் படும் கவலை சொல்லத் தரமன்று. இப்படி என்னைச் சித்திரவதை செய்து வேடிக்கை பார்க்க உனக்கு நான் இழைத்துவிட்ட கொடுமை தான் என்ன? விளக்கமாகச் சொல்லிவிடு'' வார்த்தைகள் பச்சை மிளகாயாக எரிந்தன.

கடிதத்தை மடித்து உறைக்குள் போட்டு முகவரியை எழுதித் தன் சட்டைப் பையில் பத்திரமாக வைத்துக் கொண்டான். மறுநாள் தபாலில் அதைச் சேர்த்து விட வேண்டுமென்ற தீர்மானம்.

மனாமாவின் கடைத்தெருப் பக்கத்திலிருந்த ஒரு சிறிய சந்துக்குள் தான் சிவசங்கரநாயரின் ஹோட்டல் இருந்தது. இரவு உணவுக்காக அவன் அடிக்கடி அங்கேதான் செல்வது

வழக்கம். அன்று நாயரின் ஹோட்டலில் கூட்டம் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. காத்து நிற்க நேரமின்றி அவன் அதே சந்தில் சில கடைகளுக்கு அப்பாலிருந்த இன்னொரு கேரள ஹோட்டலுக்குள் நுழைந்தான். அவனைக் கண்டதும் பையன் ஒரு பீங்கான் தட்டில் சாதம் வைத்து மீன் குழம்பை அதன்மேல் வார்த்து எடுத்துக்கொண்டு விரைந்து வந்து மேஜை மீது வைத்தான்.

''நான் சைவ உணவுக்காரன் இதெல்லாம் சாப்பிடுவ தில்லை.'' மறுத்தபடி தட்டை அவன் நகர்த்தியபோது, பையன் உரக்கச் சிரித்து விட்டான்.

''ஸார், இங்கே சாப்பிட வரும்போதெல்லாம் மீன் குழம்பை ஒரு கை பார்த்து விட்டுப் போறது ஞாபகம் வந்தது அதனால்...'' என்று கூறிவிட்டுத் தட்டை உள்ளே எடுத்துச்சென்றான்.

''ஸாருக்கு ஏதேனும் விரதமோ?'' கேட்டுக் கொண்டே இன்னொரு தட்டில் சாதமும் அதன் மீது பருப்புச் சாம்பாரும், ஒரு பப்படமும், ஒரு கோப்பையில் ரசமும் எடுத்துக் கொண்டு வந்து வைத்தான்.

பிறந்ததிலிருந்தே ராஜ்குமார் உணவு விஷயத்தில் சுத்த சைவம். மீன்குழம்பு சாப்பிட்டதாக இந்தப் பையன் உளறுகிறானே ஏன்? மறுபடியும் அவனுக்குக் குழப்பம்.

சாப்பாட்டை முடித்துக்கொண்டு வந்து படுத்த அவனுக்கு வெகு நேரம் உறக்கம் வரவேயில்லை.

மறுநாள் தபாலில் அகல்யாவின் கடிதம் பளிச்சென்று முதலாவதாக அவன் கண்களில் பட்டது. பரபரப்புடன் பிரித்தான்.

அகல்யாவும் அதே கேள்வியைத்தான் கேட்டிருந்தாள். 'உங்களிடமிருந்து கடிதங்கள் தாமதமாக வருகின்றனவே?



ஏன்? வேலை அதிகமாகி விட்டதா அல்லது உடம்புக்குச் சுகமில்லையா? உங்கள் கடிதத்தைக் காணாவிட்டால் மனத்தில் எத்தனையோ கவலைகள் ஏற்பட்டு விடுகின்றன. அந்த ஊர் வெயிலில் அடிக்கடி அலைய வேண்டாம் என்று அத்தை எழுதச் சொன்னார்கள். நேற்றுக் காலை பலகாரம் சாப்பிடும்போது அத்தை குலுங்கி அழுது விட்டார்கள். அவர்களுக்கு மிகவும் பிடிக்குமே என்று இடியாப்பம் செய்து சிறிதளவு மட்டும் பரிமாறியிருந்தேன். கொஞ்சம் பிட்டு வாய்க்குள் போட்டுக் கொள்வதற்குள் கரகரவென்று அவர்கள் கண்களில் நீர் புரண்டு விட்டது. 'என் மகனுக்கு இடியாப்பம்னா உசிராச்சே? அந்த ஊரிலே யார் அப்படிச் செய்து அருமையாச் சாப்பிட உபசரிக்கப் போறாங்க?' என்று தழுதழுத்தார்கள். அவர்களைச் சமாதானப்படுத்த ரொம்பப் பிரயாசையாகி விட்டது. என் நெஞ்சே வெடித்து விடும் போன்று எனக்குத் துக்கமாகத் தான் இருந்தது. காசிக்குப் போனவர்கள் தங்களுக்குப் பிடித்த பொருள்களில் எதையாவது ஒதுக்கி விடுவாங்களாமே, அது போல், நீங்க வரும் வரை உங்களுக்குப் பிடித்தமான உணவு வகைகளை நானும் ஒதுக்கி விட்டிருக்கிறேன். நீங்க வீடு வந்து சேர்ந்ததும் உங்களுக்குச் சமைத்துப் போட்டு உபசரித்து விட்டுத்தான் அவற்றை நான் சாப்பிட வேண்டும் என்றதொரு விரதம்! அதனால் நான் இடியாப்பத்தைக் கையால்கூடத் தொட வில்லை. ஆமாம், நீங்கள் எப்பொழுது வருவதாக உத்தேசம்? உங்களிடமிருந்து கடிதம் வராவிட்டால் என் உயிரே போய் விட்டது போன்ற ஒரு பிரமை. உணர்வுகள் தொய்ந்து நான் துவண்டு போய் விடுகிறேன். இந்த நிலையில் நோயாளியாக உள்ள அத்தையை நான் எப்படிச் சமாதானப் படுத்த முடியும்? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.''

நெஞ்சம் நெகிழ்ந்து போய் விட்டான் ராஜ்குமார். சட்டைப் பையிலிருந்த தன் கடிதத்தை எடுத்துச் சுக்கல்

சுக்கலாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டு விட்டு,இடைவேளையின் போது அமைதியாக உட்கார்ந்து வேறு ஒரு கடிதம் எழுதி தபாலில் சேர்த்தான்.

அகல்யா அவன் மீது உயிரையே வைத்துக் கொண்டிருக்கும் ஒரு நல்ல மனைவி. அவளை வார்த்தைகளால் மனம் நோகச் செய்வது எத்தனை பெரிய தவறு? தன்னுள்ளே எண்ணி மருகிப் போனான்.

அவளைப் பற்றிய இனிய நினைவுகள் நெஞ்சை நிறைக்க, அவளுக்கு ஏதாவது வாங்கி ஊருக்கு அனுப்ப எண்ணியவனாகச் சில தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலைக் கடைத்தெருப் பகுதிக்கு வந்திருந்தான். ஸூப்பர் மார்க்கெட்டுக்குள் புகுந்து தேவையான சாமான்களைப் பார்த்து வாங்கிக் கொண்டிருந்தபோது, 'காமேஷ்...' என்று கூப்பிட்டக் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். சாமான்கள் நிறைந்த பிளாஸ்டிக் பையுடன் ஒரு பஞ்சாபிக்காரர் அவன் அருகே வந்தார்.

''நீங்கள் தவறாக எண்ணிக் கொண்டு விட்டீர்கள். நான் காமேஷ் இல்லை.'' புன்முறுவலித்தான் ராஜ்குமார்.

வியப்பில் அயர்ந்து போன அவன் நம்பாதவர் போல் அவனை மேலும் கீழும் வெறித்துப் பார்த்தார். ''மன்னிக்கவும்'' என்று முணுமுணுத்து வேகமாக அங்கிருந்து வெளியேறிவிட்டார்.

'காமேஷ்! யார் அவன்?' தனக்குள்ளே கேட்டுக் கொண்டு அலங்காரப் பொருள்கள் இருந்த பகுதிக்கு விரைந்தான். அங்கே இருந்த ஒரு பெரிய நிலைக் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டான். பின்னால் யாரோ நடந்து வரும் ஓசை கேட்டது. திரும்ப நினைத்தான். திடுக்கிட்டு கண்ணாடியையே உற்றுப் பார்த்தான். அவன் அருகே பக்கத்தில் நின்ற அந்த நீலச்சட்டை



ஆசாமி தோற்றத்தில் அவனைப் போலவே அச்சடித்து எடுத்து உருவமாகக் கண்ணாடியில் தெரிவதைக் கண்டு அதிர்ந்து போய் விட்டான் ராஜ்.

கண்ணாடியில் தெரிந்த அந்த உருவம் மெல்லச் சிரித்தது.

''நீங்க தான் அந்த ராஜ்குமாரா?'' குரல்கூட டேப் ரிகார்டரில் பதிவான அவன் குரலைத் திருப்பிக் கேட்பது போல்! இது என்ன அதிசயம்?

ராஜ்குமார், ''ஆமாம்'' என்று தலையசைத்துவிட்டு ஆச்சரியத்துடன் அவனை ஏற இறங்கப் பார்த்தான்.

''நம்ப முடியலே, என்னையே நான் கண்ணாடிக்குள் பார்ப்பது போல இருக்கே. அதனால் சில நாட்களாக என்னை, உங்களுக்குத் தெரிஞ்சவங்க ராஜ்குமார்னு கூப்பிட்டுக் குழம்பிட்டு இருக்காங்க.'' நீலச் சட்டைக்காரன் சிரித்தான்.

அந்தச் சிரிப்பின் ஒலிகூட அவனுடைய சிரிப்பைப் போல கலகலவென்று ஓசையுடன் இருப்பதைக் காண ராஜ்குமாருக்கு ஒரே பிரமிப்பு.

''என் பெயர் காமேஸ்வரன். காமேஷ் என்று சுருக்கமா வைச்சிருக்கேன்.'' அறிமுகப்படுத்திக் கொண்டான் அவன்.

''என் பெயர் ராஜ்குமார். உங்களைச் சந்தித்தது பற்றி மிகவும் சந்தோஷம். அதே சமயம் எனக்கு ரொம்பவும் ஆச்சரியமாகவும் இருக்கு.'' கூறிக்கொண்டே காமேஷின் கையைப் பற்றி அன்புடன் குலுக்கினான் ராஜ்குமார்.

''இத்தனை சின்ன இடத்தில் நாம் இதுவரை சந்தித்துக் கொள்ளாததுதான் பெரிய ஆச்சரியம். உலகம் ரொம்பச் சின்னதுன்னு சொல்வாங்க. சில சமயம் சின்ன இடம் கூடப் பெரிய உலகமாகிவிடுகிறதும் உண்டு போல இருக்கு.'' வேடிக்கையாகச் சிரித்தான் காமேஷ்.

ராஜ்குமாருக்கு எடுத்த எடுப்பிலேயே அவனை மிகவும் பிடித்து விட்டது.

திடீரென்று நினைவுகள் கலைந்து எழுந்திருந்தான் ராஜ். தொலைபேசி எண்ணைச் சுழற்றினான் ''காமேஷ், நான் வருகிறேன். நீ தயாராக இரு. இருவரும் நாயர் ஹோட்டலில் சாப்பிடுவோம். பிறகு என் ஃப்ளாட்டிலேயே நீ டெலிவிஷன் பார்த்துக் கொண்டு என்னோடு இன்று இரவு தங்கிவிடு. நாளை நமக்கு லீவு தானே? என்ன சொல்றே? சரியா? இதோ வரேன்.'' போனை வைத்து விட்டு வெளியில் செல்ல ஆயத்தமானான்.

நடுக்கடலில் மூழ்க இருக்கிறவனுக்கு ஒரு துரும்பு அகப்பட்டது போல் தனிமையைத் தொலைக்கத் தவித்தவனுக்கு ஓர் இனிய நண்பன் கிடைத்து விட்டான் என்ற திருப்தி அவனுக்கு. கதவைப் பூட்டிக் கொண்டு கார் சாவியைச் சுழற்றியபடி படிகளில் இறங்கினான் ராஜ்குமார்.

## 6

சோபாவில் சாய்ந்தபடி காலை ஒரு மெத்தை தைத்த முக்காலி மீது நீட்டிக்கொண்டு, 'டன்ஹில்'லை உறிஞ்சி இழுத்துப் புகைமண்டலத்தைப் பரப்பிக் கொண்டிருந்தான் காமேஷ். சூரியன் அஸ்தமித்து இருள் பரவத் துவங்கியதுமே வெப்பமும் தணிந்து லேசாகச் சிலு சிலுக்கத் தொடங்கி விட்டிருந்தது. அறைக்குள் செயற்கைக் குளிர் வசதி அவ்வளவு தேவையாக இருக்கவில்லை. புகையை வெளியே விரட்ட ஜன்னல் கதவுகளைத் திறந்து விட்டான் ராஜ்குமார்.

தன்னுடன் அன்று இரவும், மறுநாளும் கூடவே இருக்கப் போகிறான் காமேஷ் என்ற நினைவில் ஏற்பட்ட மகிழ்ச்சி நிறைந்த பரபரப்பு அவனுக்கு. தனிமையை விரட்டக் கிடைத்த துணைவன் என்ற எண்ணத்தினால் அல்ல. மிகக்



39768
5718026

குறுகிய காலத்தில் அறிமுகம் என்ற போதிலும், ஆயிரம் ஆண்டுகள் பழகிச் சந்தித்தது போன்ற நேசத்தில் நெருங்கி விட்டிருந்தது அவன் உள்ளம். காமேஷை ஒரு நாள் பார்க்காவிட்டால் கூட உணர்வுகள் துயர வசப்பட்டுப் போகுமளவுக்கு அவனையும் மீறிய ஒரு பாசம். ஏன்? உருவ ஒற்றுமையால் மட்டும் ஏற்பட்ட பரிவுணர்வா?

சோபாவின் எதிரே கிடந்த தாழ்வான மேஜையின் மீது வெட்டிய ரொட்டித் துண்டுகளை ஒரு பீங்கான் தட்டில் அடுக்கி கத்தியுடன் கொணர்ந்து வைத்தான். அதன் மீது தடவிச் சாப்பிட, 'டேனிஷ்' வெண்ணெய் சீஸ், ஜாம் யாவும் கூடவே வைத்தான். சிறு கண்ணாடிக் கிண்ணங்களில், பிஸ்த்தா, முந்திரி, வாதுமைப் பருப்பு வகைகளையும் வைத்தான். ஒரு சிறு பிளாஸ்டிக் கூடையில் ஆப்பிள், ஆரஞ்சு, வாழைப் பழங்களையும் நிறைத்து வைத்தான். தனக்குச் சாப்பிட 'பெப்சிகோலா'வை ஒரு கண்ணாடி டம்ளரில் ஊற்றி வைத்து விட்டு, காமேஷுக்கு என்று வாங்கி வந்திருந்த 'பியர்' புட்டிகளையம், ஒபனரையும் அதன் அருகாக வைத்தான். ஐஸ் துண்டங்கள் நிரம்பிய கிண்ணத்தருகே பெரிய கண்ணாடிக் கோப்பையையும் வைத்து விட்டு, டெலிவிஷனைப் போட்டபடி நண்பன் அருகே உட்கார்ந்தான் ராஜ்குமார்.

கையிலிருந்த சிகரெட் துண்டை நசுக்கி 'ஆஷ்'டிரேயில் போட்டு விட்டுத் தன் இரு கைகளையும் மேலே தூக்கி உடம்பை நெளித்துச் சோம்பல் முறித்தான் காமேஷ். ஒரு ரொட்டித் துண்டை எடுத்துத் தட்டின் மீது வைத்து வெண்ணெயைக் கத்தியால் தொட்டுத் தடவினான். ராஜ்குமார் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன அப்படிப் பார்க்கிறே?'' வியப்புடன் வினவினான் காமேஷ்.

''ஒண்ணுமில்லே. என்னைப் போலவே இடக்கைப் பெருவிரல், ஆள்காட்டி விரல் இரண்டிலும் ரொட்டித் துண்டைப் பிடிச்சுக்கிட்டு, தலையை இடதுபக்கம் சாய்ச்சு ரொட்டிக்கு நீ வெண்ணெய் பூசறதைப் பார்த்தேன். எனக்கு சில சமயங்களே உன் செய்கைகள் திகைப்பூட்டுது. சில சமயம் என்னையே நீ 'இமிடேட்' செய்யறயோன்னு கூடத் தோணுது''

''பல நாட்களாக உன்னோடு நெருங்கிப் பழகிட்டேன் இல்லியா? சகவாச தோஷம்.''

''என்ன சொல்றே?''

''உருவத்திலே உன்னைப் போல் அதிசயத்திலும் அதிசயமா நான் இருக்கேன். பார்க்கிறவங்க, நீயா நானான்னு குழம்பறாங்க. உன்னோட பழகறதுல உன் பழக்க வழக்கங் களும் என்கிட்டத் தொத்திக்கிட்டிருக்கலாம். அவ்வளவுதான் மத்தபடி நீ எங்கே, நான் எங்கே?'' காமேஷ் பெரு மூச்செறிந்தான்.

''ஏன் அப்படிப் பேசறே?'' மனத்தாங்கலுடன் கேட்டான் ராஜ்குமார்.

''உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகிடுமா?''

''என்ன உளர்றே?''

''உண்மையைத்தான் சொல்றேன். உயரம், பேச்சு, நடை எல்லாத்திலேயும் ஒண்ணாத்தான் இருக்கோம். ஒப்புக் கொள்கிறேன். அதற்குப் பிறகு நான் உனக்கு ஈடா ஜோடா? திருநல்லூர் பெரியதனக்காரர் கனகசபை அவர்களின் ஒரே மகன் நீ. செல்வத்திலே பிறந்து, செல்லமாக வளர்ந்த சிங்கக் குட்டி. நான்...'' ஏதோ ஒன்று நெஞ்சை அடைத்த உணர்வு.

ராஜ்குமாரும் கடித்து விட்ட ரொட்டித் துண்டை விழுங்க முடியாத ஓர் இறுக்கமான உணர்வில் திணறிப் போனான்.



காமேஷ் தன்னைப் பற்றி அதிகம் பேச விரும்பாதவன். ஏழைமையான சூழ்நிலையிலிருந்து வந்தவன் தான் என்ற மனக் கசப்பு அவனுக்கு. அதைத் தூண்டிக் கேட்பானேன் என்று ராஜ்குமார் அவனைப் பற்றிக் கேட்காமலே, தன்னைப் பற்றியே எப்போதும் அதிகம் பேசுவது வழக்கம்.

பியர் புட்டியைத் திறந்து கண்ணாடிக் கோப்பையில் ஊற்றிக் கையில் எடுத்துக் கொண்டான் காமேஷ். 'புஸ்' ஸென்று உயரமாகப் பொங்கி வந்த நுரையில் தன் மேலுதடு நனையுமளவு உறிஞ்சிக் குடித்து விட்டுக் கீழே வைத்தான். நான்கு முந்திரிப் பருப்புகளை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு மென்றான்.

''முன்னமே சொல்லியிருக்கிறேனே, என் அப்பா பம்பாய்த் துறைமுகத்திலே வேலை செய்த ஒரு சாதாரணத் தொழிலாளி, ஒரு கிரேன் விபத்தில் அவர் செத்தார். அப்ப எனக்கு வயது ரெண்டு. அதுக்குப் பிறகு என்னை வளர்க்க அம்மா ரொம்பப் பாடுபட்டாங்க. கொலாபாவில ஒரு கிறிஸ்தவக் குடும்பத்துக்கு சமையல்காரியாக கடைசி மூச்சுவரை பாடுபட்டு உழைச்சாங்க. என் படிப்பு முடிஞ்சு பட்டம் வாங்கி வேலையில் இருக்கறதைப் பார்க்கக் குடுத்து வைக்கலே. போயிட்டாங்க. அவ்வளவுதான். இதுக்கு மேலே என்னைப் பத்திப் பெருமையாச் சொல்லிக்க எதுவுமே இல்லே!'' அவன் குரல் கரகரத்தது.

''மன்னிச்சுக்க காமேஷ். உன் மனசு கஷ்டப் படறாப்பலே ஏதாவது பேசிட்டேனோ?'' ராஜ்குமார் பதறினான்.

காமேஷ் கலகலவென்று சிரித்தான். ''நீ வசதியான குடும்பத்திலிருந்து வந்தவன். நான் ஏழைத் தொழிலாளி மகன் ஒத்துக்கொள்றதிலே எனக்கு தயக்கமே இல்லை.''

''நம்ம தோற்றத்தைப் பார்த்து எல்லோரும் குழம்பறாங்களே. குணத்தில் உனக்கும் எனக்கும் எத்தனை வேறுபாடுன்னு மத்தவங்களுக்குத் தெரியுமா? நீ வெளி நாட்டுக்கு வந்தும் சுத்த சைவமாகவே இருக்கிறவன். நானோ பிறந்ததிலிருந்து மாமிசத்தில் வளர்ந்தவன். வாரம் ஒரு முறையாவது மீன் குழம்பை ஒரு பிடி பிடிக்கணும். நீ சிகரெட்டையே தொடாதவன்; மது அருந்தாதவன். நானோ, டன்ஹில், 'ஷிவாஸ் ரிகல்'னு ஒரு கை பார்க்கிறவன். நீ கல்யாணமானவன்; நான் தனிக்கட்டை. நமக்குள்ளே எத்தனை வித்தியாசங்கள்! ஆனா, ஒரு வேடிக்கை தெரியுமோ?'' காமேஷ் முடிக்காமல் மீண்டும் 'பியர்' கோப்பையை எடுத்து உறிஞ்சினான். வாயைத் துடைத்து விட்டுக் கோப்பையை வைத்தான்.

''ஒரு ரெண்டு நாளைக்கு முன்னே கடைத் தெருவிலே ஒரு வயசான மலையாளி, நீதான்னு நெனைச்சுக்கிட்டு, என்கிட்டே தொண தொணத்துக்கிட்டே இருந்தான். நானும் மௌனமாத் தலையை ஆட்டிக்கிட்டிருந்தேன். இல்லாட்டி நீ யாரு, அது இதுன்னு ஆயிரம் கேள்வி கேட்டுடுவாரோன்னு பயம்! அவர் சொன்ன விவரம் இது தான்: 'அடுத்த வாரக் கடைசியிலே ஊருக்குப் போகிறாராம், நீ என்னவோ ஊருக்குக் கொடுத்தனுப்பறதாச் சொல்லியிருந்தியாம். அதைப்பத்தி என்கிட்ட அறுத்திட்டாரு. முடிவில் உங்களை நானே வந்து பார்க்கறேன்னு சொல்லித் தப்பிச்சுக்கிட்டு வந்திட்டேனப்பா. ஆளை விட்டாப் போதும்னு ஆயிடுச்சு. உனக்கு இங்கே ரொம்பச் சிநேகிதங்க இருக்காங்களோ? அதிலேயும் பாரு வேற்றுமையை? உனக்கு மனுஷங்களை நிறையப் பிடிக்குது. எனக்குத் தனிமைதான் ரொம்பப் பிடிக்குது. யாருகிட்டேயும் அதிகமாப் பேச்சு வச்சுக்கறதே இல்லே. அவன் உரக்கச் சிரித்தான்.



''அடடா! நீ சங்குண்ணியைப் பத்திச் சொல்றியா? அவர் ரொம்ப நல்லவராச்சே. இங்கே ஒரு கடையிலே வேலை செய்கிறார். அவர் போகும்போது சென்னையிலிருந்து நான் குடுத்து அனுப்புகிற சாமான்களை அகல்யாவுக்குப் பார்சல் பண்ணிடறதா ஒப்புக் கொண்டிருக்கார். அதனாலே நான் மனைவிக்கு ஒரு சின்னப் பரிசு வாங்கி வச்சிருக்கேன்.'' சொல்லிக் கொண்டே உள்ளே சென்று ஒரு சிறு கைப்பையை எடுத்து வந்தான் ராஜ்குமார்.

எகிப்தில் தயாரித்த ஒட்டகத் தோலால் ஆன கைப்பை. காஷ்மீரத்துப் பைகள் போல் ஒரு சுருக்குப் பை ''அகல்யாவை நான் முதல்லே சந்திச்சபோது அவள் வீட்டுக்குத் திரும்புகிற வேளை நான் தெருமுனையில் நின்னுகிட்டுக் கவனிச்சேன். இதேபோல ஒரு பையைக் கையில் பிடித்து வீசிக்கிட்டு மெல்ல நடந்து போனாள். கடையில் அன்னிக்கு இதைப் பார்த்தபோது அவள் பிறந்த நாளுக்கு இதையே பரிசாகக் கொடுக்க வேணும்னு ஆசை வந்தது.'' உணர்ச்சி வசப்பட்டு எங்கேயோ நினைவாகப் பேசினான்.

காமேஷ் வேடிக்கையாக அவன் அருகில் சென்று முதுகைத் தட்டினான். புரிகிறது. காதல் கல்யாணமானவன், வெகு தொலைவில் பிரிந்திருக்கும் போது, பழைய நினைவு உன்னை அங்கேயே தூக்கிக்கிட்டுப் போயிடுது இல்லையா?''

''அகல்யா ரொம்ப நல்ல பெண் காமேஷ்! அம்மாவை நல்லாக் கவனிச்சுக் கொள்கிறாள். அதில் எனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா?''

''நீ ரொம்பக் குடுத்து வைச்சவனப்பா.''

மேஜையின் மேல் சாய்ந்த வாக்கில் வைத்திருந்த அகல்யாவின் புகைப்படத்தை எடுத்துச் சற்று நிமிர்த்தி வைத்து விட்டு, இடுப்பில் கை வைத்தபடி அதையே பார்த்துக்கொண்டு நின்றான் ராஜ்குமார்.

''அந்த டெலிவிஷனைக் கொஞ்சம் தணிச்சுவையேன். அது பாட்ல கத்திக்கிட்டு கிடக்குது. நாம பாட்ல வேறே கதை பேசிக்கிட்டிருக்கோம்.'' சொல்லியபடியே காமேஷும் அகல்யாவின் படத்தை உற்றுப் பார்த்தான். நேரே பார்க்க எப்படியோ? படத்தில் மனத்தைக் கவரும் அழகியாகவே இருந்தாள். சற்று நீண்ட முகம். நெளிந்த கூந்தல் கனவுக் கண்கள், சிறிய வாய். கோணலாக முறுவலித்தபடி பீர் நிறைந்த கோப்பையை மறுபடியும் கையில் ஏந்தியபடி படத்தை உற்றுப் பார்த்தான்.

''உன் மனைவி மிகவும் அழகானவங்கதான்'' விர்ரென்று எஞ்சிய பானத்தை உறிஞ்சினான். இன்னொரு புட்டியைத் திறந்து அவசரமாகக் கோப்பையில் ஊற்றினான். புசுபுசுவென்று கிளம்பிய நுரையினூடே அவனது மனத்திலும் ஒரு சிறு பொறி பொறாமை உணர்வு புஸ்ஸென்று எழும்பி அவன் தொண்டையை என்னவோ செய்தது.

பணம், அந்தஸ்து, வீடு, அம்மா, அழகான மனைவி என்று இத்தனையும் ஒருங்கே இவனுக்கு அமைந்து விட்டனவே! எரிச்சலை விழுங்க முயன்று, பியரால நனைத்துக்கொண்டான்.

மீண்டும் ஆசனத்தில் வந்து உட்கார்ந்த ராஜ்குமார் ரொட்டித் துண்டில் கணிசமாக வெண்ணெய்த் தடவி 'ஜாம்' வைத்துக் குறுக்கே கத்தியால் அறுத்து, கையில் எடுத்துக் கொண்டு உற்சாகத்துடன் கடித்து விழுங்கினான்.

''வீட்டிலிருக்கும் போது அகல்யாவின் கட்டுப்பாடு மிக அதிகம். அம்மாவைப் போல் சர்க்கரை வியாதி வந்துடக் கூடாதுன்னு இனிப்பு அதிகம் திங்கக் கூட என்னை அனுமதிக்க மாட்டாள்.



''உங்கம்மா உடம்பு இப்ப எப்படி இருக்குதாம்?'' ரொட்டித் துண்டின் மீது 'சீஸ்' கட்டியைக் கனமாக வைத்துக் காமேஷ் கேட்டான்.

''கண் பார்வை குறைஞ்சு போயிட்டுது. தள்ளாமை அதிகமாயிட்டுதுன்னு அகல்யா வருத்தப்பட்டு எழுதி இருக்கிறா. இதோ பாரேன் இந்தக் கடிதத்தை...''

''சே, சே! உன் மனைவி எழுதின கடிதம்.''

''பரவாயில்லை அம்மா உடம்பு சுகமில்லைங்கிற விவரமான கடிதந்தான். நீ படிச்சாத் தவறு எதுவும் இல்லே. உன்னை என் கூடப் பிறந்தவனைப் போல் நினைக்கிறேன் படியேன்.'' அன்பு வற்புறுத்தலுடன் அகல்யாவின் கடிதத்தை நீட்டினான் ராஜ்குமார்.

காமேஷ் சிறிது தயக்கத்துடன் பிரித்தான் கடிதத்தை. முத்துப் போன்ற கையெழுத்து. கடிதத்தில் பணிவு தெரிந்தது. மேஜையின் மீது தெரிந்த புகைப்படத்தில் அந்த அழகு முகம் தெரிந்தது. கனத்த மனத்துடன் கடிதத்தை வைத்தான்.

''நாம ஊருக்குப் புறப்பட்ற நாள் அதிக தூரம் இல்லையே?'' என்றான்.

''நம்ம இரண்டு பேர் ஒப்பந்தக் காலமும் ஒரே சமயத்தில் முடிகிறதுகூட ஓர்அதிசயந்தான். அதனால் நாம் ஒரே சமயத்தில் இங்கிருந்து புறப்பட்டுடலாம். என் குரு சரவணன் எனக்கு ஹைதராபாத்தில் ஒரு வேலை வாங்கித் தர முயன்று கொண்டிருக்கார். அதே நிறுவனத்திலே உனக்கும் வேலைக்கு ஏற்பாடு செய்துடலாம்னு என் எண்ணம். காமேஷ்! என்னை, அகல்யாவை, அம்மாவையும் நீ உன் உறவுக்காரங்களா நினைத்துக் கொள்ளு. உனக்கு யாருமே இல்லைன்னு நினைக்காதே, ஏன் அப்படிப் பார்க்கறே, அ! ரொம்ப பியர் சாப்பிடாதே. 'லிவர்' கெட்டுடும்.

காமேஷ் பற்களைக் காட்டிப் பெரிதாகச் சிரித்தான். ''என்னைப் பத்திக் கவலைப்பட நீயாவது இருப்பது பற்றி மகிழ்ச்சி. நன்றி, அந்தப் பிஸ்தாக் கிண்ணத்தை இப்படித் தள்ளு. ஊருக்குப் போனதும், முதல் வேலையாக உங்கம்மாவைப் எனக்குப் பார்க்கணும் போல ஓர் ஆசை.''

''ஹைதராபாத்துக்குப் போறதுக்கு முன்னே நேரே ஊருக்குத்தான் போகப் போகிறோம். கிராமமே உன்னைப் பார்த்து அசந்துடப் போகுது. நம்ம ராஜ்குமார் மாதிரியே யாருடா இவன்னு...?'' ராஜ்குமாரும் சிரித்தான். தொடர்ந்து, ''நீ கேட்டுக்கிட்டபடி, என் மனைவிக்குக்கூட உன்னைப் பத்தி நான் எழுதலே. அவளுக்கு ஒரு திடுக்கிடும் அதிசயமாகவே வைச்சிருக்கேன். எங்கம்மாவுக்குப் பார்வை மட்டும் இருந்திருந்தாக் கட்டாயம் உன்னைத்தன் பிள்ளைன்னு அன்போட கட்டிப் பிடிச்சுக்குவாங்க. என் மேலே உசிரு அவங்களுக்கு. என்னைப் போல இருக்கியேன்னு சந்தோஷம் தாங்காது அவங்களுக்கு.''

''ஆமாமாம், நாம ஊர் போகிற வரைக்கும் ரகசியமாவே வைச்சிருந்து அவர்களை எல்லாம் திகைக்க வைப்போம்.'' சொல்லிக் கொண்டே தாடைகள் இறுக மனக்கசப்பை அடக்கப் பற்களைக் கடித்துக் கொண்டான் காமேஷ்.

## 7

மீன சன்ல்மனில் கட்டிட வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒரு பெரிய அமெரிக்க நிறுவனத்தில் காமேஷ் ஓர் இன்ஜினியர். ஏறக்குறைய ராஜ்குமாரைப் போன்ற சம்பளமும் சலுகைகளும் கிடைத்துக் கொண்டிருந்தன. ஆனால் அவன் இரண்டாண்டுக் கால ஒப்பந்தத்தில் தான் வந்திருந்தான். ஒப்பந்தம் மறுபடியும் தொடரும் என்ற நம்பிக்கை



இருக்கவில்லை-தாய் நாட்டிற்குத் திரும்ப வேண்டும், வேலை தேடிக் கொள்ள வேண்டும் என்று பல கவலைகள் அவனைக் குடைந்து கொண்டிருந்தன.

அவன் வேலை பார்த்த அந்த இடத்திலேயே கம்பெனியின் குடியிருப்புப் பகுதியும் இருந்தது. கம்பெனியின் தயவால் வசிக்க ஒரு சிறு ஃபிளாட்டும் கிடைத்திருந்தது. கல்யாணமாகாதவர்களுக்கு என்ற ஒரு படுக்கையறை கொண்ட சிறு ஃபிளாட் அது. ஆனால் எல்லாவித வசதிகளுக்கும் குறைவிருக்கவில்லை. கை நிறைந்த சம்பளத்தையும் சுகமான வாழ்க்கையையும் விட்டுப் போகும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறதே என்று உள்ளூற வேதனைப்பட்டுக் கொண்டுதான் இருந்தான். ராஜ்குமாரைப் போல் எப்பொழுது ஒப்பந்த காலம் முடியும், ஊருக்குக் கிளம்புவோம் என்ற ஆவல் அவனுள் இல்லை. அப்படி ஆசையுடன் வரவேற்க அவனுக்கு என்று சொல்லிக்கொள்ள ஊரில் சொந்த பந்தங்கள் யாரும் இருக்கவில்லை. உண்மை நிலையில் அவன் ஓர் அநாதை.

வார இறுதிகளில் பெரும்பாலான நாட்களை அவன் ராஜ்குமாரின் வீட்டில் கழிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான். எப்பொழுதாவது சில சமயங்களில் நண்பனைத் தன் ஃபிளாட்டிற்குச் சாப்பிடவும் தங்கவும் அழைப்பதும் உண்டு.

அன்று மாலை அவர்கள் இருவரும் வேலைக்குப் பின் சந்தித்துக் கொண்டனர். பொழுதின் கனத்தைக் கரைக்க விமான நிலையம் வரை நண்பனைக் காரில் ஒரு சிறு பயணத்திற்கு அழைத்துச்சென்றான் ராஜ்குமார்.

''பட்டிக்காட்டான் யானையைப் பார்க்கிறது போல என்பாங்க. கன்கார்ட் விமானம் புறப்பட்டுச் செல்வதை வேடிக்கை பார்க்கவந்து இங்கே நின்னுட்டு இருக்கோம்.'' காமேஷ் சிரித்தான். அதே சமயம் கன்கார்ட் விமானம் ஒன்று

கோஷமிட்டபடி வானத்தை நோக்கி எழும்பியது. வியப்புடன் இருவரும் பார்த்துக் கொண்டு நின்றனர்.

''உண்மையில் நான்தான் பட்டிக்காட்டான். நீ பெரிய பட்டணத்து ஆசாமியாச்சே. பம்பாய் வாசி.'' ராஜ்குமார் கேலியாக அவன் தோளை மெல்லத் தட்டினான்.

'நானும் ஒண்ணு சொல்ல முடியும். நீ பட்டிக் காட்டுப் பணக்காரன். நான் பட்டணத்துத் தொழிலாளி வர்க்கம்னு சேர்த்துக் கூறலாம். எப்படி ஜோக்?'' காமேஷ் உரக்கச் சிரித்தாலும், அவன் வார்த்தைகள் ராஜ்குமார் மனசைச் சுருக்கென்று தான் தைத்தன.

மிக நெருக்கமாகப் பழகினால்தான் ஒருத்தருடைய குணம் நமக்குப் புரியும். அகல்யா அடிக்கடி சொல்வாள். அது எவ்வளவு பெரிய உண்மை!

நட்புரிமை பாராட்டி மிகவும் நெருங்கிப் பழகியதால் அவன் ஒரு விஷயத்தை இதற்குள் புரிந்து கொண்டிருந்தான்.

''என்னவோ ஒரு காரணத்தினால் காமேஷிற்கு வாழ்க்கையிலே ஒரு சிறு கசப்புத் தட்டிவிட்டிருக்கிறது. தன்னிடம் அவன் ஏன் மனத்தைத்திறந்து பேசக் கூடாது? உள்ளத்தை உறுத்திடக் காரணம் ஏதாவது இருந்தால் அதை நிவர்த்திக்கத் தன்னால் முடிந்த உதவியை அவன் செய்யத் தயாராக இருந்தானே!''

பரிவுடன் நெருங்கி வரும் நல்ல நண்பனிடமே பட படவென்று பேசி மெல்ல ஒதுங்கிக் கொள்கிறானே, ஏன்?

வழியில் கடைத்தெரு பகுதியில் காமேஷ் ஓர் அரபு உணவுக் கடையருகே வண்டியை நிறுத்தச் சொல்லி இறங்கினான்.

''நீ சைவ உணவுக்காரன் இல்லாட்டா கரம்மசாலா போட்டுச் சமைச்சிருக்கிற கறிக்குழம்பை உனக்கும் சேர்த்து



வாங்கிட்டு வந்திருப்பேன். உனக்கும் எனக்கும் சாப்பிட கப்ஜஸ் வாங்கிண்டு வந்திருக்கேன். நீ உள்ளே வந்து என்னோட சாப்பிட்டுத்தான் போகணும். இன்னிக்கு நாயர்கடைச் சோற்றை மறந்துடு' என்றான்.

மறுக்க முடியாமல் ராஜ்குமார் காரை மனாசல்மனுக்கு செலுத்தி, அந்தக் குடியிருப்புப் பகுதியைச் சற்றுத் தொலைவில் நிறுத்தினான். இருவரும் இறங்கினார்கள். இரண்டாவது மாடியில்தான்அவனது பிளாட் இருந்தது. கதவைத் திறந்ததும், குளிர்சாதனத்தின் குளுமை வரவேற்றது. ஆனால் அறையில் நிலைமை வரவேற்கத்தக்கதாகவே இருக்கவில்லை.

ஆண் அழகன், பகட்டாக உடுத்திக்கொள்ளத் தெரிந்து கொண்டிருந்தான். ஆனால் காமேஷுக்குத் தன் சூழ் நிலையைப் பற்றி அதிகம் அக்கறையே இருந்ததில்லை. அந்த ஒரு குணத்திலே, அவன் தன்னைவிட எப்படி மாறுபட்டிருக் கிறான் என்று அடிக்கடி ராஜ்குமார் எண்ணி வியந்ததுண்டு.

காமேஷைப் போல அவனுக்கு பிறருடைய சோப்பு, சீப்பு, துவாலை எதையும் உபயோகிக்கப் பிடிக்காது. சுத்தமாக வாழ, அவன் தாயார் அவனை அப்படிப் பழக்கி வளர்த் திருந்தாள். வீடு ஆடைகள் பழக்கங்கள் எல்லாம் சுத்தமாக இருக்க வேண்டும் என்று விரும்பும் பெண் அகல்யா. நாளைக்கு இரு வேளைகள் குளித்து, வேறு உடுத்திக்கொண்டு எப்பொழுதும் பளிச்சென்று காணப்படுவாள். அந்தப் பழக்கம் வேறு அவனைத் தொத்திக் கொண்டு விட்டிருந்தது. ஊரிலேயே அவன் தினமும் இருமுறை குளிக்கத் தொடங்கி யிருந்தான். வெப்பம் மிகுந்த அந்த நாட்டில நாள் முழுதும் குளித்துக்கொண்டே இருக்க வேண்டும் போல்தான் இருந்தது அவனுக்கு.

ஆனால், காமேஷ்? அத்தனை வெப்பத்திலும் நாளைக்கு ஒரு தடவை குளிப்பானோ? சந்தேகமே!

அவனது வரவேற்பறையில் எல்லாம் போட்டது போட்டபடி கிடந்தன. காலையில் படித்த பத்திரிகை. இரவு புகைத்த சிகரெட் துண்டங்கள் நிறைந்த ஆஷ்டிரே...பாதிக் குடித்து மீதம் வைத்திருந்த மதுபாட்டில், கண்ணாடி டம்ளர்கள் என்றுமேஜையை நிறைத்துக் கொண்டிருந்தன.

''உன்னைப் போல் துடைச்சுப் பெருக்கி, வீட்டை நருவிசா வச்சுண்டு எனக்குப் பழக்கம் இல்லை. ஆனால் நல்லாவே சமைக்கத் தெரியும். காலையிலே வச்ச பருப்பு சாம்பார் இருக்கு. கப்பூஸ் கூட நீ அதைச் சாப்பிடலாம். சுட வச்சுக் கொண்டு வரேன்.'' சொல்லிக் கொண்டு, சமைய லறைக்குள் ஓடினான் காமேஷ்.

சோபா மீது தாறுமாறாகக் கிடந்த திண்டுகளை ஒழுங்கு செய்துவிட்டு, ராஜ்குமார் உட்கார்ந்து கொண்டான்.

''இந்தக் கேக்கை கொஞ்சம் ருசி பார். நானே சுட்டது.'' ஒரு பீங்கான் தட்டிலே சிறு கேக்குத் துண்டை வைத்து எடுத்துக்கொண்டு, இடக் கையில் பிடித்திருந்த சிகரெட்டை இடையே ஓர் இழுப்பு இழுத்துக்கொண்டு வந்தான் காமேஷ்.

''நான் கேக்கு சாப்பிடுவது உண்டு. ஆனால் இன்னிக்கு சாப்பிட மாட்டேன். மன்னிச்சுக்கோ.''

திகைப்புடன் நண்பன் முகத்தைப் பார்த்தான் காமேஷ்.

''இங்கிலீஷ் காலண்டர் தேதிப்படி இன்னிக்கு என் தந்தை மறைந்த நாள். எட்டு வருஷத்துக்கு முந்தி மார்டைப் பால் திடீர்னு போயிட்டார். அம்மாவுக்கு அந்த அதிர்ச்சியே வியாதியாகி விட்டது. அவருக்குத் திவசம் கொடுக்க அம்மாகூட நான் இப்போ இல்லாட்டியும், அவர் மறைஞ்சு போன காலண்டர் மாத தேதி அன்னிக்காவது விரதமாக இருப்பது வழக்கம். கேக்கிலே முட்டை போட்டுச் சுட்டிருப்பே. இன்னிக்கு சாப்பிடமாட்டேன். கோவிச்சுக்காதே.''



''உன் தந்தை மேலே உனக்கு அத்தனை பாசம் பிரியம் இல்லையா?''

''மதிப்பு! மரியாதைன்னு சொன்னாப் பொருந்தும்.''

''அவருக்கு உன் மேலே ரொம்பப் பிரியம் இருந்திருக் கணுமே. நீ அவருக்கு ஒரே பிள்ளையாச்சே?''

''என் மேலே உசிரையேதான் வச்சிட்டு இருந்தார். அவர் மட்டும் வாழ்ந்து கொண்டிருந்தால், இப்படி வெளி நாட்டுக்கு வரவிட்டிருப்பாரா? பட்டணத்தில் நான் படிக்கிற காலத்தில், மாசத்துக்கு ஒரு தடவை என்னை வந்து ஹாஸ்டலில் பார்க்காட்டா அவருக்கு நிம்மதியே இருக்காது. அப்பா மேலே எனக்கு ரொம்ப மதிப்பு உண்டு. ஆனால் அம்மா மேலேதான் எனக்கு ரொம்பப் பாசம்.''

''இருக்காதா பின்னே? பத்து மாசம் சுமந்து பெத்த வங்களாச்சே! உன்னுடைய குடும்பத்து போட்டோவைக் காட்டினப்போ பார்த்தேனே. உங்கப்பா வாட்டசாட்டமா முறுக்கு மீசையோடு கன கம்பீரமா இருக்கார். நீ சாயலில் உங்கப்பா போலத்தான் இருக்கேன்னு சொல்லணும். உங்கம்மா...'' மேலே முடிக்காமல் காமேஷ் தட்டை மேஜை யின் ஒரு புறத்தில் வைத்து விட்டு சிகரெட்டை ஆழமாக இழுத்து ஊதினான்.

''அப்பா உசிரோட இருந்தப்போ எடுத்த படம் அது. அதிலே அம்மா காஞ்சிபுரம் பட்டுச் சேலையும் கழுத்து நிறைஞ்ச நகையும், நெற்றியிலே நிறைஞ்ச பொட்டுமா அலங்காரமா இருக்காங்க. அவங்களை இப்போது விதவையாகப் பார்க்கும் போது என் மனசு வேதனைப் படத்தான் செய்யுது. பாவம் அம்மா.''

''நீ ஒரு வகையில் கொடுத்து வச்சவன். உன் அப்பாவைப் பார்த்துப் பழகி வளர உனக்கு வாய்ப்பு

அமைஞ்சிருந்தது. எனக்கு நினைவு தெரியறதுக்கு முந்தியே அப்பா போயிட்டார். என் தாயை நான் எப்பவும் விதவைக் கோலத்தில், வேலையால் அழுக்காகி விட்ட கிழிந்த புடவையில்தான் பார்த்திருக்கிறேன். தன்னைக் கவனிக்கப் பொழுதில்லாமல், சதா அடுப்படியிலே நெருப்புக்கிட்ட வெந்துகிட்டு, வேர்வை ஓடிய அவர்களுடைய களைச்ச முகந்தான் என் நினைவிலே ஆழமாப் படிஞ்சிருக்கு. அவர்களை நல்லா வச்சுக்கணும்னு நினைச்சதுண்டு. ஆனால் சந்தர்ப்பந்தான் சதி செஞ்சுடுச்சு.''

''கேட்க எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு.''

''என்னோட கூட வருத்தத்தைப் பங்கிட்டுக் கொள்றதைத் தவிர நீ வேறு என்ன செய்யமுடியும்? தோற்றத்திலே ஒண்ணா இருக்கிறோம்னு அதிசயப்படறவங்க, நம் வேறு பட்ட வாழ்க்கை நிலையையும், புரிஞ்சுக்கிட்டா ரொம்ப ஆச்சரியப்படுவாங்க. நிச்சயம்! அடடா, நான் உனக்கு சாப்பிட ஒண்ணும் கொடுக்காமப் பேசிக்கொண்டே போறேனே. இரு, கப்பூஸ், ரொட்டியை எடுத்து வரேன்.'' உள்ளே சென்றான் காமேஷ்.

'இன்னிக்கு நான் பால் பழங்கள் மட்டுமே சாப்பிடற தாக உத்தேசம். நீ வீணாச் சிரமப்படாதே. நான் ப்ரிட்ஜிலேருந்து அதுகளை எடுத்துக்கிறேன்.'' எழுந்திருந் தான் ராஜ்குமார். குளிர்சாதனப் பெட்டியிலிருந்து ஓர் ஆப்பிளையும் பால் பையையும் வெளியே எடுத்தான்.

''இதை மட்டும் கொஞ்சம் சூடுபடுத்திக் கொடு போதும்.''

ஆப்பிள் பழத்தைத் துண்டமிட்டு ஒரு தட்டில் வைத்து ஒரு கோப்பையில் சூடான பாலை நிறைத்துக்கொண்டு வந்து நண்பன் அருகே வைத்து விட்டு, அவன் கப்பூஸ் ரொட்டியுடன் கறிக்குழம்பைத் தொட்டுத் தின்ன உட்கார்ந்து விட்டான். சுக்கா



ரொட்டி என்று நெய் தடவாமல் அகல்யா சுட்டு அம்மாவுக்குத் தரும் ரொட்டியைப் போல் எத்தனை பெரிசு! ஒரு கால்வாசியைக் கூடத் தின்ன முடியாதுபோல் காணப்பட்ட அந்தப் பெரிய ரொட்டியை வேகமாகப் பிய்த்து விரைவில் கறிக்குழம்புடன் காலி செய்துவிட்டான் காமேஷ். சாப்பாட்டிலும் அப்படியோர் ஆவேசம் அவனுக்கு. வியப்புடன் விழித்தான் ராஜ்குமார்.

பார்வைக்கு ஓங்கி உயரமாகச் செவேரென்று மூக்கும் முழியுமாக அழகான தோற்றமுடையவன் காமேஷ். அதுவும் நாசூக்கான உடையிலே கம்பீரமானதொரு கனவானாகத்தான் காட்சியளித்தான். நெருங்கிப் பழகும்போதுதானே தெரிகிறது? மனம் நோகுமே என்று பாராத ஆத்திரமான பேச்சுக்கள். மட்டமான குணங்கள். ம்... அழகான ஆண் பிள்ளைக்குள்ளே ஒரு சிறு அரக்கன் ஒளிந்து கொண்டிருப்பது. அருகில் வந்தால்தானே புரிகிறது?

இவன் மட்டும் தன்னைத் திருத்திக் கொண்டால் எத்தனை நல்லதொரு நண்பனாக இருப்பான்? மூளையில் எங்கேயோ ஒரு வக்கிர புத்தி, ஏன்? தனக்குள்ளே எண்ணியபடி பாலை மெல்லப் பருகிவிட்டு, பழத்துண்டுகளைச் சாப்பிடத் தொடங்கினான் ராஜ்.

''உனக்கு ஒன்று காட்ட வேண்டும்'' என்று சொல்லி, அலமாரியிலிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்து வந்தான் காமேஷ்.

## 8

மூன்று நாட்கள் தொடர்ந்து பக்கத்து டவுனில் இருந்த கண் வைத்தியரிடம் மாமியாரை அழைத்துச் செல்ல நேர்ந்தது அகல்யாவுக்கு.

கண்களைப் பரிசோதிக்கும் முன் ரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, இதயப் புரிசோதனை என்று, அவளை வேறு சில இடங்களுக்கு அந்த வைத்தியர் அனுப்பி விட்டிருந்தார்.

காங்கேயத்துக் காளைகள் பூட்டி வண்டியுனுள்ளே மெத்தை வைத்துத் தைத்து திண்டுகளைச் சாத்திஉட்கார வசதிகள் செய்யப்பட்டிருந்தன. மாடுகளுடன் பழக்கப் பட்டிருந்த வேலையாள் முனியாண்டிதான் வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தான். ஜல் ஜல் என்ற சதங்கை ஒலியுடன் நெடுஞ்சாலைமீது மாடுகள் துரித கதியில் சீராக ஓடியபோது, காரில் சவாரி செய்வது போன்றுதான் சுகமாக இருந்தது. அப்படி இருந்தும் பஞ்சரத்தினம் வீட்டுக்கு வந்ததும், இரவு வேளைகளில் கழுத்து வலி, முதுகு வலி என்று அவதிப்பட்டாள்.

தன் உடல் அயர்வைப் பாராட்டாமல், இரவில் எந்த வேளையானாலும் எழுந்திருந்து, உப்பு வறுத்துக் கொண்டு மாமியாருக்கு ஒத்தடம் கொடுத்து உபசரித்தாள் அகல்யா. வைத்தியர் கொடுத்திருந்த தூக்க மாத்திரையைச் சாப்பிடச் செய்து மாமியார் உறங்கும் வரை கால்களை அமுக்கிப் பிடித்துப் பணிவிடைகள் பலவும் சலிக்காமல் செய்தாள்.

இன்னும் எத்தனையோ அவள் செய்யத் தயாராகத் தான் இருந்தாள். ஆனால் அன்று மாலை, அவர்களை மீண்டும் வரச் சொல்லியிருந்த கண் வைத்தியர் கொடுத்த தகவல் அவளைத் துயரப்படுத்தி விட்டிருந்தது. அவளை உள்ளே வரச் சொல்லி



மேஜைக்கெதிரே கிடந்த ஆசனத்தைக் காட்டினார் கண் வைத்தியர்.

இந்தப் பீடிகையே அவளை மிகவும் கலவரப்படுத்தி விட்டது. ''உங்களோடு கொஞ்சம் தனியாகப் பேசவேண்டும். பெரிய அம்மாவுக்கு இதெல்லாம் தெரிய வேண்டியதில்லை'' என்று சொல்லிக் கொண்டே, உறையிலிருந்த எக்ஸ்ரேயை இழுத்து வெளிச்சத்தில் பிடித்தபடி, தம் தலையை இலேசாகத் தடவிக் கொண்டார் வைத்தியர்.

''எக்ஸ்ரே, ரத்தப் பரீட்சை, இதயப் பரிசோதனை ஆகியவற்றின் முடிவான விவரங்களை அந்தந்த வைத்தியர்கள் எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். பெரியம்மாவின் கண்களையும் பரிசோதித்துப் பார்த்தாகி விட்டது. ஒண்ணுமே திருப்தியாக இருக்கவில்லை.'' பகீர்' என்ற உணர்வில் அகல்யா ஒரு கணம் சங்கடப்பட்டு விட்டாள்.

''அவங்க உயிருக்கு ஆபத்து எதுவும் இல்லீங்களே?' அவளுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது. அருகில் இருந்து இந்தச் சமயம் உதவ, கணவன், கூடவே இல்லையே என்ற ஆதங்கத்தில் மலைத்துப் போனாள்.

ஒண்ணு பெண்டுன்னு இருந்தால் தானே கவலைப் படணும்? வெள்ளம் சாண் போனால் என்ன? முழம் போனால் என்ன என்கிற நிலை இப்போது.

''ஏற்கெனவே இவங்களுக்கு லேசா ஒரு தடவை மாரடைப்பு வந்திருக்கிற அறிகுறி ஈ. ஸி. ஜி.யில் தெரிகிறது. இதுக்கு முன்பு எப்பவாவது அவங்களுக்கு நெஞ்சு வலி வந்ததுண்டா? கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பாருங்கள்!''

நினைத்துப் பார்த்தாள் அகல்யா. அவள் கணவன் வெளி நாட்டுக்குப் புறப்பட்டுப் போன பின்பு, சில நாட்கள் தொடர்ந்து பஞ்சரத்தினம் பிரிவுத் துயரம் தாளாமல் அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்.

''நெஞ்சிலே இத்தனை ஆசைகளைச் சுமந்துண்டு கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தேனே? இந்தப் பிள்ளை வேலை பெரிசுன்னு என்னை உதறிட்டுப் போயிட்டான். அந்த நினைப்பே என் நெஞ்சிலே வலியாக வந்து வேதனை பண்ணுது'' என்று ஒரு நாள் இரவு படுக்கப் போகுமுன் விசும்பி அழுதாள் தாயார்.

''என்னங்க அத்தை, டாக்டரைக் கூட்டி வரச் சொல்லவா?'' பதறினாள் அகல்யா.

''ஒண்ணும் வேணாம், வயிறு கொஞ்சம் மந்தமா இருக்கு'' என்று கூறிவிட்டுச் சமையலறைக்குள் புகுந்து, தானே சுக்குக் கஷாயம் தயாரித்துச் சாப்பிட்டாள்.

அப்பொழுது பஞ்சரத்தினத்துக்கு ஒரு கண்ணில் நல்ல பார்வை இருந்தது.

''நெஞ்சு வலின்னு ஒரு தடவை சொன்னாங்க. கை மருந்து தானே ஏதோ சாப்பிட்டாங்க சரியாப் போச்சன்னாங்க. அதை நான் பெரிசு பண்ணலே. அது ஒரு லேசான மாரடைப்பு நோயாக இருக்குமோ?''

''இருந்திருக்கலாம்.''

'பகீர்' என்ற உணர்வு அவளுக்கு. அதை அப்பொழுதே வைத்தியரிடம் காட்டி சிகிச்சை செய்யாதது எத்தனை பெரிய பிசகு? கணவனுக்கு அவள் என்ன பதில் சொல்லுவாள்?

''இதயம் பலவீனப்பட்டு வீங்கியிருக்கிறதை எக்ஸ்ரே காட்டுகிறது. அதோட சுவாசப் பைகளில் நீர் கோத்துக் கொண்டிருக்கிறது. ரத்தத்திலே எக்கச்சக்கமான சர்க்கரை,ரத்த அழுத்தம் வேறே.''

''கூடக் கொஞ்சம் மருந்தை ஊசியில் ஏத்தினா சர்க்கரை குறைஞ்சுடுமே! அதே போல் ரத்த அழுத்தத்துக்கும் வேற புதுசா ஏதாவது மருந்து குடுத்திங்கன்னா குறைஞ்சுடாதா?



கண்ணை ஆபரேஷன் பண்ணினால் பார்வை வரலாமில்லையா? ஒரு கண்ணிலாவது கொஞ்சம் பார்வை வந்தால் தானே அவங்களுக்கு நிம்மதி.''

''அதைத்தான் சொல்ல வரேன். இத்தனை கோளாறுகள் இருப்பதால் ஆபரேஷனுக்குத் தகுதியற்றதொரு கேசுன்னு முடிவு செய்துட்டேன்.''

''அப்படின்னா. அவங்களுக்குப் பார்வை கிடைக்க வழியில்லையா?''

''ரொம்ப வருந்தறேன்.போன தடவை ஒரு கண்ணை ஆபரேஷன் செய்தேன். அது தோல்வியாக விட்டது. அதில் கொஞ்சம் கூடப் பார்வையில்லை. இப்போ இந்தக் கண்ணில் காட்ராக்ட் நன்றாக முற்றிவிட்டிருக்கிறது. ஆபரேஷன் செய்யப் பக்குவமான நிலைதான். ஆனால் பயன்தான் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. வீணா இதய பலவீனமான அவர்களைப் போட்டுத் தொந்தரவு செய்து என்ன பிரயோஜனம்?''

''அப்படீன்னா?'' அகல்யாவுக்கு மேலே பேசத் தோன்றவில்லை. நெஞ்சிலே ஒரு படபடப்பு.

''அப்படின்னா இன்னும் சில நாட்களில் இவங்க பார்வை முழுதும் இழந்து குருடாகி விடுவார்கள். நான் ரொம்ப வருந்துகிறேன். வேறே செய்வதற்கு ஒன்றுமேயில்லை.''

நெற்றியில் வழிந்த வேர்வையைத் துடைத்துக் கொண்டு மெல்ல எழுந்திருந்தாள்.

''அப்படின்னா, நாங்க மறுபடியும் இங்கே வரத் தேவையில்லைன்னு சொல்றீங்க.'' மீண்டும் சந்தேகத்துடன் கேட்டாள்.

''தேவையில்லை. பயனும் இல்லை.'' டாக்டர் ஆசனத்திலிருந்து எழுந்தார்.

சோடாபாட்டில் கண்ணாடிகள் போன்ற பருமனான அந்த மூக்குக்கண்ணாடி வழியே தெரியாத உருவங்களைத் தெரிந்து கொள்ள முயன்று வெறித்தபடி, வெளியே பெஞ்சின் மீது பஞ்சரத்தினம் உட்கார்ந்திருந்தாள். காலடி ஓசை கேட்டதும், ஆவலுடன் அந்தப் பக்கம் திரும்பினாள். ''டாக்டர் என்ன சொன்னார்? சீக்கிரம் ஆபரேஷன் பண்ணிடலாமுன்னு நினைக்கிறாரா?''

வேதனையும் துக்கமும் அகல்யாவைக் கப்பிக் கொண்டன.

''கொஞ்ச நாட்கள் ஓய்வா வீட்டிலிருந்துட்டுப் பிறகு வரச் சொல்லியிருக்கிறார்.'' கண் தெரியாதவளிடம் பொய் சொல்கிறோமே என்ற அவமான உணர்வில் தவித்தபடி, அவள் கையைப் பிடித்து அழைத்துச்சென்று வண்டியில் மெள்ள ஏற்றி விட்டாள்.

அன்று இரவு இலையில் அளவோடு மருமகள் வைத்த கோதுமைச் சோற்றைக் குழம்புடன் கலந்து பிசைந்து ஒரு கவளம் போட்டுக் கொண்டாள் பஞ்சரத்தினம்.

அவளுக்குத் துக்கம் நெஞ்சை இறுக்கவே, தொண்டையிலேயே சோறு அடைத்துக்கொண்டு விட்ட உணர்வில் திணறிப் போனாள். கொஞ்சம் தண்ணீரைப் பருகக் கையை நீட்டியவள் தம்ளரைத் தட்டி விட்டாள். மேஜையின் மீது சாய்ந்த தம்ளர் தண்ணீரைக் கொட்டி வழியச்செய்து விட்டு, உருண்டு 'டமால்' என்ற சத்தத்துடன் கீழே விழுந்து விட்டது.

அடுப்பில் காய்ந்த பாலை இறக்கி வைக்க உள்ளே சென்றிருந்த அகல்யா ஓடி வந்தாள்.

''என்ன சத்தம்?'' என்று திகைப்புடன் கேட்டாள்.



''எதிரே என் இலைகிட்டே நீ வச்சுட்டுப் போன தம்ளர் கூட என் கண்களுக்குத் தெரியலே. வரவரப் பார்வை சுத்த மோசமாயிடுச்சு. இப்ப என் குழந்தை ஊரிலிருந்து வந்தா அவனைப் பார்த்து ஆனந்தப்படக்கூட எனக்கு அதிர்ஷ்டம் இருக்கப் போறதில்லே'' மேலே பேச முடியாது துக்கத்தில் கிழவி குலுங்கி அழுதாள்.

அகல்யாவின் கண்களும் கனத்தன, வேதனையால் நெஞ்சு விம்மியது.

அருகில் வந்து மாமியாரின் தோளை ஆதரவுடன் தழுவிக் கொண்டாள். இன்னும் சில நாட்களில் ஆதரவுடன் திரும்பிவிடப் போகும் மகனை தாய் பார்க்க முடியாது. என்ன பரிதாபம்! மூன்று வருஷங்களாக அவன் வரவுக்குக் காத்திருந்து, வரும்போது இப்படி ஒரு துன்பம் நேர வேணுமா? ''அம்மா'' என்று ஆசையுடன் அருகில் வந்து உட்காரப் போகிற மகனின் முகத்தைப் பார்க்க முடியாத தாய் எப்படித்தான் தவிக்கப் போகிறாள்? கைகளால் முகத்தைத் தொட்டுப் பார்த்து, 'ராஜா-என் ராஜா!' என்று கதறி அழப்போகிறாளே? அந்தக் கண்ணராவியை எப்படிச் சகிக்க முடியும்?

அம்மாவுக்குக் கண்பார்வை சுத்தமாக இல்லை. அவள் குருடாகி விட்டாள் என்ற உண்மையை அறிந்தால் மகன் மனம் என்ன பாடுபடும்? துயரத்திலே துடித்துப் போய் விடுவானே ராஜ்குமார்!

''முத்து மாரியம்மா, உன் சோதனைக்கு நாங்கதானா அகப்பட்டோம்?'' அவளையுமறியாமல் கன்னங்களை நனைத்த கண்ணீர்த்துளியை மெல்லத்துடைத்துக்கொண்டாள் அகல்யா.

இரண்டு நாட்களுக்குப் பின், ஒரு நாள் இரவு நடு வேளையின்போது, பஞ்சரத்தினம் படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்தாள்.

''அகல்யா!'' அவள் ஒரு முறை கூப்பிட்டதுமே, மருமகள் விசுக்கென்று எழுந்து விட்டாள்.

''முன்பு ஒருவாட்டி வந்துச்சே நெஞ்சுவலி-அது போல இப்ப ரொம்ப அதிகமாகவே நெஞ்சு வலிக்குது. டாக்டரைக் கூட்டி வரச் சொல்லு'' மூச்சுவிட முடியாமல் கிழவி திணறினாள்.

அவசரமாக எழுந்து விளக்கைப் போட்டாள் அகல்யா. படுக்கையின் மீது மார்பை இடதுகையால் அழுத்திக்கொண்டு உட்கார்ந்திருந்த பஞ்சரத்தினத்தின் முகத்தில் வேர்வை ஆறாக வழிந்தது.

''பயப்படாதீங்க. கொஞ்சம் பொறுத்துக்குங்க. இதோ கூட்டிவரச் சொல்றேன்!'' ஆறுதல் கூறிவிட்டு, அவள் முகத்தைத் துண்டால் மெல்லத் துடைத்து விட்டாள். தலையணைகளை உயரமாக அடுக்கி அவளைச் சாய்த்துப் படுக்க வைத்து விட்டு ஹால் விளக்கைப் பொருத்தினாள். அலமாரியில் இருந்த டார்ச் விளக்கை எடுத்துக்கொண்டு, பின்பக்கம் ஓட்டமும் நடையுமாகப் பறந்தாள். கனமான தோட்டத்துக் கதவை மூச்சைப் பிடித்துக்கொண்டு அழுத்தித் திறந்தாள். குப்பென்று மல்லிகைப்பூவின் வாசனை முகத்தில் அடிக்க இருளில் மூழ்கிக்கிடந்த தோட்டத்துக்குள் டார்ச்சின் வெளிச்சத்தை வீசியபடி விரைந்தாள்.

''சிங்காரம்! சிங்காரம்!'' பரபரத்து ஒலித்தது அவள் குரல்.

தன் வீட்டுக் கயிற்றுக்கட்டிலின் மீது ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த தோட்டக்காரன் விழித்துக்கொண்டு, குழப்பத்துடன் எழுந்து உட்கார்ந்தான்.



''பூரணியை எழுப்பு, உள்ளே வந்து எனக்கு உதவியாக இருக்கச் சொல்லு. நீ போய் நம்ம டாக்டர் தணிகை வேலனைக் கூட்டிவா கையோட, நெஞ்சு வலியால் அம்மா துடிக்கிறாங்க.'' உத்தரவிட்டாள்.

வைத்தியர் வருவதற்குள் நேரம் யுகமாகக் கனத்தது. தூக்கம் நிறைந்த கண்களும் அலட்சிய உடையுமாக அவர் வந்திருந்தார். பஞ்சரத்தினத்தைப் பரிசோதித்தார். மருமகளை ஒரு பக்கமாக அழைத்துக் கிசுகிசுத்தார்.

''அம்மாவுக்கு மாரடைப்பு ஏற்பட்டிருக்கிறது. இருக்கும் இடத்தைவிட்டு அசைக்கவும் கூடாது. ஜாக்கிரதை யாகப் பார்த்துக்கொள்ளணும். நான்கு வாரமாவது படுக்கையில் ஒய்வா இருக்கணும். இப்போ ஒண்ணும் சொல்ல முடியாது. எதுக்கும் உங்க கணவருக்குத் தந்தி அடித்து வரவழைப்பது நல்லது.''

நோவு தெரியாதிருக்க அவர் ஏற்றிவிட்டுப் போன ஊசி மருந்தில் சிறிது பொழுதில் பஞ்சரத்தினம் உறங்கிப் போனாள்.

விரைவில் ஊருக்குத்திரும்ப இருக்கும் கணவனுக்குத் தந்தி அடித்துக் கலவரப்படுத்துவது சரியா?

முத்துமாரி கிருபையில் விரைவில் குணமாகி விட்டால், வீணாக ராஜ்குமாருக்குக் கவலையை ஏன் உண்டாக்க வேண்டும்?

ஊருக்குப் புறப்படுமுன் வேலை பார்க்கும் இடத்தில் முடித்துக் கொடுக்க வேண்டிய காரியங்கள் பல இருக்குமே இது சமயம் அவர் மனசைக் குழப்பினால்...? தபாலில் எழுதி நிலைமையை மெல்லத் தெரிவிப்பதுதான் சரி. அது வரை அத்தையை ஜாக்கிரதையாக அவள் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

மாமியார் மீது போர்வையைக் கழுத்து வரை போர்த்திவிட்டு, விளக்கை அணைத்து விட்டு, ஹாலுக்குள் வந்தாள். சாப்பாட்டறை மேஜைமீது உட்கார்ந்து கொண்டு கணவனுக்குக் கடிதம் எழுதத் துவங்கினாள்.

''அத்தைக்கு கொஞ்ச நாட்களாக மோசமானதொரு நெஞ்சு வலி அடிக்கடி வந்து கொண்டே இருக்கிறது. நம் குடும்ப டாக்டர் அவ்வப்போது வந்து கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார். நானும் முடிந்தவரை அத்தையைப் பத்திரமாக பார்த்துக் கொள்கிறேன். இருந்தாலும் நீங்கள் இதுசமயம் அருகில் இருப்பதற்கு இதெல்லாம் ஈடாகுமா? சிந்தித்துப் பாருங்கள்...''

''அகல்யா!'' மாமியாரின் மெல்லிய குரல் அவளை அழைத்தது. கடிதத்தைப் பாதியில் விட்டு விட்டு விரைந்தாள் அறைக்குள்.

''கிட்டவந்து உட்கார். உங்கிட்ட விவரமா எல்லாத்தையும் சொல்லணும்னு தோணுது. உட்கார்...'' என்று முணுமுணுத்தாள் கிழவி.

கட்டிலின் விளிம்பின் மீது வந்து உட்கார்ந்து கொண்டாள் அகல்யா. ''என்ன அத்தை, சொல்லுங்க கேட்டுக்கிறேன்.''

''சொல்கிறேன். அது வந்து...''குழறிய பஞ்சரத்தினம் கண்களைத் திறக்காமல் மீண்டும் ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்து போனாள்.

அத்தை என்ன சொல்ல விரும்புகிறாங்க?...ம்! அகல்யாவுக்குக் குழப்பம்.



## 9

பஞ்சரத்தினத்தில் உடல்நிலை விரைவில் அபிவிருத்தி அடைந்து விடவே, வைத்தியர் அவளுக்கு விதித்திருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தி விட்டிருந்தார்.

அன்று காலை அவள் படுக்கையிலிருந்து எழுந்து மருமகள் உதவியுடன் தலைமுழுகினாள். காபி பலகாரத்துக்குப் பின், ஹாலில் கிடந்த சோபாவின் மீது சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தாள்.

முன்னைவிடப் பார்வை மிகவும் மோசமாகி விட்டதை அவள் புரிந்து கொண்டு விட்டிருந்தாள். முன்பெல்லாம் கண்முன் ஒரு வெள்ளைப் படுதா விரித்திருப்பது போன்ற உணர்வு. இப்போது அது கருமையாகிவிட்டது போன்றதொரு கலவரம் அவளுக்கு.

இலேசான காலடி ஓசையைத் தொடர்ந்து கும்மென்ற மல்லிகையின் மணம் முகத்தில் மோதவே அவள் மெல்லத் திரும்பினாள்.

நீண்ட கூந்தலை வாரி அழகாகக் கொண்டையிட்டுக் கொண்டு, அதைச் சுற்றிலும் பூரணி தொடுத்துக் கொடுத்த தோட்டத்து மல்லிகையைச் சூடிக்கொண்டு அகல்யா புடவை நுனியை இடுப்பில் தூக்கிச் செருகிக் கொண்டு சாமான் அறைக்கும் சமையலறைக்குமாக நகர்வதை அவளால் உருவகித்துக் கொள்ள முடிந்தது.

'மகன் வருவதற்குள்,உடம்பு குணமாகிவிட்டது போல் டாக்டர் மகராஜன் ஆபரேஷன் செய்து கண் பார்வையை ஒரு துளியளவு சீராக்கித் தந்து விட்டால்...'

''அத்தை! எனக்குக் கொஞ்சம் தோட்டத்திலே வேலை இருக்கு. பூரணியைத் துணைக்கு வைச்சுட்டுப் போறேன்.

ஏதாச்சும் வேணுமினா கூப்பிடச் சொல்லுங்க.'' அகல்யா அருகில் வந்தபோது, ஒரு மணம் கம்மென்று முகத்தில் மோதுவதை உணர்ந்தாள்.

அலமாரியில் அடுக்கி வைத்திருக்கும் புடைவைகள் இடையே அவள் போட்டு வைத்திருக்கும் காய்ந்து போன தாழம்பூ மடலின் நறுமணம் சுகமாக மின்சிவிறியின் காற்றோடு கலந்து வீட்டுக்குள் வட்டமிட்டது.

வெள்ளிக்கிழமை அகல்யா கோவிலுக்குப் போக உடுத்திக் கொண்டு போன பட்டுச் சேலையை இன்னமும் களைந்து வைக்கவில்லை போலிருக்கு. இப்படி எண்ணிய கிழவியின் உள்ளத்திலே, பழைய நினைவுகள் குபீரென்று எழுந்து நெஞ்சை அடைத்துக்கொண்டு விட்டன.

அதுவும் முதல் நாள், அவளைப் பார்க்க வந்த அவள் தோழி பார்வதி தூங்கிக்கொண்டிருந்த அவளது நினைவு களைத் கிளறித் தூண்டிவிட்டுப் போயிருந்தாள்.

மாமியாரின் வேண்டுகோளைத் தட்ட முடியாது அவள் உடல்நிலை சிறிதளவு சீராகியபின் தான், அதை விளக்கி பார்வதி அம்மாளுக்கு அகல்யா ஒரு கார்டு போட்டிருந்தாள்.

அவ்வளவுதான் தன் கடைக்குட்டிப் பேரனுடனும், கூடை சாத்துக்குடி பழங்களுடனும், அம்பாசிடரில் அவள் சேலத்திலிருந்து பறந்து வந்து விட்டாள்.

'எழுந்து உட்காரும் அளவுக்குத்தான் உடம்பு தேறியிருக்கிறது. அதற்குள் நாள் முழுவதும் தொண தொணக்க இந்த அம்மாள் வந்து விட்டாங்களே?' என்று அகல்யாவுக்கு உள்ளூறக் கவலைதான். ஆனால் மாமியாரின் ஆசைக்குக் குறுக்கே நிற்க அவளுக்கு அதிகாரம் இருக்கவில்லை.

அவர்கள் இருவரையும் பேசவிட்டு, அவள் குழந்தையைத் தூக்கிக் கொண்டு தோட்டத்துக்குள் போய் விட்டாள்.



தனியாக அவர்கள் இருந்த போதுதான் பார்வதி சொல்லி வைத்தாள். 'எப்படியிருந்த உடம்பு? எப்படிப் போயிட்டுது, பஞ்சா, நீ உன் மகனை ஊருக்குச் சீக்கிரம் வரும்படி ஒரு கடிதாசி கண்டிச்சி எழுதிப் போடு. இதென்ன? அறிவு இல்லாத புள்ளையா இருக்கான். பெத்தவளுக்கு மேலா உத்தியோகம் பெரிசாப்போச்சு? காரமான குரலில் படபடவென்று பொரிந்தாள்.

''வெளி தேசத்தைப் பார்க்கணுங்கிற ஆசை, போன இடத்திலே காண்டிராக்டிலே கையெழுத்து வைச்சுட்டான். அது முடிஞ்சு தானே வரமுடியும்?'' பெருமூச்செறிந்தாள் தாய்.

''அந்தக் காலத்திலேதான் பெரியதனக்காரர், ரதி போல உன்னை வீட்டிலே வச்சிட்டு, வெளியிலே மைனர் விளையாட்டு விளையாடினார். பணமும் பவுசும் இருந்திச்சு. யாருமே கண்டுக்கலை. முத்துமாரி கோயில் ஸ்தானிகர், ஊருக்கே பெரிய புள்ளி, நாட்டாமை அப்படி இப்படின்னு அவர் காலம் கௌரவமா போர்த்திக்கிட்டுப் போயிடுத்து. இப்போ கிராமத்து ஜனங்கள்ளாம் ரொம்பக் கெட்டிக் காரங்களாயிட்டாங்க. கூட்டம் போடறாங்க, பேசறாங்க, அப்பப்பா, ஒவ்வொருத்தன் என்னமா படிச்சிருக்கான்? எதுக்குச் சொல்ல வந்தேன்னா, உன்பிள்ளை, பெத்தவளையும் கட்டினவளையம் மறந்து, போன இடத்திலே ஏதாச்சும் வம்பு வழக்கைத் தேடிக் கொண்டால், முன் போல மூடி வைக்க முடியாது. ஊர் சிரிச்சிடும். இந்தப் பொண்ணு அகல்யா துடி துடிச்சுப் போயிடும். அந்தப் பாவம் நமக்கு வேணுமா? நீ ஏன் உன் மகனுக்குப் புத்தி சொல்லக் கூடாது? எனக்கென்னவோ பஞ்சா, ராஜ்குமாரைப் பத்திக் கவலையா இருக்கு'' என்று முடித்தாள்.

பெரியதனக்காரர் கனகசபை என்றால் குழந்தையும் வாயை மூடிக் கொண்டு விடும். அத்தனை செல்வாக்கு இருந்து

உண்மை. அவருடைய மனைவி என்ற நிலையில் பஞ்சரத்தினத்திற்கு ஒன்றைத் தவிர எந்தக் குறையும் இருக்கவில்லை. சின்ன வயதில் அவளும் அகல்யாவைப் போல் பார்க்க பெரும் அழகிதான். கிள்ளி எடுத்து விடலாம் போன்ற தங்க நிறம். தளதளவென்று உணவின் ஊட்டத்திலும், பருவத்தின் செழுமையிலும், உடம்பை நிறைத்த நகையிலும், பட்டுச் சேலையிலும், மின்னிக் கொண்டிருந்தாள்.

பெரிய தனக்காரர் ஆசை அறுபது நாட்களுடன் அடங்கி விட்டிருந்தது. திருமணத்தின் போது அவள் தாயார் தன் நாத்தியுடன் கிசுகிசுத்தது லேசாக அவள் காதுகளில் விழுந்து விட்டிருந்தது.

''கனகசபை தாய்க்கு ஒரே பிள்ளை. சொத்து எக்கச்சக்கம். ஆனால் பட்டணத்திலே ஒரு விவகாரத்திலே சிக்கிக் கொண்டு இருக்கிறாராம். அதை ஒழிச்சுக் கட்டத்தான் அம்மாக்காரி அவசரமாகக் கல்யாணத்தை முடிச்சு வைக்கிறாளாம். ஆண்பிள்ளைகள் அதுவும் சிறு வயசு. கையில் கொஞ்சம் பசை இருக்கு. அப்படியும் இப்படியும் இருப்பாங்க. அதையெல்லாம் பாராட்ட முடியுமா? ஒரு கால்கட்டு போட்டா எல்லாம் ஒய்ந்து விடும் என்று நம்பிக்கை!'' தாயார் முணுமுணுத்தாள். ஒய்ந்ததா?

கல்யாணமான பின்பும் தொடர்ந்து எத்தனையோ பெண் விவகாரங்கள். சில அவளுக்குத் தெரிந்தவை. பல தெரியாதவை. பட்டணத்திலிருந்து அவருக்கு வந்த ஒரு கடிதத்தைத் தவறாக எடுத்துப் படித்துப் பார்த்தபோது தானே உண்மை தெரிந்தது? ஏன் அவர் அடிக்கடி சென்னைக்குப் போய் வருகிறார் என்ற விஷயத்தைக் கடிதம் புரிய வைத்தது.

ஆனால், அந்த அதிர்ச்சியையம் துயரத்தையும் தன்னுள்ளே அடக்கிக்கொள்ள மாட்டாமல், தன் தாயிடம்



கூடத் தெரிவிக்காமல், தோழி பார்வதியிடம் கொட்டி அழுது விட்டிருந்தாள்.

காலங் கடந்த கதையை பார்வதி இப்போது நினைவு படுத்திக் குத்திக் காட்டுகிறாள்.

''சின்ன வயசிலேதான் அவர் சித்தம் இப்படியும் அப்படியுமாக இருந்தார். வயசுக் காலத்திலே கோயிலும் பூசையுமா என்கிட்ட ரொம்ப பிரியமாத்தானிருந்தார்.'' கணவனை விட்டுக்கொடுக்காமல் பேசினாள் பஞ்சரத்தினம்.

கடந்த கால நினைவெல்லாம் நீர் வீழ்ச்சியாகப் பொங்கிப் புரண்டு கொண்டு நெஞ்சை இறுக்கியது. மறுபடியும் மாரடைப்பு வந்து விட்டது போல், ஒரு கணம் அவள் திணறிப் போய்விட்டாள்.

''ராஜ்குமார் ரொம்ப வித்தியாசமான பிள்ளை. அவனைப் பத்தி இங்கே இருக்கும் வரை யாரும் குற்றம் சொன்னதில்லை. கண்காணாத தூரதேசத்திலே இருக்கிறானேன்னு...'' தொடர்ந்து தூபம் போட்டாள் பார்வதி.

தோட்டத்தினின்று உள்ளே வந்தபோது, மாமியார் மூக்குக்கண்ணாடியைக் கையில் பிடித்துக் கொண்டு, மூக்கைத் துவாலையால் துடைத்துக் கொள்வதை அகல்யா கவனித்து விட்டாள்.

பார்வதி மீது அவளுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

'எதையோ கிளறிவிட்டுக் கிழவியை அழ வைத்து வேடிக்கை பார்க்கிறாளே வம்புக்காரி' என்ற சீற்றம்.

''கோயிலுக்குப் போய் அம்மனுக்கு அர்ச்சனை பண்ணனும்னு சொன்னீங்களே. பூப்பறிச்சுக் கொண்டு வந்திருக்கேன். பூரணியைத் துணைக்கு அனுப்பறேன். கோயிலுக்குப் போய் நீங்க அர்ச்சனை முடிச்சுட்டு

வரத்துக்குள்ளே இங்கே சாப்பாடு தயாராகி விடும். ஒரு வாய் சாப்பிட்டுட்டு வெயில் தாழ்ந்த பிறகு நீங்க பயணப்படலாம்'' என்றாள்.

''இல்லேம்மா. கோயிலில் அர்ச்சனையை முடிச்சுட்டு அப்படியே நாங்க போகணும். அவருக்கு வண்டி தேவைப்படும். எங்கேயோ இன்னிக்குச் சாயங்காலம் ஒரு மீட்டிங்காம். அதுலே அவர் பேசப் போறார்.'' பெருமையாகச் சொல்லிக்கொண்டு எழுந்து விட்டாள் பார்வதி. அத்துடன் அவள் தொண தொணப்பதற்கு முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது, என்றாலும் அவள் கிண்டிவிட்ட நெருப்பு பஞ்சரத்தினத்தின் நெஞ்சிலே திகுதிகுவென்று எரியத் தொடங்கிவிட்டது.

விருந்தாளிக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு, மருமகள் வாயிற்கதவை அடைத்துக் கொண்டு, மீண்டும் தோட்டத்துக்குள் போய் விட்டாள். சிங்காரம் செய்த தோட்ட வேலையை மேற்பார்வையிட்டு, கவனிக்க வேண்டிய வேலை அவளுக்கு அங்கே அநேகம் இருந்தன.

கண்களை மூடியபடி துயரத்துடன் சோபாவில் சாய்ந்து கொண்டாள் பஞ்சரத்தினம். எத்தனையோ வேதனைகளை மனத்திலே அடக்கிக் கொண்டு, வாழ்நாளிலே போலியாகச் சிரித்தபடியே வாழ்ந்தவள் அவள். நியாயத்துக்குக் கட்டுப்பட்டு ஒழுக்கமாக வாழ்ந்தவள்.

அவளுக்கு முத்துமாரி, எத்தனையோ சோதனைகளைத் தந்து விட்டிருந்தாள். இப்போது அவளது பார்வையைப் பறித்துக் கொண்டு வேடிக்கையல்லவா செய்கிறாள்?

பெருமூச்சுக்கிடையே, கன்னங்களில் உருண்ட கண்ணீரை மெல்லத் துடைத்துக் கொண்டாள். எத்தனை முயன்றும், பின்னோக்கிக் கட்டுத்தறியைக் கிளப்பிக் கொண்டு



தடம் புரண்டு ஓடும் காங்கேயத்துக் காளைகள் போல், அவளது நினைவுகள் எங்கெங்கேயோ புரண்டோடின.

ஏதோ காரியமாக அன்று கனகசபை திருச்சி நகருக்குப் புறப்பட்டிருந்தார். கூடவே தம் பத்து வயது மகனையும் கூட்டிக் கொண்டு போயிருந்தார். அவனுக்கு அன்று பள்ளிக்கூட நாள். நிலத்துக்கு உரம் வாங்கி அனுப்பி விட்டு நண்பர் ஒருவர் வீட்டிலே சாப்பிட்டுவிட்டு, இரவு எட்டு மணியளவில் திரும்பி விடுவதாக அவர் சொல்லியிருந்தார்.

கணவனும், குழந்தையும் வீட்டில் இல்லாதபோது, அவளுக்குத் தனியே சாப்பிடக்கூட மனம் இருக்கவில்லை. பகல் பொழுதுக்குக் கொஞ்சம் மோரைக் குடித்து விட்டு காய வைத்து ஓடு நீக்கிய புளியைக் கூடையில் அள்ளி வைத்துக் கொண்டு கொட்டையை நீக்க அரிவாள் மனையுடன் உட்கார்ந்து விட்டிருந்தாள். பூரணியும், சிங்காரமும் அடுத்த ஊருக்கு யாரையோ பார்க்கப் போயிருந்தனர். அது சமயம் அவள் மட்டுமே தான் வீட்டிலிருந்தாள். மாலைப் பொழுதின் மஞ்சள் வெயில் முற்றத்திலிருந்து பின் நோக்கி சுவரில் பூதமாக நகர்ந்து கொண்டிருந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் அதுவும் மறைந்து விடும். இருட்டத் தொடங்கிவிடும் என்று கணக்கிட்டபடி, வேகமாக அவள் வேலையைச் செய்து கொண்டிருந்த சமயம் வாயில் கதவு இடிபடும் ஓசை கேட்டது.

நர்ஸ் அம்மாள், அற்புத மேரியின் வேலைக்காரி சற்குணந்தான் வாசலில் நின்று கொண்டிருந்தாள்.

கொஞ்ச நாட்களாக அற்புதத்திற்கு உடம்பு சரியில்லை. படுத்த படுக்கையாகி விட்டிருக்கிறாள் என்று கேள்விப் பட்டிருந்தாள். பரிதாப்பட்டு ஒரு முறை அவளுக்கு சிங்காரத்திடம் செலவுக்கு இருபது ரூபாய் அனுப்பி வைத்திருந்தாள்.

ஊருக்கு மருத்துவத் தாதியாக உழைத்துக் கொண்டிருந்த அற்புதத்திற்கு வயது எழுபதிற்கு மேலிருக்கும். தனிக்கட்டை. சில நாட்களுக்கு முன்னால்தான் தள்ளாமையையும் நோயையும் பொருட்படுத்தாமல் கோடி வீட்டுப் பெண்ணிற்குப் பிரசவம் பார்த்து விட்டுப் போனாள். இப்போது அவளுக்கு என்ன?

''அம்மாவுக்கு ரெண்டு நாளா உடம்பு ரொம்பக் கேவலமாயிட்டுதுங்க. நேத்தே பிடிச்சு உங்களைப் பார்க்கணும்னு வாய் ஓயாது புலம்பிக்கிட்டிருக்காங்க. தயவு செய்து ஒரே ஒரு தடவை அவங்க வீட்டுக்கு வந்து, அவங்க கிட்ட வந்து பேச முடியுமான்னு கேட்டு வரச் சொன்னாங்க.'' கண்கலங்கிப் போனாள் வேலைக்காரி.

கனகசபைக்குத் தன் மனைவி தனியே வெளியில் செல்வது பிடிக்காத காரியம். அதுவும் அவர் ஊரில் இல்லாத போது, இருட்டும் சமயம். தயங்கினாள் பஞ்சரத்தினம். ''ரொம்ப அவசரம் அம்மா. இப்போ நீங்க வராட்டி நாளை வரை அவங்க உயிர் தாங்குமான்னு சொல்ல முடியாது.'' சற்குணம் தழுதழுத்தாள்.

அவர்கள் குடும்பத்திற்கு வெகு காலம் மருத்துவத் தாதியாக இருந்தவள். தலைவலி கால்வலி என்றால் கூட ஓடி வந்து உதவினவள். இன்னும் எத்தனையோ. மனசை உறுத்தியது. மறுக்க முடியவில்லை. வீட்டைப் பூட்டிக் கொண்டு துணிவுடன் வேலைக்காரியைப் பின் தொடர்ந்தாள் அவள்.

அற்புதமேரி ஊருக்கு ஒதுக்குப்புறமானதொரு வீட்டிலே தன்னந்தனியே தான் வசித்துக் கொண்டிருந்தாள். வேலைக்காரியைத் தவிர, அவசரத்துக்கு உதவ அருகிலே யாரும் இல்லாத அவலநிலை. உடைந்து விழும் தறுவாயி லிருந்த பழைய வீடு அது. அவள் அதை அடையுமுன்னே



இருட்டி விட்டது. சற்குணம் அவசரமாக ஒரு ஹரிக்கேன் விளக்கை ஏற்றி, கூரையிலிருந்து தொங்கிய கம்பியில் மாட்டி விட்டு, வாயில் கதவைச் சாத்திக்கொண்டு வெளியே போய் விட்டாள். கூடத்துக் கயிற்றுக் கட்டிலில் வற்றி உலர்ந்த குச்சி போல் கிடந்த அற்புதத்தின் பற்களும் கண்களும் மகிழ்ச்சியில் விளக்கொளியில் பளிச்சிட்டன.

''உட்காருங்க!'' அருகில் கிடந்த பிரம்பு நாற்காலியைக் காட்டி உபசரித்தாள், அற்புதம்.

''ராஜ்குமாருக்கு வயது பத்தாகுது இல்லையா? நல்லாப் படிக்கிறானா?'' பரிவுடன் விசாரித்தாள்.

தும்பைப் பூவாக, படர்ந்து புரண்டு கிடந்த அவளது கூந்தலையும், ஒட்டிய கன்னங்களையும், ஒடுங்கி விட்ட உடலையும் உற்றுப் பார்த்து பஞ்சரத்தினம் மனம் கரைந்து போனாள்.

''ராஜ்குமாரைப் பத்தி பிறகு பேசலாம். உனக்கு என்ன வேணும் சொல்லு. இந்த உடம்போட நீ தனியா இப்படி படுத்துக் கிடப்பது சரியில்லை. அவர் திருச்சியிலிருந்து வரட்டும். சொல்லி உன்னைப் பக்கத்து டவுன் ஆஸ்பத்திரியிலே சேர்த்துடச் சொல்றேன். வேறே ஏதாவது...'' அவள் முடிக்கவில்லை.

''எனக்கு உங்களிடமிருந்து காசு பணம் வேறே எந்த உதவியும் தேவையில்லையம்மா. ஒரே ஒரு வேண்டுகோள். அதுக்கு நீங்க சம்மதிக்கணும். கொஞ்ச நாளா என் மனசாட்சி என்னை வாட்டி வதைக்குது. நீங்க ஒப்புக்கொள்வதாக வாக்குக் கொடுத்துட்டா, நான் என் கடமையைச் செய்து விட்ட திருப்தியோட கண்களை மூடிப்பேன். இல்லாட்டி...'' பேச முடியாமல் பலமாக இருமினாள் அற்புதம்.

பஞ்சரத்தினத்துக்குத் தாங்க முடியாத குழப்பம்! என்ன சொல்ல இப்படிச் சுத்தி வளைக்கிறாள்? நெஞ்சு பக்பக்கென்று

அடித்துக் கொண்டது. வீட்டுக்குள்ளே மண்டிக் கிடந்த புழுக்கமும், நோயாளி மீதிருந்து எழுந்த மக்கிய வேகமும், அவளுக்குத் தாங்க முடியவில்லை. வயிற்றைப் புரட்டியது.

''இப்படிக் கொஞ்சம் குனியுங்கோ. சொல்றேன்... நல்லா கேட்டுக்குங்க. நியாயத்தைச் சிந்திச்சுப் பாருங்க. என் மனசு நிலை கொள்ளாமத் தவிக்குது. அவர் கிட்டேயும் நீங்கதான் எடுத்துச் சொல்லணும். உங்களைக் காண அவள் வருவாள். வீணா மனம் நோகப் பேசித் துரத்தி அடிச்சுடாதீங்க. அது பாவம். ஏதாச்சும் கணிசமா அவளுக்குக் கொடுத்து வாழ வசதி பண்ணிக் கொடுங்க. அவள் ரொம்பக் கஷ்டப் படுகிறாள்.''

அதற்குப் பின் மேல் மூச்சு வாங்க, அவள் தாழ்ந்த குரலில் சொன்ன அந்த விவரம் பூராவும் கேட்ட போது பஞ்சரத்தினம் பயத்தில் உடல் சில்லிட்டுப் போனாள்.

## 10

பஞ்சரத்தினத்துக்கு அன்று முழுவதும் அதே சிந்தனை தான். அவள் கணவன் இறந்து போகுமுன் எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து விட்டுத்தான் போயிருந்தார். வீடு நிலம், ரொக்கம் எல்லாவற்றையும் தமக்குப் பின் தமது ஒரே மகன் ராஜ்குமாருக்குத்தான் என்று எழுதி வைத்து விட்டுப் போயிருந்தார். ஆனால் பஞ்சரத்தினத்தைப் பரிதவிக்க விட்டுச் சென்று விடவில்லை. அவள் காலம் முடியும் வரை சுகமாக வாழத் தேவையான அளவு கணிசமானதொரு தொகையைப் பாங்கியில் அவள் பெயரில் கட்டி விட்டிருந்தார். அத்துடன், அந்த வீட்டில் அவளது கடைசி மூச்சு வரை வசிக்க உரிமை உண்டு என்று உயிலில் ஒரு நிபந்தனை விதித்திருந்தார்.



வசிக்க வீடு, செலவழிக்கத் தன்னுடையதென்று வட்டிப் பணம். கவனித்துக் கொள்ள அன்பான மருமகள். பீரோ கொள்ளு மட்டும் உடுக்கத் துணி வகைகள்-இத்துடன் அவளுடைய சொத்தான் கனமான துகைகள் பல. பணத் தட்டுப்பாட்டைப் பற்றி அவள் ஒரு பொழுதும் கவலைப் பட்டதில்லை. ராஜ்குமாருடைய மனத்தை யாராவது கலவரப் படுத்திவிட்டால்?

இரவு சாப்பாட்டின் போது அவளுக்குப் பிடித்தமான பூசணிக்காய் சாம்பார் கூட வாய்க்குக் கசந்தது.

மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்த கவலைகள், திகில்களால் அவளுக்கு உறக்கமே வரவில்லை.

படுக்கையில் பலமுறை திரும்பிப் படுத்தாள். சிந்தனைகள் வேகமாக அலை பாய்ந்தன.

கனகசபை திடீரென்று இறந்து போவதற்குச் சில நாட்களுக்கு முன்னர்தான் அந்த மனிதர் வந்திருந்தார்.

அவரை அவள் முன்பின் பார்த்ததில்லை. நல்ல கருத்தமுகம். ஆனால் கூர்மையான கண்கள். தேங்காய் சில்லு போன்ற பளிச்சிட்ட பற்கள். கோட்டும் சூட்டுமாகத் தடபுடலாக உடை அணிந்தவராகப் பட்டணத்து ஆசாமியாகத் தான் தென்பட்டார். காலில் அணிந்திருந்த பளபளத்த ஷூக்களைக் கழற்றி நடையில் வைத்து விட்டுத்தான் உள்ளே வந்தார். மரியாதை தெரிந்த மனிதன் என்றுதான் அவள் எண்ணிக் கொண்டாள்.

கனகசபை அப்பொழுதுதான் நிலங்களைச் சுற்றிப் பார்வையிட்டு விட்டுப் பிரம்பால் பின்னிய சாய்வு நாற்காலியில் தாழ்வாரத்தில் உட்கார்ந்தபடி வெற்றிலைப் பெட்டியைத் திறந்து ஆராய்ந்து கொண்டிருந்தார்.

வெயிலில் அலைந்து விட்டு வந்த களைப்பில் இடையில் வேட்டியும், திறந்த மார்பும், தோளில் துண்டுமாக அவர் சாய்ந்து கொண்டிருந்தார். நெற்றி மீது பட்டையாகத் தரித்திருந்த விபூதி இங்குமங்கும் சிறிதளவு கலைந்து காணப்பட்டது. பின்பக்கம் இலேசாகக் காணத் தொடங்கிய வழுக்கை வேர்வையில் மின்னியது. ராஜ்குமார் சென்னையில் ஹாஸ்டலில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தான். வீட்டில் அச்சமயம் அவர்கள் இருவர் மட்டுந்தான் இருந்தனர்.

வந்தவர் ஆங்கிலமும் தமிழும் கலந்து பேசியபடி கனகசபையின் கையைப் பிடித்துக் குலுக்கினார்.

''காபி கொண்டு வா!'' கணவன் போட்ட உத்தரவுக்காக உள்ளே சென்றவளுக்கு, அவர்கள் என்ன பேசிக் கொண் டிருந்தார்கள் என்ற விவரம் ஏதுமே தெரிய வழி இருக்கவில்லை.

காபியை வந்தவருக்குக் கொடுத்து உபசரித்த பின்னர், கனகசபை அவரைத் தம் வாயிற்புறுத்து அறைக்குள் அழைத்துச் சென்றுவிட்டார். எத்தனையோ உன்னிப்பாக அவள் கேட்க முயன்றும், அவளுக்கு ஏனோ கலவரத்தில் இதயம் வேகமாகத் துடித்துக் கொண்டது. என்னவோ விபரீதம் என்ற வரை உள்ளுணர்வு ஓலமிட்டது.

வாசல் அறையிலிருந்து பேச்சுக் குரல் முதலில் சன்னமாக, பின்னர் உரத்துக் காரமாகக் கேட்டபோது, அவள் நடுநடுங்கிப் போனாள்.

''உங்களால் ஆனதைப் பாருங்கள். அதுக்கெல்லாம் பயந்தவன் நான் இல்லை'' என்று கனகசபை இரைந்து கத்தியதைக் கேட்டதும், அவளுக்கு இருப்பே கொள்ளவில்லை.

கதவைத் தட்டி உள்ளே சென்று, 'என்ன விஷயம் என்று விசாரித்தால் என்ன?' என்று ஓர் எண்ணம்.



அவள் கணவர் மிக்க கோபக்காரர். அவரை மீறி அனுமதியின்றி காரியங்கள் ஏதும் செய்தால் கடும் கோபம் கொண்டு விடுவார். அவரிடம் அவளுக்கு அன்பு என்பதை விடப் பயமே அதிகம் இருந்தது என்று சொல்ல வேண்டும்.

அற்புதத்தின் வீட்டுக்குப் போய் வந்ததைத் தவிர, அவர் உத்தரவின்றி அத்துமீறிய காரியங்கள் எதுவும் அவள் செய்ததேயில்லை. மறுபடியும் அவள் கணவனது உரத்த குரலைக் கேட்டு மெய் பதறி, நடுங்கி, அங்கே நிற்கவும் பயந்து தோட்டத்துப் பக்கம் விரைந்து விட்டாள்.

வெகு நேரத்துக்குப் பின்னர், அவர் அழைப்பதைக் கேட்டு உள்ளே வந்தாள். ''வந்திருக்கிறவருக்கு விருந்து சமைக்கணுமா? சாப்பிட்டுத்தானே போகப் போறார்?'' கேட்டு வைத்தாள்.

''அவனுக்கு விருந்து ஒரு கேடா? அனுப்பிட்டேன்.'' துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு, நாற்காலியில் மறுபடியும் சாய்ந்து கொண்டார். மிடுக்காகக் கனகசபை பேசினாரே யொழிய முகம் பேயறைந்ததைப் போன்று பயங்கரமாக இருந்ததை அவள் கவனிக்கத் தவறவில்லை.

இதற்குப் பின்னர் சில தினங்கள் அவர் சோர்வுடன் காணப்பட்டார். அவரை வாட்டும் கவலை என்ன? தெரிந்து கொள்ள அவள் துடித்தாள். ஆனால் கேட்கத் தான் துணிவு இருக்கவில்லை.

ராஜ்குமார் விடுமுறைக்காக வீட்டுக்கு வருமுன் ஒரு நாள் இரவு அவர் அவளை அழைத்தார். கூடத்தில் தொங்கிய ஊஞ்சல்மீது அவர் உட்கார்ந்திருந்தார். சாப்பாட்டுக்குப் பின் பரபரப்பாக வெற்றிலை போடும் பழக்கமுடையவர். பெட்டியைத் தொடாமல் எங்கேயோ வெறித்தபடி சிந்தனை யில் ஆழ்ந்திருந்தார்.

சிறிது நேரம் ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு, அசையாது நின்ற அவளை ஏற இறங்கப் பார்த்தார்.

''இப்படி வந்து கிட்ட உட்கார். உன்கிட்ட பேசணும்.' உத்தரவிட்டார்.

கோபமா, துயரமா என ஊகிக்க முடியாத கனத்த குரலில் சொன்னார்.

''எனக்கு எதுவும் ஆயிட்டா, நீ கஷ்டப்படக் கூடாதுன்னு எல்லாத்தையும் ஒழுங்கு செஞ்சு வைச்சிருக்கேன்.''

''ஏங்க இப்படி திடுதிடுப்புன்னு இந்தப் பேச்சு?'' பதறிப் போனாள் பஞ்சரத்தினம்.

''அட, சும்மா கேளு. நெருப்புன்னா வாய் வெந்து போகாது. இப்ப ஒரு புதுச்சிக்கல் உருவாகியிருக்கு. உன்கிட்ட எதுக்கும் சொல்லி வைக்கிறேன். அன்னிக்கு வந்தானே ஒரு பட்டணத்து ஆசாமி. அவன் பெயர் தேவசகாயம். அவன் மறுபடி இங்கே வரமாட்டான். அப்படி எனக்கு வாக்குக் கொடுத்திருக்கான். தேவையான பணத்தைக் கொடுத்து, அவன் உன்னை வந்து இம்சிக்கக் கூடாதுன்னு ஒப்புக்க வச்சு.அவன் கைப்பட ஒரு கடிதம் எழுதி வாங்கி வச்சிருக்கேன். அதோட சில விவரங்களையும் நானே ராஜ்குமாருக்கு விளக்கி எழுதின ஒரு கடிதமும் சேர்த்து, இந்தக் காகித உறைக்குள்ளே வைச்சிருக்கேன். எனக்கு ஏதாச்சும் ஆயிட்டா, கொஞ்ச நாள் கழிச்சு ராஜ்குமார்கிட்ட நீ இதைக்கொடுத்துப் படிச்சு உண்மையைத் தெரிஞ்சுக்கச் சொல். பிறகு அவன் இஷ்டப்படி நடக்கலாம்னு சொல்லிடு. செய்வியா?'' உறுமியபடி, ஒரு கடித உறையை அவள் கையில் வைத்தார்.

அவள் முகத்தைப் பாராமல், அவர் மேலே படபடவென்று பேசிக் கொண்டு போனார்.

அற்புதமேரி ஏற்கெனவே சொன்ன தகவல்தான் அது. கணவன் சொல்லக் கேட்கும்போது ஏனோ துக்கம் அவள் நெஞ்சை அடைத்தது. ''இந்தப் பாவி அற்புதமேரி, இப்படி ஒரு சிக்கலை வைச்சு நம்மைப் பெரும் தொல்லையில் மாட்டி வைச்சிருப்பாள்னு நான் கனவிலும் நினைக்க வில்லை, சாகும் முன்னாடி சண்டாளி என்னைக் கூப்பிட்டு ஒரு வார்த்தை உண்மையைச் சொல்லிவிட்டுப் போயிருந்தால், நான் அன்னிக்கு அந்த மனிதனைக் கண்டு அப்படிப் பதறிப் போயிருக்க மாட்டேன். எதுக்கும் தயாராக இருந்திருப்பேன். இப்போ பேசிப் பயன் என்ன? அவள் செத்துப் பல வருஷமாச்சே?''



குற்ற உணர்வுடன், ஊஞ்சல் பலகையைப் பார்த்த படி குனிந்து கொண்டிருந்தாள் பஞ்சரத்தினம்.

'அந்திய காலத்தில் அற்புதமேரியைச் சந்தித்து உண்மையைத் தெரிந்து கொண்டு விட்டிருந்தேன். உங்களிடம் சொல்லாது ஒளித்து விட்டேன்.' என்று கூற அவளுக்கு அத்தனை நெஞ்சழுத்தம் ஏது? கனகசபையின் கடுமையான முகத்தைக் கண்டதுமே கையும் காலும் அவளுக்கு ஓய்ந்து போய் விடுமே?

காய்ந்து போன தொண்டையை இருமிச் சரிப்படுத்திக் கொண்டாள்.

''அதைப் பத்தி ஏன் கவலைப்படறீங்க? நீங்க சொன்னபடியே இந்த உறையைப் பத்திரமாப் பாதுகாத்து வைக்கிறேன். வீணா மனசை அலட்டிக்காதீங்க. ஒரு சமயம் உங்களுக்கு முன் நான் போயிட்டா? மஞ்சளும் குங்குமமுமாப் போகணும்னுதானே ஒரு பெண் ஆசைப்படுவாள்?'' அவள் தொண்டை கரகரத்தது.

''அப்படிப் போயிட்டா உன் பிள்ளை ராஜ்குமாரைக் கண்ணுக்குக் கண்ணா வளர்த்து எல்லாத்தையும் அவனுக்கே கொடுத்துவிட்டுப் போவேன். அவனைப் பத்தி உனக்கு எந்தக் கவலையும் வேண்டாம்.''

''எனக்கு எந்தக் கவலையும் இல்லீங்க. நீங்க நல்ல படியா வெகு காலம் இருந்து உங்க பேரப்பிள்ளையை எடுத்துக் கொஞ்சி விளையாடணும். அது போதும்'' சொல்லி முடிப்பதற்குள் அவளுக்கு அழுகை வந்து விட்டது.

''சே! சுத்தப் பத்தாம் பசலியா இருக்கியே. எதுக்கு அழுகிறே?'' அன்புடன் கடிந்து கொண்டு கனகசபை அவளை மெல்லத் தம் அருகே இழுத்துக் கொண்டு முதுகைத் தட்டிச் சமாதானப்படுத்தினார். அவரது பருத்த தோளைத் தழுவிக் கொண்டு, துக்கம் தாளாமல் விக்கி அழத் தொடங்கிவிட்டாள்.

''என்னத்துக்கு இந்த அழுகை? இப்ப என்ன ஆயிடுச்சு?'' செல்லமாக அவர் அதட்டினார்.

''ராஜ்குமாருக்கு என் மேலே துளியளவு வெறுப்பு ஏற்பட்டாக்கூட என்னால் தாங்க முடியாதுங்க. பிள்ளை மேலே அத்தனை பாசம் வைச்சிருக்கேனே?'' அவள் பேச முடியாது திணறினாள்.

''தங்கமான பிள்ளை அவன். உன்னைக் கடைசிவரை நல்லா கவனிச்சுப்பான். பயப்படாதே.'' ஆறுதல் சொல்லித் தேற்றினார்.

அதற்குப் பின்னர், அவர்கள் ஏதும் அதைப் பற்றிப் பேசவில்லை.

ராஜ்குமார் ஒருமுறை வீடு வந்து சேர்ந்த சில நாட்களுக்குப் பின், ஒரு நாள் காலை வெளியே கிளம்ப உடுத்திக்கொண்டு தயாராக நின்ற கனகசபை, பொறுக்க முடியாத நெஞ்சு வலியுடன் ஊஞ்சல்மீது உட்கார்ந்தார்.

குடிக்கத் தண்ணீர் என்று அவர் காட்டிய சைகையைப் புரிந்து கொண்டு, தம்ளரில் தண்ணீருடன் பஞ்சரத்தினம் பதற்றமாக ஓடி வந்தாள்.



ஒரு வாய் நீரை விழுங்கிவிட்டு அவர் மெல்லியதாக முறுவலித்தார். ''பஞ்சா! என்னை மன்னிச்சிடு!'' அவள் பதிலுக்கு வாயைத் திறக்கு முன் அவர் பிணமாகச் சாய்ந்து விட்டார்.

வருஷங்கள் பல ஆகியும் அவள் இன்னமும் அந்தக் கடித உறையை மகனிடம் கொடுக்கவில்லை.

குற்ற உணர்வின் அழுத்தம் தாளாமல் படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்தாள். உடல் முழுவதும் வேர்த்துக் கொட்டியதை உணர்ந்தாள். அருகே கட்டிலில் மருமகள் அயர்ந்து உறங்கும் அறிகுறியாக மூச்சு சப்தம் ஒழுங்காகக் கேட்டது. மெல்ல நிதானத்தில் சுவரைத் தடவிக் கொண்டு பஞ்சரத்தினம் அறையின் மறுபக்கத்துச் சுவர் ஓரமாக வைக்கப்பட்டிருந்த பீரோவை நெருங்கினாள்.

அந்தக் கடித உறை இனியும் தேவையா? எடுத்துக் கிழித்துப் போட்டு விட்டால்? காலந்தாழ்ந்த பின்னர் மகனுக்கு அந்த விவரம் தெரிந்து என்ன பயன்? வீண் குழப்பந்தானே?

'கண் ஆபரேஷன் ஆன பிறகு, அவன் வந்ததும் அவனைப் பார்த்து நேரில் அவளாகவே அவனிடம் சொல்லி விட்டால்? சில சமயம் அகல்யா பீரோவைத் திறக்கிறாளே- அவள் கையில் கடித உறை தட்டுப்பட்டு விட்டால் ஆபத்தாயிற்றே? அப்பவே அதைக் கிழித்துப் போட்டிருக்க வேண்டும். கணவனது கட்டளையாச்சேன்னு தயங்கியது முட்டாள்தானம்' பலவாறு எண்ணமிட்டபடி அவள் மெதுவாக இடுப்பிலிருந்த சாவிக் கொத்தை எடுத்து ஓசைப் படாமல் சாவிகளைத் தடவி, மெல்ல பீரோ சாவியைத் தனியே பிரித்துப் பூட்டு வாயில் வைத்துத்திருப்பினாள். கதவு திறந்து கொண்டது. சப்தமிடாமல் திறந்து 'மூன்றாவது தட்டில் அடுக்கி வைத்திருந்த புடவைகளுக்கிடையே கையை விட்டு மெல்லத் துழாவினாள். இதோ அகப்பட்டு விட்டதே!' என்று

அவள் ஆனந்தப்பட்டுக் கொண்டு,அதை மெல்ல வெளியே இழுக்க முயன்றாள்.

காற்றில் இலை அசைந்தால் கூடப் போதும். அகல்யா விழித்துக் கொண்டு விடுவாள். அப்படி ஒரு பழக்கம். மெல்லக் கண்களைத்திறந்து படுத்தபடியே அவள் உற்றுப் பார்த்தாள். தூக்கக் கலக்கம் மங்கிய விடி விளக்கின் ஒளி பீரோ அருகே நின்ற உருவத்தைக் கண்டு ஒரு கணம் அவள் திடுக்கிட்டுப் போனாள். பயத்தில் கூச்சலிட வாயைத் திறந்தவள் கொஞ்சம் நிதானித்தாள்.

அது அத்தை! அந்த வேளையில் ரகசியமாக தட்டுத் தடுமாறிக் கொண்டு பீரோவில் என்ன தேடுகிறாங்க?'' ஆவல் தாங்க முடியவில்லை அவளுக்கு.

ஓங்கிப் பலமாக இருமிவிட்டு, நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்தாள் அகல்யா.

''அத்தை என்ன வேணும்?''

அதிர்ந்து போனாள் பஞ்சரத்தினம். சட்டென்று பீரோவைப் பூட்டி சாவியை இடுப்பில் செருகிக் கொண்டாள்.

''தண்ணிச் செம்பை எங்கே வச்சுருக்கே. தாகமாக இருக்கு. எழுப்ப வேணாம்னு நானே தேடிப் பார்த்தேன்.''

'அத்தை ஏன் பொய் சொல்றாங்க? பீரோவில் என்னவோ தேடிக் கொண்டிருந்தாங்களே... என்னவாக இருக்கும்?' அகல்யாவுக்கு வியப்புத் தாளமுடியவில்லை.



## 11

மீனாசல்மானிலிருந்த காமேஷின் ஃபிளாட்டிலிருந்து அவன் இரவு வெகுநேரம் சென்ற பின்தான் திரும்பி விட்டிருந்தான். வந்ததிலிருந்து மனம் நிம்மதியில்லாமல் ஓர் உளைச்சலில் தவிப்பதை ராஜ்குமார் உணர்ந்தான். ஏன் இப்படி?

குளிர் பானத்தைக் கண்ணாடித் தம்ளரில் நிறைத்துக் கொண்டு, அதைக் கையில் பிடித்தபடி அறைக்குள் மேலும் கீழுமாக நடந்து கொண்டிருந்தான். பானத்தை ஒருவாய் பருகினான். இடது கையால் தலைமுடியை அளைந்தான். ஊஹூம்...அவனுக்கு உறக்கம் வர மறுத்தது. 'பரபரப்பா? துயரமா?' என்று இனம் விளங்காத ஒரு கலவை உணர்வில் தவித்துக் கொண்டு, பானத்தை மெல்லப் பருகியபடி அறையை அளந்து கொண்டிருந்தான்.

''உனக்கு ஒன்று காட்ட வேண்டும்'' என்று சொல்லி, அலமாரியிலிருந்து காமேஷ் எடுத்து வந்த அந்த புகைப் படத்தை அவனிடம் சட்டென்று கொடுத்து விடவில்லை. வறட்சியாக முறுவலித்தபடி,அதைத் தானே பார்த்துக் கொண்டு அவன் பேசினான்.

நான் இதுவரை உனக்கு இதைக் காட்டியதே இல்லை. மறந்தே போனேன். இதில் இருப்பது தான் என் அம்மா. வேலை செய்து கொண்டிருந்த அந்தக் கிறிஸ்துவ வீட்டுக்கு வெளி நாட்டிலிருந்து வந்த விருந்தாளி ஒருவர் எல்லாரையும் போட்டோ எடுத்தப்போ,அம்மாவையம் நிக்க வச்சு எடுத்தார். வாழ்க்கையிலே அதிர்ஷ்டத்தையே சந்திக்காத அம்மாவுக்கு கலர் போட்டோ எடுக்கற அளவு யோகம்! அந்த மனிதர் ஊருக்குப் போனதும் மறக்காம வீட்டுக்காரருக்கு அனுப்பிய

போட்டோக்களில் இதுவும் இருந்தது. வீட்டுக்கார அம்மா இதை என்னிடம் கொடுத்தாங்க. இது ஒண்ணுதான் என் அம்மாவின் நினைவாக இப்போது என்னிடம் இருக்கும் சொத்து.''

முகத்தருகே அவன் நீட்டிய புகைப்படத்தை ஆவலுடன் வாங்கினான் ராஜ்குமார். படத்திலிருந்தவளுக்கு நடுத்தர வயதிருக்கும். ஒடிந்து விழும் மெல்லிய தோற்றம். உள்ளடங்கிப் போன கன்னங்கள். இங்கு மங்கும் கம்பியாக நரை ஓடிய கருத்த முடி. காமிராவைப் பார்க்கக் கூசிய இடுங்கிய கண்கள். உதட்டில் வெட்கம் நிறைந்த மெல்லிய சிரிப்பு. இடையில் சாயம் இழந்த சிவப்புச் சேலை, வெள்ளை ரவிக்கை, வெறுமையான கழுத்து, கைகள்.

எங்கேயோ பார்த்தது போன்ற ஒரு நினைவு அவனுள்.

''இவங்களை நான் பார்த்திருக்கிறேன். எங்கேன்னு தான் நினைவுக்கு வரலை...'' வியப்புடன் நண்பனை உற்றுப் பார்த்தான் ராஜ்குமார்.

காமேஷ் பதிலுக்குப் பக்கென்று சிரித்து விட்டான்.

ஏதாவது வண்ணத்திரைப் படத்தில் இவங்களைப் போல யாரையோ, வேலைக்காரி வேடத்திலே பார்த்திருப்பே. குழப்பிக்காதே. இவங்களை நீ பார்த்திருக்கவே முடியாது. இனி பார்க்கவும் முடியாது. இவங்க பத்து வருஷத்துக்கு முன்னாடியே இறந்து போயிட்டாங்களே!''

''அப்படியா?'' இரக்கப்பட்டான் ராஜ்குமார்.

''உங்கம்மாவைப் போல இவங்க தமிழ் எழுதப் படிக்கத் தெரிஞ்சவங்க இல்லை. கைநாட்டுப் பேர்வழி. உழைப்பாளி. யார் சொன்னாலும் எதையும் நம்பிக்கொள்ளும் பெருத்த ஏமாளின்னு சொன்னால், நூத்துக்கு நூறு பொருத்தமாக இருக்கும். ஆமாம்! இவங்க நம்ப பரிதாபத்துக்குரிய



ஏமாளிதான்'' காரமாகப் பேசினான் காமேஷ். அவனது கண்கள் லேசாகக் கலங்கிக் காணப்பட்டன.

''இவன் என்ன சொல்கிறான்? பேச்சில் ஏன் இந்தக் கசப்பு?'' ராஜ்குமாருக்கு ஒரே குழப்பம்.

''காமேஷ்! பூடகமாகப் பேசாமல் வெளிப்படையாகச் சொல்லேன். உன் மனசிலிருக்கிற துயரத்தை நண்பன் என்கிற முறையில் நான் பகிர்ந்துகொள்ள ஆசைப்படறேன். அதுக்கு நான் தகுதியில்லாதவனா?'' நெஞ்சம் நெகிழ்ந்து போய்த் தணிந்த குரலில் மெல்லக் கேட்டான்.

''தகப்பன் என்பவனின் முகத்தைக் கூட நான் பார்த்ததில்லை. தாய் வேலைக்குப் போனதும் வீட்டுச் சுவரையும் தட்டில் அவள் போட்டு வைத்த சோற்றையும் பார்த்துத் தனிமையிலே என் உணர்வுகளுடன் புகைந்து போய் வளர்ந்தவன். இப்போது திடீரென்று என் பழக்க வழக்கங்களை மாத்திக்கொள்ளச் சாத்தியப்படுமா? என் உணர்வுகளை உன்னோடு என்னால் பகிர்ந்துகொள்ள இயலவில்லை, மன்னிக்கவும்.''

முகத்தில் அடித்தாற் போன்ற பதில். காதுகளில் ரத்தம் ஏறி உடல் முழுவதும் சூடாகிவிட்ட அவமான உணர்வில் ராஜ்குமாருக்கு ஏன் கேட்டோம் என்றுதான் தோன்றியது.

காமேஷைப்பற்றி அவன் இன்னும் சில புதிய விஷயங்களை அன்றுதான் புரிந்து கொண்டான்.

'ஆசாமி ரொம்பப் பிடிவாதக்காரன். பலாக்காய் முரடு. அத்துடன் தன்மேல் சிறிது பொறாமை. ஏன்? ஜாக்கிரதையாகத் தான் இனி பழக வேண்டும்.'

கையிலிருந்த மீதிக் குளிர்பானத்தை ஒரே மூச்சில் குடித்து விட்டு வாயைத் துடைத்துக் கொண்டான். தம்ளரை முக்காலிமீது வைத்துவிட்டுப் படுக்கையிலே மெல்லச்

சாய்ந்து கொண்டான். மூடுபனியில்லாத இரவு. கண்ணாடி ஜன்னல் வழியே வானம் பளிச்சென்று தெரிந்தது. பஞ்சுப் பொதியாக ஊர்ந்தன மேகங்கள்; இடையே இங்குமங்கும் தலை காட்டிய நட்சத்திரங்கள் கண்களைச் சிமிட்டின.

ஆமாம், அவன் ஏன் காமேஷ் விஷயத்தில் அளவு கடந்த அக்கறை செலுத்த வேண்டும்? படத்திலிருந்த அந்த அம்மாளை அவன் எங்கே பார்த்திருக்கிறான்? ம்...? மண்டையைக் குடைந்து கொண்டான். 'இறங்கிய கண்களும் அந்தப் புன்னகையும்...ஏன் அவன் மனத்தை என்னவோ செய்கின்றன? காச நோயால் இறந்து போனவளாமே... பாவம்!'

உரத்த குரலில் தானே பேசிவிட்டுத் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். குளிர்ச்சாதன அறையில் கூட அவனுக்கு வேர்த்துக் கொட்டியது. நாற்காலியின் கை மீது கிடந்த துண்டை எடுத்து முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான்.

அவனது தாய் பஞ்சரத்தினமும் உடல் சுகமின்றித் தான் இருக்கிறாள். இந்தச் சமயம் அவளது அருகில் இல்லாமல் தொலை தூரத்திலுள்ள வேறு நாட்டில் வேலை என்று உட்கார்ந்திருக்கிறானே; நியாயமா? முட்டாள் தனம். தன்னையே சாடிக் கொண்டு தலையணை மீது முகத்தைப் பதித்தபடி படுக்கையில் காலை நீட்டிச்சாய்த்துக் கொண்டான். கஸ்தூரி மஞ்சளின் மணம் அருகே வீசுவது போன்றதொரு பிரமை. பழைய நாட்களைத் தேடிக் கொண்டு ஓடிய நினைவுகளுடன் ஒன்றிப் போய் அசையாமல் படுத்துக் கிடந்தான்.

பஞ்சரத்தினத்துக்கும் குடும்பத்தின் மீது அகல்யாவைப் போன்று பொறுப்பு உணர்வு அதிகம்.



விடியற்காலையிலேயே எழுந்து குளித்துவிட்டு, வீட்டுக் காரியங்களை வேகமாகக் கவனிக்கத் தொடங்கி விடுவாள்.

பள்ளிக்குப் போகும் பருவம் வரை அவன் தாயின் அருகே, கூடத்துத் தரையில் பட்டுப் பாயின்மீது உறங்குவது வழக்கம்.

அவன் விழித்துக் கொண்டு எழும்போது அம்மா பின் கட்டில் தயிர் கடைந்து கொண்டிருக்கும் ஓசை கேட்கும்.

சிறிது நேரங்கூட அவளைப் பிரிந்திருக்க அந்தப் பிஞ்சு மனம் ஒப்பாது. ''அம்மா!'' என்று கூவியபடி ஓடிச் சென்று அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு, கன்னத்தோடு முகத்தை வைத்துக் கொண்டு ''என்னை விட்டுட்டு இங்கே வந்து...'' சின்னக் கோபத்திலே சிணுங்குவான். கை வேலையைப் போட்டு விட்டுப் பஞ்சரத்தினம் அப்படியே மகனை வாரி மார்போடு அணைத்துக் கொள்வாள்.

''உன்னை விட்டுப் பிரிய இந்த உசிருக்குத் துணிச்சலே கிடையாதுடா கண்ணு! உனக்குச் சாப்பிடத்தான் பசு வெண்ணெய் கடைஞ்செடுக்கிறேன். சித்தப் பொறுத்துக் கோடா என் ராஜா!'' கொஞ்சி, கொஞ்சி, அவள் முத்தமிட்டு மகிழும்போது, அவள் முகத்திலே பூசிக் குளித்த கஸ்தூரி மஞ்சளின் மணமும்...அவள் கூந்தலில் புரண்டு அவனது முகத்தை வருடிய இருவாட்சி மலரின் மணமும்...

கண்கள் கனக்க ராஜ்குமார் நினைவுகளுடன் நிமிர்ந்து எழுந்து படுக்கையின் மீது உட்கார்ந்தான்.

இரவு வேளைகளில் மடிமீது மகனைப் போட்டுக் கொண்டு மெல்ல அவன் முடியை வருடியபடி கதைகள் சொல்லித் தூங்க வைக்கும் அம்மாவின் குரல் அருகில் ஒலிப்பது போன்ற ஒரு நினைவில் உடல் சிலிர்த்துப் போனான் அவன்.

39768



அம்மாவுக்குத்தான் அவன் மீது எத்தனை பாசம்!

வெளியே போயிருக்கும் மகன் வீடு திரும்பும் வரை நேரம் என்னவானாலும் சாப்பிடாமல் உட்கார்ந்திருப்பாள், தூங்கவும் மாட்டாள். ஊஞ்சலில் பலகையோடு ஒட்டிக் கொண்டு விடிய விடிய மகனுக்காகக் கண் விழித்துக் காத்துக் கொண்டிருப்பாளே!

''நேரமாகும்னு சொல்லிட்டுத்தானே போனேன். ஏன் பட்டினி கிடக்கணும்? தூங்காம உட்கார்ந்திருக்கணும்?'' அவன் கடிந்து கொள்வான்.

''என்னப்பா, அப்படி லேசாச் சொல்லிட்டே? நீ சாப்பிடாமே வேலை மேலே வெளியிலே சுத்திக்கிட்டு இருக்கும்போது, எனக்கு மட்டும் பசி பெரிசா வந்துடுமா?''

அப்பா திடீர்னு இறந்து போனதும், அந்தத் துயரத்திலே அம்மா எப்படி ஒடிந்து போய் விட்டாள்?

அவரது காரியங்கள் ஆன பின்பு,ஒரு நாள் வீட்டுக்கு வந்த பொழுது அம்மா கூடத்தில் மாட்டியிருந்த அப்பாவின் படத்தின் அருகே தரையில் தலையைக் கவிழ்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

''என்னம்மா இப்படி? ஏன் தரையிலே உட்கார்ந் திருக்கீங்க?'' மகன் பதற்றமாகக் கடிந்து கொண்டான்.

''அவர் போனதும் நான் இனி ஒண்டியாகி விட்டது போல ஒரு பயங்கர எண்ணம் வந்திடுச்சு. அவர் படத்தின் பக்கத்திலாவதுஉட்கார்ந்துக்கிட்டா தேவலாம் போல ஒரு தெம்பு வராப் போல இருக்கு.'' துக்கத்துடன் அவள் திணறினாள்.

மகன் மனம் கரைந்து போய் அவள் கரத்தைப் பற்றிக் கொண்டு, அருகே தானும் தரையில் அமர்ந்து கொண்டான்.



''இத்தனை பெரிய மகன் நான் இருக்கும் போது நீங்க எப்படியம்மா ஒண்டியாகப் போயிடுவீங்க? அப்படிப் போகத்தான் நான் விட்டு வைப்பேனா!''

''விடமாட்டே. எனக்குத் தெரியும். ஆனாலும் கோழை மனசு குழம்பிப் போய் என்னென்னவோ எண்ணுதப்பா.'' தாய் அவன் தோளைப் பற்றிக் கொண்டு விம்மினாள்.

''அழாதீங்க அம்மா. உங்க உடம்புக்கு நல்லதில்லை.'' பச்சிளங் குழந்தையைத் தேற்றுவது போல், முதுகைத் தட்டி அவன் எவ்வளவு நேரம் ஆறுதல் சொல்ல வேண்டியிருந்தது?

அகல்யாவைக் கல்யாணம் செய்துகொள்ள முடிவு செய்து தன் விருப்பத்தை அவன் தாய்க்குத் தெரிவித்த போது மனத்தாங்கலுடன் மகனுடன் பேசப் பிடிக்காமல் தன் அறைக்குள்ளே சென்று முடங்கிக் கொண்டு விட்டாள். ஒன்று இரண்டு என்று நாட்கள் பல நழுவின. அவனது பொறுமையும் தேய்ந்து மறைந்தது. முடிவில் ஒரு நாள் அவளது அறைக்குள் வந்து நாற்காலி ஒன்றை அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள் அவள். அந்தச் சில நாட்களில்அவள் உடல் பாதியாக இளைத்து விட்டிருந்தது. அழுத முகம் கண்கள் வீங்கி இடுங்கி விட்டிருந்தன. அவளைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது.

''ஏழைப் பெண் அகல்யா என்பதனால்தான் இந்தக் கல்யாணத்துக்கு முட்டுக்கட்டை போடுறீங்க,'' சிறிது கோபத்துடன் அவன் கேட்டு விட்டான்.

மகனை மெல்ல நிமிர்ந்து பார்த்தாள் பஞ்சரத்தினம்.

''அந்தஸ்தில் அவர்கள் நமக்கு எந்த விதத்திலும் ஈடு கிடையாதுங்கிறது ஒரு காரணம். ஆனால் முக்கிய காரணம் வேறு ஒண்ணு.''

''என்னம்மா அது?'' மகன் தாழ்ந்த குரலில் சீறினான்.

''அகல்யாவை எனக்கு முன்னே பின்னே தெரியாது. என்ன குணம் படைச்சவளோன்னு பயமா இருக்குது. ஆனால் நம்ப உறவுக்காரப் பொண்ணு நிர்மலாவைச் சின்ன குழந்தையிலே இருந்து எனக்கு நல்லாத் தெரியும். என்னை மதிச்சுக்கடைசி வரை நல்லா வச்சுக் காப்பாத்துவான்னு நம்பிக்கை.'' மெல்லியதாக ஒலித்த அவள் குரல் கரகரத்தது.

''அகல்யா ஏழை. ஆனால் நல்ல பெண் அம்மா. அதுக்கு நான் உத்தரவாதம்.''

''முன்பின் தெரியாத பெண்ணை மருமகளா ஏத்துக்கிட்டா, எங்கே அவள் வந்து நம்மைப் பிரிச்சுடுவாளோன்னு பயமா இருக்குப்பா. இந்த வயசிலே வியாதியோட நான் ஒண்டியாயிட்டா, அந்தத் துயரத்தை என்னால் தாங்க முடியுமா? யோசிச்சுப் பார் ராஜா!''

''யோசிச்சுப் பார்த்துத்தான் இந்த முடிவுக்கு வந்தேன். அகல்யா உங்களைப் பெத்த தாயைப் போல பரிவோட பார்த்துக்குவா அம்மா... ஏன் வீணாக் கவலைப்படறீங்க?''

''பணம் காசு இதையெல்லாம் எங்கிட்டே இருந்து அவள் எடுத்துக்கிட்டாக்கூட நான் கவலைப்பட மாட்டேன். உன் மனசைக் குழப்பி, புத்தியைக் கலைச்சு, உன்னை என்கிட்டேயிருந்து பிரிச்சுட்டா, அந்த வேதனை என் உசிரைக் குடிச்சிடும் நினைவு வச்சுக்கோ.''

''என்னம்மா இது? சிறு பிள்ளை போல-'' அன்புடன் கடிந்து கொண்டு, தாயின் கன்னத்திலே வழிந்த கண்ணீரைத் தன் கைக் குட்டையால் மெல்லத் துடைத்து விட்டான் மகன்.

சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தாள் தாயார். திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவள் போல் ''ராஜா, இப்படி வா!'' என்று அவனை அருகில் அழைத்தாள்.



''நீ அகல்யாவையே கட்டிக்கோ அப்பா. என் ஆசிகள் உனக்கு.''

''உண்மையாகவா அம்மா?'' மகிழ்ச்சி தாங்க முடியாமல் அருகில் நெருங்கி அவளது கரங்களை எடுத்துத் தன் முகத்தில் வைத்துக் கொண்டான் மகன்.

''உண்மையாகத்தான் சொல்றேன். உன் மன நிறைவு தான் என் வாழ்வின் லட்சியம். நீ மகிழ்ச்சியோட இல்லாட்டி எனக்கு நிம்மதி இருக்குமா சொல்லு?''

''அம்மா! நன்றி அம்மா!'' ராஜ்குமார் கண்கள் பனிக்க அவளது தோளைத் தொட்டுத் தட்டி ஆர்ப்பரித்த போது, அவள் லேசாக முறுவலித்தாள்.

''அகல்யா அப்பாவிடம் சொல்லு, மகளை அழைச்சிட்டு ஒரு வாட்டி என்னை வந்து பார்க்கச் சொல்லு. அந்தப் பொண்ணுகிட்டத்தனியாக்கொஞ்சம் பேசணும் போல இருக்கு.''

''அதுக்கென்ன? உடனடியா ஏற்பாடு பண்ணிடறேன் அம்மா.'' சந்தோஷத்துடன் எழுந்தான் மகன்.

அகல்யா வந்து எங்கே தன்னை மகனிடமிருந்து பிரித்து விடுவாளோ என்று பயந்த அவனது அன்னையை அரபு நாட்டு வேலை இடை புகுந்து பிரித்துக் கொண்டு விட்டதே!

தன்னையும் மீறிக் கண் இமைகளைச் சுட்ட கண்ணீரை அவன் விரலால் தட்டிவிட்டு, விசுக்கென்று எழுந்து உட்கார்ந்தான்.

''முடியாது...இனி ஒரு விநாடிகூட முடியாது.'' அவனது உணர்வுகள் உடைந்து உள்ளம் பொடியாகி விடும் எல்லைக்கு வந்து விட்டிருந்தது.

ஒப்பந்த நாள் முடிந்த இரவே விமானத்தில் இடம் கிடைத்தால் பம்பாய்க்குப் பயணப்பட்டு விட வேண்டும். ஊஹூம்...! இனியும் அவன் தாயையும் தாரத்தையும் பிரிந்து வாழவே முடியாது.

## 12

**தா**ய்நாட்டுக்கு இருவரும் சேர்ந்தாற் போல் ஒரே தினத்தில், ஒரே விமானத்தில் கிளம்ப ஏற்பாடுகள் துரிதமாய் நடந்து கொண்டிருந்தன.

அகல்யாவிடமிருந்து கடைசியாக வந்த கடிதத்தைக் கண்ட ராஜ்குமார் மிகவும் கலங்கிப் போயிருந்தான். பஞ்சரத்தினத்துக்கு உடம்பு மிகவும் கவலைக்கிடமாகி விட்டிருப்பதாக அவள் எழுதியிருந்தாள். இனி ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது என்று பயணத்துக்கு ஆவன செய்வதில் தீவிரமாக முனைந்திருந்தான்.

காமேஷுக்கு ஆரம்பத்திலேயே வேலையை விட்டுத் திரும்ப மிகவும் கவலையாகத்தான் இருந்தது. அவன் வேலை பார்த்த நிறுவனத்திலே அவனுக்குப் பழக்கமாகிவிட்ட அமெரிக்க வாலிபன் ஒருவன் இருந்தான். அவன் தன் ஒப்பந்தம் முடிந்ததும் திரும்ப அமெரிக்காவுக்குப் பயணப் பட்டுக்கொண்டிருந்தான். சில மாதங்கள் சொந்த நாட்டில் உறவினர்களுடன் தங்கியிருந்துவிட்டு, மறுபடியும் அரபு நாட்டுக்கு ஒரு வேலையைத் தேடிக்கொண்டு வந்து விடப் போவதாகவும், அவனுக்கும் தான் வேலை செய்யப் போகிற ஸ்தாபனத்திலேயே ஒரு நல்ல வேலை வாங்கித்தர தன்னால் ஆகுமென்றும் அபயமளித்திருந்தான். அந்தத் தெம்பு காமேஷுக்கு. பம்பாய்க்குப் போய்க் கொஞ்ச நாட்கள் ஓய்வாக இருந்துவிட்டு, மறுபடியும் நீண்டகால ஒப்பந்தத்தில் அரபு நாட்டுக்கு வேலை தேடிக் கொண்டு வந்து விடுவது என்பது அவனது திட்டம். அத்துடன் அவன் மனத்தில் இன்னொரு திட்டமும் உருவாகிக் கொண்டிருந்தது.



ராஜ்குமார் ஊருக்குக் கிளம்பச் சொல்லி வற்புறுத்திய போது அவனுள் ஒரு பரபரப்பு ஏற்படத்தான் செய்தது.

அவனுக்கும் தாய் நாட்டில் கவனிக்க வேண்டிய ஒரு முக்கியமான வேலை இருக்கிறதே! அதை முடிக்க வேண்டாமா?

அன்று இரவு அவன் ராஜ்குமாரின் ஃபிளாட்டில் வெகுநேரம் தங்கிவிட்டுத்தான் தன் இருப்பிடத்துக்கு திரும்பியிருந்தான். இரண்டு தினங்களில் ஊரைவிட்டு திரும்புகிறோம். கடைசியாக இருவரும் சேர்ந்து ஒரு சினிமா பார்த்துவிட்டுச் சேர்ந்து சாப்பிட்டுப் பொழுதை நன்றாக சிறிது நேரம் குஷியாகக் கழித்தால்?

ராஜ்குமார் வெகுவாக வேண்டிக் கொண்டதன் பேரில் தான் ஒப்புக்கொண்டான் காமேஷ்.

'செலவு எல்லாம் ராஜ்குமாருடையது. செய்யட்டு' என்று தன் மணிபர்சைச் சட்டைப் பையிலிருந்து அவ வெளியே எடுக்கவில்லை. பணவிஷயத்தில் அவன் ராஜ்கும போல் தாராளமாக ஒரு போதும் இருந்ததில்லை.

'கிரைம் பஸ்டர்ஸ்' என்னும் படத்தைப் பார்த் விட்டு இருவரும் ராஜ்குமாரின் பிளாட்டுக்குத் திரும்பின அவன் சிரித்தபடியே தான் வாங்கி வந்த ரொட்டி வெண்ணெய் சீஸ், பழம் இவற்றை எப்பொழுதும் போ சாப்பாட்டு மேஜை மீது பரப்பி வைத்தான். அத்துட பியர் டின்களையம் ஐஸ் துண்டங்கள் நிரம்பிய சி வாளியையும் டம்ளரையும் கொண்டு வைத்தா ''சாப்பிடப்பா. ரொம்பப் பிகு செய்து கொள்ள வேண்டாம் வேடிக்கையாகப் பேசியபடி உபசரித்தான்.

ரொட்டி மீது வெண்ணெயை லேசாகப் பூசிக்கொண் ராஜ்குமார் உற்சாகமாகப் பேசினான்.

''இதற்குப் பிறகு திருச்சியில் எங்க வீட்டிலே பிரமாத மான விருந்துச்சாப்பாடு காத்திருக்கிறது. மறக்காதே, அகல்யா சமைப்பதில் ரொம்பக் கெட்டிக்காரி. கதம்ப சாதம் செய்து அவள் பரிமாறினால் பிறகு நீ இலையை விட்டு இலேசில் எழுந்திருக்க மாட்டாய். அப்படி ஒரு ருசி. கதம்ப சாதம் எனக்கு ரொம்பப் பிடிக்கும்னு அவளுக்குத் தெரியும். பம்பாயிலிருந்து சென்னை வரை நமது விமானப் பயணத்துக்கு டிக்கெட் ஊர்ஜிதமாகி விட்டிருக்கு. அதற்குப் பிறகு நாம் சென்னையில் ஒரு ஹோட்டலில் ஒரு பகல் தூங்கிக்கொள்வோம். ஹைதராபாத்துக்கு சரவணனுக்கு நாம் வந்திருப்பதைப் பற்றித் தெரிவித்து ஒரு டிரங்கால் போடணும். அதுக்குப் பிறகு ராத்திரி வண்டியைப் பிடிக்கணும். டிக்கெட் கிடைக்கா விட்டால் ஒரு டூரிஸ்ட் டாக்ஸியைப் பேசிக் கொண்டு ஊர் போய்ச் சேர்ந்துடணும். தாமதிக்கவே கூடாது'' படபட வென்று பேசினான்.

''சென்னைக்கு நான் இரண்டு முறைகள்தான் சென்றிருக் கிறேன். இரண்டு தடவையும் ஒரே அவசரம். நான் சென்னையைக் கூடச் சரிவரப் பார்த்ததில்லை. ஒரு நாலு நாள் அங்கே தங்கிவிட்டுப் பிறகு ஊருக்கு நான் வருகிறேனே?''

''முடியாது. நீயும் என்னோடு ஜோடியாக வர வேண்டும். என்னால் உன் கூடச் சென்னையில் சில நாட்கள் தங்கவும் முடியாது. அம்மாவுக்கு உடம்புக்குச் சுகமில்லை. நான் உடனடியாகப் போக வேண்டும். மேலும் அகல்யா என் வரவுக்காக ஆவலுடன் காத்திருப்பாள்'' என்றான்.

அகல்யா என்றவுடனேயே அவன் முகத்தில் தோன்றிய மலர்ச்சியைக் கண்டு, ஏனோ காமேஷின் மனம் கடுத்தது.

''எனக்கும் உங்கம்மாவைப் பார்க்கணும்னு ஆசை. சரி உடனேயே நாம் சென்னையிலிருந்து திருச்சிக்குப் போய் விடுவோம்'' என்றபோது, காமேஷினாலேயே சமாளிக்க



முடியாத ஓர் ஆத்திரம் குபிரென்று அவன் மனத்தில் பொங்கியது. மடமடவென்று கையில் பிடித்திருந்த பியர் முழுவதையும் ஒரே மூச்சாகக் குடித்து விட்டான்.

அதற்குப் பின்னர், ராஜ்குமார், அகல்யாவுக்கும், அம்மாவுக்கும் ஊரார்களுக்கும் தான் வாங்கிக் குவித்திருந்த சாமான்களை எடுத்து மேஜை மீது பரவலாகப் போட்டான். மறுபடியும் காமேஷின் உள்ளத்தில் அடக்கமாட்டாத ஆத்திரம் கொந்தளித்தது.

''அகல்யாவுக்குப் பச்சை, மஞ்சள், ஊதா மூன்று வர்ணங்கள் மீது ரொம்பப் பிரியம். அவை அவளுக்கு ரொம்பப் பொருத்தமாக இருக்கும். கல்யாணத்தின் போது நிச்சயதாம்பூலத்துக்கு அவளுக்குப் பச்சை வண்ணப் பனாரஸ் சேலைதான் எடுத்தோம். நாங்கள் மைசூருக்குப் புறப்பட்ட போது அவள் ஊதா வண்ணக் காஞ்சிபுரம் உடுத்திக் கொண்டு வந்தது என் நினைவில் இன்று போல இருக்கு. சும்மா சொல்லக் கூடாது. அவள் இயற்கையாகவே அழகி. ரொம்பச் சாமர்த்தியக்காரி இரண்டு வருஷமா எங்க வீட்டையும், நிலம், தோட்டம் எல்லாத்தையும் பொறுப்பாகக் கவனிப்பதோடு, என் தாயையும் எப்படிப் பார்த்துக்கிறா தெரியுமா? அகல்யாவுக்கு என்னென்னமோ வாங்கிட்டுப் போகணும்னு ஆசைப்படறேன். புடைவை வாங்குவதில் நான் சமீப காலத்தில் ரொம்பத் தேர்ந்து விட்டிருக்கிறேன்னு அவள் கேலி செய்து எழுதியிருந்தாள். அம்மா சொல்வாங்க. எங்க அப்பாகூடப் புடைவை தேர்ந்தெடுப்பதில் பெண்களை மிஞ்சிவிடுவாராம். அந்தக்குணம் எனக்கும் வந்திருக்கிறதோ என்னவோ?'' ராஜ்குமார் கபடமில்லாமல் சிரித்தபோது, காமேஷின் அடிவயிற்றில் அக்னி ஜ்வாலை விட்டு எரிந்தது. சிகரெட் ஒன்றை உருவி வாயில் வைத்துக் கொண்டான். நுனி இரண்டாகிவிடும் அளவு அழுத்தமாகவே கடித்து விட்டான்.

''அகல்யாவுக்கு இந்த வொர்த் சென்ட், மிட்நைட், சார்லி மூன்றும் முன்னதாகவே வாங்கி வச்சுட்டேன். காமேஷ், ஒர் உதவி செய்வியா? உனக்கு யாருக்கும் பரிசுகள் கொண்டு போகத் தேவையில்லை அல்லவா? அதனால் நாம் அம்மாவுக்கும் வாங்கியிருக்கிற சில பொருள்களை உன் பெட்டியில வைக்கிறேன். சுங்க அதிகாரி தொந்தரவு அதிகம் இல்லாமல் பம்பாயில் இறங்கலாம். என்ன சொல்றே? ஒப்புக்குவியா?''

''பேஷா வை. எதெல்லாம் என்கிட்டே கொடுக்க விரும்புகிறாயோ அவற்றைப் பார்சலாகக் கட்டி இப்பவே என் கையில் கொடு.''

''ரொம்ப இல்லை. இரண்டு புடைவைகள், ஒரு பவுடர் டின். ஒரு சென்ட். அம்மாவுக்கு ஒரு பாக்கெட் பேரீச்சம்பழம், அவ்வளவுதான்.'' என்று கூறிக் கொண்டு அவற்றைத் தனியே எடுத்து ஒரு பிளாஸ்ஸடிக் பைக்குள் போட்டு நண்பனிடம் கொடுத்தான்.

''இவை எல்லாம் அம்மாவுக்கும் அகல்யாவுக்கும் என் பரிசுகள்!'' மகிழ்ச்சியாக ராஜ்குமார் சொன்ன போது, மீண்டும் காமேஷுக்கு எரிச்சலாக இருந்தது.

அந்தஸ்து, ஆஸ்தி, அன்பான தாய், அழகான மனைவி இத்தனையும் ஒருங்கே அமைந்திருக்கிற பெருமை, அடிக்கடி தம்பட்டம் கொட்டறான் ராஸ்கல், இருக்கட்டும்; மனத்துக்குள் கறுவினான் காமேஷ்.

வீட்டைத் திறந்து உள்ளே வந்ததும், அந்தப் பிளாஸ்டிக் பையை அசட்டையாக அருகிலிருந்த மேஜையின் மீது வீசிப் போட்டான்.

ராஜ்குமார் பயணத்துக்குத் தயாராகப்பெட்டிகளில் பொருள்களை அடுக்கி வைத்துக்கொண்டிருந்தான். காரையும் நல்ல விலைக்கு விற்று விட்டிருந்தான். எந்த நிமிஷமும் தோளில் பையைப் போட்டுக் கொண்டு கிளம்பி விடும் அளவில் ஃபிளாட்டைச் சுத்தப்படுத்தித் தயாராகி விட்டிருந்தான். ஆனால் காமேஷ்? எப்போதும் போல அவனது பிளாட் அலங்கோலமாகத்தான் இருந்தது. முதல் நாள் அவன் பயணத்துக்காக எடுத்துத் தூசி தட்டிக் காகிதம் போட்டுத் தயாராக வைத்திருந்த பயணப்பெட்டிகள் வாயைத் திறந்து கொண்டு முன்னறையில் அப்படியே கிடந்தன.



ஊருக்குக் கிளம்ப இன்னும் இரண்டு நாட்கள் தாம் இருந்தன. வேலையினின்று விடுவித்துக்கொண்டதும் பெட்டிக்குள் சாமான்களை அடுக்கி வைக்கக்கூட நேரம் போதாது போலிருந்தது. காரை எடுத்துக் கொண்டு காசு தருவதாகச் சொன்ன ஆளைக் காணவில்லை. கடைசி நேரத்தில் அழிவிலைக்கு யாரிடமாவது கொடுத்துத் தொலைக்க நேரும். ராஜ்குமாரைப் போல் அவன் ஏன் சுறுசுறுப்பாகவும் திறமையாகவும் இருக்க முடியவில்லை? அடுக்கடுக்காகத் தன்னிடம் காணப்பட்ட இயலாமையை எண்ணிய போது, அவனுக்கு ஆத்திரம் மறுபடியும் மண்டிக் கொண்டு வந்தது.

பெட்டிக்குள் ராஜ்குமார் கொடுத்த பிளாஸ்டிக் பையை மூர்க்கமாக உதறிக் கொட்டினான். மிருதுவான அந்தப் பிரஞ்சு ஷிபான் சேலைகளைப் பார்த்தபோது, அவன் உள்ளத்திலே ஒரு கலவரமான நினைவு.

'அதிர்ஷ்டக்காரன், ராஸ்கல்' நண்பனைத் திட்டிய படியே பீரோவிலிருந்த தன்சட்டைத் துணிமணிகளைக் கீரை போல் அள்ளிப் பெட்டிக்குள் அடைத்தான். பீரோ கம்பிகளில் தொங்கியவற்றை இழுத்தபோது, அவன் கையில் இழுபட்டு வந்த அந்தப் பட்டுடையைப் பார்த்துத் தன்னை மறந்து ஒரு கணம் நின்றான்.

ஒரு கிறிஸ்துமஸ் தினத்தின் போது தேவசகாயம் அவனுக்கு அதைப் பரிசாக அளித்திருந்தார். அம்மா இறந்து போயும், அவர் அவனைத் தொடர்ந்து அன்புடன் தம் வீட்டுப் பிள்ளைகளில் ஒருவனாகக் கவனித்துக் கொண்டார். அவன் அப்போது ஹாஸ்டலில் தங்கிப் படித்துக் கொண்டிருந்ததால் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு அவனை வீட்டுக்கு விருந்து சாப்பிட அழைத்திருந்தார் தேவசகாயம்.

விருந்துக்குப் பின்னர் வீட்டிலிருந்த கிறிஸ்துமஸ் மரத்தில் அவனுக்கும் ஒரு பரிசு பார்சல் கட்டித் தொங்க விடப்பட்டிருந்தது. ''நன்றி ஐயா!'' நெஞ்சம் நெகிழ்ந்து போய் அந்தப் பொட்டலத்தைப் பிரித்தான்.

உள்ளே பட்டில் ஆன பூப்போட்ட அழகான வண்ண கழுத்து டை,

அவன் தாயார் அந்த வீட்டில் வேலை செய்ய ஆரம்பித்ததிலிருந்து, தேவசகாயம் அவனைத் தம் குழந்தைகளில் ஒருவனாகப் பாவித்துத்தான் நடத்தினார்.

பத்து வயதானபோது, அவனது பள்ளிப் படிப்பைத் தாயார் நிறுத்தி வேலைக்கு அனுப்ப விரும்பியபோது, அவர் எத்தனை கண்டிப்பாக அவளிடம் மறுத்துப் பேசினார்!

அவர் உதவியில்தான் தாய் இறந்து போன பின்பும் அவன் தொடர்ந்து ஹாஸ்டலில் தங்கிப் படித்தான். தொழிற்கல்வியில் சேர்ந்து பட்டம் பெற்றதும் அவரது முயற்சியால் அடைந்த வெற்றிதான். என்ஜினீயர் பட்டம் பெற்றபின் அவர் உதவியால் ஒரு நிறுவனத்தில் வேலை கூட அவனுக்குக் கிடைத்திருந்தது. கொஞ்ச காலந்தான் அங்கே வேலை பார்த்தான். பிறகு தானே பல இடங்களில் வேலை தேடிக் கொண்டு சென்றான். அவனது படிப்புக்கும் தகுதிக்கும் கிடைத்த ஊதியம் மனதுக்குத் திருப்தி அளிக்கவில்லை. வெளிநாடுகளுக்குப் போக வேண்டும்; வாரிக் கொட்ட



வேண்டும்; விரைவில் பணம், பதவி கார் பங்களா என்று தகுதிகளுடன் அவனும் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்ற ஆசை உந்த, அவன் பஹ்ரானில் வேலை தேடிக் கொண்டு விட்டிருந்தான்.

தந்தையைப் போல பாசத்துடன் தன்னை ஆளாக்கிய அவரிடம் சொல்லாமல் வெளி நாட்டுக்குப் புறப்படுவது சரியல்ல என்ற எண்ணம் ஏற்பட்டது. கொலாபாவுக்கு அவரைப் பார்க்கக் கிளம்பினான். வேலை மும்முரத்தில் அவரை அவன் அடிக்கடி சந்திக்க முடியாதிருந்தது. அதனால் அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை; அவன் போன போது அவர் மிகவும் நோயாகப் படுத்திருந்தார்.

வாட்ட சாட்டமாக இருந்த மனிதர் பிடியில் அடங்கி விடுகிறவர் போல் மிகவும் ஒடுங்கிக் கட்டிலில் கிடந்தார். ஆனால் கண்களில் மட்டும் அதே கூரிய பார்வை.

அவர் நோயாக இருந்தது தனக்குத் தெரியாது என்று சொல்லி வருந்தி விட்டு அன்று இரவு விமானத்தில் அவன் வெளிநாடு பயணப்படுவதை மெல்லத் தெரிவித்தான்.

''சந்தோஷம் உனக்கு நானே கடிதம் எழுதி அழைக்க வேணுமின்னு இருந்தேன். நீ வந்தது நல்லதாய்ப் போயிற்று'' என்றார்.

''நீங்கள் இதுவரை எனக்கு செய்துள்ள உதவிக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று அவன் ஆரம்பித்தபோது, அவர் தம் மெலிந்த கரத்தைத் தூக்கி மறுப்புத் தெரிவிக்க ஆட்டினார்.

''என் தாய் இறந்த பிறகு நீங்கள் பணம் அனுப்பி என்னை ஹாஸ்டலில் படிக்க வைத்தீர்களே, அதை மறக்க முடியுமா?''

''நான் செலவழிக்கவில்லை. அந்தப் பணமெல்லாம் உன்னுடையது.'' அவர் திடுக்கிட்டு விழித்தான்.

'உன் பணத்தைக் கொண்டுதான் உன்னைப் படிக்க வைத்தேன். சொல்லப் போனால் நான் செய்த வேலைக்கு ஊதியமும் அதிலிருந்து எடுத்துக்கொண்டேன். நான் ஒரு நல்ல மனிதன். அவ்வளவுதான், அருகில் வா, சொல்கிறேன்'' என்றார்.

பெட்டியை மூடி, வாரை இழுத்துக் கட்ட முயன்ற போது, பெட்டியின் மூடி உப்பி வெடித்துக்கொண்டு விடும் போலிருந்தது. உள்ளே அத்தனை சாமான்கள்.

கோபத்துடன் பெட்டியைக் கீழே தள்ளி அந்தப் பழைய நினைவில் ஏற்பட்ட ஆத்திரத்தில் பெட்டியின் மூடிமீது ஏறித் 'தொம்தொம்' என்று இருமுறை குதித்து அதைச் சரிப்படுத்தி மூடி, வாரை இழுத்துக் கட்டிப் பூட்டினான். அதே வேகத்தில் பெட்டியைக் காலால் உதைத்து ஒரு மூலையில் தள்ளிவிட்டுத் தொப்பென்று களைப்புடன் சோபாவில் உட்கார்ந்தான்.

அவனது நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது உடம்பு கிடுகிடுவென்று குலுங்கியது.

## 13

பம்பாய் விமான நிலையத்தில் இறங்கி, சுங்கவரி இத்தியாதிகளை முடித்துக்கொண்டு, அவர்கள் வெளியே வருவதற்குள், விடியற்காலை இரண்டு மணியாகிவிட்டது.

அவர்கள் பயணப்பட்டு வந்த விமானக் கம்பெனியின் செலவிலேயே பெரியதொரு ஹோட்டல் ஒன்று களைப்புத் தீர, அடுத்த பயணம் வரை தங்க வசதி செய்து தரப்பட்டது. சென்னை கிளம்ப அவர்கள் பிற்பகல் விமானத்துக்குக் காத்திருக்க நேர்ந்தது.



ஹோட்டல் அறைக்குள்ளே பெட்டிகளை ஆட்கள் கொண்டு வந்து வைத்தனர். தோளில் சுமந்து வந்த பைகளைக் கீழே இறக்கி வைத்து விட்டு, இருவரும் படுக்கையில் சாய்ந்தனர். கண்களை மூடி சிறிது அயர்வதற்குள் பொழுது விடிந்து விட்டது.

காமேஷ் பரபரப்புடன் பிரஷ், பேஸ்ட் சகிதம் குளியலறைக்குள் புகுந்து கொண்டான். வழி நெடுகிலும் பயணத்தின் போது அவன் ராஜ்குமாருடன் அதிகம் பேசவில்லை. தாய் நாட்டை விமானம் நெருங்கத் தொடங்கியதுமே, அவனது உள்ளத்துப் போராட்டங்களின் அழுத்தமும் அதிகரிக்கத் தொடங்கியது.

துயரமா? கோபமா? என்று அவனாலேயே ஊகிக்க முடியாததொரு விசித்திர உணர்விலே கட்டுண்டு தத்தளித்துக் கொண்டிருந்தான்.

ஊர் திரும்ப ஆவன செய்ய ஆரம்பித்ததிலிருந்து ராஜ்குமாருக்கு ஓயவே இல்லை. ஒரே அலைச்சல். முதல் நாள் இரவு சரியாகத் தூங்கவும் இல்லை. அத்துடன் விமானப் பயணத்தின் களைப்பு வேறு. அதனால் அவனையும் அறியாது ஆழ்ந்து தூங்கி விட்டான்.

இன்பமானதொரு கனவினின்று திடுக்கிட்டு விழிப்பு ஏற்பட்ட போது, திரை ஒதுக்கப்பட்டு ஜன்னலினின்று உள்ளே விழுந்த சூரிய ஒளி கண்களைக் கூசச் செய்தது. அறை முழுவதும் இம்பீரியல் லாதர் ஷேவிங் லோஷனின் மணம் கமழ்வதை உணர்ந்து திரும்பிப் பார்த்தான். இரண்டு நாட்களாகக் கவனிக்காமல் அசட்டையாக விட்டிருந்த முகத்தை மழித்துக் கொண்டு, குளித்து முடித்து விட்டுச் சுத்தமாக உடையில் கண்ணாடி முன் தலையைச் சீவிக் கொண்டு காமேஷ் நின்று கொண்டிருந்தான்.

''அதற்குள் ஏன் எழுந்திருந்தே? இன்னும் கொஞ்ச நேரம் களைப்புத் தீர தூங்கியிருக்கலாமே?'' அன்புடன் கடிந்து கொண்ட ராஜ்குமார், படுக்கையின் மீது நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''இதுவரையில் தூங்கியது போதாதா? இனியாவது விழிப்போடு இருக்க வேண்டாமா?'' சிரித்தவாறு காமேஷ் பதில் அளித்தாலும் வார்த்தைகள் சூடாக இருந்தன.

''அப்படீன்னா நானும் சீக்கிரம் தயாராகிடறேன். ரெண்டு பேரும் கீழே போய் இந்தப்பெரிய ஹோட்டல் சாப்பாட்டறையில் நமக்கு சாப்பிட என்னதான் கிடைக்கிறதுன்னு நோட்டம் விடலாம்.'' வேடிக்கையாகச் சொல்லி விட்டுத் துவாலையுடன் குளியலறைப் பக்கம் திரும்பினான் ராஜ்குமார்.

''நீ எனக்காக அவசரப்பட வேண்டாம். எனக்குத் தெரிஞ்சவங்களைப் பார்த்து வர நான் கிளம்பிண்டிருக்கேன். காபிக்கோ, சாப்பாட்டுக்கோ எனக்காக நீ காத்திருக்காதே.'' காமேஷ் கிளம்பினான்.

''அப்படியா, சரி. ஆனால் சீக்கிரம் திரும்பி விடு. ரெயிலைத் தவற விடுவதுபோல் சிலர் விமானத்தையும் தவற விடுவதுண்டு.'' ராஜ்குமார் உற்சாகமாகச் சிரித்தான்.

''இனி என் வாழ்க்கையில் எதையும் தவற விடுவதில்லேன்னு தீர்மானம். நீ கவலைப்படாதே. வந்து விடுவேன்.'' தன்னுள் பொங்கிய ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, கதவைத் திறந்து வெளியேறினான் காமேஷ்.

பம்பாய்ப் பட்டினம் அவனது உள்ளங்கைக்குள்ளே அடங்கி விட்டிருப்பது போன்ற ஒரு நினைப்பு அவனுக்கு. வளர்ந்து ஆளாகி, அவன் வாழ்ந்து பழக்கப்பட்ட நகரம் அது. அதனுடைய சந்து பொந்துகள் அனைத்தும் அவனுக்கு



மனப்பாடம். ஹோட்டல் வாசலில் நின்ற டாக்ஸியில் ஏறிக் கொண்டு, கொலாபாவுக்கு விரைந்தான்.

தேவசகாயம் வக்கீல் தொழிலில் அப்படி ஒன்றும் வாரிக் கொட்டி விடவில்லை. அவர் காலம் வரை ஏதோ வசதியாக இருந்து விட்டுப் போயிருந்தார். காமேஷ் பஹ்ரானுக்குச் சென்ற சில மாதங்களில் அவர் இறந்து விட்டதாகக் கடிதம் வந்தது. இப்போது அவரது மனைவியைக் கண்டு ஆறுதல் சொல்லி விட்டுப் போகத் தான் வந்திருந்தான். மேலும் பம்பாய் வந்ததுமே அந்த வீட்டுக்குப் போக வேண்டும் என்றதொரு தவிர்க்க முடியாத ஆவல்.

அந்தப் பகுதியில் இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் எத்தனையோ புது ஃபிளாட்டுகள் முளைத்துவிட்டிருந்தன. ஆனால், தேவசகாயத்தின் பழங்காலத்து வீடு, அதே நிலையில் சாயமிழந்த சுற்றுச்சுவருடன் சூழ்நிலைக்கு ஒரு திருஷ்டிப் பரிகாரமாக நின்று கொண்டிருந்தது. ஒரு துளியும் மாறுதல் இருக்கவில்லை. திறந்தால் கிரீச்சிட்டு அலறும் அதே துருப்பிடித்த கேட், வெடிப்பும் குழிகளும் நிறைந்த வாசல் வராந்தாவின் அதே தரை, கூரையிலிருந்து வராந்தா ஓரத்திலே கம்பி உறிகளில் தொங்கிய பூச்சட்டிகளில் அதே செடி கொடிகள், அதே பழைய பிரம்பு நாற்காலி என்று வீடு அதே நிலையில்தான் இருந்தது. அழைப்பு மணியை அமுக்கினான். மெல்லியதாகக் காலடி ஓசை கேட்டது. கதவைத் திறந்த சந்தோஷம்மாளுக்கு அவனை அடையாளம் கண்டு கொள்ளச் சில விநாடிகள் சென்றன.

அவளும் வெகுவாக மாறிவிட்டிருந்தாள். கணவனை இழந்த துயரம் கூப்பிய முகம், தும்மைப் பூவாக வெளுத்து விட்ட கூந்தல், பாதியாக வற்றிவிட்ட உடல், தளர்ந்த நடை, முன்னைவிட அவள் மிகவும் முதுமையடைந்து விட்டிருந்தாள்.

''வா, உட்கார்!'' உபசரித்தபடி, மெல்ல உள்ளே திரும்பினாள்.

சுற்றும் முற்றும் பிரமிப்புடன் பார்த்தபடி, அவன் அந்த முன்னறையில் கிடந்த தொய்ந்து போன பழைய சோபா ஒன்றில் அமர்ந்து கொண்டான்.

''என்ன அப்படிப் பார்க்கிறே? பிள்ளைகள் எல்லோரும் ஆளுக்கு ஒரு வேலை தேடிக்கிட்டு மூலைக்கொருத்தராய்ப் போய்ட்டாங்க. அவருக்கப்புறம் இந்தப் பெரிய வீடு எனக்கு எதுக்கு? இதையும் சமையலறையையும் மட்டும் வச்சிக் கிட்டு, மத்ததை வாடகைக்குக் கொடுத்திட்டேன். இப்போ இதிலே தான் என் ஜீவனம்.'' மென்மையாக முறுவலித்தாள்.

''உங்களுக்கு என்ன வாங்கி வரதுன்னே தெரியலே. அதனால்...'' என்று தயங்கி விட்டுத் தோல் பையைத் திறந்து, அவளுக்காக அவன் வாங்கி வந்திருந்த பிஸ்கட் டின்னை எடுத்து மேஜை மேல் வைத்தான்.

''இதெல்லாம் எதுக்கு? நீ எங்கேயாவது சுகமா இருந்தாச் சரி. நீ போட்ட ஆறுதல் கடிதம் வந்தது நன்றி. இரு உனக்குக் கொஞ்சம் காபிபோட்டு எடுத்து வரேன்.'' உள்ளே திரும்பினாள்.

''ஏன் சிரமப்படறீங்க? ஹோட்டலிலே எனக்கு எல்லாம் கிடைக்கும். உங்களைப் பார்த்துட்டு...நான் இங்கே திரும்பி வரும்போது கட்டாயம் வந்து வாங்கிக் கொள்ளணும்னு ஏதோ கடிதம் எழுதியிருந்தீங்களே அதை வாங்கிட்டுப் போகத்தான் வந்தேன்.'' பேசிக் கொண்டே அவள் பின்னால் நடந்தான்.

சமையலறை வாசப்படியருகே வந்ததும் அவன் நெஞ்சை என்னவோ அடைத்தது.



சாயம் போன சிவப்புச் சேலையும் வெள்ளை ரவிக்கையுமாக அடுப்பருகே அம்மா நின்று கொண்டு, கரண்டியால் சோற்றுப் பானையைக் கிளறுவது போன்றதொரு பிரமை. ஆடிப்போய் விட்டான். அவன்.

வறுமையால் வாடி, கடுமையாக உழைத்து, முடிவில் இருமலில் செத்து ஒழிந்த அவனது தாய் கண்ட சுகம்?

வாழ்க்கை அவளை எவ்வளவு சுலபமாக ஏமாற்றி விட்டிருந்தது!

நிற்கப் பிடிக்காமல் கோபத்துடன் முன்னறைக்கு வந்தான். அந்த வீட்டின் ஒவ்வொரு பகுதியும் அவனது தாயையும் அவனது இளமைப் பருவத்தையும் வலுவாக நினைவுறுத்தின. நெஞ்சை அடைத்த துயரத்தின் சுமையைத் தாள முடியாமல் அறைக்குள்ளே முன்னும் பின்னும் உலாவினான் காமேஷ்.

ஏழைச் சமையல்காரியின் மகனான அவனது இளமைப் பருவம் முழுவதும் எப்படித்தான் வீணாகப் போயின?

'எத்தனை பணத்தைச் செலவழித்தாலும். அந்தக் கடந்த காலத்து மேடு பள்ளங்களை இப்பொழுது அவனால் நிரப்ப இயலுமா? தாழ்வு உணர்வு ஆழமாகப் பதிந்து உள்ளத்திலே விட்டுப் போயிருந்த தழும்புகளைத் தான் மருந்து கொண்டு அழிக்க முடியுமா?''

ஏற்கனவே பலவற்றை எண்ணி மனம் கொதித்துக் கொண்டிருந்தவன், பம்பாய் வந்ததும். அந்த உள்ளக் கொதிப்புப் பன்மடங்காக பெரும் தீயாக கொழுந்து விட்டு எரிவதை உணர்ந்தான்.

அதற்குக் காரணமானவர்களை வெறுத்தான் சபித்தான், மனத்துக்குள் சாடினான். பழி வாங்க வேண்டுமென்ற கொலை

வெறி புயலாக எழுந்து தன்னை ஆட்டிப் படைப்பதையும் புரிந்து கொண்டு தான் இருந்தான்.

''உட்கார்ந்து காபியைச் சாப்பிடு. லீவிலேதானே வந்திருக்கே? அந்த ஊர் உனக்குப் பிடிச்சிருக்கா? மறுபடியும் எப்போ போவே?...'' பலவும் விசாரித்தபடி சந்தோஷம் காபித் தம்ளரை மேஜை மீது வைத்தாள்.

மறுபடியும் அந்தத் தொய்ந்து போன சோபாவில் உட்கார்ந்து கொண்டான். தம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டு நிமிர்ந்த போது பார்த்தான். தேவசகாயம் சட்டத்துக்குள் அடங்கி, எதிர்ப்பக்கத்துச் சுவரில் படத்தி னின்று முறுவலித்தார்.

''எப்படியோ இருக்கவேண்டியவன் எப்படியோ இருந்துட்டே. ஆனாலும் மோசமில்லை. படிச்சு முன்னுக்கு வந்துட்டே. புத்திசாலி. பிழைக்கத் தெரிந்தவன். நான் சொன்னதையெல்லாம் மறக்காதே. ஞாபகத்தில் வச்சுக்கோ.'' கடைசிச் சந்திப்பில் அவர் சொன்ன வார்த்தைகள் மீண்டும் காதுகளில் ஒலித்தன.

முன்னறையிலேயே மூலையில் சுவரோடு தள்ளி வைக்கப் பெற்றிருந்த பீரோவைத் திறந்து, சந்தோஷம் ஒரு சிறு கடித உறையை எடுத்துக் கொண்டு வந்தாள்.

''உன்னைப் பத்தித்தான் ஐயா கடைசிவரை அதிகம் பேசிக் கொண்டிருந்தார். பெத்த தம் பிள்ளைகளை விட உன்மேல் அவருக்கு அப்படி ஓர் அன்பு'' துக்கத்திலே தடைப்பட்டது அவள் குரல். கடித உறையை அவன் எதிரே முக்காலி மீது வைத்தாள்.

''எப்பவோ உன்னிடம் நான் சேர்த்திருக்க வேண்டிய பொருள். தொடர்ந்து குடும்பத்தில் ஏற்பட்ட தொல்லைகளில் இதைப் பற்றிய நினைப்பே இல்லை. வீட்டை ஒழுங்குபடுத்தி



வாடகைக்குக் கொடுக்கும் போதுதான் இது கையில் அகப்பட்டது. உடனே உனக்குக் கடிதம் எழுதிப் போட்டேன். உங்கம்மா ஆஸ்பத்திரியிலே உடம்பு முடியாமப் படுத்திருந்தப்போ என்கிட்ட இதைக் கழற்றிக் கொடுத்தாங்க. பத்திரமா வச்சிருந்து உனக்குத் தக்க வயசு வரும்போது அவுங்க நினைப்பா வச்சுக்கச் சொல்லிக் கொடுக்கச் சொன்னாங்க. இது உன் தாயார் உனக்கு விட்டுப் போன ஆஸ்தின்னு நினைச்சுப் பத்திரமா வச்சுக்கோ.'' கூறிவிட்டு, ஆயாசத்துடன் எதிரே ஓர் ஆசனத்தில் சாய்ந்து கொண்டாள்.

உறையைப் பிரித்து உள்ளே இருந்த ஒரு தங்க மோதிரத்தைக் கையில் எடுத்தான் காமேஷ்.

அதை அவன் தன் தாயின் கைவிரலில் ஒரு பொழுதும் பார்த்ததில்லை. அப்படி ஒரு நகை அவளிடம் இருந்ததா? வியப்புடன் அதைக் கைவிரலில் போட்டுத் திருப்பிப் பார்த்தபோது, அவன் முகம் இறுகிப் போயிற்று. மோதிரம் நெருப்பாகி விரலையும் உடல் முழுவதையும் சுட்டுவிட்டது போன்று ஆத்திரத்தில் துடித்தான். அதைப் பார்க்கப் பிடிக்காமல் சட்டென்று கழற்றிச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டான்.

சிறிது பொழுதில் விடை பெற்றுக்கொண்டு கிளம்பினான். அங்கிருந்த ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தான். காலை வேளையில் அங்கே கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஒரு மூலையில் கிடந்த மேஜை அருகே காலி நாற்காலி ஒன்று கண்களில் பட்டது. வேகமாகச்சென்று அதைப் பிடித்துக்கொண்டான்.

அவன் கேட்ட பூரி உருளைக்கிழங்குடன், ஆவி பறந்த சூடான தேநீரைக் கோப்பையில் நிறைத்துக்கொண்டு வந்து, ஹோட்டல் பையன் அவன் முன்னால் வைத்தான்.

அடுத்தபடியாக என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி அவன் சிந்தித்தாக வேண்டும். ஆழ்ந்து யோசித்து முடிவெடுக்க வேண்டிய கட்டம் நெங்கிவிட்டது. அவனுக்குச் சிந்திக்கத் தனிமையும் அவகாசமும் பெரிதும் தேவைப் பட்டன.

மெல்ல பூரியைப் பிட்டு உருளைக்கிழங்குடன்சேர்த்து வாயில் போட்டு மென்றபடி, திறந்த ஜன்னல் வழியே தனது வருங்காலத்தை ஊடுருவிப் பார்த்துக்கொண்டு உட்கார்ந் திருந்தான்.

## 14

அகல்யாவுக்குப் பிறந்த வீடு வெகு தொலைவில் இருக்கவில்லை. பக்கத்து டவுனில் அதே வீட்டில்தான் தபால்காரர் குருநாதன் வேலையினின்று ஓய்வு பெற்ற பின்னரும் தொடர்ந்து வசித்து வந்தார். தாய்வீடு அருகில் இருக்கிறது என்பதற்காக, அகல்யா அடிக்கடி பிறந்தகத்துக்குப் போகும் பழக்கத்தை வைத்துக்கொள்ளவில்லை. மாமியார் உத்தரவு கொடுத்தால் மட்டும் விசேஷ தினங்களின் போது தங்கள் வீட்டு வண்டியில் சிங்காரத்தின் துணையோடு போய் தாய் தந்தையரைப் பார்த்து விட்டு விரைவில் திரும்பி விடுவது வழக்கம். மாமியார் 'எடுத்துப் போ' என்று சொன்னால் ஒழிய தோட்டத்தில் காய்த்திருக்கும் காய்களைக் கூட அவள் தன் வீட்டுக்கு எடுத்துப் போவதில்லை. குருநாதனும் அவசியம் இருந்தால் ஒழிய, சம்மந்தி வீட்டுக்கு அடிக்கடி வர விரும்பியதில்லை. பஞ்சரத்தினத்தின் உடல் நிலையைப் பற்றி விசாரிக்க மனைவியோடு ஒரு சில நிமிஷங்கள் வந்து விட்டு உடனடியாகக் கிளம்பி விடுவது வழக்கம் ''இருந்து சாப்பிட்டு



விட்டுப் போகலாமே; ஏன் அவசரம்?'' பஞ்சரத்தினம் ஒவ்வொரு முறையும் வாய் உபசரிப்பது வழக்கம்.

ஆனால் குருநாதன் சாப்பிட உட்கார்ந்து விட மாட்டார். கொண்டான் கொடுத்தான் வீட்டில் கை நனைப்பது தம் கௌரவத்துக்குப் பங்கம் என்ற நினைப்பு.

மகள் வீட்டுக்கு வரும்போது குருநாதன் வெறுங்கை யுடன் வருவதில்லை. ஒரு சீப்பு வாழைப்பழமோ அல்லது தம் தோட்டத்தில் காய்ந்த ஒரு கத்தை முருங்கைக்காய்களையோ எடுத்து வராமல் இருந்ததில்லை.

நேரே தாம் கொண்டு வந்ததை மகள் கையில் கொடுக்க மாட்டார். சம்பந்தி அம்மாளைக் கண்டு வணக்கம் தெரிவித்து விட்டு, உடல் நலனை விசாரித்த பின்னர், துணிப்பை யிலிருந்து பழத்தை எடுத்துப் பஞ்சரத்தினத்தின் முன்னால் பணிவுடன் வைப்பார் அப்படியெல்லாம் பந்தநிகளை அனுசரிக்கும் கண்டிப்பான மனிதர் குருநாதன்.

'விடிந்ததுமே அன்று பளிச்சென்று வெப்பமுடன் சூரியன் வீசிக் கொண்டிருந்தது. குருநாதன் தலை மீது துண்டை மடித்துப் போட்டுக்கொண்டு கால் செருப்பு கிருக் கிருக் கென்று சப்திக்கத் துணிப் பையைக் கையில் பிரித்தபடி தெருவுக்குள் வேகமாய்த் தனியாக வந்து கொண்டிருந்தார் சிங்கரத்தின் துணையுடன் முத்துமாரி கோயிலுக்குப் போயிருந்த அகல்யாவும் எதிர்ப்புறமாக வந்து தெருவுக்குள் நுழைந்தாள்.

''அப்பா! நீங்களா?'' மகள் ஆச்சரியத்துடன் நிமிர்ந்தாள்.

தலை மீதிருந்த துண்டை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டு, ஒரு வீடு எழுப்பிய நிழலின் அருகே வந்து நின்றார்.

''உன் மாமியார் உடம்புக்கு ரொம்ப முடியாமப் படுத்திருக்காங்கன்னு காதில் பட்டது. ஒரு வார்த்தை

சிங்காரத்துக்கிட்டச் சொல்லி அனுப்பக் கூடாதாம்மா?'' அங்கலாய்த்துக்கொண்ட குருநாதன் மகளை வியப்புடன் உற்றுப் பார்த்தார். இடையில் மாந்தளிர் மேக வர்ணப் பட்டுச் சேலை. கழுத்திலே கல் அட்டிகை, காதுகளில் வைரக் கம்மல். தலை நிறைந்த மல்லிகைப் பூ, முகத்தில் இதுவரை அவர் காணாத மகிழ்ச்சியும் பூரிப்புமாக அவள் மிக அலங்காரமாகக் காணப்பட்டாள்.

''மாரடைப்பு வந்ததிலிருந்து அவங்க உடம்பு அத்தனை சுகமாக இல்லை. ஒரு நாளைக்கு ரொம்பப் பலவீனமாக இருக்காங்க. ஒரு நாளைக்கு ரொம்பத் தெம்பாகக் காணப் படறாங்க. அவுங்க உடம்புக்குப் பாதிக் காரணம் மகனைப் பிரிஞ்சிருக்கிற துயரம். மற்ற பாதிக் காரணம் நோய்கள் ஒண்ணா ரெண்டா? உடம்பிலே பல கோளாறுகள். பதினைஞ்சு நாளைக்கு முந்தி ஆச்சு போச்சுன்னு ஆயிடுச்சு. பயந்துட்டேன். அவருக்குக் கடுதாசி எழுதிப் போட்டேன். தந்தி அடிச்சா அவர் கலங்கிடுவாரேன்னு அச்சம். இரண்டே நாளில் எழுந்து உட்கார்ந்துட்டாங்க.''

''இப்போ எப்படியம்மா இருக்காங்க?''

''காலையிலே எழுந்து குளிச்சுட்டுச் சாப்பிட்டுட்டு நாற்காலிலே உக்கார்ந்திருக்காங்க. பார்த்தா நீங்க ஆச்சரியப் படுவீங்க. அத்தனை ஒரு தெம்பு வந்திருக்கு ஏன். தெரியுமா? அவர் வரப் போகிறார். இந்த வாரக் கடைசிக்குள்ளே வந்துடப் போவதாகக் கடிதாசி வந்திருக்கு. அதைக் கேட்டதும் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்து உக்கார்ந்துட்டாங்க. மகன் மேலே அத்தனை ஆசை அவங்களுக்கு.'' சலங்கை கிணு கிணுத்தது போன்று மெல்லச் சிரித்தாள் அகல்யா. மகிழ்ச்சி யில் சிவந்து போன அவள் முகத்தையும் பெருமிதத்தில் பளபளத்த கண்களையும் பார்த்த தந்தை மனம் நிறைந்து போனார்.



''முத்துமாரி மனம் இறங்கிட்டாள்; யுகம் போல் தோணுச்சு இந்தப் பிள்ளையாண்டான் எப்ப வரப் போறாருன்னு என் மனசும் தவிச்சுது. நல்லபடியா ஊர் வந்து சேரட்டும். அது போதும்மா. உன் அத்தை உடம்பும் குணமாகி விடும்.''

''இப்பவே பாதி குணமாயிடுச்சு அப்பா!'' முறுவலித் தாள் மகள்.

''அதானே பார்த்தேன். வீட்டிலே மாமியார் உடம்புக்கு முடியாமப் படுத்திருக்கிற வேளையிலே கல்யாண வீட்டுக்குப் போறாப்போலே தடபுடலா உடுத்திண்டு இந்தப்பொண்ணு கோயிலுக்குப் போயிருக்கே, அப்படின்னு நினைச்சேன். இப்பப் புரிகிறது'' பரிகாசமாகப் பேசிவிட்டு, வெட்கத் திலேயே சிவந்து போன மகளின் முகத்தைப் பரிவுடன் பார்த்தார்.

அப்பா! அவருக்குத்தான் எத்தனை பாசம், நிம்மதி!

''திருச்சியிலிருந்து பஸ்ஸில் வராரா அம்மா?'' மகள் நீட்டிய பிரசாதத் தட்டிலிருந்து குங்குமத்தைத் தொட்டு நெற்றியில் வைத்துக் கொண்டார்.

''ஊருக்குக் கிட்ட வந்த பிறகு உங்க மருமகனுக்கு அத்தனை பொறுமை இருக்குமா? ஒரு டாக்ஸியைப் புடிச்சுக்கிட்டுப் பறந்து வந்துடுவார்னு நினைக்கிறேன். முத்துமாரிக்கு அபிஷேகம் செய்துட்டு வந்தேன், அப்பா அதோட நானுங் காப்புக்கட்டிக் கொண்டிருக்கிறேன். சீக்கிரம் கோயிலில் கொடியேற்றம் நடக்கப் போகிறது. அப்புறம் தீமிதி இருக்கு. கோயில் பூசாரி ஒரு மண்டலமா விரதம் இருக்கிறார். பெண்கள் பதினைஞ்சு நாளைக்கு விரதமா இருந்தாப் போதும்னு சொல்லிட்டு அபிஷேகம் செய்து, ஆத்தாள் பாதத்திலே வச்ச கங்கணத்தைக் கொடுத்தார். அங்கேயே

கையில் கட்டிக்கிட்டேன். அவருக்கும் ஒண்ணு ஆத்தா பாதத்திலே வச்சு எடுத்துக்கொண்டு வந்திருக்கேன்.''

குருநாதனுக்கு திடீரென்று கவலை ஏற்பட்டது. மகளின் அழகு முகத்தை மறுபடியும் பரிவோடு பார்த்தார்.

''ஏம்மா? இப்படிக் கடுமையாகவா ஆத்தா கிட்ட வேண்டிக்கணும்? பழக்கமில்லாத விஷயமாச்சே?''

''அவர் சின்ன வயசிலே பூசாரி கையைப் புடிச்சிட்டுப் பூக்குழிலே பல தடவைகள் இறங்கியிருக்கார் அப்பா, அத்தைகூடப் பல தடவை இறங்கியிருக்காங்க? அவங்க விட்டுப்பெண் என்னையும் ஆத்தா அன்போட தன் பூப்பாவாடையில் ஏந்திப்பாள். எனக்கு மனசிலே ஒரு பெரிய நம்பிக்கை. அதனாலே எனக்கு மனசிலே குழப்பமே இல்லை. நீங்களே பாருங்கள். பூப்பாவாடையிலே நடக்கிறாப்பல பால் குடத்தோட பரபரன்னு நான் நடந்து வரதைக் கண்டு பிரமிக்கப் போறீங்க...!'

''அந்த ஆத்தா உனக்குத் துணையிருப்பாம்மா. மனசிலே அத்தனை பக்தியும் நம்பிக்கையும் இருந்தாப் போதும்.''

அப்பாவும் மகளும் பேசிக் கொண்டே மெல்ல நடந்தனர்.

தந்தைக்கு முன் விரைவாக வீட்டுக்குள் புகுந்து குளியலறைக்குச் சென்று கால்களைக் கழுவிக் கொண்டு அவசரமாக வந்தாள் அகல்யா. பஞ்சரத்தினம் ஹாலில் நாற்காலியில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தாள். பூரணி சமையலறையில் வேலையாக இருந்தாள்.

''அத்தை! அப்பா வந்திருக்கிறார் உங்களைப் பார்க்க'' கூறியபடி, தான்கொண்டு வந்த பிரசாதத் தட்டை மாமியார் கையருகே வைத்தாள்.



தட்டைத் தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டாள் பஞ்சரத்தினம்.

''உட்காருங்க. வீட்டிலே எல்லோரும் சௌக்கியமா'' உற்சாகத்துடன் விசாரித்துக்கொண்டு மெல்லத் திரும்பினாள்.

அகல்யா இழுத்துப் போட்ட நாற்காலியில் குருநாதன் உட்காருமுன், கையோடு கொண்டு வந்த பழத்தை பையிலிருந்து முக்காலியின் மீது பஞ்சரத்தினம் அருகே வைத்தார். 'அகல்யா உன் மாமியாருக்கு அதை எடுத்துக் கொடும்மா என்றார்' ஜாடையாக.

''என்னப்பா, அத்தைக்குத் தேன்கதலிப் பழம் கொண்டு வந்திருக்கீங்களே? அவங்க உடம்புக்கு இதெல்லாம் ஒத்துக்காதே'' அகல்யா கூறி முடிக்கு முன், பஞ்சரத்தினம் குழந்தையாகச் சிரித்தாள்.

''பாருங்க அய்யா... உங்க மகள் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி என்னை வத்தக் காயப் போடறாள். அவளை என்ன செய்யலாம்? நீங்களே சொல்லுங்க,? வேடிக்கையாக மறுபடியும் உரக்கச் சிரித்தாள்.

மெலிந்து ஒடுங்கி வாடிப் போயிருந்த அவள் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடிக் கொண்டிருப்பதைக் குருநாதன் கவனிக்கத் தவறவில்லை.

''அகல்யா பொல்லாதவள்தான் ஒப்புக்கொள்கிறேன். இப்ப அவள் உங்க வீட்டுப் பெண்ணாகி விட்டதால் தண்டனையை நீங்கதான் நிர்ணயிக்க வேண்டும், உங்க மகன் வந்ததும் அவரிடம் இவளை ஒப்புச்சுடுங்க.''

சம்பந்தி குருநாதனும் மகிழ்ச்சியுடன் சிரித்தார் இத்தனை நாளும் உள்ளத்தை அழுத்திக் கொண்டிருந்த கவலை மறைந்து மனம் லேசாகி விட்ட நிலையில், அவருக்குக் கட்டுக்கொள்ள முடியாத ஆனந்தம்.

கணவனைப் பிரிந்து துயரத்திலே துவண்டு கொண்டிருந்த மகளுக்கு விடிவுகாலம் வந்து விட்டது. இனி அவர்கள் ஒரு போதும் பிரியாமல் பல்லாண்டுக்காலம் இனிதே வாழ வேண்டும் என்று அவர் மனம் ஓயாது வாழ்த்திக் கொண்டிருந்தது.

இவளுக்குத் தண்டனை கொடுக்கிற பொறுப்பை என் பேரன்கிட்டே விட்டுட்டுப் போறேன். நீங்க பார்க்கப் போறீங்க! வரவருஷத்திலே இந்த வீட்டுலே ஒரு வாண்டுப் பய வந்து இவளை நிக்கவொட்டாமல் வேலை வாங்கப் போறான். அதுக்குள்ளே கண் ஆபரேஷன் ஆகி, ஆத்தா கிருபையாலே கொஞ்சம் பார்வை வந்து விட்டாலும் போதும். என் பேரனை மடியிலே வச்சிட்டு இந்தப் போக்கிரிப் பொண்ணை ஒரு பிரம்பாலே நல்லா அடிக்கச் சொல்லப் போகிறேன்'' பச்சிளங் குழந்தை போல் சிரித்தாள். திடீரென்று தாங்க முடியாமல் விம்மி அழத் தொடங்கி விட்டாள்.

''மூணு வருஷமாச்சு. இந்தப் பாவி, என் குழந்தை முகத்தைப் பார்க்காம...'' திணறினாள்.

''ஆச்சு இன்னும் இரண்டு நாளிலே வந்துடப் போறார் உங்க மகன். கவலையை வுடுங்க.'' சமாதானப் படுத்தினார் குருநாதன்.

''அத்தை, என்ன அப்படி மனசை அடிக்கடி அலட்டிக்கிறீங்க? இன்னும் ரெண்டே நாள்தான் இருக்கு. அதுக்குள்ளே...'' சொல்லிக் கொண்டு நெஞ்சம் நெகிழ்ந்த வளாகத் துண்டினால் மெல்ல அவளது கண்ணீரைத் துடைத்து விட்டாள் அகல்யா.

''நான் சந்தோஷமா இருக்கேன். அதனாலே நீங்க மறுக்காம இருந்து சாப்பிட்டு விட்டுத்தான் போகணும்.'' பஞ்சரத்தினம் சம்பந்திக்கு உத்தரவிட்டாள்.



''பாயசம் வைக்கப் போகிறேன் அப்பா. நீங்க அத்தை பேச்சைத் தட்டக் கூடாது.'' மகள் மேல் உத்தரவு போட்டாள்.

முகத்தைத் துண்டால் துடைத்துக் கொண்டு முறுவலித்தார் குருநாதன்.

''பாயசம் மட்டும் கொடு அம்மா சாப்பிடறேன். உங்கம்மா சமைச்சு வச்சிட்டுக் காத்திருப்பா. இந்த மகிழ்ச்சிகரமான சேதியை அவளுக்கு நான் போய்ச் சட்டுனு சொல்ல வேண்டாமா?'' குருநாதன் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் பேசினார்.

கொஞ்ச நேரத்தில் அவர் விடை பெற்றுக்கொண்டு கிளம்பி விட்டார். அதற்குப் பின் அகல்யாவுக்கு நிற்கப் பொழுது இருக்கவில்லை. சிங்காரம் கொண்டு வந்து பத்திரமாகப் பின் அறையில் சேமித்து வைத்து செவ்விள நீர்க் காய்களை எண்ணிப் பார்த்தாள்.

ராஜ்குமார் தினமும் ஒரு தடவையாவது இளநீர் சாப்பிடாமல் இருக்க மாட்டான். அதுவும் தோட்டத்துச் செவ்விளநீர் அவருக்கு மிகவும் பிடித்தமான பானம்.

அவனை நினைத்துக் கொண்டே பின் பக்கம் விரைந்தாள். புடலங்காய்ப் பந்தலில் பிஞ்சுகளாகத் தொங்கிய காய்களை மெல்லத் தொட்டுப் பார்த்து முகர்ந்தாள்.

'ம்... வாசனைப் புடலை. கூட்டு என்றால் அவருக்கு ரொம்ப பிடிக்குமே...'

வந்தவுடன் வரிசையாக அவருக்குப் பிடித்ததெல்லாம் சமைத்துப் போட்டு விட்டுத்தான் மறுகாரியம். நாக்குச் செத்து, ருசிகெட்ட இளைச்சுத் துரும்பாகித்தான் வரப்போறார். என்னென்னவோ எண்ணியபடி நின்றவள் காதுகளில் சைக்கிள் மணி ஓசை கேட்டது. ஒரே ஓட்டமாக வாசலுக்கு விரைந்தாள்.

தந்திச் சேவகன் கையிலிருந்த உறையைக் கண்டதும் அவள் நெஞ்சு படபடக்கத் தொடங்கியது.

கையெழுத்திட்டு விட்டு வாங்கிப் பிரித்தாள்:

''சென்னைக்கு வந்து விட்டேன். வியாழன் காலையில் என்னை எதிர்பார்க்கலாம், அன்புடன் ராஜ்குமார்.''

மகிழ்ச்சியின் சுமை தாங்காமல் இதயம் இரண்டாகி விடும் போன்றதொரு தவிப்பிலே அவள் ஆடிப்போய் விட்டாள். தன் உணர்வுகளை அடக்கிக் கொண்டு மெல்ல உள்ளே வந்தாள்.

''சைக்கிள் மணி சத்தம் கேட்டதே அகல்யா, தந்தி வந்திருக்கா? குழந்தை எப்ப வரானாம்? சொல்லும்மா. என் கண்ணு என்னிக்கு வரதாகத் தந்தி கொடுத்திருக்கான்?'' பஞ்சரத்தினம் பதறியபடி நாற்காலியினின்று எழுந்து நின்றாள்.

ஓடிச்சென்று மாமியாரைத் தழுவிக் கொண்டு மெல்ல உட்கார வைத்தாள். ''பதற்றப்படாதீங்க அத்தை அவர்... அவர்...வியாழக்கிழமை காலையிலே வந்துடறதாகத் தந்தி கொடுத்திருக்கார். ரொம்பக் கிட்டக்க வந்துட்டார் அத்தை.'' மருமகள் ஆனந்தத்துடன் மாமியார் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

இருவர் கண்களும் கனத்தன. நெஞ்சிலே இனிமையான உணர்வுகள் சிலிர்த்தன.



# 15

சென்னையில் இரண்டு தினங்களுக்கு மேல் தங்கி விட்டுப் பின்னர்தான் திருச்சிக்குப் பயணம் என்று ராஜ்குமார் முடிவில் ஒப்புக் கொண்டிருந்தான். நண்பனை மகிழ்விக்கும் பொருட்டு இந்த மாபெரும் தியாகத்துக்கு அவன் சம்மதித் திருந்தான். முன்னதாகவே சென்னையிலிருந்த நண்பன் ஒருவனுக்குத் திருச்சிக்குப் பயணம் செய்ய டிக்கெட்டிகள் வாங்கி வைக்க வேண்டிய தேதிகளைக் குறிப்பிட்டு எழுதியிருந்தான். அதன்படியே தான் அவன் அகல்யாவுக்குத் தான் வரப்போகும் நாளைக் குறித்துத் தந்தியும் அனுப்பி விட்டிருந்தான்.

விமான நிலையத்திலேயே வந்து சந்தித்த சென்னை நண்பன், அவனிடம் வாங்கித் தயாராக வைத்திருந்த டிக்கெட்டுகளைக் கொடுத்து விட்டான். அவற்றைப் பெற்றுக் கொண்டதுமே ஊர் போய்ச் சேர்ந்து விட்டது போன்ற மகிழ்ச்சி ராஜ்குமாருக்கு. அந்த நண்பனுக்குத் தான் வெளியூரிலிருந்து கொண்டு வந்த பரிசுப் பார்சலைக் கொடுத்து நன்றி தெரிவித்து விடைபெற்றுக் கொண்டு விமான நிலையத்தினின்று வெளிவந்தான்.

காமேஷ் அவனுடன் அந்தப் பெரிய ஹோட்டலில் வந்து தங்க மறுத்துவிட்டான். முன்பு ஒருமுறை அவன் சென்னைக்கு வந்த போது புரசைவாக்கம் ராமநாய்க்கர் தெருவில் ஒரு சிறு லாட்ஜில் தங்கிய ஞாபகம் அவனுக்கு. அதே இடத்துக்குத்தான் மறுபடியும் போக விரும்பிப் பிடிவாதமாக ஆட்டோ ஒன்றைப் பிடித்துக்கொண்டு தனியே புறப்பட்டு விட்டான்.

வீட்டுக்கு வெகு அருகில் வந்தும் மூன்று வருஷங்களாகப் பிரிந்திருந்த தாயையும் தாரத்தையும் ஓடிச்சென்று பார்க்காமல், நண்பனைத் திருப்திப்படுத்த சென்னையில் அவன் அநாவசியமாகத் தங்க நேர்ந்தது. அவன் சிநேகிதத்துக்காக எவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்திருக்கிறான் என்ற உண்மையை காமேஷ் சிறிதும் உணர்ந்து கொள்ளவேயில்லை. மூர்க்கத்தனமாக முறித்துக் கொண்டு வேறு தங்குமிடத்துக்குப் போய் விட்டானே என்ற ஆதங்கம் ராஜ்குமாரின் நெஞ்சை அறுத்தது. இத்தனை காலம் நெருங்கிப் பழகியும் காமேஷை அவனால் சிறிதும் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

மிகவும் நெருங்கிய நண்பன் போலும் பழகுகிறான். திடீரென்று பகைவன் போலவும் வெறுக்கிறான். இவன் ஏன் இப்படி ஒட்டட்டாம் புல்லாக இருக்கிறான்? அதுவும் ஊர் நெருங்கும் வேளையில், வார்த்தைகளால் நெருப்பாக நெஞ்சைச் சுடுகிறானே ஏன்? அவனுக்கு ஒரே குழப்பம், ஏமாற்றம், துயரம். போகட்டும் கிறுக்குப் பயல்! எப்படியாவது வற்புறுத்தித் தன்னுடன் அவனை ஊருக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.அது மிகவும் முக்கியம். அகல்யாவுக்கு ஓர் அற்புதத்தைக் காட்டப் போவதாகப் பல கடிதங்களில் திகைப்பூட்டிக் கொண்டிருந்தானே, அந்த அற்புதத்தைச் சென்னையிலே அப்படியே விட்டுப் போக முடியாது! பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளிய மரத்தில் ஏற வேண்டும் என்பது போல் தான் காமேஷின் நட்பும். பலவும் எண்ணியபடி அவன் தனக்குக் கொடுத்த அறைக்குள் நுழைந்து தோள் பையை இறக்கிக் கீழே வைத்துவிட்டுத் தாங்க முடியாத அலுப்புடன் படுக்கை மீது சாய்ந்து கொண்டான். அவனுக்கு எதுவும் சாப்பிடப் பசி இருக்கவில்லை.



அன்று காலை பம்பாயில் தனியே அந்த ஹோட்டலில் விடப்பட்டபோது, பொழுது நீண்டு அவனுக்கு மிகவும் பாரமாகத் தென்பட்டது. மிகவும் பழக்கமான ஒரு நண்பர் வசித்துக் கொண்டிருப்பது நினைவுக்கு வரவே, டைரியைப் புரட்டி, முகவரியைத் தேடி எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

மூன்றாவது மாடிப் பகுதியில் அவர்களது குடியிருப்பு மூச்சிறைக்கப் படிகளைக் கடந்து வந்து அந்த ஃப்ளாட்டின் முன் நின்றபோது பெருத்த ஏமாற்றம். கனமானதொரு நௌதால் கதவின் தாழ்ப்பாளில் தொங்கிக் கொண்டிருந்தது. படிகளில் காலடி ஓசை கேட்டு எதிர் ஃப்ளாட்காரர் கதவைத்திறந்து எட்டிப் பார்த்தார். அவர் வெளியூருக்குப் போயிருப்பதாகவும் வர ஒரு வாரமாகும் என்றும், அவர் கொடுத்த தகவலில் எரிச்சலும் ஏமாற்றமுமாக ராஜ்குமார் திரும்ப மெல்லப் படிகளில் இறங்கினான். உடனடியாக ஹோட்டலுக்குப் போக மனம் இல்லை. மெல்ல நடந்த படியே வந்து, அவன் காந்தி மார்க்கெட்டிற்குள் நுழைந்தான்.

மார்கழி மாதங்களில் ஊதல்காற்று உடம்பில் பட்டதும், அம்மா புடைவைத் தலைப்பை இழுத்து மூடிக் கொண்டு, உஸ் என்று பெருமூச்சு விடுவது ஞாபகத்துக்கு வந்து, கரை முழுவதும் சன்னமாக பூவேலை செய்த வெள்ளைக் கம்பளிச் சால்வை ஒன்றை, அம்மாவுக்காக அங்கே கடை ஒன்றில் வாங்கிக் கொண்டான். அகல்யாவுக்குக் கைப்பை ஒன்றும், சேலத்து பார்வதி அம்மாளின் பேரக் குழந்தைகளுக்குப் பொம்மைகளும் வாங்கிக்கொண்டு ஹோட்டலுக்குத் திரும்பினான். பொழுதைக் கழிக்க பம்பாய்க் கடைத்தெருவை சுற்றினான். அலுப்பு இப்போது அவனையுமறியாது நன்றாக உறங்கிப் போனான்.

இரவு ஏழுமணி அளவில்தான் எழுந்தான். முகத்தைக் கழுவிச் சீர் செய்து கொண்டு கீழே வந்து ரிஸப்ஷனில் விசாரித்தான். அவனை யாரும் தேடிக் கொண்டு வரவில்லை என்ற தகவல் கிடைத்தது. மிக்க ஏமாற்றமாக இருந்தது அவனுக்கு. காமேஷ் தங்கியிருந்த லாட்ஜிற்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விசாரித்தான். ''காமேஷ் என்பவர் சற்று முன்புதான் எங்கேயோ வெளியே போனார். வர இரவு நேரமாகும் என்று கூறி விட்டுச் சென்றார்'' என்றார் மறுபக்கத்திலிருந்து கிடைத்த பதில் மனத்தை உறுத்தியது. காமேஷிற்கு எத்தனை அசட்டையான மனப்போக்கு!

இரவு உணவுக்குப் பின் வரவேற்பறையில் அவன் வெகு நேரம் நண்பனுக்காகக் காத்திருக்க விரும்பவில்லை. 'தனியாக ஏதோ காரியமாக அவன் எங்கேயோ போயிருக்கிறான். நமக்கேன் பாடு' என்று எண்ணியபடி, நேரே தன் அறைக்குச் சென்றான். பெட்டிக்குள் தாறு மாறாகக் கிடந்த சாமான்கள் அனைத்தையும் எடுத்து மறுபடியும் ஒழுங்காக அடுக்கி வைத்து மூடிப் பூட்டினான். ஹைதராபாத்திலிருந்த தன் நெருங்கிய நண்பர் சரவணனுக்கு டெலிபோன் செய்தான். அவனது குரலைக் கேட்டதும், மறுபக்கத்தில் சரவணன் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தார். ''வேலையா? அது உனக்குக் காத்துக் கொண்டிருக்கிறது. அது சரி, நீ சுத்த விவரம் கெட்ட பிள்ளையாக இருக்கிறாயே? ஊரிலே அம்மாவும் உன் மனைவியும் ஆசையோடு காத்திருக்கும் போது, சென்னையிலே ஏன் சும்மா உட்கார்ந்திருக்கே? முதலில் ஊருக்குக் கிளம்பு.'' உரிமையோடும் அன்போடும் கடிந்து கொண்டார். கொஞ்ச நேரம் அவரிடம்பேசிவிட்டு மகிழ்ச்சியும் திருப்தியுமாகப் படுக்கையில் சாய்ந்தான். உறக்கமே வரவில்லை. ஆச்சு, இன்னும் இரண்டு நாளில் அவன் திருநல்லூரில் இருப்பான். திருச்சி ஜங்ஷனை அடைந்ததும், நேரத்தை வீணாக்காது,



உடனடியாக ஒரு டாக்ஸியில் ஊர் போய்ச் சேர்ந்து விட வேண்டும். வண்டி நிற்கும் சப்தம் கேட்டதுமே, அகல்யா ஓடி வந்து விடுவாள் வாசலுக்கு. ஜோடியாகக் கண்ணாடி பிரதி பலித்த உருவம் போல் இரண்டு பேரும் வந்து எதிரே நின்றால் வியப்பில் கண்கள் விரிய, 'கணவன் யார்?' என்று குழம்பி முகம் சிவந்து, கணம் அவள் தடுமாறிப் போவதை வேடிக்கை பார்க்க வேண்டாமா?

'எப்படி என்னைக் கண்டு பிடித்தாய்? ஒரே தோற்றம்; வேணுமின்னே ஒரே மாதிரி உடை தரித்துக் கொண்டு வந்தோமே?' என்று அவன் கேட்டால், கோபத்துடன், கண்கள் பளபளக்க, உதட்டைச் சுழித்துக் கொண்டு, அவள் 'இது விளையாட்டா?' என்று சிணுங்கும் போது... தனக்குள்ளே கற்பனை செய்து கொண்டு, அவன் வாய்விட்டுச் சிரித்தபடி படுக்கையில் புரண்டான்.

லேசாக அறைக் கதவு தட்டப்பட்டதும் விழித்துக் கொண்டு எழுந்து திறந்தான். ஹோட்டல் பையன் காலைப் பத்திரிகையையும் காபிக் கெட்டிலும் கொண்ட மரத்தட்டை ஏந்தியபடி வெளியே நின்று கொண்டிருந்தான். விடிந்து வெகு நேரம் வரை தூங்கி விட்டதை உணர்ந்து பரபரப்புடன் குளியலறைக்குள் மறைந்தான் ராஜ்குமார். விரைவில் குளித்து முடித்து விட்டு வேறு உடுத்திக் கொண்டு, பையன் தட்டில் வைத்துப் போன இரண்டு பிஸ்கட்டுகளை வேகமாகத் தின்று விட்டு, ஆறிப் போன காபியைக் குடித்தான். துவாலை, பனியன், இத்யாதிகளைத் தோள் பைக்குள் வாரிப் போட்டுக் கொண்டு, அறையை மூடிப் பூட்டி விட்டுக் கீழே வந்தான்.

ரிஸப்ஷனில் காலைப் பணிக்கு வந்திருந்த பெண்ணிடம் சாவியைக் கொடுக்க கை நீட்டியபோது, அவள் லேசாக முறுவலித்தாள். அகல்யாவைப் போல் உயரமாக இருந்தாள். தலை முடியை அள்ளித் தூக்கலாகக் கொண்டை

போட்டுக்கொண்டிருந்தாள். ''வெளியே அதுக்குள்ளே கிளம்பி விட்டீர்களே? ஹேவ் எ நைஸ் டைம்.'' மிகவும் பழக்கப்பட்டவள் போல அவள் பேசினாள். கண்கள் சிரித்தன. அகல்யாவுக்கு அப்படித்தான் அகன்ற நீண்ட விழிகள். சிரிப்பு மிதக்கும் பார்வை.

'காமேஷ் கிடக்கிறான் மடையன்' என்று உதறிவிட்டு ஊருக்குப் புறப்பட மாட்டோமா என்றதோர் ஏக்கம் நெஞ்சை அடைத்தது. 'மன்னிச்சுக்கோ அகல்யா! இன்னும் ஒரே ஒரு நாள்தான். அதற்குப் பிறகு நமக்குள் பிரிவே கிடையாது நிச்சயம்.' தன்னுள்ளே சொல்லிக் கொண்டு அவன் வேகமாக வெளியே நடந்தான்.

புரசைவாக்கம் ராமநாய்க்கன் தெருவுக்குள் நுழைந்தவுடனே, விரைவில் அவன் அந்த லாட்ஜைக் கண்டு பிடித்து விட்டான். கீழ்ப் பகுதியிலிருந்த வெற்றிலை பாக்குக் கடை-லாண்டரி இரண்டையும் தாண்டி, குறுகலாக ஓடிய சந்துக்குள் நுழைந்து, மாடிப்படிகளில் ஏறி, வராந்தாவுக்கு வந்தான். வரிசையாகத் தங்கும் அறைகள் காணப்பட்டன. காபி நிறைந்த கண்ணாடித் தம்ளரைக் கம்பி உறியில் தூக்கிக் கொண்டு வேகமாக வராந்தாவில் விரைந்து கொண்டிருந்த லாட்ஜ் பையனை விசாரித்தான். ஈ மொய்த்த குப்பைக் கூடை எதிரே இருந்த கதவை அவன் சுட்டிக் காட்டி விட்டு ஓடி விட்டான்.

'காமேஷ் எப்படித்தான் இந்தச் சூழ்நிலையைச் சகித்துக் கொள்கிறானோ?' என்ற வியப்பு அவனுக்கு. மெல்லக் கதவைத் தட்டினான்.

''காமேஷ் அப்பொழுதுதான் எழுந்தவன் போல், இரவு உடையிலேயே இன்னமும் காணப்பட்டான். அறைக்குள்ளேயிருந்து சிகரெட்டின் மணம் குப்பென்று முகத்தில் மோதியது. இரவு சாப்பிட்டு விட்டு அவன் வைத்திருந்த எச்சில் தட்டில் இன்னமும் மீதிச்சோறு காய்ந்து கொண்டு கிடந்தது. புத்திதான் கோணல் என்றால் பழக்க வழக்கங்களாவது சுத்தமாக இருக்கக் கூடாதா? 'கிளம்பு காமேஷ் உன்னை அழைத்துப் போகத் தானே வந்தேன்.' வற்புறுத்திவிட்டு, அறையைச் சுற்றிலும் பார்க்க விரும்பாமல், கண்களை மூடிக் கொண்டான். ராஜ்குமார். அரைமனதுடன் முகத்தைக் கழுவிக் கொள்ளக் குளியலறைக்குத் துவாலையுடன் சென்றான் காமேஷ். சிறிது பொழுதில் அந்த லாட்ஜின் தோற்றத்திற்கே சம்பந்தமில்லாத மிடுக்கான ஆசாமியாக வெள்ளைச் சபாரி சூட்டில் கறுப்புக் கண்ணாடி அணிந்து கொண்டு, கழுத்தில் மாட்டிய பைனாகுலருடன், ஷேவிங் லோஷன் சுற்றிலும் கமகமக்கப் புறப்பட்டு விட்டான் காமேஷ்.

''மகாபலிபுரத்திற்கு ஒரு சுற்றுலாப் போய் விட்டு வருகிறோம். பகல் சாப்பாடு டிபன் எல்லாம் அங்கேயே தான். என் டிரீட் உனக்கு. என்னடா முறைக்கிறே? நட, சீக்கிரம்.'' உற்சாகப்படுத்தினான் ராஜ்குமார்.

பஸ்ஸை விட்டு இறங்கி பயணிகளுடன் கால் ஓய இருவரும் மகாபலிபுரத்தைச் சுற்றினார்கள். வெயில் உச்சியை அடைந்த போது ஆளுக்கு ஓர் இளநீரைக் குடித்து விட்டுக் கடற்கரைப் பக்கம் நடந்தனர். நீல வண்ணக் கடல் நீரும் வெள்ளை மணலும் ராஜ்குமாரின் உள்ளத்தை மெல்ல வருடின.

''காமேஷ்! வெயில் வேளையில் கடல்நீர் ஜில்லுனு எப்படி மயக்குகிறது பார்த்தியா? என் கையை பிடிச்சுண்டு இறங்குடா. ஒரே ஒரு சின்னக் குளியல் ரொம்பச் சுகமாக இருக்கும். தாய் நாட்டுக்கு வந்திருக்கோம். சமுத்திர ஸ்நானம் பண்ணுவோம் வா. எல்லாத் தவறுகளுக்கும் ஒரு முழுக்குப் போட்டு விடலாம்.'' சிரித்துக் கொண்டே, தோல் பையைக் கீழே வைத்து விட்டு, வேகமாக உடைகளைக் களைந்து

அதற்குள் போட்டு விட்டு, உள் ஆடையுடன் நின்றான், ''எனக்கு நீஞ்சத் தெரியாது, என்னை வற்புறுத்தாதே. தண்ணியைக் கண்டாலே எனக்குப் பயம்.'' பிடிவாதமாக காமேஷ் மறுத்தான்.

கடற்கரையில் அப்போது யாரையும் காணவில்லை. அங்குமிங்கும் அதுவரை நடமாடிக் கொண்டிருந்த பயணிகள் சாப்பாட்டைத் தேடிக் கொண்டு போய் விட்டிருந்தனர். கடற்கரை வெறிச்சென்று காணப்பட்டது. கலவரத்துடன் காமேஷ் சுற்றிலும் பார்த்தான். ''தண்ணி உடம்பிலே படறப்போ எத்தனை சுகமா இருக்கு தெரியுமா? கொஞ்சம் இறங்கிப் பாரேன்.'' மகிழ்ச்சியுடன் கூவியபடி, ஓவென்று இரைச்சலிட்ட கடல் அலைகள் இடையே புகுந்து, மீன்போல் மேலும் மேலும் கடலுக்குள்ளே நீந்தியபடி போய்க் கொண்டிருந்தான் ராஜ்குமார். வியப்புடன் அவனையே பார்த்துக் கொண்டு கரையில் நின்ற காமேஷ் திடுக்கிட்டுப் போனான்.

வெகு தொலைவில் நீருக்கு மேல் கறுப்பாகத் தெரிந்த அந்தத் தலையைக் காணவில்லையே? ராஜ்குமாருக்கு என்ன நேர்ந்து விட்டது? கலவரத்துடன் மார்பில் தொங்கிய பைனாகுலரைக் கழற்றி அதன் வழியே பார்த்தான். 'ராஜ், ஏய் ராஜ்!' என்று கத்திக் கொண்டு ஓடினான். உதவிக்கு வரக்கூட அருகில் யாரும் இல்லை. மறுபடியும் பைனாகுலர் மூலம் பார்த்தான். 'பாவிப் பயல், மூழ்கிப் போய் விட்டானே! அட கடவுளே!' காமேஷின் நெஞ்சு பயத்திலே பக்பக்கென்று அடித்துக் கொண்டது. நெற்றியில் பூத்த வேர்வையைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு, கால்கள் மணலில் ஊன்றிக் கொண்டு விட்டன போன்ற பிரமையில், நடக்கத் தோன்றாமல் கடலையே வெகுநேரம் வெறித்துக் கொண்டு நின்றான்.



# 16

சுய உணர்வு வந்த போது மறுபடியும் சுற்று முற்றும் பார்த்தான் காமேஷ், கண்களுக்கு எட்டிய தூரம் வரை மணற்பரப்பில் யாரையும் காணவில்லை. பளிச்சென்று காய்ந்த உச்சி வெயில் உடலைச் சுட்டது. சற்றுமுன் பச்சையாகக் காணப்பட்ட கடல் இப்போது கருநீலமாக விஷம்போல் அவனுக்குத் திகைப்பையும் அச்சத்தையும் கொடுத்தது. மெல்லக் குனிந்து ராஜ்குமார் கழற்றி வைத்து விட்டுப் போன உடைகளைப் பைக்குள் நன்றாகத் தள்ளி மூட எடுத்த போது, சட்டைக்குள்ளிருந்த அவனது புத்தம் புதுக் கடிகாரம் நழுவி மண்மீது தொப்பென்று விழுந்தது.

துயரமா வெறுப்பா பரிதாபமா பகைமையா? இனம் பிரிக்க முடியாத கலவை உணர்விலே குமுறிக்கொண்டு, அதை எடுத்து உள்ளங்கையில் வைத்து அழகு பார்த்தான் காமேஷ்.

அந்தப் புதிய கடிகாரத்தை ஊருக்குப் புறப்படுவதற்கு முதல் நாள்தான் ராஜ்குமார் வாங்கியிருந்தான்.

''ஏற்கெனவே கிராமத்திலே வீட்டில் ஒரு ஸீகோ டிஜிட்டல் கடிகாரத்தை வெச்சிட்டு வந்திருக்கேன். வெளி நாட்டுக்குப் போய்விட்டு வந்த சரவணன் ஸார் எனக்குப் பரிசாக வாங்கிக்கொண்டு வந்தார். ஒரு எச்.எம்.டி.கையோடு உபயோகத்திலே இருக்கு. இப்பப் புதுசா இன்னொரு டிஜிடல் கடிகாரத்தை இத்தனை விலைக்கு வாங்கிட்டுப் போகிறேன். அகல்யா கட்டாயம் கோபிச்சுக்குவா. பணத்தைத் தண்ணியாச் செலவழிக்கிறேன்னு என்னைப் பத்தி அவளுக்கு அபிப்பிராயம்.

''அதுக்கென்ன பண்றது? பெரியதனக்காரர் கனக சபையின் செல்ல மகனாகப் பிறந்துட்டேன். தேவைங்கறதே

தெரியாம வளர்ந்துட்டேன். அது என் தப்பான்னு நான் வேடிக்கையாகச் சண்டை போடுவது வழக்கம். கட்டும் செட்டுமாகக் குடித்தனம் செய்ய விரும்புகிறவள் அகல்யா. நான் என் அப்பாவைப் போலக் கொஞ்சம் செலவாளி. பிடிச்சதை உடனே வாங்கி அநுபவிக்கணும்னு ஆசைப் படறவன். இது மாதிரிச் சில்லறை அபிப்பிராயப் பேதங்கள் எங்கள் இருவரிடையே நிறைய உண்டு. எல்லாத்தையும் நீ வேடிக்கை பார்க்கப்போறே'' சிரித்துக் கொண்டே, முதல் நாள் ராஜ்குமார் பேசியதன் நினைவு நெஞ்சை அடைத்துக் கொண்டது. காமேஷ் திணறிப் போனான்.

கடிகாரத்தையும் பைக்குள் போட்டு, ஜிப்பை இழுத்து மூடிப் பையை எடுத்துத் தோள்மீது மாட்டிக் கொண்டான்.

'பாவிப் பயல்! எல்லா ஆசைகளையும் ஒட்டு மொத்தமாக எடுத்துக்கொண்டு ஆழமான கடலுக்குள் அமுங்கிப் போய் விட்டானே? ம்...இப்போ...' தனக்குள்ளே முணுமுணுத்தபடி மெல்ல நடந்தான்.

டாக்ஸியிலிருந்து இறங்கி ராஜ்குமார் தங்கியிருந்த அந்தப் பெரிய ஹோட்டலுக்குள் நுழைந்தான்.

வரவேற்பறையில் மேஜைக்குப் பின்னால் நிரந்தரப் புன்னகையுடன் கண்களால் சிரித்த அந்த அழகி ரிசப்ஷனிஸ்ட், அவனைக் கண்டதும்,திரும்பிப் பின்னால் ஆணிகளில் தொங்கிய சாவிகளில் ஒன்றை எடுத்தாள். 'டிட் யூ ஹேவ் எ நைஸ் டைம்? கேட்டபடி சாவியை அவனிடம் நீட்டினாள்.

பளிச்சென்று அவனுக்குப் புரிந்து விட்டது.

ஆள் மாறாட்டத்தை அவள் கண்டு கொள்ளவில்லை. அவனை ராஜ்குமார் என்று எண்ணிக் கொண்டிருக்கிறாள்.

தன் முன்னே கிடந்த நோட்டு புத்தகத்தை அவசரமாக இடக் கையால் திருப்பிவிட்டு, ரிஸப்ஷஸ்ட் மறுபடியும் மோகனமாக முறுவலித்தாள்.



''இன்று இரவு வரைதான் இங்கே தங்கப் போறீங்க இல்லையா?''

குழப்பத்துடன் பதில் தோன்றாது ஒரு கணம் மலைத்துப் போய் நின்றான் காமேஷ்.

அன்று இரவு வண்டிக்கு அவர்கள் இருவரும் திருச்சிக்குப் புறப்படுவதாக ஏற்பாடுகள் செய்து விட்டிருந் தான் ராஜ்குமார்.

இப்போது?

மின்னலாக ஓர் எண்ணம் அவனுள் பளிச்சிட்டது.

''இன்னும் இரண்டு தினங்கள் சென்னையிலேயே தங்குவதாக உத்தேசம்.''

''அப்படியா?'' அவள் மெல்லச் சிரித்தாள்.

''அந்த அறை உங்களுக்குச் சௌகரியமாகத்தானே இருக்கு?''

''ரொம்பப் பிடிச்சிருக்கு. அதோட இந்த வரவேற் பறையும் ரொம்பப் பிடிச்சிருக்கு.'' கண்களால் அவளை விழுங்கிக் கொண்டு, சாவியை எடுக்கக் கையை நீட்டியவன், அவளது கரத்தையும் மெல்ல வேண்டுமென்றே தொட்டான்.

அழகான பெண்களைக் கண்டால் அப்படி அவனுக்கு ஒரு துணிச்சல். முகம் சிவந்து போன அவள் மெல்லத் தன் கையை இழுத்துக் கொண்டாள்.

''மன்னிச்சுக்குங்க, தவறிப் போய்...'' என்று குழைந்தபடி அவளை மென்மையாகப் பார்த்தான்.

''பரவாயில்லை, மிஸ்டர் ராஜ்குமார் தொடர்ந்து உங்களுக்கு அந்த அறை தேவைப்படும்னு எழுதி வச்சுடறேன்'' என்று அவசரமாகக் கூறிவிட்டு, வேறு ஒரு பயணியின் பக்கம் திரும்பி விட்டாள்.

லிஃப்டுக்குள்ளே நுழைந்து ஐந்தாவது மாடியை அடைந்து வராந்தாவில் வேகமாக நடந்தபோது? அந்தப் பகுதியைப் பார்த்துக் கொள்ளும் பையன் எதிர்ப்பட்டான்.

''நீங்க பகல் சாப்பாட்டுக்கு வர மாட்டீங்கன்னு சொல்லிட்டுப் போனீங்களே? இன்னும் சாப்பாடு நேரம் முடியல்லே. ரொம்பக் களைப்பா இருந்தா, ரூம் சர்விஸைக் கூப்பிடுங்கோ கொண்டு வந்து கொடுப்பாங்க' என்று கூறுவிட்டு விரைந்தான்.

எதிர்பட்ட இரண்டாவது ஆளுக்கும் அவன் ராஜ்குமாராகவே தோன்றுகிறான்.

அவசரமாகக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். அறை சுத்தமாக இருந்தது. பெட்டி வைக்கும் ஸ்டாண்டில் ராஜ்குமாரின் பெட்டிகள் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான்.

'எல்லாம் தயாராகத்தான் வைச்சிருக்கான், ஆனால் பயணத்தின் திசைதான் மாறிப் போச்சு.'

உரத்த குரலில் ஆவேசமாகச் சிரித்துக் கொண்டு கண்ணாடி முன் வந்து நின்றான்.

ரிஸப்ஷனிஸ்ட் ஹோட்டல் பையன் இவர்கள் எல்லாரும் குழம்பியதில் அதிசயமேயில்லை.

கடலுக்குள் மறைந்து போன ராஜ்குமார், கண்ணாடி வழியே அவனைப் பார்த்து முறுவலிப்பதைப் போன்ற தன் தோற்றத்தையே அவனும் வியப்புடன் ஆராய்ந்து பார்த்துக் கொண்டு நின்றான்.

அதே சமயம், அவனது மூளையும் பல திட்டங்களை வேகமாக ஆராயத் தொடங்கியது.

ரூம் சர்வீஸ் எண்களை வேகமாகச் சுழற்றி ''ரோஸ்ட் சிக்கன், ஃப்ரைட் ரைஸ், ஸாலட் கஸ்டர்ட் அண்ட் ஜெல்லி



காபி...' படபடவென்று வேண்டியதைச் சொல்லிச் சாப்பாட்டை அறைக்குக் கொண்டுவர உத்தரவிட்டான்.

தோல் பையிலிருந்த சாவிக் கொத்தை எடுத்து மேலே இருந்த பெட்டியைத் திறந்தான்.

ராஜ்குமார் எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்ய விரும்புகிறவன். சாமான்களைச் சீராகப்பெட்டிக்குள் அடுக்கி வைத்திருந்தான். ஒரு பக்கத்தில் பாஸ்போர்ட் டிராவலர்ஸ் செக்-டிராப்ட்-பம்பாய் பாங்கியில் மாற்றிப் பத்திரமாகப் பிளாஸ்டிக் பைக்குள் போட்டு சுருட்டி வைத்திருந்த நாலாயிரம் ரூபாய் பணம், ரெயில் பயணச் சீட்டு என்று எல்லாம் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. பணத்தையும் பயணச் சீட்டுக்களையும் சட்டைப் பையில் திணித்துக் கொண்டு பெட்டியைப் பூட்டினான்.

அதற்குள் பையன் உணவுத் தட்டைக் கொண்டு வந்து மேஜையின் மீது வைத்தான்.

இரண்டு பேர் சாப்பிடப் போதுமான உணவு, அத்தனையையும் ஒரே மூச்சில் முடித்து விட்டுக் கையைக் கழுவிக் கொண்டு அறையைப் பூட்டிவிட்டுக் கிளம்பினான். ரயில்வே நிலையத்துக்குச் சென்று பயணச் சீட்டுக்களை ரத்துச்செய்து விட்டு அவன் திரும்பியபோது அந்த அழகி ரிஸப்ஷனில் இருக்கவில்லை.

நோட்டுப் புத்தகத்திலே தலையைக் கவிழ்த்துக் கொண்டு, தொங்கு மீசை வாலிபன் ஒருவன் மேஜைக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தான்.

''அறையைக் காலி பண்ணப் போகிறேன். உடனே பில் தேவை!'' காமேஷ் சொன்னபோது, அவன் நிமிர்ந்து உட்கார்ந்து, ஆவன செய்ய ஆரம்பித்தான்.

ஹோட்டலுக்குச் சேர வேண்டியதை ராஜ்குமாரின் பணத்திலிருந்து எடுத்துக் கட்டிவிட்டுச் சாமான்களை எடுத்துவரச் செய்து ஒரு டாக்சியில் ஏற்றிக்கொண்டு தன் லாட்ஜுக்குக் கிளம்பி விட்டான்.

சிறிது நேரம் ராஜ்குமாரின் ஹோட்டல் அறையில் சுத்தமான படுக்கையில் சாய்ந்து கொண்டிருந்து விட்டு, தன் லாட்ஜின் அழுக்குப்பிடித்த படுக்கை விரிப்பின் மீது உட்கார்ந்த போது, அவனுக்கே எரிச்சலாக இருந்தது.

''ராஜ்குமார் சுகபோகமான வாழ்க்கையை அநுபவிக் கிறானே?'' என்று எண்ணிய போது அவன் நெஞ்சு பொறாமையில் நெருப்பாக எரிந்தது.

ராஜ்குமார் — அவன் தாய் — மனைவி, இறந்து போன அவன் தந்தை என்று எல்லோர் மீதிலும் பொங்கிக் கொண்டு வந்த வெறுப்பை அடக்க மாட்டாமல் எழுந்து அறைக்குள் வெறிபிடித்த வேங்கை போல் முன்னும் பின்னும் சிந்தித்த படியே உலாவினான்.

இரண்டு நாட்கள் கழிந்தன. காலை மாலை இரண்டு வேளையும் பத்திரிகைகளை வாங்கி ஒரு வரிகூட விடாது படித்தான்.

அவர் எதிர்பார்த்த விவரம் எதிலும் காணவில்லை.

கடைத் தெருவைச் சுற்றி வந்தான், சினிமாப் பார்த்தான். கண்ட ஹோட்டலில் புகுந்து விரும்பியதையெல்லாம் வாங்கிச் சாப்பிட்டான். தொடர் சங்கிலி போல சிந்தனை யோடு தொடர்ந்து சிகரெட்டுகளை ஊதித் தீர்த்தான். இரவு வேளையில் உறக்கமின்றி எண்ணங்களோடு படுக்கையில் அமைதியில்லாது புரண்டான். இன்னும் எத்தனை நாட்கள் இப்படி வீணாகக் காத்திருப்பது? அவனுக்கு ஆத்திரமாகத் தான் இருந்தது. நான்கு நாட்களுக்குப் பின்னர், அன்று காலை



பொது குளியலறையில் குளித்து விட்டு அவசரமாக உடுத்திக் கொண்டு அவன் மாலைக் காபியைத் தேடிக் கொண்டு கீழே வந்தபோது பார்த்தான். எதிர்ச்சாரி புத்தகக் கடையின் கதவின் மேலிருந்த போஸ்டரில் கொட்டை எழுத்துக்களில் காணப்பட்ட செய்தி கண்களைத் தாக்கிற்று.

'கடலில் மூழ்கிய இளைஞனின் பரிதாபகரமான சாவு!'

பத்திரிகையை வாங்கிப் பரபரப்புடன் படித்தான். முன் பக்கத்திலேயே விவரம் கொடுக்கப்பட்டிருந்தது.

''நேற்று மாலை மகாபலிபுரக் கடற்கரை ஓரமாக ஒதுங்கிக் கிடந்த பிணம் இருபத்தாறு வயதுடைய வாலிபனுடையது என்று ஊகிக்கப்படுகிறது, நீல வண்ண ஸ்நான உடை மட்டுமே உடலில் காணப்பட்டது. நாட்கள் சில ஆகி விட்டதால் உடல் அழுகின நிலையில் இருப்பதாலும், மீன்கள் கொத்தி விட்டதாலும், முகம் உருத்தெரியாத நிலையில் உள்ளது. கடலில் நீந்த வந்தவன் விபத்துக்குள்ளாகி இருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. போலீஸ் புலன் விசாரித்துக் கொண்டிருக்கின்றனர். உறவினர்கள் அடையாளம் கண்டு கொள்ளப்பிணம் அரசியலார் பிணக் கிடங்கில் வைக்கப்பட்டுள்ளது.''

நீல வண்ண ஸ்நான உடையில் நீலக் கடலுக்குள், அலைகளை அணைத்தபடி ராஜ்குமார் மேலும் மேலும் நீந்திச்செல்லும் நினைவு நெஞ்சுக்குள் எழவே, பத்திரிகையை மடித்துக் கையிடுக்கில் செருகிக் கொண்டு வேகமாக நடந்தான் காமேஷ்.

கடலுக்குள்ளே போனவன் பிணக் கிடங்கிலே உறவினருக்காகப் பிணமாகக் காத்துக் கிடக்கிறான்!

டாக்ஸி ஒன்றைப் பிடித்துக் கொண்டு ரெயில்வே நிலையத்துக்கு விரைந்தான். அன்று இரவு வண்டிக்கு அவனுக்குப் பயணச் சீட்டுக் கிடைத்து விட்டது.

அப்படியே திருநல்லூருக்கு ஒரு தந்தியையும் அனுப்பினான். "ரெயில் தவறிவிட்டது. உடனடியாக இடம் கிடைக்கவில்லை. தாமதமாகி விட்டது. அம்மாவிடம் சொல்லவும். இன்று இரவு வண்டியில் வருகிறேன்.

அன்புடன் ராஜ்குமார்."

அகல்யா பெயருக்கு அனுப்பிவிட்டுத் தனக்குள்ளே சிரித்த வண்ணம் வெளியே வந்து இன்னொரு டாக்ஸியில் ஏறிக் கொண்டான்.

39768
571806

## 17

நெஞ்சு கொள்ளா மகிழ்ச்சியில் அன்று இரவு அகல்யா ஒரு கணம் கூட உறங்கவில்லை. விடியுமுன்னே இருள் பிரிவதற்குக்கூடக் காத்திராமல் அவள் தலை முழுகி உடுத்திக்கொண்டு தயாராகி விட்டாள். பூக்குழியில் இறங்க விரதம் எடுத்துக் கங்கணம் கட்டிய நாளிலிருந்து அவள் நித்தமும் தலைமுழுகி விட்டு, சூரியோதயத்துடன் ஆரம்பமாகும் முத்துமாரியின் அபிஷேக ஆராதனைகளில் கலந்து கொள்ளத் தொடங்கியிருந்தாள். பகல் ஒரு பொழுது மட்டுமே கொஞ்சம் உணவு. இரவு அரைத் தம்ளர் பால் என்று அப்படி ஒரு கடும் விரதம். கணவன் ராஜ்குமார் பத்திரமாக ஊர் வந்து சேர்ந்து வாழ்வு மலர எத்தகைய கடும் விரதத்தையும் அவள் ஏற்கத் தயாராக இருந்தாள்.

கொட்டிலில் கட்டியிருந்த கூழைப்பசு செல்லக்குட்டி சில நாட்களுக்கு முன்புதான் கன்று போட்டிருந்தது. செல்லக்குட்டி என்று ராஜ்குமார்தான் அந்தப் பசுவுக்குப் பெயர் வைத்திருந்தான்.



கூப்பிட்டால் நாய்க்குட்டி போல் பின்னால் ஓடிவரும் அந்தப் பசுவின் மீது அவனுக்கு மிக்க அன்பு.

ஊருக்குப் போகுமுன்பு கூட கொட்டிலுக்குச் சென்று ஒரு கை புல்லை அள்ளிப் போட்டுவிட்டுச் செல்லக் குட்டியின் முதுகைத் தடவிக் கொஞ்சி விட்டுத்தான் புறப்பட்டான்.

முதல்நாள் சிங்காரம் பசுவைக் குளிப்பாட்டிச் சுத்தப் படுத்தியிருந்தான். அகல்யா அதன் முகத்திலும் கொம்பிலும் மஞ்சள் தடவிக் குங்குமப் பொட்டு வைத்துக் கழுத்தில் சலங்கை கட்டித் தூபம் காட்டினாள்.

செல்லக்குட்டிக் கூட எஜமான் வரப்போவது தெரிந்து விட்டது போலும். மஞ்சளும் குங்குமமுமாகப் பசுவின் முகத்தில் கூடக் களை கட்டிவிட்டிருந்தது. பட்டணம்படி கொள்ளும் பெரிய வெண்கலச் செம்பில் புஸ்ஸென்று நுரை மேலே எழும்பி நிற்கச் சுரந்து கொடுத்த பாலை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தான் சிங்காரம்.

கன்று போட்ட மாட்டின் பால் தெளிந்து பின் வீட்டுக்கு உபயோகிக்குமுன் முத்துமாரிக்கு அபிஷேகத்துக்கு அனுப்பிடுவது அந்த வீட்டின் வழக்கம்.

"பாலை அப்படியே கோயிலுக்குக் கொண்டு போகணும். முதல் பால் ஆத்தாளுக்கு, தெரியுமில்லையா?" அகல்யா உத்தரவிட்டாள்.

"காலைப்பால் அம்மனுக்கு, சாயங்காலம் கறக்கிற பால் ஐயாவுக்கு. அவருக்குப் பால் போளின்னா ரொம்பப் பிடிக்குமே. கொஞ்சம் அதையும் செஞ்சு வைச்சுடுங்களேன்.' பற்களைக் காட்டினான் சிங்காரம். இரண்டு நாட்களாக அவனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. கையும் காலும் ஓடாது தவித்தான். யஜமானியிடம் பேசுகிறோம் என்ற வரம்பை மீறி வேடிக்கையாகவும் பரிகாசமாகவும் சரிசமமாகப் பேசினான்.

என்னென்னமோ பழைய கதைகளின் நினைவுகளுடன் வளைய வந்து கொண்டிருந்தான்.

அம்மனுக்கு அபிஷேகத்துக்கென்று தனியாக இறக்கிய செவ்விளநீர் கூழைப் பசுவின் பால் திருச்சியிலிருந்து வாங்கி வந்த பன்னீர், தானே அரைத்து இழைத்துக் கரைத்து அத்தர் சேர்த்த சந்தனம்-தோட்டத்து மல்லிகை மஞ்சள் குங்குமம் எல்லாவற்றுடன் புறப்பட்டு விட்டிருந்தாள் கோயிலுக்கு. அம்மனுக்கு அன்று கனகசபை உபயமாக அமர்க்களமாக அபிஷேகம் நடந்தேறியது.

கோயிலினின்னு வந்ததுமே அவளுக்கு நிலை கொள்ளாத பரபரப்பு. பட்டுப் புடவையைக் களைந்து விட்டு, நூல் சேலையை உடுத்திக் கொண்டு அடுப்பருகே ஓடினாள்.

தும்பைப் பூப்போலத் தயாரித்து எடுத்த இடியாப்பத்தை வெள்ளிக் கிண்ணத்திலே போட்டுப் பத்திரமாக மூடி அப்பால் வைத்தாள். தேங்காய்த் துருவலைப் பிழிந்து எடுத்த பாலை ஒரு பாத்திரத்தில் ஊற்றி அதன் பக்கத்தில் வைத்து மூடினாள். அவர் வருவதற்குள் சமைத்துவிட வேண்டும் என்ற ஆத்திரத்தில் அறைக்குள்ளே வேகமாக வட்டமிட்டாள்.

கொல்லையிலிருந்த புடலம் பிஞ்சைப் பறித்துக் கொண்டு வந்து சிங்காரம் சமையலறைத் தரையின் மீது ஒரு பக்கமாக வைத்துவிட்டு அவளைப் பார்த்தான்.

''சொல்ல வேண்டாம். எனக்குத் தெரியும். அவருக்குப் புடிச்ச புடலங்காய்க் கூட்டு செய்யப் போறேன். பூரணி எனக்கு உதவி செய்யக் கூட இருப்பா. அதனாலே பஸ் நிலையத்துக்குப் போய்த் தயாரா நின்னு கூட்டிவா. சாமான்களைத் தூக்கிக்கிட்டு வர உதவியாயிருக்கும்'' உத்தரவிட்டாள்.



மாமியாருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைப் பரபரப்பாக முடித்தாள். ஹால் கடிகாரத்தின் எதிரொலியாக மகிழ்ச்சியின் கனம் தாளாத எதிர்பார்ப்பில் நெஞ்சு படபடக்க வீட்டுக்குள்ளே இங்கு மங்கும் அலைந்து கொண்டிருந்தாள்.

திருநல்லூர் பஸ் நிலையம் எப்பொழுதுமே கலகலப்பாக காணப்படும். திருச்சிக்கும் சேலத்துக்கும் இடையே ஓடுகிற பஸ்கள் அனைத்தும் கால்மணி நேரமாவது அந்த நிலையத்தில் நிற்பது வழக்கம். அதுவும் விடியற்காலையிலேயே கிளம்பிவிடும் பஸ்கள் அந்த நிலையத்துக்கு அருகிலிருந்த ஹோட்டல்களையும் டீக்கடைகளையும் நம்பிப் புறப்படுவது வழக்கம்.

வேலுசாமியின் டீக்கடை வாசலில் கிடந்த பெஞ்சின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான் சிங்காரம்.

சிங்கிள் டீயை வாங்கிக் குடித்து விட்டு, இடுப்பிலிருந்த வெற்றிலை பாக்கு நிறைந்த ஓலைப் பையை எடுத்தான்.

வெற்றிலை போட்டுக் குதப்பி உட்கார்ந்த இடத்திலிருந்து எதிரே கிடந்த வெள்ளைக் குத்துக்கல் மீது பல தடவை 'சதக் சதக்'கென்று துப்பி அலுத்துப் போனான்.

அரை மணிக்கு ஒரு தடவைதான் பஸ்கள் வருவது வழக்கம். அந்த அரை மணி இடைவெளி ஆயிரம் யுகமாக அவனுக்குப் பிரமிப்பைக் கொடுத்தது.

ஒவ்வொரு பஸ் வரும்போதும், தலையில் இறுக்கமாகக் கட்டிக் கொண்டிருந்த முண்டாசை அவிழ்த்துப் பரபரப்புடன் இடுப்பில் கட்டிக் கொண்ட, சாலைக்குள் ஓடினான்.

ஊறுகாய்ப் பாட்டிலைக் குலுக்குவது போல் உடம்பைக் குலுக்கிக் கொண்டு நின்ற பஸ்ஸிலிருந்து இறங்கிய, பயணிகளில் ராஜ்குமாரைக் காணவில்லை.

'விடியற்காலையிலேயே ரெயில் வண்டி திருச்சி ஜங்ஷனுக்கு வந்துடுமே? பல் துலக்கி அங்கேயே காப்பி பலகாரத்தை முடிச்சுக் கொண்டாலும் ஐயா இந்நேரம் வந்திருக்கணுமே! திருச்சிக்கும் திருநல்லூருக்கும் இரண்டு மணி ஓட்டந்தானே? ஒரு சமயம் டாக்ஸிலேயே வராரா? வந்தாக்கூட இந்தப் பக்கமாகத்தானே டாக்ஸி போகணும்?'' கவலையுடன் தயங்கியபடி, பெஞ்சில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

மறுபடியும் டீ சாப்பிட்டான். வெற்றிலை போட்டுத் துப்பினான். வெயில் ஏறிக் கொண்டு போனது, டீக்கடைக் கடியாரத்தில் மணி பன்னிரண்டு ஆகியது. சாலையைச் சலிப்புடன் பார்த்து விட்டு எழுந்திருந்தான்.

'ஊகும். இனிமேல் பஸ்ஸில் வரமாட்டார். பட்டணத்திலே ரெயிலைத் தவற விட்டிருக்கிறார். அதான் இப்படி' தனக்குள்ளே பேசிக்கொண்டு மெல்ல வீட்டை நோக்கி நடந்தான்.

ராஜ்குமாரை அழைத்து வராதது அவனது தவறு போன்ற குற்ற உணர்வால் தளர்ந்தபடி உள்ளே நுழைந்தான்.

'விடிந்ததும் விழுந்து அடித்துக் கொண்டு வந்த விட்டான் என்று சம்பந்தி அம்மாள் தப்பாக நினைத்துக் கொள்ளக் கூடாது' என்று தம் ஆசையைக் கட்டுப் படுத்திக் கொண்டார் குருநாதன்.

பகல் உணவை அவசரமாக முடித்துக்கொண்டு, குடையை எடுத்துக் கொண்டு, பதை பதைக்கும் வெயிலில் புறப்பட்டார். மருமகனுக்குப் பிடிக்கும் என்று ஆசையுடன் தம் மனைவி செய்து வைத்த கடலை உருண்டை, கை முறுக்கு நிறைந்த தூக்குக் கூடையை மறக்காமல் எடுத்துக் கொண்டார்.



''நான் போய் முதல்லே கண்டுட்டு வரேன்; நாளை வாக்கிலே நீ போய்ப் பார்க்கலாம்.'' மனைவியிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டார்.

மருமகனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில், பஸ்ஸுக்குக் காத்திருக்கப் பொறுமை இல்லை அவருக்கு. 'கொஞ்ச தூரந்தானே! நடந்தாப் போச்சு!' என்று கிளம்பி விட்டிருந்தார். கிராமத்து வாசி அவர். நடப்பது சிரமமாகத் தோன்றவில்லை.

மருமகள் உதவியுடன் குளித்து விட்டு, சுத்தமான புடைவை ஒன்றை உடுத்திக்கொண்டு கோதுமைக் கஞ்சியை ஒரு வாய் மட்டும் பருகி விட்டு, பஞ்சரத்தினம் நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள்.

வாயில் பக்கம் ஒரு சிறு சலசலப்புக் கேட்டாலும் ஆவலுடன் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்து அவளுக்குக் கழுத்து வலித்தது.

மகனது முகத்தைப் பார்க்க முடியாமல் பாழும் பார்வை சதி செய்து விட்டிருந்தது. பரவாயில்லை. குழந்தையின் குரலைக் கேட்டு அவனைத் தொட்டுப் பார்த்து, 'ராஜா, வாடா என் கண்ணே!'' என்று மார்போடு அணைத்துக் கொண்டு, 'இனிமேல் என்னை விட்டு எங்கேயும் போயிடாதே. இந்த நெஞ்சுத் தாங்கிக் கொள்கிற வலிமை இல்லேப்பா' என்று கூற வேண்டும் என்கிற பதற்றம் அவளுக்கு.

''அகல்யா, சிங்காரம் வருகிறானா பார்! ராஜா பயணத்திலே களைச்சுப் போய் வருவான். வெந்நீரைத் தயாரா வச்சிரு.'' அடிக்கொரு தடவை மருமகளை ஏதாவது சொல்ல அழைத்துக் கொண்டிருந்தாள்.

அகல்யா மட்டும் என்ன? இருப்பே கொள்ளாமல், உள்ளுக்கும் வாசலுக்கும் கால் ஓய நடந்துகொண்டிருந்தாள்.

பொழுது உச்சியை அடைந்த சமயம், உற்சாகம் குன்றி, முகம் சோம்பி சிங்காரம் மெல்ல நடந்து தனியே உள்ளே வந்ததைக் கண்டு திகைத்துப் போனாள்.

''இதுவரை ஐயாவைக் காணல்லே. ஒரு சமயம் டாக்ஸியிலேயே வராரோ என்னவோ?'' அகல்யாவின் வாடிய முகத்தைப் பார்க்கப் பிடிக்காமல், பின் பக்கம் சென்று விட்டான் அவன்.

கொஞ்ச நேரம் சென்றதும், வாசல் கதவு தட்டப் பட்டதைக் கேட்டு, அகல்யா ஒரே ஓட்டமாக ஓடித் திறந்தாள். மூச்சிரைக்க வெளியே நின்ற தந்தையைக் கண்டு, ''நீங்களா அப்பா, வாங்க'' என்று அழைத்தாள்.

அவள் குரலில் தொனித்த ஏமாற்றமும், முகமும் அவருக்கு விஷயத்தைச் சொல்லி விட்டன.

''மாப்பிள்ளை இன்னமும் வரலியா அம்மா?''

''தந்திப் பிரகாரம் இந்நேரம் வந்திருக்கணும். ஏன் வரலையோ தெரியலை. ரொம்பக் கவலையா இருக்குப்பா.'' தந்தையைக் கண்டதும் துக்கம் பொங்கி வந்ததுஅவளுக்கு. ''ஏன் இன்னமும் வரலே அப்பா?'' கண் கலங்கத் திணறினாள்.

''சே! சே! கண்களைத் துடைச்சுக்கோ. தாமதத்துக்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ரெயில் தாமதமா வந்திருக்கலாம். பஸ்ஸைத் தவற விட்டிருக்கலாம். டாக்ஸி கிடைக்காமத் திண்டாடலாம். அந்தப் பிள்ளை எப்படித் தவிச்சுக்கிட்டிருக்கோ? என்னம்மா நீ, விவரம் தெரியாத பச்சைக் குழந்தையாட்டமா.'' கடிந்து கொண்டு உள்ளே வந்தார்.

''யாரு சம்பந்தியா? வாங்கோ, உட்காருங்க. உங்க கிட்ட பேசினாலாவது கொஞ்சம் தெம்பு ஏற்படலாம் போல இருக்கு. காலையிலிருந்து நாற்காலியிலே உட்கார்ந்த நான்



இடத்தை விட்டு நகரலே. மூணு வருஷமாப் பிரிஞ்சு இருந்தேன். உண்மைதான். ஆனால், இந்த மூணு மணி நேரத்தை என்னால தாங்கிக்க முடியலை. பெத்த மனசு பித்துன்னு சொல்றது நிசந்தான். அந்தப் பிள்ளைக்கு இதெல்லாம் புரியுதோ என்னவோ?'' தழு தழுத்தாள் பஞ்சரத்தினம்.

''என்ன ஆயிடுச்சு? இப்ப இரண்டு பேரும் மனசைத் தளர விட்டிருக்கீங்க? ராத்திரிக்குள்ளே தம்பி வந்துடும். பயப்படாதீங்க. ஏதாச்சும் கொஞ்சம் சாப்பிடுங்க'' சமாதானப்படுத்தினார் குருநாதன்.

இருட்டும் வரை அவர் அங்கே இருந்தார். தெருவை எட்டிப் பார்த்து அவரும் சலித்துப் போனார்.

''ரெயிலைத் தவற விட்டிருக்காப்பலே இருக்குது. கவலைப்படாதேம்மா. நாளைக்குக் கட்டாயம் மாப்பிள்ளை வந்து சேர்ந்துடுவார். அவர் வந்ததும் கொஞ்சம் சிங்காரத்துக்கிட்ட தகவல் அனுப்பிவை. உங்கம்மாவும் மருமகனைப் பார்க்கத் துடிச்சுக்கிட்டு இருக்கா.'' விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

இரண்டு தினங்கள் நகர்ந்தன. கலகலவென்றிருந்த வீட்டிலே பயங்கர மௌனம் குடிகொண்டு விட்டிருந்தது. ஏன் ராஜ்குமார் இன்னும் வரவில்லை? மருமகளிடம் கேட்கக் கூட பஞ்சரத்தினத்துக்கு அச்சமாக இருந்தது.

என்ன நேர்ந்து விட்டது? உடம்புக்குச் சுகமில்லையா? தன் கவலைகளை மாமியாரிடம் பகிர்ந்துகொள்ள அகல்யாவுக்குப் பயமாக இருந்தது.

மூன்றாவது நாள், குருநாதன் கவலையைத் தாங்க முடியாமல் விசாரித்துப் போக வந்தார்.

தந்தையைக் கண்டதும் அகல்யாவுக்கு அழுகை வந்து விட்டது.

''அப்பா! அவருக்கு என்னவோ ஆயிடுத்து. அதனால் தான் வரலே.'' வாயிலிலேயே மகள் தந்தையைக் கண்டு விசும்பினாள்.

''சே சே! அமங்களமா எதுவும் பேசாதே!'' தந்தை அலட்டிக்கொண்டு உள்ளே வந்தார்.

''வாங்கோ. உட்காருங்கோ. நீங்க வந்தது நல்லதாப் போச்சு. இந்தப் பொண்ணு ரெண்டு நாளாப் பட்டினி. ஏதாவது சாப்பிடச் சொல்லுங்கோ. என்னால் பார்க்க முடிஞ்சா நான் எழுந்து கட்டாயப்படுத்தி ஒரு வாய் சாப்பிட வைச்சிருப்பேன். நீங்க ஒரு காரியம் செய்யுங்கோ. பணச் செலவைப் பத்தி யோசிக்காதீங்க அக்கறை இல்லை. ஒரு நடை எங்களுக்காகப் பட்டணம் போய் என்னன்னு பார்த்துட்டு வாங்களேன். இந்தப் பையன் இப்படி ஒரு காரியம் செய்வானா? மத்தவங்க மனசு கஷ்டப்படுமேன்னு நினைப்பு வேண்டாமா?'' பஞ்சரத்தினம் புலம்பினாள்.

''மாப்பிள்ளை மேலே குத்தமில்லே. தாமதத்தின் காரணத்தை விளக்கித் தந்தி அனுப்பிச்சிருப்பார். இப்போ தந்திதான் தாமதமாயிடுச்சு.'' அவர் சொல்லி முடிப்பதற்குள் வாயிலில் சைக்கிள் மணி ஒலித்தது.

அகல்யா ஒரே பாய்ச்சலாக விரைந்தாள்.

''அப்பா! உங்க வாய்க்குச் சர்க்கரைதான் போடணும். அவர் நாளைக்கு வரார்.'' ஆனந்தத்துடன் கூச்சலிட்டாள்.

பஞ்சரத்தினம் பரபரப்புடன் எழுந்து நின்றவள், பேசமுடியாமல் நாற்காலியில் தொப்பென்று உட்கார்ந்து விட்டாள். அவள் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது. மூச்சுத்திணறியது.



## 18

திருச்சி ஜங்ஷனில் இறங்கி வெளியே வந்த காமேஷ் உடனடியாக ஒரு டாக்சியை எடுத்துக் கொண்டு ஊருக்கு விரையவில்லை. பஸ்ஸில்தான் பயணப்பட விரும்பினான். அருகிலிருந்த ஓர் ஒட்டலுக்குள் சென்று முதலில் வயிற்றுப் பாட்டைக் கவனித்துக் கொண்டான்.

பூரி மசாலாவுடன் சூடான காபி இறங்கியதும், மூளை விறுவிறுக்கத் தொடங்கியது.

இரண்டு மணி பயணத்தின்போது அவன் எல்லா வற்றையும் தீவிரமாகச் சிந்தித்துத் தயாராக இருக்க வேண்டும். இனி அவன் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் சர்வ ஜாக்கிரதையானதாக இருக்க வேண்டும். சந்தேகம் தட்டாமல் செயல்பட வேண்டும். தவறுகள் ஏற்படவே கூடாது.

பெட்டிகளை பஸ் நிலையம் வரை சுமந்து வந்த பையனுக்குக் கூலி கொடுக்கச் சட்டைப் பையிலிருந்த பர்ஸைத் துழாவும் போது, ''என்ன சார்! சௌக்கியமா? இப்பத்தான் வரீங்களா? நம்ப ஊரை மறந்துட்டீங்களோன்னு நினைச்சேன்.'' பற்களைக் காட்டிய காக்கிச் சட்டைக்காரனைக் கண்டு திடுக்கிட்டுப் போனான்.

அந்த இளைஞன் அவன் ஏறவிருந்த பஸ்ஸின் கண்டக்டர். அவ்வளவுதான் தெரிந்தது. இத்தனை நெருக்கமாக உறவு கொண்டாடித் தொலைக்கிறானே? யார் இவன்? ராஜ்குமாரின் சொந்தக்காரப் பையனா? கரும் பூனையாக இவன் எங்கே வந்து முளைச்சான்? காமேஷுக்கு உள்ளூறச் சீற்றம்.

''ஊரோடயே இப்போ வந்துட்டேன். நீயும் சௌக்? யெந்தானே?'' சமாளிக்க முயன்றான் காமேஷ்.

''நீங்க வரப்போவது தெரிஞ்சிருந்தா எனக்கும் ஒரு காமிரா வாங்கிட்டுவரச் சொல்லியிருப்பேன். நீங்க மறுக்காம வாங்கிட்டு வந்திருப்பீங்க.'' காமேஷின் கழுத்திலே தொங்கிய காமிராவை ஆவலுடன் பார்த்தபடி சொன்னான் அவன்.

''செஞ்சிருக்கலாமே, என் கடிதாசி போடலே?''

''இன்னும் ஒருதடவை அந்தப் பக்கத்து ஊர்களுக்கு வேலைக்குப் போவீங்க இல்லையா? அப்போ மறக்காம எழுதுவேன்? வாங்கிட்டு வரணும்.'' சிரித்துக் கொண்டே அந்த வாலிபன் பெட்டிகளைத் தூக்கி உள்ளே ஏற்ற உதவினான்.

நல்ல வேளை! அதற்குப்பின் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. பயணிகளுக்குச் சீட்டைக் கிழித்துக் கொடுத்துச் சில்லறைகளைச் சேகரித்துக் கொண்டு எதிரே இருந்த வெற்றிலை பாக்குக் கடையில் ஒரு கலர் வாங்கி குடித்து விட்டு வேகமாக வந்தான். பஸ்புறப்படுகிற நேரம். 'ரைட்....ரைட்' என்று கத்திக் கொண்டே வழி காட்டியபடி பின்னால் தொத்தி ஏறிக் கொள்ளத்தான் நேரம் இருந்தது.

மீதிப் பயணிகளுக்கும் சீட்டு வழங்கிவிட்டு அருகில் வந்து மறுபடியும் தொண தொணக்கப் போகிறானே என்று காமேஷ் கண்களை மூடிக் கொண்டு ஆசனத்தில் சாய்ந்து கொண்டு விட்டான். இடைஇடையே மெல்லக் கண்களைத் திறந்து ஜன்னல் வழியே போகும் இடத்தை ஆராய்ந்தான். வலது பக்கத்திலே பசும்பாய் விரித்தாற் போல் நெற்பயிர், கண்ணுக்கெட்டிய தூரம்வரை வயல்கள்... அதற்குப் பின்னர் வானம். இடது பக்கத்திலே இரு கரையும் தொட்டுக்கொண்டு கம்பீரமாக நகர்ந்த அகண்ட காவேரியின் நீர்ப்பரப்பு. தண்ணீரைக் கண்டதுமே அவனுக்குள் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. அலை மடிப்புகளுக்கிடையே மறைந்து போன ராஜ்குமாரின் நினைப்பு நெஞ்சை உறுத்தவே, சட்டென்று



பார்வையை வயல்களின் பக்கம் திருப்பினான். சில்லென்று ஜன்னல் வழியே குளிர் காற்று வேகமாக வீசி விட்டது போன்று, அவன் உடல் சில கணங்கள் வெடவெடவென்று நடுங்கியது. தன் அச்சத்தை உதறுகிறவன் போல் பலமுறை தொண்டையைச் செருமிக்கொண்டான்.

பஸ் வேகமாக ஓடியது. நடுநடுவே பயணிகள் சிலரை இறக்கி விடவும், சிலரை ஏற்றிக் கொள்ளவும் நின்றது. ''திருநல்லூர்!'' என்று கத்திய கண்டக்டர் அருகில் வந்தபோது, பஸ் குலுக்கலுடன் நின்றது.

சாமான்களை இறக்க உதவிவிட்டு கண்டக்டர் அவனைப் பார்த்து முறுவலித்தான். ''பதினைஞ்சு நிமிஷந் தான் இங்கே பஸ் நிற்கும். அதுக்குள்ளே ஒரு டீ ஒரு பன் ஏதாச்சும் சாப்பிடணும். பயணிகளைக் கவனிக்கணும். நேரம் கிடைச்சாப் பின்னால் ஒரு சமயம் வந்து பார்க்கிறேன்.'' விடை பெற்றுக் கொண்டு, காதிலே பென்சிலும் கையில் டிக்கெட் புத்தகமுமாக டீக்கடைப் பக்கம் நடையைக் கட்டினான்.

'அப்பாடா!' என்று நிம்மதியுடன் பெருமூச்சு விட்டபடி தன்னைச் சுற்றிலும் பார்த்துக் கொண்டான் காமேஷ்.

பெரியதனக்காரர் கனகசபை வீடு எங்கே இருக்கிறது என்று கேட்டால் வம்பாகி விடுமே? ராஜ்குமாருக்கு அவன் வீடு இருக்கும் இடங்கூடத் தெரியாதா? அதிசயமா இருக்கே' என்று ஆரம்பிக்கும் பேச்சு சந்தேகத்தில் போய் முடிந்து விடும். அதற்கெல்லாம் இடம் கொடுக்கவே கூடாது. குழப்பத்துடன் மறுபடியும் சுற்றும் முற்றும் பார்த்தான்.

முண்டாசை அவிழ்த்து இடுப்பில் கட்டிக் கொண்டு இன்னொரு காக்கிச் சட்டைக்காரன் வயதானவன் டீக்கடை வாசலிலிருந்து விரைந்து வருவதைக் கண்டான்.

''சிங்காரம், சீக்கிரம் போ. ஐயா எத்தனை நேரம் காத்துக்கிட்டிருப்பார்?'' யாரோ கத்தியது கேட்டது.

''இவன் தான் அந்த நாளிலிருந்து வீட்டில் வேலை செய்யும் சிங்காரமா?''

''வந்திட்டீங்களா யஜமான்? முதல் நாள் தந்தி கிடைச்சப்போ நான் இங்கே வந்து காலைப் பொழுது முழுவதும் உட்கார்ந்துகிட்டு இருந்தேன். வீட்டிலே எல்லோருக்கும் கவலையாயிடுச்சு. இன்னிக்கு மட்டும் நீங்க வராட்டி நானே ஒரு பயணம் பட்டணம் வந்து பார்க்கிறதுன்னு முடிவு கட்டியிருந்தேன்.''

''அப்படியா?'' மெல்லச் சிரித்தான் காமேஷ். கிழவனுக்குக் கண் பார்வை சரியாகத்தானே இருக்கிறது. ராஜ்குமார் என்றுதானே அவனை எண்ணிக் கொண்டிருக் கிறான்?

அவனது சந்தேகத்தை நிவர்த்திப்பதுபோல் சிங்காரம் கேட்டான். ''முன்னைவிடக் கொஞ்சம் இளைச்சுப் போயிட்டீங்க. அந்த ஊர்ச்சாப்பாடு ஒத்துக்கலையா? உதடுகள் கூடக் கறுத்துப் போச்சே? அந்த ஊரிலே ரொம்ப உஷ்ணமாமே? நல்லவேளை பத்திரமா வந்து சேர்ந்துட்டீங்க. முத்துமாரியம்மா விழா வருது. அந்தச் சமயத்திலே நீங்க வீட்டிலே இருக்கிறது நல்லதாப் போச்சு.'' பெட்டிகள் இரண்டையும் ஒன்றன் மேல் ஒன்றாகத் தலைமீது அடுக்கிக் கொண்டான். ''வேறே சாமான் ஒண்ணுமில்லீங்களே' அந்தப் பையை இப்படிக் கொடுங்க. நான் தோளில் மாட்டிக்கிட்டுத் தூக்கியாறேன்'' பையை வாங்கித் தோளில் மாட்டிக் கொண்டான். ''இப்பப் போகலாங்களா?'' கேட்டு விட்டு சிங்காரம் முன்னே நடந்தான்.

'வீடு அருகில் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் சிங்காரம் வண்டியைக் கட்டிக்கொண்டு வந்து அழைத்துப் போயிருப்பான்.' என்று எண்ணியபடி அவனைத் தொடர்ந்தான் காமேஷ்.



சேலத்துக்கு ஒரு நாள் போயிட்டு வருவதற்குள், 'சிங்காரம்! அம்மா எப்படி இருக்காங்க? சின்னம்மா என்ன பண்ணிக்கிட்டிருக்காங்க? என்று பஸ்ஸிலிருந்து இறங்கும் போதே கேட்டுவிடும் மனுஷன், மூணு வருஷம் கழிச்சு வந்திருக்கிறார். வீட்டைப் பத்தியோ, பெத்தவளைப் பத்தியோ ஒரு வார்த்தை கேட்கலையே? வெளியூர் போனாலே இப்படியா மாறிடுவாங்க?' பெருமூச்சுடன் சிங்காரம் நடந்தான்.

''அத்தை,அவர் வந்துட்டார்.'' கூவிக்கொண்டு உள்ளே சென்ற அகல்யா, பூஜையறைக்குள் சென்று குல தெய்வத்தின் படத்தின் முன் விழுந்து கும்பிட்டாள். உணர்ச்சி வசத்திலே அவள் உடம்பு நடுங்கியது. கண்களில் நீர் புரண்டது. சமாளித்துக் கொண்டு சமையலறைக்குள் விரைந்தாள். அவசர மாக பாலை அடுப்பில் ஏற்றிச் சூடாக்கத் தொடங்கினாள். ஹாலில் நாற்காலியில் அமர்ந்திருந்த கிழவியை உள்ளே நுழையுமுன்பே கவனித்து விட்டான் காமேஷ். காலணிகளை நடையில் கழற்றி வைத்து விட்டு, மெல்ல நடந்து உள்ளே வந்தான். இந்த இடத்தில் ராஜ்குமார் என்ன செய்திருப்பான்? 'அம்மா! என்று அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு ஆர்ப்பரித்திருப்பானா?' அவனுக்கு ஒரு சிறு குழப்பம்.

காலடி ஓசையைக் கேட்டுத் திரும்பினாள் பஞ்சரத்தினம் பார்வையை இழந்த அவளது கண்கள் பரக்க விழித்தன.

''ராஜா! வந்துட்டியாடா என் கண்ணு! இப்படி வா. உன் முகங்கூடத் தெரியலையே. கிட்ட வாப்பா.'' கிழவி பதறிக் கொண்டு கைகளை நீட்டிக் கூவி அழுதாள்.

குற்ற உணர்விலே தள்ளாடிப் போன காமேஷ் அவள் அருகே சென்று மெல்ல அவள் கையைத் தொட்டான். பஞ்சரத்தினம், அவனை இழுத்துத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டு 'ஓ'வென்று அழுதபடியே, கையால் அவன் முடி,

மூக்கு, கண்கள், மோவாய் என்று மெல்லத் தொட்டுப் பார்த்தாள்.

"நிஜந்தான். என் ராஜா வந்துட்டான். இனி எனக்குப் பார்வை வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, யமன் வந்து கூப்பிட்டாலும் பயப்படமாட்டேன். என் கண்ணு கையாலே கொள்ளி வாங்கிட்டு நிம்மதியா..."

"அத்தை! இதெல்லாம் என்ன பேச்சு?" இனிமையாக ஒலித்த குரலைக் கேட்டுத் திரும்பிய காமேஷ் அயர்ந்து போய்விட்டான். காஞ்சிபுரம் பட்டுச் சேலை சரசரக்க, தலையில் கட்டாகச் சூட்டிக் கொண்டிருந்த மல்லிகை மணக்க, நடந்து வந்த அகல்யா, அருகிலிருந்த மேஜை மேல் கையில் கொண்டு வந்திருந்த வெள்ளி டம்ளரை வைத்தாள்.

'அத்தை காலையிலிருந்து ஒண்ணும் சாப்பிடலே. கோதுமைக் கஞ்சி வைச்சிருக்கேன், உங்க கையாலே குடுங்க. இப்போ சாப்பிடுவாங்க. வெந்நீர் தயாரா இருக்கு. முதல்லே தலைமுழுகிட்டுக் கோயிலுக்குப் போயிட்டு வரணும்" என்றாள்.

விழுங்கிவிடுவாள் போல் சிவந்து போன அவள் முகத்தை வியப்புடன் உற்றுப் பார்த்தான் காமேஷ். அவன் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

'இத்தனை பெரிய வீடு, இத்தனை அழகான மனைவி. அநுபவிக்கக் கொடுத்து வைக்காத பயல் போய்விட்டான். கொடுத்து வைச்சிருக்கேன். எல்லாத்தையும் அநுபவிக்க வந்திருக்கேன்.' பல்வேறு உணர்வுகளிலே பொங்கிப் புரண்ட அவன் நெஞ்சு விம்மித் தணிந்தது. மற்றும் ஒருமுறை அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டுக் கஞ்சி டம்ளரைக் கையில் எடுத்துப் பஞ்சரத்தினத்திடம் கொடுத்து, "சாப்பிடுங்கம்மா" என்றான்.



சற்றுத் தூர நின்று கவனித்த அகல்யாவின் நெஞ்சு துணுக்குற்றது. வலது கை ஆள்காட்டி விரல் நுனியிலும் நடுவிரல் நுனியிலும் பழுப்பு நிறக்கறை. சிகரெட் பிடிக்கத் தொடங்கியிருக்கிறாரே? புதுப் பழக்கம்! முத்துமாரிக்குத் தீ மிதிக்க விரதமிருந்து காப்புக்கட்டிக் கொள்ளணுமே. இந்தப் பழக்கம் ஒத்து வராதே?

திடீரென்று அவள் மனத்தில் விவரம் புரியாத வேதனை கவிந்து கொண்டது; பஞ்சரத்தினம் கஞ்சியைக் குடித்து விட்டு அவனது கரங்களைப் பிடித்துத் தன் கன்னத்தோடு அழுத்திக் கொண்டாள். "என் வயிறு நிறைஞ்சு போச்சு. மனசும் குளிர்ந்து போச்சு" என்றாள் மகிழ்ச்சியுடன்.

சிங்காரம் உள்ளே வந்து நின்று கொண்டு தலையைச் சொறிந்தான். "உங்க பெட்டிகளைக்கொண்டு மாடியிலே வைச்சுட்டேன், குளிக்க எல்லாம் தயாராக இருக்கு. அதுக்கு முன்னாடி கூழைப் பசுவை வந்து கொஞ்சம் பார்த்துடுங்க."

கூழைப் பசு? இது என்ன புதுக் கதை?

"உன்னுடைய செல்லக்குட்டி கன்னு போட்டிருக்கு. இன்னியிலிருந்து அதனுடைய பாலைத்தான் வீட்டிலே உபயோகப்படுத்த போறோம். போய் எட்டி பார்த்துட்டு வா. வாயில்லா ஜீவன்! பிறகு தலை குளிச்சிட்டுக் கோயிலுக்குப் போயிட்டு வந்து சாப்பிடு. நிறைய ஓய்வு எடுத்துக்கோ." தாயார் கட்டளை இட்டாள்.

"வாங்க, கொட்டிலிலேதான் கட்டியிருக்கு" சிங்காரம் முன்னே செல்ல, அவன் பின்னே தயக்கமாகக் காமேஷ் நடந்தான்.

"கொஞ்சம் முதுகைத் தட்டித் தடவிக் கொடுங்க. நீங்க வரத் தாமதமாயிட்டப்போ இதுக்குக் கூடப் புரிஞ்சுடுச்சு. அம்மா... அம்மான்னு கத்திக்கிட்டே இருந்தது.

பயந்துட்டேன் நான்'' சிங்காரம் பேசிக்கொண்டே கொட்டிலில் நின்ற பசுவின் அருகில் போய் முதுகைத் தட்டினான்.

பக்கத்திலே அவன் இருக்கிறான் என்ற துணிவிலே வேண்டா வெறுப்பாகப் பசுவின் முதுகிலே காமேஷ் கையை வைத்தான்.

அவ்வளவுதான், ஆக்ரோஷமாகக் கொம்புகளை ஆட்டிக்கொண்டு சிறி, அவனை முட்டித் தள்ள மூர்க்கமாகத் திரும்பியது செல்லக்குட்டி. நடுநடுங்கிப் போய் விட்டான் காமேஷ். ஒரே பாய்ச்சலில் ஓடிச் சென்று வெகு தொலைவில் நின்று கொண்டான்.

''கொஞ்ச நாளாச்சு இல்லையா? மறந்திருக்கும். பேர் சொல்லிக் கூப்பிட்டுத் தொட்டுப் பாருங்க. அடங்கிடும்.'' சிங்காரம் வற்புறுத்திய போது, காமேஷுக்குக் கடுங்கோபம் பொத்துக்கொண்டு புறப்பட்டு விட்டது. ''ஷட்அப்! உன் வேலையைப் பார்த்துட்டுப்போ. அதைச்செய், இதைச் செய்யுன்னு நீ எனக்குச் சொல்லத் தேவையில்லை.'' எரிச்சலாக இரைந்து விட்டு உள்ளே திரும்பிவிட்டான்.

''சூழைப் பசுவைப் பார்த்தியா? உன் செல்லமாச்சே அது!''

தாயார் கேட்டு முடிக்குமுன் பின்னால் வந்த சிங்காரம் பதிலளித்து விட்டான்.

''அதென்னவோ, ஐயா தொட்டதும் சீறிக்கிட்டு முட்ட வந்துடுச்சு. அதுக்கு ஏன்தான் அப்படி ஒரு வெறியோ தெரியலே.''

சமையலறையில் சோற்றைக் கிளறிக் கொண்டிருந்த அகல்யா, கைவேலையைப் போட்டுவிட்டுத் திடுக்கிட்டு நின்று விட்டாள்.



பழக்கமாக நாய்க்குட்டி போல விளையாடும் பசு முட்ட வந்ததா? ஏன்? சொல்லத் தெரியாத ஒரு கலவரம் அவளுக்கு. அடுத்தபடியாகத் தலையை முழுகிவிட்டு காமேஷ் துவாலையினால் தலையைத் துவட்டிக் கொண்டே இடுப்பில் ஈரத் துணியுடன் மாடிப் படிகளில் விரைவதை உள்ளிருந்த படியே கவனித்துத் திகைத்துப் போனாள்.

குளியலறையிலிருந்து சுத்தமாக உடுத்திக் கொண்டு தானே வெளியே வருவார். இப்படி ஈரத் துண்டோ தண்ணீர் சொட்டச்சொட்ட நடக்கிறாரே? இன்னும் என்னென்ன புதுப் பழக்கம் ஏற்பட்டிருக்கின்றனவோ? கடவுளே!

பின்னர் சிங்காரத்துடன் கோயிலுக்குப் போய் விட்டுக் காமேஷ் திரும்பி விட்டிருந்தான். ''அகல்யா!'' அதிகாரமாக மாடியிலிருந்து கத்தி அவளை அழைத்தான். காய்ச்சிய பாலைத் தம்ளரில் நிறைத்துக் கொண்டு அகல்யா வெளியே வந்தாள்.

''எத்தனை தடவை கூப்பிடறது? இங்கே வா!'' மறுபடியும் அதட்டலாக மாடியிலிருந்து அவன் குரல் கேட்டது.

மூன்று வருஷங்களுக்குப் பின்னர் ஆசையுடன் அணுக வேண்டியவன். அச்சத்துடன், 'ஏன் இப்படி?' என்ற திகிலுடன் மெல்ல மாடிப் படிகளில் ஏறினாள்.

## 19

சிங்காரத்துடன் அருள்மிகு திரு முத்துமாரி கோவிலுக்கு நடந்து போய் விட்டு, அவன் சிறிது பொழுது முன்புதான் வந்து மாடியறையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுக்காக அம்மனுக்குத் தீபாராதனை காட்டி விட்டு, கற்பூரத் தட்டுடன் அருகில் நெருங்கினார் அர்ச்சகர்.

காமேஷின் நெஞ்சம் படபடத்தது. 'இந்த மனிதர் என்ன சொல்லப் போகிறார்?' எதிர்பார்ப்பில் துடிப்பு.

''இன்னிக்குக் காலையில்தான் வந்தாப்பிலயா? பிரயாணமெல்லாம் சௌகர்யமா இருந்துதா? எல்லாம் அம்பாளின் கிருபை. அவள் இல்லாமல் அணுவளவும் அசையாது. விழா சமயத்துல சரியா வந்துட்டீங்க. ஆச்சரியம் இல்லையா? கொஞ்சம் இளைச்சுப் போயிருக்கீங்க. வீட்டுச் சாப்பாடு ஒரு நாலு நாள் சாப்பிட்டா உடம்பு முன்னைப் போல் நல்லாயிடும்.'' படபடவென்று பேசியபடியே பற்களைக் காட்டினார் அர்ச்சகர். ஒரே வெற்றிலைக் காவி.

காமேஷிடன் எத்தனையோ வேண்டாத பழக்கங்கள் இருந்தன. ஆனால் மற்றவர்களது சில போக்குகள் அவனுக்குப் பிடிக்காதவை. வெற்றிலை பாக்குப் போட்டுக் குதப்பி அதைத் துப்புவது. காவிக் கறை ஏறிய அவரது பற்களைப் பார்க்கச் சகிக்காமல் ஜோதியை வணங்கிவிட்டுத் திரும்பினான்.

''இந்தாங்க. என்ன இப்படி மறந்திட்டீங்க? நீங்க வந்ததும் காப்புக் கட்டிக்க வேணாமா?''

''இதென்ன கூத்து!'' அதிர்ந்து போய் நின்றான். அவன் சிங்காரம் தன் மடியில் பத்திரமாக வைத்திருந்த காகிதப் பொட்டலத்தை எடுத்தான்.

''அம்மா கொடுத்தனுப்பினாங்க. உங்க கையாலே கட்டி விடுங்கன்னு சொன்னாங்க!'' தேவியின் பாதத்தில் வைத்துப் பக்தி சிரத்தையுடன் வாங்கிப் போயிருந்த அந்தக் கங்கணத்தை அகல்யா சிரத்தையுடன் சிங்காரத்திடம் கொடுத்தனுப்பி விட்டிருந்தாள்.

''அதுக்கென்ன பேஷா செய்றேன். அம்பாள் சகல சௌபாக்கியங்களையும் கொடுக்கட்டும்னு பிரார்த்தித்துக் கொண்டு கட்டறேன்'' என்று கூறியபடியே தோத்திரம்



செய்தார் அர்ச்சகர். பிறகு கங்கணத்தை எடுத்து அவன் கையில் கட்டினார்.

''சாதாரணமாப் பூக்குழியில் இறங்க ஒரு மண்டலம் விரதமா இருக்கணும். காலதேசத்தை உத்தேசிக்க இந்த விதிவிலக்கைத் தளர்த்திக்கிறது பிசகில்லே. ஒரே நாள் கடும் விரதம் இருந்து கூட பூக்குழியில் இறங்கலாம். இன்னியிலிருந்து இன்னும் சில நாட்கள் தானே இருக்கு. நீங்க கடும் விரதம் இருந்தால் போதும்'' என்று புன்னகை செய்தார் அர்ச்சகர்.

''பூக்குழி! அதன் பொருள் என்ன? யாரைக் கேட்பது? சிங்காரத்தையா அர்ச்சகரையா?'' துணிவு வராமல் எச்சிலை விழுங்கிக் கொண்டான் அவன்.

காலைக் கழுவிக் கொண்டு மாடியறையில் வந்து உட்கார்ந்தவன், ''பூக்குழின்னாரே அர்ச்சகர்! அதுக்கு இன்னும் எத்தனை நாள் இருக்கு?'' என்று பின்னாலேயே வந்த சிங்காரத்திடம் பொதுவாகக் கேட்டு வைத்தான்.

மேஜை நாற்காலி மீது படியாத தூசிகளைத் தட்டிக் கொண்டு, ஊரிலிருந்து ஐயா, தான் கேட்ட குட்டி ரேடியோ வாங்கி வந்திருக்கிறாரோ என்ற தவிப்பிலே, சிங்காரம், இன்னமும் திறக்காது அடுக்கி வைத்திருந்த பெட்டிகளைப் பார்த்தபடியே பதிலளித்தான்.

''ஐந்தாறு நாள் இருக்கு. இந்த வருஷம் தீமிதிக்க, ரொம்பத் தடபுடல் ஏற்பாடுகள் நடக்குதுங்க. போன வருஷத்தை விட அகலமாக் குழி வெட்டி தயார் செய்யறாங்களாம்.''

''தீ மிதிப்பதா, பூக்குழி என்றால் தீக்குழியா? அட பாவிகளே? இது தெரியாமல் போச்சே!' நெஞ்சில திகில் மூண்டது அவனுக்கு. சிங்காரத்தைப் பார்த்தான். இன்னும் பல

விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள ஆவல். ஆனால் வேஷம் வெளிப்பட்டு விடுமே என்ற அச்சம்.

''ஐயாவுக்கு என்னங்க? சும்மா பூந்து விளையாடு வீங்களே. பத்து வயசுக் குழந்தையா இருக்கறப்பவே. பூசாரி கையைப் பிடிச்சுக்கிட்டு, இந்த ஊரே பார்த்து அதிசயிக்கிறாப் போல, நெருப்பு மேலே நிம்மதியா நடந்து வந்தவராச்சே! வருஷா வருஷம் நீங்க நேத்திக்கடன் செய்வீங்களே?''

பாவிப் பயல் ராஜ்குமார்! என்னென்னவோ சொன்னான். இந்த ரகசியத்தை மட்டும் சொல்லவில்லையே? இப்படி ஓர் இக்கட்டிலே மாட்டிக்கொண்டு... மனம் அலைபாய ஆரம்பித்தது.

''சரி, சரி! போ நீ. அம்மா வரட்டும் பேசிக்கிறேன்.''

ஆத்திரத்தோடு அவனை விரட்டினான். எரிச்சல் அதிகமாகவே, அகல்யாவைக் கீழே இருந்து அதிகாரமாக அழைத்தான்.

மேலே வந்த அகல்யாவுக்கு ஒரு விதக் கலவரம்.

''இந்தக் கங்கணத்தை நான் ஏன் கட்டிக்கணும்? பூக்குழியில் இறக்கணும்னு என்ன நிர்ப்பந்தம்?'' என்று வெடித்தான் அவளிடம்.

பால் தம்ளரை மேஜையின் மேல் வைத்து விட்டு அகல்யா சற்று எட்டியே நின்றாள். அவளுக்குள் தாங்க முடியாத குழப்பம்.

'கடிதத்துக்குக் கடிதம் தனது வேண்டுதலைப் பற்றி எழுதி விட்டிருந்த கணவன், இப்போது மட்டும் ஏன் தடம் புரண்டு பேசுகிறான்? இது ராஜ்குமாரின் பேச்சாகத் தெரியவில்லையே?' சிந்தித்தாள்.

மஞ்சள் வண்ண நூல் சேலையில் பளிச்செனக் குங்குமம் துலங்கிய நெற்றியோடு, மல்லிகைப்பூவும் புன்னகையுமாக, வாயிற்படியருகே அவனது மனத்தை மயக்கும் அழகு நிற்பதை நிமிர்ந்து பார்த்த காமேஷின் மனத்தில் எத்தனை எண்ணங்கள்? எத்தனை சலனங்கள்?



''ஏன் நின்னுக்கிட்டே இருக்கே? இப்படி உட்காரு; கால் வலிக்காதா? ஒண்ணுமே பேச மாட்டேங்கறியே ஆசையோட உன்னைக் காண வந்திருக்கேன்.''

அவன் எழுந்து அவள் அருகில் வந்தபோது, அவள் சரேலென எட்டி நின்று கொண்டாள். உடல் முழுதும் நடுங்கியதன் காரணம், அவளுக்கே விளங்கவில்லை.

''முத்துமாரி விழாவிலே பூக்குழியில் இறங்கக் கையில் கங்கணம் கட்டிக் கொண்டு வந்தீங்க. விரதமா இருக்கணும்னு தெரியுமில்லையா? விரதம்னா சாப்பாட்ல மட்டும் இல்லை. உணர்வுகளிலும், பேச்சு, எல்லாத்திலேயும் கட்டுப்பாடு அனுஷ்டிக்கணும்.''

''நான் சென்ஸ்!'' உரக்கக் கத்தினான் காமேஷ். ''பூக்குழியில் இறங்க ஏற்பாடு செஞ்சது நீயா? என்னைக் கேக்காம ஏன் இந்த ஏற்பாடு?'' மீண்டும் கர்ஜித்தான்.

''புறப்படுவதற்கு முன், முத்துமாரி கோவிலில், நான் திரும்பிச் சுகமா வந்ததும் பூக்குழியில் இறங்கறேன் அம்மான்னு வேண்டிக்கிட்டது மறந்திட்டதா? முத்து மாரியம்மன் சந்நியைப் பத்தித் தெரிஞ்சுண்டும் தவறாகப் பேசாதீங்க.'' வியப்புடன் அவனைப் பார்த்தபடி கேட்டாள் அவள்.

'இப்படி ஒரு பயங்கரமான வேண்டுதலையுடன் ராஜ்குமார் புறப்பட்டு வந்திருந்தானா? பூக்குழியில் இறங்குவதாகக் கூறிவிட்டு நீர்க்குழியில் இறங்கி விட்டானே பாவிப்பயல்! முத்துமாரிக்கு இந்தச் சமாசாரம் தெரியாதா என்ன?'

அடக்க மாட்டாத சிரிப்பில், அவன் 'ஹோஹோ' என்று சிரித்தான். இடுப்பின் மீது இரு கரங்களையும் வைத்தபடி, சினிமா வில்லன்போல் அவளை உறுத்துப் பார்த்தான்.

''இந்தக் குக்கிராமத்திலேயே வளைய வந்தபோது, நான் பத்தாம் பசலியாக இருந்தேன். வெளிநாடு போய் உலகத்தைப் பார்த்து நல்லாப் புரிஞ்சுண்டு வந்திருக்கேன். இதெல்லாம் நாம் நம் முன்னோர் நாள் தொட்டு அனுசரிக்கும் மூடப்பழக்க வழக்கங்கள்னு எனக்குத் தோணிட்டுது. அதனால் இந்த முறை பூக்குழியில் நான் இறங்கப் போறதில்லே. விரதமும் இருக்கப் போறதில்லே. கிட்டவா, அகல்யா! ஏன் எட்டி நிக்கறே?'' கையை நீட்டிக்கொண்டு முன்னே வந்தான்.

''வேண்டாங்க. நீங்க பூக்குழியில் இறங்கப்போற சங்கதி ஊர் முழுதும் தெரிஞ்சிட்டுது. மாட்டேன்னா முடியுமா? அப்படித்திடீர்னு ஏன் ஒரு பயம் உங்களுக்கு? ஆத்தாள் மேலே நம்பிக்கை இல்லையா? இப்படியெல்லாம் மட்டமாப் பேச எங்கே கத்துக் கொண்டீங்க? எட்டி நில்லுங்க. பூக்குழியில இறங்கி வரும்வரை நான் ஒரு பொழுது. நீங்க இங்கே மாடியில்தான் தங்கியிருக்கணும். நான் அத்தையோட கீழ் அறையில் அவங்களுக்குத் துணையாகத்தான் இருப்பேன். மாடிக்குச் சாப்பாடு எடுத்துக்கிட்டு சிங்காரம்தான் வருவான். அநாவசியமா எங்கேயும் போக வேண்டிய தேவை இல்லை. மனசு இருந்தா உங்க தாயாரை நாளைக்கு இரண்டுவேளை கீழே வந்து பாருங்க. அது போதும்.''

அவள் முகத்தில் ஏன் இந்த ஆவேசம்? பேச்சில் ஏன் இப்படி ஒரு கோபம்? மஞ்சள் குருவியாக மயக்கம் கொடுத்தவள், இப்போது பத்ரகாளிபோல் கண்கள் பளபளக்கப் பயமுறுத்துகிறாளே! அப்பா! பார்வையில் ஏன் இந்த நெருப்பு! காமேஷ் அதிகார தோரணையைச் சுருட்டி வைத்து விட்டுக் குழைவான குரலில் பேசத் தொடங்கினான்.



''உனக்கு என்ன வாங்கிட்டு வந்திருக்கேன்னு நீ இன்னமும் கேக்கலையே. உனக்குப் பிடிச்ச பச்சை, மஞ்சள், ஊதா இந்த நிறத்தில் 'தான் புடைவை வாங்கிட்டு வந்திருக்கேன். பெட்டியைத் திறந்து எடுத்துத் தரேன். உடுத்திட்டுவா, பார்க்கலாம்.''

''வேணாம். இப்போ எனக்கு இதெல்லாம் தேவை யில்லை!'' கடூரமான குரலில் பட்டெனப் பதில் அளித்து விட்டதைக் கேட்டு அதிர்ந்து போனான் அவன்.

''நிச்சயதாம்பூலத்துக்குப் பச்சை வர்ண பனாரஸ் வாங்கின நினைப்பு வந்தது. ஒரு பச்சை ஷிபான் வாங்கினேன். மைசூர் போனபோது நீ ஊதா வர்ணச் சேலை உடுத்திக்கிட்டுப் புறப்பட்ட நினைப்பு வந்ததும் உடனே ஊதா நிறத்தில் ஒண்ணும் வாங்கிட்டேன். உனக்கு மஞ்சள் வர்ணம் ரொம்பப் பிடிச்சதாச்சுதே.''

அவள் எதையும் காதில் போடடுக் கொண்டதாகத் தெரியவில்லை. உணர்ச்சியற்ற கல்லைப் போல் வாசற்படி யருகிலேயே நின்றாள்.

''பாலைச் சாப்பிடுங்க. சாப்பாடு சிங்காரத்துக்கிட்ட குடுத்து விடறேன். அபிராமி அந்தாதி புத்தகம் மேஜை மேலே இருக்கு. எடுத்துப் படியுங்க. கஷ்டமா இருந்தா சீர்காழி பாடின அபிராமி அந்தாதி டேப் அலமாரியில் பத்திரமா இருக்குது. டேப் ரிகார்டரில் போட்டுக் கேட்டுக்கிடுங்க'' என்று உத்தரவிட்டாள் அவள்.

''எனக்கு எதற்கு இப்படி ஒரு சிறைவாசம்?'' என்று ஆத்திரப்பட்டான் காமேஷ்.

''உணர்வுகள் வக்கிரமா ஓடும்போது கொஞ்சம் இழுத்துப் பிடிக்கணும் பாருங்க... அதுக்குத்தான் இதெல்லாம்னு வெச்சுக்கோங்க.'' பதிலுக்குக் காத்திராமல் அவள் படி இறங்கி விட்டாள்.

அதிசயமான பெண்ணாக இருக்கிறாளே இந்த அகல்யா? கண்களில் ஏன் அந்தக் கடுமை? ஒரு சமயம் சந்தேகமோ? ஊஹூம் அப்படியானால பால் டம்ளருடன் ஏன் படி ஏறி வருகிறாள்? கொஞ்சம் விட்டுப் பிடிக்க வேண்டும்? எங்கே போய்விடப் போகிறாள்? ராஜ்குமாராக இந்த வீட்டில் வந்து உட்கார்ந்தாகி விட்டது பஸ் கண்டக்டரிலிருந்து பார்த்தவர் வரை நம்பியாகிவிட்டது. கிழவி பஞ்சரத்தினமும் நம்பி அவனைத் தழுவிக் கொண்டு அழுதாளே!

இவள் சுபாவத்தில் கொஞ்சம் முரடு. கூழைப் பசுவைப் போல் சீறுகிறாள். இருக்கட்டும். உதட்டைக் கடித்துக் கொண்டு யோசனையுடன் அறைக்குள் முன்னும் பின்னுமாக உலாவினான்.

சிறிது பொழுதில் சிங்காரம் சாப்பாட்டுத் தட்டுடன் கீழே இறங்கினான்.

''சரியாகவே சாப்பிடலே. அவருக்குப் பசியே இல்லையாம்!'' கூறியபடி தொட்டி முற்றத்தில் தட்டை வைத்தான். அகல்யா வந்து எட்டிப் பார்த்தாள். சோறும் குழம்பும் நாலாபுறமும் ஒதுக்கப்பட்டு அசிங்கமாகக் கிடந்தன. கணவனுக்காகத் தயாரித்த புடலங்காய் கூட்டு தொடாமல் கிடந்தது.

பகல் மூன்று மணி அளவில் மாமியாருக்குக் காபி கலந்து உபசரித்தாள்.

''மத்தியானமே ராஜ் நல்லாச் சாப்பிடலையாம், சிங்காரம் சொன்னான். அலுப்புப் போல் இருக்கும். உங்கப்பா கொண்டு வந்து தந்த முறுக்கும், கடலை உருண்டையும் வச்சு, கொஞ்சம் சூடாக் காபியோட கொண்டு போய்க் குடு. உன் விரதத்தைப் பத்திக் குழந்தை புரிஞ்சுக்குவான். வேலையாள் கிட்ட சாப்பாடு குடுத்து விட்டது அவன் மனசுக்கு வேதனையாயிட்டுது போல் இருக்குது. போம்மா அகல்யா.''



மாமியார் உத்தரவை அவளால் மீற முடியவில்லை. கடலை உருண்டையும் முறுக்கும் கொண்ட தட்டுடன், காபி சகிதம் மெல்ல அவனது படுக்கை அறைக்குள் நுழைந்தபோது, அவர்களது பெரிய படுக்கை மீது வேரற்ற மரம் போல அவன் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கிடந்தான். ஆழ்ந்து உறங்குகிறான் என்று, அவன் எழுப்பிய குறட்டை அறை வாயிலிலேயே அறிவித்து விட்டது.

ஓசைப்படாமல்; தட்டையும் தம்ளரையும் அருகிலிருந்த மேஜை மீது வைத்து விட்டு, அவன் மீது பார்வையை ஓடவிட்டவள், ஒரு கணம் அதிர்ந்து போய் விட்டாள். நெஞ்சு படபடக்க, துக்கம் தொண்டையை இறுக்க அவள் ஒரே ஓட்டமாக இறங்கிப் பின்கட்டிலிருந்த முற்றத் தூணை ஆதரவாகப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

''முத்துமாரித்தாயே! சோதிக்கிறியே. உன் திருவிளையாட்டுக்கு நான்தானா அகப்பட்டேன்!'' கட்டுக் கொள்ளாத் துயரத்தில், ஏனோ அவள் அழுது விட்டாள்.

## 20

மறுநாள் விடியற்காலைப் பொழுதில் பஞ்சரத்தினத்துக்குத் தாங்க முடியாத நெஞ்சு வலி வந்து விட்டது. பொறுக்க மாட்டாமல் அவள் வேதனையில் துடிப்பதைக் கண்டு பயந்து போன மருமகள் வேகமாகத் தோட்டத்துக் கதவைத் திறந்து சிங்காரத்தை அழைத்தாள்.

டாக்டர் தணிகைவேலனைக் கையுடன் அழைத்து வரப் புறப்பட்ட சிங்காரம் மூச்சிரைக்க மாடிக்கு ஓடினான்.

மாடிப் படுக்கையறை தாளிடாமல் சாத்தப்பட்டிருந்தது. மெல்லத் திறந்து கொண்டு உள்ளே சென்றான் அவன். லேசான

விடிவிளக்கொளியில் தலையணை மீது கவிழ்ந்து படுத்துக் கொண்டு ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான் காமேஷ். படுக்கையருகே நின்று கொண்டு பலமாக இருமுறை இருமினான். காமேஷ் அசைந்து கொடுக்கவில்லை. அப்படி ஒரு தூக்கம்.

மெல்லத் தோளைத் தொட்டு, ''ஐயா!'' என்று அடிக் குரலில் கூப்பிட்டான். அடித்துப் போடப்பட்டவன் போல் எஜமான் ஆழ்ந்து உறங்குவதைக் காண சிங்காரத்துக்கு மெத்த வியப்பு.

இரவில் எந்த நேரத்திலும் கதவை விரலால் தொட்டால் கூட விழித்து எழுந்து கொண்டு விடும் ராஜ்குமார். இப்போது கும்பகர்ணனைப் போல் தூங்குகிறாரே? பரபரப்புடன் தோளைப் பிடித்து உலுக்கினான்.

திடுக்கிட்டு எழுந்த காமேஷிற்கு நிலைமை புரியச் சில விநாடிகள் பிடித்தன. ''மடையா! காலங்காத்தால வந்து எதுக்கு எழுப்பினே?'' சுள்ளென்று எரிந்து விழுந்தான்.

''நான் டாக்டர் தணிகைவேலைக் கூட்டிவர ஓடணும். நீங்க சித்த கீழே இறங்கி வந்து அம்மாவைக் கவனிச்சுக் கிட்டாத்தேவலை. முன்பு வந்தது போல் அவர்களுக்கு நெஞ்சு வலி வந்திருச்சு. சின்னம்மா அழுது கிட்டே இருக்காங்க. பூரணிக்குக் கையும் ஓடலே, காலும் ஓடல்லே, தவிக்குது.''

''முன்னே எப்போ வந்திச்சு?'' பிரஷ்ஷில் பேஸ்ட்டை அப்பிக் கொண்டு, பொதுவாகக் கேட்டான்.

''நீங்க ஊருக்குக் கிளம்பறதுக்கு முந்தி அம்மாவுக்கு மாரடைப்பு வந்து ஆச்சு போச்சுன்னு ஆயிடுத்து. உங்களுக்குக் கவலை கொடுக்கக் கூடாதுன்னு சின்னம்மா அதைப்பத்தி எழுதலையாம். பூரணிகிட்ட சொன்னாங்க, அது எங்கிட்டச் சொல்லிச்சு.''



''கொஞ்சம் நில்லு, வந்துடறேன்.'' வாய் கொப்புளித்து முகம் கழுவிக்கொள்ள குளியலறைக்குள் புகுந்தான்.

சிங்காரத்துக்கு அதிக நேரம் நிற்கப் பயமாக இருந்தது. கீழே சின்ன யஜமானி உடனே போக வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கும்போது, இவர் சித்தே நிற்கச் சொல் கிறாரே? வாசற்படி மீது ஒரு காலும். உள்ளே ஒரு காலுமாகப் பரபரப்புடன் நின்றான்.

முகத்தைக் கழுவி முடியைச் சீராக வாரிக் கொண்டு, பனியன் மீது சலவை செய்த ஒரு சட்டையைப் போட்டுக் கொண்டு, லுங்கியை அவிழ்த்து விட்டுப் பாண்ட்டை நிதானமாகப் போட்டுக் கொண்டு, நீண்ட கண்ணாடி முன் தன்னை அழகு பார்த்துக்கொண்டு நிற்பவனைப் பற்றி அவனுக்கு அதிசயமாகத்தான் இருந்தது.

நெஞ்சு வலியால் கீழே பெரியம்மா துடிக்கும் போது, இப்போது இந்த அலங்காரமா தேவை?

''நான் போய் டாக்டரைக் கூட்டி வரணும். கிளம்ப றேனுங்க.'' சிங்காரம் குழறினான். அகல்யா அம்மா கூப்பிட்டு விடுவார்களோ என்ற கிலி அவனுக்கு.

''செத்த நில்லு, நானும் வரேன். அதுக்கு முன்னாடி உனக்கு வாங்கிட்டு வந்த அந்தக் குட்டி ரேடியோவை எடுத்துத் தரேன். பின்னால் மறந்து போயிடும். வேறு யாராச்சும் வந்தால் அதைக் கேட்பாங்க.''

குற்ற உணர்வில் தவித்தான் சிங்காரம். நேற்றே கொடுத்திருக்கலாம். அம்மா கீழே நோயோடு அவதிப்படும் வேளையில்தானா பரிசைத் தர வேண்டும்? அதே சமயம் மறுக்க முடியவில்லை. பெட்டியைத் திறந்து காமேஷ் மெல்ல அடியிலிருந்த அந்தச் சிறு டிரான்ஸிஸ்டரை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டு ''இன்னும் யார் யாருக்குப் பரிசுகள் வாங்கி வந்திருக்கிறேனோ, ஞாபகம் இல்லை'' என்றான்.

சிங்காரத்துக்கு வாயெல்லாம் பற்களாகி விட்டன. அவன் கேட்ட குட்டி ரேடியோப் பெட்டி,தலையணை யருகே காதோடு வைத்துக் கொண்டு பாட்டு கேட்கலாம். இடுப்பிலே புகையிலை ஓலைப் பைக்குள்கூட அடக்கமாகி விடும் அளவு சிறியது. யஜமான் அவனை மறக்க வில்லையே! கண்களின் நன்றி பெருகக் கனிவாக அவனைப் பார்த்தான்.

''உங்க மாமனார் இன்னும் வரலேங்க. இரண்டு வாட்டி வந்து ஏமாந்து போய்விட்டார். இப்போ பெரியம்மாவுக்கு உடம்புக்கு முடியலேயின்னு தகவல் கொடுத்தா, காலையிலேயே வந்துடுவார். நடந்தே வந்துடுவார். அப்படியே உங்களைப் பார்க்கவும் துடிச்சிட்டு இருப்பார். அந்தப் பார்வதியம்மா கட்டாயம் தீமிதிக்கு முன்னாடி ஒரு தபா,அர்ச்சனை பண்ண வந்துடுவாங்க.''

'பார்வதியம்மாவா? யார் அவள்?' காமேஷுக்கு உள்ளூறச் சிறிது கலவரம். அவர்களுக்கு அவள் என்ன உறவு?

''தூரத்து உறவை வச்சுண்டு மாதம் இரண்டு தபா சேலத்திலிருந்து அம்பாசிடரை எடுத்துக் கொண்டு அந்தம்மா இங்கே வராட்டி மண்டை வெடிச்சிடும். பெரிய அம்மாளுக்கு ரொம்ப நாள் சினேகிதமாச்சே. போன வாட்டி வந்தபோது, நீங்க எப்போ வரப்போறீங்கன்னு கேட்டு, சின்னப் பேரனுக்கு மோட்டார் பொம்மை வாங்கிட்டு வரும்படி அகல்யா அம்மாவைக் கடிதாசி எழுதச் சொன்னாங்க. இத்தனை சின்னப் பெட்டிக்குள்ளே, எத்தனை பேருக்குச் சாமான் வாங்கிட்டு வருவீங்க? பெட்டியில் காணப்பட்ட கரடிப் பொம்மையும் மோட்டார் பொம்மையும் பார்வதியம்மாளுக்கா?''

காமேஷ் மனத்துக்குள்ளே கணக்கிட்டுக்கொண்டு நின்றான். ''சிங்காரம்!'' அகல்யாவின் குரல் ஓங்கி ஒலித்ததைக் கேட்டு அரண்டு போய்விட்டான். அவன். சட்டென்று ரேடியோவை இடுப்பு மடிப்பில் கட்டிக்கொண்டு ஒரே



பாய்ச்சலாக படிகளில் தாவி, யஜமானியின் கண்களில் படாமல், ஒரே ஓட்டமாகத் தெருவில் ஓடினான்.

''அம்மாவுக்கு எப்படி இருக்கிறது?'' கேட்டுக் கொண்டே பஞ்சரத்தினத்தின் அறைக்குள் மிடுக்காக வந்து நின்ற காமேஷை நிமிர்ந்து பார்க்க மனம் இல்லாதவள் போல், அகல்யா போர்வையைச் சரிசெய்துகொண்டு நின்றாள்.

''முன்பு ஒரு தடவை மாரடைப்பு வந்திருக்கு. எனக்கு சொல்லாமல் மூடி வச்சிங்க?'' அதட்டியபடி அருகில் வந்தான். ''ராஜா, என் ராஜாகிட்ட வா' அரற்றியபடி கைகளை நீட்டிய கிழவியிடம் நெருங்கினான். அவன் ஆரம்பத்திலிருந்து போட்ட கணக்குகள் ஒன்றும் ஒழுங்காகவே அமையவில்லை. ராஜ்குமாருடன் திருநல்லூருக்கு வந்து பஞ்சரத்தினம் அம்மாளைச் சந்தித்து, எல்லா விவகாரமும் தனக்குத் தெரியும் என்று சொல்லி, வக்கீல் தேவசகாயம் கொடுத்த கடிதத்தையும், அந்த மோதிரத்தையும் காட்டிப் பயமுறுத்தி...

ஆனால் இப்போது என்ன குடி முழுகிப் போயிற்று? முன்னைவிட அவனுக்கு எல்லாமே சுலபமாகிக் கொண்டு வருகிறது. ராஜ்குமார் தண்ணியுடன் போய்த் தொலைந்தான். அவனுக்குப் பதில் மகன் ஸ்தானத்திலே வீட்டுக்குள் வந்து சேர்ந்து விட்டான். மாரடைப்பு வந்து அவதிப்படும் கிழவி, நீண்ட நாள் இருக்கப் போவதில்லை. அவள் போன பிறகு,அத்தனை சொத்துக்கும் வாரிசாக, அவன்தானே அநுபவிக்கப் போகிறான்! யாருக்குமே ஆள் மாறாட்டம் புரியவில்லை. மாமனார் பாவியையும், அந்தப் பார்வதி அம்மாளையும் சமாளிச்சுட்டால்? சிந்தனை வேகமாகப் படர்ந்தது.

''ராஜா!'' கிழவி வேதனையுடன் அரற்றினாள்.

''கிட்டத்தான் இருக்கேன். பயப்படாதீங்க, இப்ப டாக்டர் வந்துடுவார். சிங்காரம் அழைச்சுகிட்டு வந்துடுவான்.'' சொல்லிக்கொண்டே, அருகில் நின்ற அகல்யாவை அழுத்தலாகப் பார்த்தபடி ''சூடா சாப்பிட எனக்கு காபி தேவை. கொண்டு வா'' என்று உத்தரவிட்டான்.

கிழவியின் கரங்களை மெல்லப் பிடித்துக்கொண்டு, இருக்கை ஓரத்திலே உட்கார்ந்து கொண்டான்.

''பூரணி, பாலை அடுப்பிலே வச்சுக் காய்ச்சு. நான் வரேன்'' என்று உத்தரவிட்டஅகல்யா, அவனை எரித்து விடுகிறவள் போல் உறுத்து விழித்தாள். ''ராஜா! இனி எனக்கு என்ன ஆனாலும் பரவாயில்லை நீ வந்துட்டியே அதுவே போதும். இந்தப் பூட்டுக்கு நான் பிழைக்க மாட்டேன்னு தோணுது. கிட்ட வாப்பா. என்னைக் கட்டிப் பிடிச்சுக்கோ. ஐயோ! வலிக்குதே. உன்னைப் பார்க்கக் கூட முடியலேப்பா!'' கிழவி அரற்றிய போது, பொல பொல வென்று அகல்யாவின் கண்கள் நீரைக் கொட்டின. இடித்த புளியாக உட்கார்ந்திருந்த காமேஷ், அவளைப் பார்த்து விட்டுக் குற்ற உணர்வுடன் மெல்லப் பஞ்சரத்தினத்தின் அருகே குனிந்து கொண்டான்.

''அம்மா, அப்படியெல்லாம் சொல்லாதீங்க. நீங்க பிழைச்சிடுவீங்க. நாம எல்லோரும் சுகமாக இருக்கப் போகிறோம்.'' சட்டைப் பையினின்று தனது கைக் குட்டையை எடுத்து கண்களைத் துடைப்பது போன்று பாவனை செய்தான்.

காபியைக் கலக்கிக்கொண்டு வந்து அகல்யா முக்காலி மீது வைத்தாள். அதற்குள் வாசலில் காலடிச்சத்தம் கேட்டதும், வெளியே விரைந்து விட்டாள்.

டாக்டர் தணிகைவேலனைக் கண்டதும், அவளுக்கு மூச்சு வந்தது. ''மறுபடியும் மாரடைப்பு வந்து விட்டது போலிருக்கு,'' முனகினாள் துயரத்துடன். ''ஊரிலிருந்து மகன் வந்த சந்தோஷம். அதுவே அவங்களுக்குத் தாங்க முடியலே, மாரடைப்பு வந்து விட்டது போலிருக்கு. கவலைப் படாதீங்க.'' தணிகைவேலன், சிங்காரத்துடன் அறைக்குள்ளே நுழைந்தார்.



''வாங்கோ டாக்டர், உங்களுக்காகத்தான் காத்துக் கிட்டிருக்கோம்.'' என்று கையை நீட்டிய காமேஷின் கரங்களை ஆவலுடன் பற்றிக்கொண்டார் தணிகைவேலன்.

''ரொம்ப இளைச்சுக் கறுத்துப் போயிருக்கீங்க. நல்ல சமயத்துக்கு ஊருக்கு வந்தது நல்லதாப் போச்சு.'' கைகளைக் குலுக்கினார். பின்னர் எல்லாரையும் அப்பால் போகச் சொல்லிவிட்டு, பஞ்சரத்தினத்தைப் பரிசோதிக்கத் தொடங்கினார்.

வெளியே அறைக்கு முன்னால் நின்று கொண்டிருந்த காமேஷ், காபியை வேகமாக விழுங்கிவிட்டுத் தம்ளரைச்சுவர் ஓரமாக வைத்தான்.

''வந்தப்புறம் கூட என்கிட்டே அம்மாவின் உடம்பைப் பத்தி ஏன் நீ சொல்லலே?'' என்று அதட்டலாகக் கேட்டான்.

கண்ணீரில் ஒளி விட்ட கண்களால் அவனை மீண்டும் உற்றுப் பார்த்தாள் அகல்யா. அப்படி அவள் ஊன்றிப் பார்க்கும் போதெல்லாம், ஏன் அவனுக்கு ஒரு நடுக்கம் ஏற்படுகிறது?

''என்ன, எது கேட்டாலும் முறைக்கிறே? உனக்கு என்ன வந்து விட்டது?''

மௌனமாக அவனை மீண்டும் வெறித்து விட்டு, அவள் சமையலறைக்குள் சென்று மறைந்து கொண்டாள்.

டாக்டர் தணிகைவேலன் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தவுடன், அவளும் அருகில் ஓடி வந்து நின்றாள்.

டாக்டர் மிகவும் ஆதரவுடன் காமேஷின் தோளைத் தழுவிக் கொண்டார்.

''இப்பத்தான் ஊருக்குத்திரும்பியிருக்கிங்க. வழக்கம் போல் தீ மிதிக்கக் கூட கங்கணம் கட்டிக் கொண்டிருக் கிங்களாம். சிங்காரம் சொன்னான். தீ மிதி இன்னும் இரண்டு நாளில் நடக்க இருக்கிறதாமே?''

'அம்மாவுக்கு உடம்பு எப்படி இருக்கு டாக்டர்?'' கலவரத்துடன் வினவினான் அவன்.

''அம்மாவின் உடம்பு ரொம்ப மோசமா இருக்கு. ஆஸ்பத்திரியில் வைச்சுக் கவனிக்க வேண்டிய கேஸ். அவங்களை இந்த நிலையில் ஆஸ்பத்திரிக்கு நகர்த்துவதும் தவறு. நான் மூணு வேளை வந்து கவனிக்கிறேன். மிஸஸ் ராஜ்குமார் இருக்கவே இருக்காங்க, மாமியாரைத் தம் கண்கள் போலக் கவனிக்க. நீங்களும் கூட இருப்பது என் மனசுக்கு ஆறுதலா இருக்கு; பெரிய அம்மாளுக்கு அதுவே ஒரு மருந்து போல உதவி செய்யும். நம்மால் ஆனதைச் செய்வோம்.''

''தீ மிதி வரை உடம்பு தாங்குமா டாக்டர்?'' அகல்யா மெல்லக் கேட்டாள்.

''தீ மிதி என்ன தீமிதி வேண்டிக் கிடக்கு? அம்மா உடம்பை விட. அது பெரிசா? உன் கட்டுப்பெட்டிக் கொள்கைகளை உதறிவிட்டு அம்மாவைக் கவனிக்கிறதைப் பார்!'' எல்லார் முன்னிலையிலும் ஒங்கி அதட்டல் போட்டான் காமேஷ்.

பதிலுக்கு, அகல்யா அவனை வெட்டி விடுவது போல் பார்த்து விட்டுப் பின்பக்கம் சென்றுவிட்டாள்.

வைத்தியர் போட்ட ஊசி மருந்தின் சுகத்தில் பஞ்சரத்தினம் கண்களை மூடிக்கொண்டு மெல்லத் தூங்கிப் போனாள்.

அதற்குள் பொழுது நன்றாக விடிந்து விட்டது. அகல்யா தன் நித்தியக் கடமைகளைப் புறக்கணிக்க விரும்பாமல் விரைவாக ஸ்நானைத்தை முடித்துக் கொண்டு கோவிலுக்குக் கிளம்பி விட்டாள்.



முன் அறையில் சோபாவில் சாய்ந்து கொண்டிருந்த காமேஷுக்கு எரிச்சலாகத் தானிருந்தது.

'பெரிய அடங்காப்பிடாரி போலிருக்கு, அழகாக இருக்கிறோம் என்ற திமிர். கொஞ்சம் படித்து விட்ட கர்வம். ராஜ்குமார் முட்டாள் பயல். இழுத்த இழுப்புக்கு ஆடியிருக் கிறான். அதுதான் அந்த மிடுக்குப் பார்வை. இருக்கட்டும்.' தனக்குள் கறுவிக் கொண்டு, மேற்கொண்டு தன் திட்டங்களை ஆராய்வதில் தன்னை மறந்திருந்தான்.

குருநாதன் பின்கட்டைத் தாண்டித் தோட்டத்துக்கு வந்தபோது, மகள் கிணற்று மேடை அருகே முருங்கைக் கட்டை ஆய்ந்து கொண்டு, தோய்க்கும் கல்மீது உட்கார்ந் திருப்பதைக் கண்டார்.

''மறுபடியும் மார்வலியாமே! என்னம்மா இப்படி யெல்லாம் சோதனை?''

மகள் குனிந்தபடியே துயரத்துடன் தலையை ஆட்டினாள்.

''ஆமாம், மாப்பிள்ளை ரொம்ப இளைச்சுக் கறுத்துப் போய் வந்திருக்கிறாரே? அவருக்கு உடம்புக்கு ஒண்ணு மில்லையே! மாடியிலே இருந்தார், பார்த்தேன். என்ன புது வழக்கம், அறைக்குள்ளே ஒரே சிகரெட் நாத்தம். தீ மிதிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாரே, இதெல்லாம் கூடாதுன்னு தெரியாதா? எனக்குப் பரிசாக புகை பிடிக்கும் பைப் ஒண்ணைப் பெட்டியிலிருந்து எடுத்துக் கொடுக்க வந்தார். 'என்ன மாப்பிள்ளை, எனக்கு புகை பிடிக்கிற பழக்கமே கிடையாதே'ன்னு கேட்டப்போ, ஒரு மாதிரிச் சிரித்தார்.''

''அவர் பேச்சு, பழக்கம், அவர் சிரிக்கிற மாதிரி எல்லாம் ரொம்பப் புதுசா இருக்கும்மா. என் மாப்பிள்ளை ராஜ்குமார் தானா இவர்அப்படின்னு நினைக்கக்கூடத் தோணுது.''

''என்னப்பா சொன்னீங்க?'' திகைப்புடன் நிமிர்ந்து தந்தையைப் பார்த்தாள் மகள். அழுதழுது அவள் கண்களும் முகமும் சிவந்து காணப்பட்டன.

''வருத்தப்படாதே. கொஞ்சம் மாறிப் போயிருக்கார். எல்லாம் பழையபடி சரியாயிடும். முத்துமாரி கைவிட மாட்டாம்மா.''

''கைவிட்டுட்டா அப்பா!'' என்று மகள் கட்டுக்கொள்ள முடியாது விம்மி விம்மி அழுதாள்.

## 21

மறுபடியும் பகல்வேளை பஞ்சரத்தினத்தை வந்து கவனித்த தணிகைவேலன் நம்பிக்கை தெரிவிக்கவில்லை.

''இன்னும் இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் எதுவும் சொல்ல முடியும். கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்.அது தான் முக்கியம்.'' வழக்கமான பல்லவியைப் பாடிவிட்டுப் போய்விட்டார்.

மகன் வந்து விட்டான் என்ற மகிழ்ச்சியில் முதல் நாள் இரவு படுக்கப் போகுமுன் தன் மருமகளிடம் பஞ்சரத்தினம் சொல்லியிருந்தாள்:

''நாளைக்குப் பகலுக்குக் கொஞ்சம் கார சாரமா மோர்க்குழம்பு வச்சுடு. ராஜாவுக்கு ரொம்பப் பிடிக்கும். எனக்கும் சாப்பிடணும் போல இருக்கு.''

அடுப்பருகில் வந்து நின்ற அகல்யாவின் விழிகளில் நீர் பெருக்கெடுத்துக் கண்களில் உருண்டது.



சிங்காரம் தோட்டத்திலின்னு ஒரு குலை மொந்தன் காய்களைப் பறித்துக் கொண்டு வந்திருந்தான்.அவற்றை ஒரு பக்கம் வைத்து விட்டுத் தலையைச் சொறிந்து கொண்டு நின்றான்.

''பூரணியைக் கூப்பிட்டுக் காய்கறிகளை நறுக்கித் தரச் சொல்றேன். ஐயாவுக்கு மோர்க் குழம்பிலே வாழைக்காய் போட்டால் தானே பிடிக்கும்'' என்றான்.

கன்னத்திலே கோட்டிட்ட கண்ணீரை அவள் சட்டென்று துடைத்துக்கொள்வதைக் கவனித்து விட்டான். அவனுக்கு மிக்க வேதனையாக இருந்தது.

''சந்தோஷமாக இருக்க வேண்டிய சமயத்திலே பெரியம்மாவுக்கு உடம்புக்கு வந்திருச்சேன்னு நீங்க கலங்கிட்டீங்க. கவலைப்படாதீங்க. நம்ம முத்துமாரி கைவிடமாட்டா.'' ஆறுதலாகச் சொல்லிவிட்டு, மீண்டும் தலையைச் சொறிந்து கொண்டு சமையலறை வாயிற் படியருகே பழியாக நின்றான்.

மௌனமாக அடுப்புக் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள் அகல்யா. சிறிது நேரமாகியது. வாயிற் படியில் இன்னமும் நிழலாடுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள்.

''நம்ம ஐயா என்னை மறக்காம நான் கேட்டதை வாங்கிட்டு வந்திருக்கார். காலையிலே அத்தனை அமளிதுமளி நடுவிலும் எடுத்துக்கொடுத்தார். வேலையாள் கிட்டே அவருக்கு ரொம்ப பிரியம். குழந்தை மனசு அவருக்கு. தாராளமான கை. அவர் குணம் ஒண்ணுக்கே அவங்க தாயாரை நம்ம ஆத்தா காப்பாத்திக் கொடுக்கணும்னு நான் ரொம்ப வேண்டிக்கிறேன்.''

அவன் குரல் கரகரத்தது. இடுப்பு வேட்டி மடியிலே புகையிலை ஒலைப்பைக்குள் அடக்கமாகியிருந்த ரேடியோப்

பெட்டியை எடுத்துத் தன் சின்ன யஜமானிக்கு முன் நீட்டினான்.

புகையிலை மணத்துடன் தன் உள்ளங்கையில் அடங்கிப் போன அந்தச் சிறு ரேடியோவைத் திருப்பிப் பார்த்தாள் அகல்யா. அவளது கை நடுங்கியது. பின் பக்கத்திலே, பெட்டி மீது ஒட்டப்பட்டிருந்த சிறு காகிதத் துண்டின் மீது ராஜ்குமார் தன் கையால் சிங்காரத்துக்கு என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்தான். அந்தக் கையெழுத்தைக் கண்டதுமே அவள் நெஞ்சை உணர்வுகள் அடைத்துக் கொண்டன. கண்கள் கலங்கின. உடல் முழுவதும் உணர்ச்சி வசத்தில் ஆட, ஏதோ மகா மந்திரத்தைப் பார்த்து விட்டவள் போல், மீண்டும் மீண்டும் அந்த எழுத்துக்களையே ஊன்றிப் பார்த்தாள்.

''எப்பவோ நான் கேட்டதை ஞாபகத்திலே வெச்சிட்டு வாங்கிட்டு வந்திருக்கார். சட்டுனு எடுத்துக் கொடுத்துட்டார்.'' மெல்லச் சிரிக்க முயன்றான் சிங்காரம். பொங்கி வந்த வேதனையைச் சமாளித்துக்கொண்டாள் அகல்யா. அவள் மூளையில் ஒரு எண்ணம் பளிச்சிட்டது. சட்டென்று கேட்டுவிட்டாள்.

''ஐயா உனக்கு இதைப் பரிசாகக் கொடுத்தது பத்தி சந்தோஷம். ஆனால் ஒன்று மறந்துட்டார். இதை வச்சுக்க உனக்குன்னு தனிப்பட்ட ஒரு லைசென்ஸ் எடுக்கணும். அதுக்கு அவர் தம் கைப்பட இந்த ரேடியோவைப் பரிசாகக் கொடுத்து விட்டதாக ஒரு கடுதாசி எழுதிக் கொடுக்கணும். அதோட பம்பாயிலே சுங்க இலாக்கா கொடுத்த ஒரு லைசென்ஸ் இருக்கும். அதையும் கொடுக்கணும். போய் வாங்கிட்டு வந்து தபாலாபீசிலே அதனைக் காட்டு, போ!'' என்று உத்தரவிட்டாள்.



பின்னால் காலடி ஓசை கேட்டதும், இருவரும் திகைப்புடன் திரும்பிப் பார்த்தனர்.

''சிங்காரத்தைக் கூப்பிட்டேன். காதில் விழலே போலிருக்கு. அதனால் நானே தேடிக்கொண்டு கீழே வந்துட்டேன்.'' என்று சொல்லிக் கொண்டு அருகே வந்த காமேஷ் முறுவலித்தான்.

''சிங்காரம், இந்தா, பம்பாயில் சுங்க இலாக்கா கொடுத்த லைசென்சும் என் கைப்பட இந்தக் கிராமத்துத் தபால் அதிகாரிக்கு எழுதிய கடிதமும் இதிலே இருக்கு. எடுத்துக்கோ.'' தன் சட்டைப் பையினின்று ஒரு கடித உறையை எடுத்து அசட்டையாக அவனிடம் கொடுத்தான்.

''அகல்யா! சூடாகக் காபியும் சாப்பிட ஏதாச்சும் சீக்கிரம் தயார் பண்ணு, பசிக்கிறது. எனக்குப் பசி தாங்காதே. தெரியாதா உனக்கு?'' அதட்டலாகக் கேட்ட வண்ணம், அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

மேடை மீது எரிந்த அடுப்பைப் போலஅவள் உடல் முழுவதும் பற்றி எரிந்தது. வாய்க்குள்ளே வந்துவிடும் போல் பதற்றமாக இதயம் துடித்தது. ஆனாலும், மிடுக்காக அகல்யா அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''சிங்காரத்திடம் கொடுத்தனுப்பறேன்.'' மொட்டையாகப் பதில் அளித்து விட்டு, அடுப்பின் பக்கம் திரும்பிக் கொண்டாள்.

''சிங்காரம். அந்தக் காகிதங்களை அம்மாவுக்குக் காட்டு அவங்களே பார்த்து யோசனை சொல்வாங்க. பிறகுமாடிக்கு வா. டாக்டர் தணிகை வேலனுக்கு வாங்கிய புகை பிடிக்கும் குழாய், பார்வதி அம்மா பேரனுக்கு வாங்கின பொம்மைகள், என் மாமனாருக்கு வாங்கின ஷர்ட் எல்லாத்தையும் எடுத்து வெளியிலே வெச்சிருக்கேன். அதுகளைக் கொண்டு வந்து கீழ்

அறையில் தயாராவச்சுடு. அவங்க அவங்க சாமான்களை, அவங்க அவங்க வந்த போது கொடுத்துடறேன்.'' சொல்லிவிட்டு, வெற்றிப் புன்முறுவலுடன் மாடிப் பக்கம் விரைந்தான் காமேஷ்.

சிங்காரம் கொடுத்த உறையைப் பிரித்தவளுக்குத் திக்கென்று இருந்தது. ராஜ்குமார் தன் கையால் அந்தக் கிராமத்துத் தபால் அதிகாரிக்கு எழுதியுள்ள கடிதம் அது. சந்தேகமில்லை. எப்படி? அவள் வியப்பும் வேதனையுமாக அதைப் பார்த்துக் கொண்டிருந்த போது மாடியறைக்குள் புகுந்த காமேஷ் திறந்து கிடந்த பெட்டியைக் காலால் எட்டி உதைத்து மூடினான். என்ன முட்டாள்தனம்? புறப்படுமுன் பெட்டியைக் கவிழ்த்துப் பொருள்களைச் சரியாக ஆராய்ந்திருக்க வேண்டும். நல்ல வேளை, சற்று முன்தான் பார்த்தான். ராஜ்குமார் எல்லாக் காரியங்களையும் ஒழுங்காகச் சீராகச்செய்து வைக்கும் குணமுடையவனாக இருந்தது நல்லதாகப் போயிற்று.

பெட்டியின் அடியில் கிடந்த அந்த உறையும், சுங்க இலாக்கா கொடுத்த ரேடியோ லைசென்றும் தபால் அதிகாரிக்குத் தயாராக எழுதி வைத்திருந்த கடிதமும் கிடைத்தன. யார் யாருக்கு என்ன பரிசுகள் வழங்க வேண்டும் என்று ஒரு ஜாபிதாவை வேறு டைப் அடித்து வைத்திருந்தான். அது இப்போது எத்தனை உதவியாக இருக்கிறது?

அந்தச் சிறு ரேடியோ மீது சிங்காரத்தின் பெயர்கொண்ட துண்டுக் கடிதம் ஒட்டப்பட்டிருந்ததால் சட்டென்று புரிந்து கொண்டு கொடுத்து விட்டான். இந்த ஜாபிதாவைப் பார்க்காமல், டாக்டருக்குக் கொடுக்க வேண்டிய புகை பிடிக்கும் குழாயை அகல்யா அப்பாவுக்குக் கொடுத்து அவரைக் கலவரப்படுத்திவிட்டான். சே! சே! இனி இது மாதிரி பிசகுகள் நடக்கவே கூடாது. மிகவும் ஜாக்கிரதையாக இருக்க



வேண்டும். சாமான்களை அள்ளிப் பெட்டிக்குள் போட்டு மூடி அவன் பூட்டி முடிப்பதற்குள் சிங்காரம் மூச்சிரைக்க வந்து நின்றான்.

''அம்மா கூட்டிவரச் சொன்னாங்க. உங்களைப் பார்க்கப் பஞ்சாயத்திலிருந்து ஆட்கள் வந்திருக்காங்க.''

நெஞ்சம் துணுக்குற்றுத் திடுக்கிட்டுப் போனான்.

பஞ்சாயத்து ஆட்களுக்கு அவனிடம் என்ன வேலை?

அவன் பார்த்திராத கிராமத்து மனிதர்கள் இரண்டு பேர். ஒருவர் கையில் கத்தையாக ஒரு கட்டுக் காகிதம். காதில் பேனாவைச் செருகிக்கொண்டு மற்றொருவர். வெள்ளை வேட்டி ஷர்ட் ஆசாமிகள். முன்னறையில் அவனைக் கண்டதும் பற்களை இளித்தனர்.

''உட்காருங்கள்.'' உபசரித்தான் காமேஷ். இன்னமும் நெஞ்சிலே கவலைதான் அவனுக்கு.

''போன வருஷத்திலேருந்து இந்த வீட்டு வரி உசந்து போச்சு. அதைச் சின்னம்மா ஏற்க மறுக்கிறாங்க. வீடு உங்க பேர்லே இருக்கிறதுனாலே, நீங்களே வரிக் குறைப்புக்காக ஒரு மனு எழுதிக் கொடுத்திட்டா நல்லது.'' வந்தவர்களில் சற்று ஒல்லியாக இருந்தவர் சொன்னார்.

''சிங்காரம், காகிதம் பேனா எல்லாத்தையும் கொண்டு வந்து மேஜை மேலே வை.''

அகல்யா உள்ளிருந்தபடியே உத்தரவிட்டதைக் கேட்டு அவன் அதிர்ந்து போனான்.

''வீட்டுவரி உத்தியோகஸ்தருக்குன்னு ஆரம்பிச்சு தானே எழுதணும்? இதோ வந்துட்டேன்.'' சொல்லி விட்டு மாடிக்கு வேகமாக ஓடினான் காமேஷ். அங்கே அந்த அலமாரி மேல் தட்டிலே ஒரு டைப் யந்திரத்தைப் பார்த்ததாக ஞாபகம். அங்கேயேதான் இருந்தது. எடுத்து மேஜை மீது வைத்துக்

கொண்டு விரைவாக மனுவை டைப் அடித்தான். முடிவில் கையெழுத்துப் போடும்போது காமேஸ்வரன் என்று போட்டு விட்டான். அவனுக்கே தாங்க முடியாத எரிச்சல் வேகமாகக் கிழித்துச் சுருட்டி அதை அறையின் மூலையில் எறிந்து விட்டு மறுபடியும் டைப் அடிக்கத் தொடங்கினான். இந்த முறை ஒழுங்காக ராஜ்குமார் என்று கையெழுத்திட்டு எடுத்துக் கொண்டு கீழே வந்தான்.

''தமிழிலே எழுதியிருக்கலாம். இங்கிலீஷில் டைப் அடிச்சிருக்கீங்க பரவாயில்லை.'' வாங்கிக் கொண்டார் அந்த ஒல்லி ஆசாமி.

அகல்யா தயாரித்துக் கொடுத்த காபி பலகாரத்தட்டை எடுத்துக் கொண்டு சிங்காரம் மேலே செல்வதைக் கண்டான். வேறு வழியின்றித் தனக்குள்ளே கோபத்துடன் எதையோ முணுமுணுத்துக் கொண்டு காமேஷ் அவனைப் பின் பற்றினான்.

அன்று மாலை வைத்தியர் வந்து போன பின்பு, லேசாகக் கண்களைத் திறந்து கொண்டு படுத்த மாமியாரை வற்புறுத்திக்கொஞ்சம் கஞ்சியைப் புகட்டினாள் அகல்யா. பின்னர் வைத்தியர் கொடுத்துப் போன தூக்க மாத்திரைகளையும் மற்ற மருந்துகளையும் கொடுத்து சாப்பிடச் செய்தாள். சிறிது நேரத்தில் இருட்டத் தொடங்கிவிட்டது. மருந்துகளின் மயக்கத்தில் பஞ்சரத்தினம் தன் நினைவின்றி மீண்டும் ஆழ்ந்து உறங்கிப் போனாள். மெல்லக் கதவைச் சாத்தி விட்டு அகல்யா வெளியே வந்தாள். ஹாலில் மட்டுமே பளிச்சென்று குழல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இரவு யஜமான் விரதமாகச் சாப்பிட வேண்டிய பால் பழம் கொண்ட தட்டை மாடியில் அவனது அறை மேஜை மீது வைத்துவிட்டு சிங்காரம் தோட்டத்திலிருந்து தன் வீட்டுக்குப் போய் விட்டான். பின் கதவைத் தாழிட்டுக் கொண்டு உள்ளே வந்த



அகல்யாவின் காதுகளில், மாடிப் படியில் அவன் இறங்கி வரும் மெல்லிய ஓசை கேட்டு விட்டது, திடீரென்று அவளுக்குத் தாங்க முடியாத பதற்றம்.

''அம்மா, தூங்கறாங்களா? சிங்காரமும் பூரணியும் போய் விட்டாங்க இல்லையா?'' சிரித்தபடி கேட்டுக் கொண்டு, கண்களால்அவளை விழுங்கியபடியே கீழே இறங்கி வந்தான் காமேஷ்.

அகல்யாவின் உடல் பயத்தில் சிலிர்த்தது. இது சமயம் அங்கே அவர்களைத் தவிர அந்த நேரத்தில் யாரும் இல்லை என்ற உண்மை அவனுக்குத் தெரியும். பஞ்சரத்தினம் மயக்க உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கிறாள். என்ன பேசினாலும் யாரும் கேட்கப்போவதில்லை என்ற துணிவு அவனுக்கு.

மிகவும் சுவாதீனமாக அருகில் வந்தான் காமேஷ்.

''அம்மாவுக்கு உடம்பு சுகமில்லாததால் நான் பூக்குழியில் இறங்கப் போவதில்லை. நீயும் இறங்கத் தேவையில்லை. இந்த விரதம் நம் இருவருக்கும் இனி தேவையில்லை. இப்படிக்கிட்ட வா. வந்ததிலிருந்து நான் எப்படித் துடிச்சிக்கிட்டிருக்கேன் தெரியுமா?'' அவளைத் தொட்டுத் தன் அருகே இழுத்துக்கொள்ளக் கையை நீட்டியபடி நெருங்கினான்.

துள்ளிக்கொண்டு அவள் ஓரடி நகர்ந்து பின்னால் நின்று கொண்டாள். நெஞ்சு படபடவென்று துடித்துக் கொண்டது. நெருப்பை அள்ளித் தலையிலே கொட்டி விட்டது போன்றதொரு பயங்கர உணர்வில் தவித்துப் போனாள்.

''ஏன் இப்படி வித்தியாசமா நடந்துக்கிறே? இங்கே வா'' என்று அதட்டியபடி, அருகில் மீண்டும் அவன் நெருங்கிய போது, திடீரென்று மின் விளக்குகள் அனைத்தும் அணைந்து போயின. எங்கும் ஒரே இருள்.

''இங்கேதான் இருக்கேன், இப்படி இந்தப் பக்கம் வா.'' மறுபடியும் அதட்டியபடி கையை நீட்டி எட்டிப் பிடித்து இழுத்தான். அவளது முன்றானை போன்று ஏதோ தென்படவே பலம் கொண்ட மட்டும் இழுத்து விட்டான். அந்த வேகத்தில் அவன் நக்கென்று அருகில் இருந்த சுவரில் போய் மோதிக் கொண்டான். தடவிப் பார்த்த போது கையில் அவன் பிடித்துக் கொண்டிருந்தது, அவள் வேலை செய்யும் போது கை துடைக்கத் தயாராக முழங்கையில் போட்டு வைத்துக் கொண்டிருந்த துணித்துண்டு.

அவனை ஏமாற்றி விட்டு இருட்டில் அவள் எங்கேயோ நழுவி விட்டாளே!

அதிகம் பழக்கமில்லாத வீடு. இருட்டில் நிதானம் தெரியாது. தடவிக் கொண்டே முன்னால் நடந்த போது, அங்கே கிடந்த நாற்காலி ஒன்றில் கால் இடறி, கட்டை விரலில் வேதனை தாங்க முடியாமல் ''அகல்யா எங்கே இருக்கே?'' என்று ஆத்திரத்துடன் கத்தினான்.

துயரத்தையும் பொங்கி வந்த கோபத்தையும் அடக்க மாட்டாது அகல்யா ஹாலின் மறுகோடியிலிருந்த பூஜை அறைப்பக்கம் வேகமாக நகர்ந்தாள். கதவைத்திறந்தாள். இன்னமும் பராசக்தியின் படத்தின் எதிரே மேடை மீது அவள் பிறந்த வீட்டுச் சீதனமான அந்தப் பெரிய குத்து விளக்கு முத்துச் சுடராக எரிந்து கொண்டிருந்தது.

சட்டென்று அதைக் கையில் தூக்கிக் கொண்டு வெளியில் வந்தாள். காலையில் ஸ்நானம்செய்து விட்டு அவசரமாக முடிச்சிட்டுக் கொண்டிருந்த கூந்தல் அவிழ்ந்து தானாக அவள் முதுகு முழுவதும் பரவலாக விழுந்தது.

குத்து விளக்கைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, அதன் ஒளியில் தன் முன்னே அவிழ்ந்த கூந்தலும், சினத்தைக் கக்கிய



கண்களுமாக ஆவேசம் வந்தவள் போல் நின்ற அவளைக் கண்ட காமேஷ் அரண்டு விட்டான்.

''இப்போ சொல்! யார் நீ?'' உரத்த குரலில் உக்கிரமாக அகல்யா அவனை அதட்டினாள்.

கோவிலில் அர்ச்சகர் தீபாராதனைத் தட்டைச் சுழற்றிய போது கர்ப்பக் கிருகத்தில் ஒரு கணம் கண்டானே உக்கிரமான கண்களுடைய ஒருத்தியை அவளே தன் எதிரில் வந்து கையில் குத்து விளக்குடன் நிற்பது போன்றதொரு பிரமை! அவனையும் மீறி எழுந்த அச்சத்திலே அவன் உடல் நடுங்கியது. நெஞ்சு பதைத்தது.

''என்ன அசட்டுக் கேள்வி? நான்தான் ராஜ்குமார்! என்ன அப்படிப் பார்க்கிறே?'' குழறினான் காமேஷ்.

''நீ என் கணவன் இல்லை. உண்மையைச் சொல். என் புருஷன் எங்கே? நீ யார்? யார் நீ? யார் நீ?'' ஓங்கிய குரலில் வெறி பிடித்தவள் போல் அகல்யா வீறிட்டுக் கத்தினாள்.

''அம்மா! கூப்பிட்டீங்களா?'' சிங்காரம் கதவைத் தட்டினான். பளிச்சென்று மின் விளக்குகள் எரிந்தன.

## 22

வேகமாக இரண்டே தாவலில் மாடி அறைக்குள் வந்து நின்ற காமேஷின் இதயம் வெடித்து விடும்போல், மார்பு எலும்புக் கூட்டின் மீது மோதிக் கொண்டது. கால்கள் தள்ளாட சோபா ஒன்றின் மீது தொப்பென்று விழுந்தான். நெற்றியில் பொடித்த வேர்வையைக் கைக் குட்டையால் ஒத்திக்கொண்டான், மூச்சு விட முடியாது போல் திகில் உணர்வு அவன் நெஞ்சை அமுக்கவே திணறிப் போனான்.

அவனது அட்டகாசமும் ஆர்ப்பாட்டமும் எங்கே போயின? காய்ச்சல் வந்துவிட்டது போல் உடம்பெல்லாம் ஏன் இப்படி நடுங்கித் தொலைக்கிறது? ஒரு கிராமத்து பெண்ணிடமா அவன் இப்படி மிரண்டு போய் விட்டான்? பெண்ணா அவள்? சே! சே! எப்படிப் பயங்கரமாகக் கூச்சலிட்டாள்? ரத்தம் போலச் சிவந்து விட்ட முகமும், நெருப்பாக மின்னிய கண்களும், விரித்துப் போட்ட கூந்தலுமாக விளக்கொளியில் ரத்தக் காட்டேரி போல் அல்லவா ஒரு விநாடியில் அவனைக் கிடுகிடுக்க வைத்து விட்டாள்! கோபாவேசத்தில் நின்ற அவளைப் பார்த்து உண்மையில் அவன் பயந்து தான் போய் விட்டான். கையில் பிடித்துக்கொண்டிருந்த அந்த கனமான விளக்கை ஓங்கி மண்டையில் போட்டு விடுவாளோ என்று கூட அச்சமாகத்தான் இருந்தது. போயும் போயும் ஒரு பெண் முன், அதுவும் தனியாக இருக்கும் போது, ஏன் இப்படிக் கோழையாகிப் போனான்? ஏன்? ஏன்? ஒரு சமயம் அவள் வழிபடுகிற அந்த மாரியம்மனின் மாபெரும் சக்தி அவளுடன் கலந்து கொண்டு, அவனை அப்படி ஒரு கலக்குக் கலக்கி விட்டதோ? இன்னமும் அவன் நெஞ்சு படபடவென்று வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. எச்சிலை விழுங்கிக் கொண்டு, தன்னையே நிதானப்படுத்திக்கொள்ள அவன் முயன்று கொண்டிருந்தான்.

கையில் பிடித்துக் கொண்டிருந்த குத்து விளக்கைப் பூஜை அறையில் இருந்த இடத்தில் வைத்து விட்டுக் கண்களைத் துடைத்துக்கொண்டாள் அகல்யா. கூந்தலை அள்ளிச் சுற்றி முடித்துக் கொண்டு, மெல்லப் பின் பக்கம் சென்று கதவைத் திறந்தாள். ஆத்திரம் அடங்காமல் அவள் உடல் இன்னமும் ஆடிக் கொண்டிருந்தது.



''என்னம்மா, உள்ளேயிருந்து யாரோ கத்தினது போலச் சத்தம் கேட்டது?'' பதைபதைத்த சிங்காரம், அவளை ஏற இறங்கப் பார்த்தான். 'சின்னம்மா ஏன் இப்படிக் கோபமாக இருக்கிறாங்க?'

தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள அகல்யாவுக்குச் சில விநாடிகள் பிடித்தன.

''சிங்காரம்! அத்தைக்கு உடம்பு ரொம்ப அதிகமாயிடுச்சு. நீயும் பூரணியும் எனக்குத் துணையா உள்ளே வந்து படுத்துக்குங்க. பூரணி என்னோடேயே இருக்கட்டும். அத்தை உடம்பை நினைச்சு நான் ரொம்பப் பயப்படறேன்'' தாங்க முடியாமல் திடீரென்றுஅவள் விம்மி விம்மி அழுதாள்.

சிங்காரத்தின் மனம் சங்கடப்பட்டது. எஜமானி என்றாலும், அவனுக்கு அகல்யா மீது தன் சொந்த மகள் போன்றதொரு பரிவு.

''ஐயா வந்து சேர்ந்ததும் சந்தோஷமா இருக்க வேண்டிய சின்னம்மா கண்ணும் கண்ணீருமா நிக்கறாங்களே?'' மனத்துக்குள் வேதனைப்பட்டான்.

''அழாதீங்கம்மா! கொஞ்சம் சுதாரிச்சுக்குங்க. நாளை ஒருபோது போச்சுன்னா அடுத்த நாள் பூக்குழி அது முடிஞ்சதும் பெரியம்மா எழுந்து உட்கார்ந்திடுவாங்க. பூரணி உங்களோட இருந்து உதவி செய்யும். சமையலைக் கூட அதுவே கவனிச்சுக்கும். நீங்க மனசை ரொம்ப அலட்டிக்காதீங்க. இதோ வரேன்.'' சொல்லிக் கொண்டே அவன் தோட்டத்துக்குள் விரைந்தான்.

சிறிது பொழுதில் பூரணியுடன் உள்ளே வந்தான். ஹால் தரையில் தன் பாயை விரித்துக்கொண்டு அவன் படுத்து விட்டான். பூரணி பஞ்சரத்தினத்தின் படுக்கையறை வாயிலில் கையை மடக்கி வைத்துக்கொண்டு படுத்துக் கொண்டாள்.

கீழே இருந்து வந்த பேச்சுக் குரலைக் கேட்டதுமே, குற்ற உணர்வுடன் கதவை மெல்லச் சாத்திக் கொண்டு, விளக்கை அணைத்து விட்டுப் படுக்கை மீது சாய்ந்து விட்டான் காமேஷ். அவனுக்கு உறக்கம் வந்தால்தானே?

அகல்யா புடைவைத் தலைப்பால் அடிக்கொரு தடவை கண்களைத் துடைத்துக் கொண்டு மாரியம்மன் தாலாட்டை எடுத்து வைத்துக் கொண்டாள். தனக்குள்ளே விம்மலும் அழுகையும், நடுவே முத்துமாரியின் புகழை மெல்லப் படித்த வண்ணம் விடிய விடிய உறங்காமல் மாமியாரின் கட்டிலின் கீழே தரையில் உட்கார்ந்திருந்தாள்.

அவள் கணவன் ராஜ்குமார் எங்கே? அவருக்கு என்ன நேர்ந்து விட்டது? வந்திருக்கும் பாவி சண்டாளன் அவரைக் கொன்று விட்டானோ? யார் இவன்? அவரிடம் ஏன் பகை? ஐயோ முத்துமாரி, என்னை என்ன கோலம் செய்து விட்டாயம்மா? பக்தியுடன் உன்னை வழிபட்டதற்கு இதுதானா பலன்!' தனக்குள் கேட்ட வண்ணம் கண்ணீரை மாலை மாலையாகப் பொழிந்து கொண்டிருந்தாள்.

இரவு முழுவதும் உறங்காத காமேஷுக்கு, மறுநாள் எழுந்தவுடனேயே தலையைச் சுற்றியது. சூடான வெந்நீரில் முழுகிவிட்டு, வேறு உடுத்திக் கொண்டு அவன் தயாராகிக் கொண்டிருந்த சமயம் சிங்காரம் உள்ளே வந்தான்.

''அம்மா உங்களைக் கோயிலுக்கு வரச் சொன்னாங்க'' என்றான். காமேஷினால் மறுக்கமுடியவில்லை.

கோவிலினின்று திரும்பியதும் சிங்காரம் அவனுக்கு சாப்பிடக் காபி பலகாரத் தட்டைத் தூக்கிக் கொண்டு வந்து அறை மேஜைமீது வைத்தான். ''சாப்பிட்டதும் அம்மா கீழே வரச் சொன்னாங்க. உங்ககிட்ட முக்கியமா என்னமோ சொல்லணுமாம்'' என்று முணுமுணுத்து விட்டு அப்பால் சென்று விட்டான்.



அவன் கீழே இறங்கி வந்த போது, ஹாலில் அகல்யாவைத் தவிர யாரும் இருக்கவில்லை.

சூரிய உதயத்தைக் கண்டதும், அவளுக்கு மிகவும் துணிவு ஏற்பட்டுவிட்டது போலும்.

வாயில், கொல்லை இரு பக்கத்துக் கதவுகளையும் தாழிட்டு விட்டிருந்தாள்.

''டாக்டர் வருவதற்குக் கொஞ்சம் நேரமாகும். அதற்கு முன் எனக்கு சில விஷயங்கள் தெரிந்தாகணும்.'' ஆத்திரமான குரலில் அவள் அதட்டினாள்.

முதல் முதலாக அவன் இந்த வீட்டுக்குள் நுழைந்த போது அவன் பார்த்த அகல்யாவுக்கும், இப்போது அவன் முன்னால் நின்ற இவளுக்கும் எத்தனை வித்தியாசம்? அவனுக்குப் பிரமிப்பாகத்தான் இருந்தது. முகம் ஊதிக் கண்கள் சிவந்த, துயரத்தில் உதடுகள் துடிக்க, உக்கிரமாகத் தன்னை ஊன்றிப் பார்த்த அவளை ஏறிட்டு நோக்கக் கூசி, கடைசிவரை அவன் ஜன்னல் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றான்.

சுலபமாகச் சமாளித்து விடலாம் என்ற துணிவில் அகல்யாவிடம் முறை கெட்டு நடந்து கொண்டது மாபெரும் பிசகு என்ற வரை அவன் மனத்திலே ஓர் உறுத்தல்.

''எனக்கு உண்மை தெரிஞ்சாகணும். இல்லாட்டாப் போலீசைக் கூப்பிடப் போகிறேன்'' அகல்யாவின் ஆவேசக் குரல் அவனைத் திடுக்கிடச் செய்தது.

''போலீசா? இதென்ன வம்பு?'' திகிலடைந்தது போல் விசுக்கென்று திரும்பினான்.

மட்டமான பல குணங்கள் அவனிடம் குடி கொண்டிருந்தன என்பது உண்மை. ஆனாலும் போலீசாருடன் மோதும் அளவுக்கு வம்பு வழக்குகளில் அவன் துணிந்து

இறங்கியதில்லை, பழக்கமும் கிடையாது. பயந்தே போய் விட்டான்.

"கோவிலிலிருந்து ஆத்தாளை வணங்கிட்டு இப்பத் தான் வந்திருக்கேள். அதனால் கேட்கிறேன். உண்மையைச் சொல்லு. நீ எதுக்காக இங்கே வந்தே? நீ யார்? என் புருஷன் எங்கே?" படபடவென்று கேட்டாள்.

புறங்கையால் மோவாயைத் துடைத்துக் கொண்டான் காமேஷ்.

"நான் ராஜ்குமார் இல்லை, ஒப்புக்கிறேன்." கூறி முடிப்பதற்குள், நெஞ்சு உலர்ந்து அவன் நாக்குக் குழறியது.

"உன் பெயர் காமேஸ்வரன். எனக்குத் தெரியும்." அகல்யா உறுமினாள்.

"எப்படித் தெரிந்தது?" அவன் வியப்புடன் கேட்டான்.

"பஞ்சாயத்து அதிகாரிக்கு டைப் அடிச்ச கடிதத்திலே காமேஸ்வரன்னு உன் பெயரைத் தப்பாகக் கையெழுத்திட்டு விட்டுக் கிழிச்சுப் போட்டியே, அந்தக் கடிதத் துண்டுகளை சிங்காரம் பெருக்கிக் குப்பைக் கூடையில் போட்டான். அவற்றை எடுத்து ஒன்று சேர்த்துப் பார்த்துப் புரிந்து கொண்டேன்."

பலே! பொல்லாதவளாக இருக்கிறாளே? வீணான வம்பில் மாட்டிக் கொண்டு விட்டிருக்கிறோமே! உள்ளூற எண்ணி மிரண்டு போனான் காமேஷ்.

"எல்லோரும் என்னை ராஜ்குமார் தான்னு நினைக்கக் விட்டு இருக்காங்க. பூக்குழியில் இறங்க விரதம்னு இருக்காட்டி..." அவன் முடிக்கவில்லை. ஆத்திரத்துடன் சீறினாள்:

"பூக்குழியில் இறங்கணும்னு விரதம் அனுஷ்டிக்காத சாதாரண நாளில் நீ இங்கே வந்திருந்தாலும், நான் தவறு



செய்திருக்க மாட்டேன். மடையா! கட்டின புருஷனை மனைவி இருட்டிலே கூடக் கண்டுகொள்ள முடியும். அகல்யான்னு என் பெயரைக் கேட்டதும் தப்பா எடை போட்டுட்டே. ஆனால் இந்த மனுஷி அகல்யா ஒரு நாளும் ஏமாந்து போக மாட்டா. நீ வீட்டுக்குள்ளே நுழைஞ்ச உடனேயே நீ போலியான ஆசாமிங்கறதை என் உள் மனம் எனக்கு எச்சரிச்சுடுத்து.

"பெண்களுக்கு ஆறாவது அறிவுன்னு ஓர் அறிவு உண்டு. அகல்யாவைக் கல்லாக்கின அதே புராணத்தில் இன்னொரு பெண்ணைப் பத்திச் சொல்லும்போது 'தீண்டலும் உணர்ந்த தெய்வக் கற்பினள்' என்று எழுதி வச்சிருக்காங்க. உங்கிட்ட இதெல்லாம் பேசிப் பயன் என்ன? தமிழ் கூடத் தெரியாத படுமுண்டம்னு நான் உன் பேச்சிலிருந்து புரிந்து கொண்டேன்."

"வந்ததுமே நான் ஆள் மாறாட்டம் செய்கிறவன்னு தெரிஞ்சு கொண்டது மிகவும் ஆச்சரியமான சங்கதி."

"இதில் ஆச்சரியம் என்ன இருக்கு? எங்க வீட்டு வாயில்லாத ஜீவன் கூழைப்பசு உன் மோசடியை ஐந்து நிமிஷத்திலே கண்டு பிடிச்சுட்டுதே. அது சீறிக் கொண்டு உன்னை முட்ட வந்ததுன்னு கேட்டதுமே என் சந்தேகம் ஆழமாச்சு. குளிச்சுட்டுச் சொட்டச் சொட்ட இடுப்பிலே துண்டைச் சுற்றிக்கொண்டு திறந்த மார்போட போற பழக்கம் என் கணவனுக்குக் கிடையாது. அவருக்குப் பிடித்த பதார்த்தங்களை நீ சாப்பிடாமல் ஒதுக்கித் தள்ளினதைக் கவனிச்சேன். நாள் முழுதும் நீ சிகரெட் பிடிச்சது. பட்டும் படாததுமாக என் அத்தையிடம் பழகினது எல்லாம் நீ போலி வேஷக்காரன்னு காட்டிக் கொடுத்துடுத்து. கடைசியா நீ போலிதான்னு முத்திரை குத்துவதுபோல் உன் மோவாய்"

சட்டென்று காமேஷ் தன் மோவாயை இடது கையால் தடவிக் கொண்டான். ''மோவாயில் என்னவாம்?''

''என் மாமனார் இறந்து போன சமயம், அவரது படத்தைச்சுவரில் மாட்ட ஏணியில் ஏறிய என் கணவர் தவறிக் கீழே விழுந்து விட்டார். அப்போது மோவாயில் ஏற்பட்ட காயத்தின் வடு ஒரு சிறு கோடுபோல் பளிச் சென்று கீழ்த்தாடையிலே தெரியும். அந்த வடு உன் மோவாயில் இல்லாததைக் கண்டதுமே நீ போலி, ஆள் மாறாட்டம் செய்கிறாய்ன்னு தெரிஞ்சு கொண்டேன். இப்பச் சொல். யார் நீ? ஏன் இங்கே வந்தே? என் புருஷன் எங்கே?''

காய்ந்து போன உதட்டை நாவால் தடவிக்கொண்டு குழப்பத்துடன் விழித்தான் காமேஷ்.

சாதாரணமான ஒரு பெண், பட்டிக்காட்டில் பிறந்து வளர்ந்தவள், ஒரு விநாடியில் உருட்டல் மிரட்டல் பேச்சினால் சுருட்டிக் கையில் போட்டுக் கொண்டு விடலாம் என்று அவன் போட்ட கணக்கு கோளாறாகி விட்டதே? குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி வச்சு, நார் நாராகக் கிழிச்சுப் போடுகிற வக்கீலைப் போலக் கேள்விக்கு மேல் கேள்வியாக...

''உண்மையைச் சொல்லாட்டா நான் உடனடியாகப் போலீசை அழைத்து உன் மோசடியை அம்பலப்படுத்தி விடுவேன்.''

''ஊரார் அப்போ என்ன நினைப்பாங்க? அதைப் பத்தி யோசிக்கலையா?'' துணிவைத்திரட்டிக் கொண்டு கேட்டான்.

''அதைப் பத்தி அக்கறை இல்லை. நான் யார்னு என் தெய்வம் மாரியாத்தாளுக்குத் தெரியும்? என் கணவனுக்குத் தெரியும். அது போதும். இப்பா எனக்குத் தெரிய வேண்டிய உண்மை நீ யார் என்பது.''



''நான் ராஜ்குமாரின் தம்பி, காமேஸ்வரன்; கூடப் பிறந்தவன். நானும் அவனும் ஒரே சமயத்தில் பிறந்த இரட்டையர்கள். போதுமா?'' கேட்டுவிட்ட காமேஷ் தலையை நிமிர்த்தி. அவளை நேருக்கு நேர் பார்க்க முயன்றான்.

''அண்ணி என்ற உறவு தெரிஞ்சுமா நீ என் கிட்டத் தகாத முறையிலே நடந்துக்கப் பார்த்தே? அறிவு கெட்டவனே! நீ உருப்பட மாட்டே. எங்கே என் புருஷன்?''

''ராஜ்குமார் இறந்து விட்டான்.''

''பொய், நான் நம்ப மாட்டேன். என் கணவருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருந்தா என் மனசிலே அது ஏதாவது கலக்கத்தை உண்டாக்கியிருக்கும். எனக்கு அப்படி ஒண்ணுமே தோணலே. நீ அவரை எங்கேயோ வஞ்சகமாக ஒளிச்சி வச்சிருக்கே. உண்மையைச் சொல்லாட்டி நான் போலீஸிடம் புகார் பண்ணிடுவேன்'' அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. தாள முடியாத துக்கம் நெஞ்சை அடைக்கக் கண்களில் நீர் புரளப் பதறிப் போய்விட்டாள். இந்தப் பாவி சொல்கிறது உண்மையா? ஓவென்று வாய்விட்டு அழவேண்டும் போன்ற பயங்கர உணர்விலே அவள் உள்ளம் ஓலமிட்டது.

''பேச்சுக்குப் பேச்சு போலீஸ்னு பயமுறுத்தினா செத்தவன் எழுந்து வந்துவிடப் போகிறானா? ராஜ்குமார் இறந்து போய்விட்டான் என்ற தெம்பில்தானே நானே புறப்பட்டு வந்திருக்கிறேன். நானும் அவனும் பஹ்ரானில் சந்தித்து நண்பர்களானோம். தன்னைப் பற்றிய விவரங்களை அவன் சொன்னதுமே, அவன் என் கூடப் பிறந்த அண்ணன்னு நான் தெரிந்து கொண்டு விட்டேன். அவனுக்குத் தெரியாது. நான் சொல்லவில்லை. தன்னைப் போலவே நான் இருப்பதை கண்ணி அவன் அதிசயப்பட்டுப் போனான். ஊருக்குத்

தன்னுடன் கூட வர வேண்டும், தன் மனைவியிடமும் தாயாரிடமும் அறிமுகம்செய்து வைக்க வேண்டும் என்று விரும்பினான்.''

அகல்யாவின் நினைவு பளிச்சிட்டது. ஒவ்வொரு கடிதத்திலும் ''ஒரு அதிசயத்தைக் காட்டப் போகிறேன்' என்று அவள் கணவன் எழுதியிருந்த அதிசயந்தானா இந்தப் பாவிப் பயல்? கண்களில் பெருகிய கண்ணீரை விரல்களால் வழித்தெறிந்து விட்டு, அவனை வெறித்துப் பார்த்தாள்.

''நானும் இங்கே வர ஆசைப்பட்டது உண்மை. ஏனென்றால் நானும், அண்ணன் ராஜ்குமாரும் கனகசபை அவர்களின் பிள்ளைகள்தாம். ஆனால் பஞ்சரத்தினம் அம்மாளுக்குப் பிறந்தவங்க இல்லை. ஒரு காலத்தில் இந்த வீட்டில் வேலைக்காரியாக இருந்த காசாம்பூவுக்குப் பிறந்தவங்க, சமுதாய வேலிக்கு அப்பால் பிறந்தவங்க.''

''பொய். நான் நம்பமாட்டேன்.''

''நான் இப்போ சொல்றதெல்லாம் உண்மை. இந்த விஷயம் தெரிந்ததுமுதல் என் மனத்தில் பழிவாங்கணும் என்கிற எண்ணம் உருவானது உண்மை. பஞ்சரத்தினம் அம்மாளை நேரில் கண்டு 'விஷயம் எனக்குத் தெரியும், எனக்கும் சொத்தில் உரிமை உண்டு. என் தகப்பன் ஒத்துக் கொண்டிருக்கார்'ன்னு வாதாடி, அவுங்க ஒப்புக்க மறுத்தா வெளியே சொல்லி மானத்தை வாங்குவேன்னு மிரட்டி, அண்ணனையும் பஞ்சரத்தினம் அம்மாளையும் ஆட்டிப் படைக்கணும்னுதான் ஆத்திரத்தோடு புறப்பட்டு வந்தேன். சென்னையில் மகாபலிபுரக் கடற்கரையிலே கடலில் குளிக்க இறங்கின என் அண்ணன், அப்படியே தண்ணியோட போயிட்டான், அவன் மூழ்கி இறப்பதைக் கண்களால் பார்த்தேன்''



அகல்யாவின் இதயம் வெடித்து விடும்போல் துடித்தது. கதறி அழவேண்டும் என்ற ஆவேசம். ''நம்பமாட்டேன். என் கணவருக்கு நீந்தத் தெரியும்.'' -அழுகையும் விசும்பலுமாக அதட்டிச் சொன்னாள்.

மாடிப்படிகளை வேகமாகக் கடந்து அறைக்குள் புகுந்த காமேஷ் அவசரமாகப் பெட்டியைத் திறந்து துழாவினான். ஒரு காகித உறையையும், பத்திரிகைத்தாள் ஒன்றையும் தேடி எடுத்துக் கொண்டு விரைந்து வந்தான்.

''நான் சொல்வதெல்லாம் உண்மை-உண்மையைத் தவிர பொய்யே இல்லை என்பதை இந்தக் கடிதம் நிரூபிக்கும். ராஜ்குமார் இறந்து விட்டான் என்பதற்கு இந்தப் பத்திரிகை யில் வந்த செய்தி ஆதாரம்.''

அவற்றை வாங்க நீட்டிய அவள் கரங்கள் நடுங்கின.

39768
5718026

## 23

கடிதம் தமிழில் எழுதப்பட்டிருந்தது. குண்டு குண்டான கையெழுத்து, தேவசகாயம் என்பவர் அவள் மாமியார் பஞ்சரத்தினத்துக்குத்தான் எழுதியிருந்தார். மருமகள் படிக்க அதைக் கேட்கும் நிலையில் கூட அவள் மாமியார் இப்போது இருக்கவில்லை. எனவே அகல்யா அதைப் பிரித்துப் பரபரப்புடன் படித்தாள்.

''பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சமயம் நான் உங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறேன். மறந்திருக்க மாட்டீர்கள் ஏனென்றால் ஒரு முக்கியமான காரியத்தைப் பற்றி உங்கள் கணவரிடம் பேசிப் போகத்தான் அப்போது வந்தேன். அதைப் பற்றிப் பின்னர் உங்களிடம் விவரமாக அவர் தெரிவிப்பதாக ஒப்புக் கொண்டிருந்தார். அப்படிச் செய்திருப்பார், என

நம்புகிறேன். திருநல்லூர்க் கிராமத்தில் மருத்துவத் தாதியாக வேலை பார்த்த, உங்கள் வீட்டுக்கும் வெகு காலம் மருத்துவத் தாதியாக உழைத்துக் காலமாகி விட்ட அற்புதமேரியை நினைவிருக்குமென்று எண்ணுகிறேன். நான் அந்த அற்புதத்தின் கூடப் பிறந்த அண்ணன். பம்பாயில் கொலாபாவில் வக்கீல் தொழில் செய்கிறவன். தங்கள் குடும்பத்திலே பல ஆண்டுகளுக்கு முன்னர் சமையற்காரியாக இருந்த காசாம்பூவை நீங்கள் மறக்கவே முடியாது. காரணத்தை அதிகம் விவரிக்கத் தேவையில்லை. காசாம்பூவுக்கும் தங்கள் கணவனுக்கும் ஏற்பட்ட தொடர்பைப் பற்றி ஆரம்பத்தில் உங்களுக்குத் தெரிந்திருக்க முடியாது. பின்னர் தெரிந்து கொண்டு விட்டீர்கள் என்பது உண்மை. காசாம்பூவுக்குப் பிறந்த குழந்தைகள் இரட்டையர் என்பது யாருக்குமே நீண்ட காலம் தெரியாதிருந்தது. காசாம்பூ கர்ப்பமாகியிருக்கிறாள் என்பதை உணர்ந்ததும் குழந்தை இல்லாத கனகசபைக்கு ஓர் எண்ணம் ஏற்பட்டது. பிறக்கப் போகும் குழந்தைக்கு அவர் தானே தந்தை? ஆணாக இருந்தால் அதையே எடுத்து வளர்த்துக் கொண்டால்? மருத்துவத் தாதி அற்புதமேரிக்குத் தேவைப்பட்ட பணத்தைக் கொடுத்து இந்தச் சூழ்ச்சியில் தன்னுடன் ஈடுபடுத்திக் கொண்டு விட்டிருந்தார்.

''காசாம்பூ கர்ப்பவதி என்று பிறர் தெரிந்துகொள்ளு முன் திடீரென்று ஊரை விட்டே மறைந்து போனாள். பக்கத்துக் கிராமத்தில் வேறு பெயரில், தனக்குத் தெரிந்த ஒரு வீட்டில் அவளை அற்புதம் மறைத்து வைத்திருந்தாள். பிரசவ காலத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஒரு நாள் மாலை காசாம்பூவுக்குப் பிரசவ வேதனை தொடங்கியது. சங்கதி கனகசபைக்குத் தெரிவிக்கப்பட்டதும் அவர் தயாராக நாலு வீடு தள்ளி ஒரு சந்தில் தாமே ஓட்டி வந்த மாட்டு வண்டியுடன் காத்திருந்தார். நடு இரவு வேளை ஒரே



பிரசவத்தில் இரண்டு குழந்தைகள் காசாம்பூவுக்குப் பிறந்தனர். அற்புதத்துக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. தாயையும் தந்தையையும் ஒரே சமயத்தில் திருப்தி செய்து விட இப்படிச் சங்கதி நிகழ்ந்து விட்டதே என்று ஆச்சரியம்!

''முதலாவது பிறந்த ஆண் குழந்தையைக் கனகசபைக்குக் கொடுத்த வாக்குப்படியே துணியில் சுற்றிப் பத்திரமாகத் தூக்கி வந்து இருட்டில் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக அவரிடம் கொடுத்து விட்டாள். இரண்டாவது பிறந்தவனை காசாம்பூ வளர்த்துக் கொள்ளட்டும் என்று அவளிடம் விட்டு விட்டாள். கனகசபைக்கு உண்மை தெரிந்தால் ஆபத்து என்று பயந்து, பெற்றவளின் உடல் தேறியதும், பம்பாயிலிருந்த என் வீட்டுக்குச் சமையல் வேலை செய்யும் ஆளாக குழந்தையுடன். சிபாரிசுக் கடிதத்துடன் அனுப்பிவிட்டாள். அற்புதத்துக்குச் சில ஆண்டுகளுக்குப் பின்பு உடம்புக்கு முடியாமல் போய் விட்டது. அப்போதுதான் எனக்கு இந்த உண்மையை விவரமாக எழுதி விட்டிருந்தாள். எப்படியாவது நான் கனகசபையைச் சந்தித்துப் பேசி காசாம்பூவின் இளையமகனுக்கும் சொத்தில் ஒரு பங்கு வாங்கித் தந்து உதவ வேண்டும். இல்லாவிடில் குழந்தைகளை ஆளுக்கு ஒரு மூலையாகப் பிரித்து வைத்தபாவம் தன்னை வருத்தும், தன் ஆத்மா சாந்திடையாது என்று புலம்பியிருந்தாள்.

'எனக்கு இதை உடனடியாகக் கவனிக்க இயலவில்லை. கொஞ்ச காலம் கழித்துத்தான் நான் உங்கள் கணவரை நேரில் வந்து இது சம்பந்தமாகச் சந்தித்தேன். நான் ஒரு வக்கீல் என்பதினாலோ, அல்லது அவரது மனச்சாட்சி உறுத்தியதாலோ, வார்த்தைகள் தடித்த பின்னர், என் நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டார். தம் இளைய மகனது படிப்புக்குக் கணிசமான தொகை கொடுத்து உதவினார். பிறகு அவன்

வளர்ந்து ஆளானதும், தம் சொத்தில் ஒரு பகுதியைக் கொடுத்து, அவனை வாழ வைக்கவும் சம்மதம் தந்தார். அவர் இப்போது உயிருடன் இல்லை என்பதைக் குறித்து வருந்துகிறேன். இந்தக் கடிதத்தைக் கொண்டு வருகிறவன் காமேஸ்வரன் என்ற பெயர் கொண்ட அவரது இளைய மகன். இரண்டு குழந்தைகளும் ஒரே கருவில் தோன்றினவர்கள் என்பதினால், கண்ணாடி பிரதிபலிக்கும் பிம்பங்கள் போல ஒரே அச்சாக இருப்பார்கள். உங்கள் வளர்ப்பு மகனைப் போலவே இவன் அதே உயரம், மூக்கு, விழிகள் என்று ஒற்றுமையான தோற்றத்தில் இருப்பான். சட்டென்று இவனைப் பார்த்ததுமே நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். உங்கள் கணவர் தம் உயிலில் இவனுக்காக ஏதேனும் சொத்து ஒதுக்கி வைத்திருந்தால் தயவு செய்து அதைக் கொடுத்துக் காமேஸ்வரனை வாழ வையுங்கள். அவர் தமது வாக்கைக் காப்பாற்ற மறந்து விட்டிருந்தால், நீங்களாவது தக்க ஏற்பாடுகள் செய்ய முன்வரவேண்டும். ஒரு பெண்ணை அநியாயமாக அழித்து ஒதுக்கி விட்ட பாவத்துக்குப் பரிகாரம் தேட வேண்டியது அவசியம் என்று, பெண்ணான நீங்கள் கட்டாயம் உணர்வீர்கள். தயவு செய்து காமேஸ்வரனுக்கும் கருணை காட்டுங்கள்: இப்படிக்குத் தங்கள் தேவசகாயம்.''

கடிதத்தைப் படித்து விட்டுக் கையில் பிடித்திருந்த அந்தப் பத்திரிகைத் தாளையும் பிரித்துக் கோடிட்டிருந்த செய்தியைப் படித்தாள். என்ன கட்டுப்படுத்தியும், அவளையும் மீறிக் கண்ணீர் பொங்கிக் கன்னங்களை நனைத்தது கரங்கள் நடுங்கின.

''கடலில் மூழ்கி இறந்து போனதாகப் பத்திரிகையில் சொல்லும் இந்த வாலிபர் என் கணவர் என்று எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்?'' ஆத்திரத்துடன் கேட்டாள். அவளது நெஞ்சு, அந்தச் சமயமே வெடித்துச் சுக்கல் சுக்கலாகி விடும் போல், 'படீர்' என்று அடித்துக் கொண்டது.



இப்படிப்பட்டதொரு பெரும் சோதனையையா அவளுக்கு அவள் ஆத்தா முத்துமாரி கொடுப்பாள்? இல்லை இல்லை இது தவறாகத்தான் இருக்கவேண்டும். 'தாயே, என் கணவனைக் காப்பாத்திக் கொடு அம்மா, உன்னால் ஆகாத அற்புதம் இல்லையே!' மனம் ஓங்கிக் கூக்குரலிட்டுப் புலம்பியது.

''நீல நிற நீச்சல் உடையில்தான் ராஜ்குமார் கடலில் இறங்கினான்.''

''எத்தனையோ பேர் அந்த மாதிரி உடை அணிந்து கொண்டிருக்கலாமே, முகம் தெரியாது போயிருந்ததாகப் பத்திரிகை சொல்கிறது. நீ நேரே அவர் உடலைப் பார்த்தாயா?'' அவள் தொண்டையைத் துக்கம் அடைத்தது.

''பார்க்கவில்லை. உயிரோடு இருந்தால் இத்தனை நாளைக்கு இங்கே வந்திருக்கலாமே. ராஜ்குமார் இறந்து போனது உண்மை. அதனால்தான்...'' அவன் முடிக்கு முன் அகல்யா ஆத்திரத்துடன் இரைந்து கத்தினாள்.

''அதனால்தான் அண்ணனைப் போல வேஷம் போட்டுக்கொண்டு இப்படி ஒரு மோசடி செய்யத் துணிவோடு இந்த வீட்டுக்குள்ளே வந்தியா?'' கோபத்துடன் கொதித்தாள்.

''கனகசபை என்னையும் என் தாயையும் எப்படி மோசம் செய்திருக்கிறார்? அதைப்பற்றி யாராவது யோசித்துப் பார்த்தார்களா? உண்மை தெரிஞ்ச நாளிலிருந்து எனக்குப் பஞ்சரத்தினம் அம்மாள், கனகசபை, ராஜ்குமார், மூணு பேர் பேரிலும் வெறுப்பு. என்னையும் என் தாயையும் வறுமையில் வாட விட்டு நிம்மதியாக இருந்த கனகசபையின் நெஞ்சைப் பிளந்து உதிரத்தைக் குடிக்கணும்னு ஒரு வெறி. பஞ்சரத்தினம் அம்மாவுக்கு நான் யார் என்பதை கணவர் சொல்லி விட்டுத்தான் போயிருந்தாராம். தேவசகாயம் என்னிடம் சொன்னார். அப்படியிருந்தும், தான் வளர்த்த என்

அண்ணனுக்கு உண்மையைச் சொல்லாமல் அவங்க மறைச்சு வச்சாங்க. ராஜ்குமாரை நான் பஹ்ரானில் சந்தித்த போது, அவனுக்குத் தன் பிறப்பின் ரகசியம் தெரியவில்லை என்பதைப் புரிந்து கொண்டேன். அவங்க செய்த மோசடியை நினைச்சு அவங்களைப் பழிவாங்கணும்னு மனசிலே ஆத்திரம் மூண்டு எழுந்தது. ஊர் அறிய உண்மையைச் சொல்லி, அவங்க போர்த்திக்கிட்டிருக்கும் குடும்பக் கௌரவத்தைக் கிழிச்சுப் போடணும்னு ஆவேசம்.''

''உன் உணர்வுகளை நான் மதிக்கிறேன். என் கணவர் மேல் உனக்கு ஏன் கோபம்?''

''கள்ளத்தனமான உறவில் ஒரு சமையற்காரிக்குப் பிள்ளையாகப் பிறந்தும், கனகசபையின் சொந்த மகனாக அந்தஸ்துடன் சமுதாயத்தின் முன் வாழ வந்துவிட்டானே என்று அவன் மேல் வயிற்றெரிச்சல்.''

''சரி! இவங்க எல்லோரும் உன்னை வஞ்சித்தாங்க. பழி வாங்கத் திட்டமிட்டுப் புறப்பட்டு வந்தே. ஒத்துக்கிறேன். உன் வஞ்சக விளையாட்டை என்னிடமே ஏன் காட்ட வந்தே? நான் உனக்கு என்ன கொடுமை செய்திருக்கிறேன்? என் பெண்மையை அழிக்க குரூரமாகத் திட்டமிட்டு உள்ளே வந்திருக்கிறாயே. இந்த அக்கிரமத்துக்கு என்ன பதில் சொல்லப் போறே?''

ஆவேசமாக, ஆத்திரமாக, அனலாகக் கக்கினாள் வார்த்தைகளை.

குற்ற உணர்வுடன் திகைத்தான் காமேஷ், ஒரு கணம். ''நான் செய்தது மாபெரும் தவறுன்னு இப்பத்தான் புரிகிறது. என்னவோ கணக்குப் போட்டுக் கொண்டு வந்தேன் எங்கேயோ போய் அது நிற்கிறது, நான் இது சமயம் ஒண்ணேஒண்ணுதான் செய்ய முடியும். இன்னிக்கு ராத்திரியே



இந்த இடத்தை விட்டு யாருக்கும் தெரியாம மறைஞ்சு போயிடறேன்.''

''உன் அண்ணனைப் போல வேஷம் போட்டு நடிச்சு எல்லாரையும் நம்ப வச்சுட்டு, இப்போ அந்த நம்பிக்கை நழுவ விட முடியுமா? இந்த நாடகம் இன்னும் கொஞ்ச காலம் தொடர வேணுமே.''

''எனக்குப் புரியலையே?''

''புரியும்படி சொல்றேன் கேட்டுக்கோ. உன் அண்ணன் நாளைக்கு நடக்கப் போகும் தீமிதியில் நடப்பதாக வேண்டு தலை, அந்தப் பிரார்த்தனையை நீ செய்து முடிச்சாகணும். அப்பத்தான் உன் மோசடி அம்பலமாகாது. உன் மனசில் எழுந்த பாப எண்ணங்களுக்கும் ஒரு பரிகாரமாக இருக்கும்.''

''ஐயோ! என்னால் முடியாது. தீக்குழியில் இறங்கினா வெந்து செத்துப் போயிடுவேன். நான் மாட்டேன்.'' காமேஷ் கலவரத்துடன் அரற்றினான்.

''மாட்டேன்னா யார் விடப் போறா? பூசாரி உன் கையைப் பிடிச்சுத் தரதரன்னு இழுத்துக் கொண்டு, கூட நடக்கும்படி ஏற்பாடு செய்திடுவேன். உன்னைப் பற்றின விவரமான கடிதாசியை என் கையில் கொடுத்திருக்கே. இதை இப்பவே போலீசில் ஒப்படைச்சு. உன் மோசடியை அம்பலப்படுத்தினால்-நினைச்சுப் பார்.''

''அதனால் ஏற்படப் போகும் அவமானம். பழிச்சொல் எதற்கும் நான் பயந்தவள் இல்லே. உன்னைவிட ஒரு பங்கு அதிகமாகவே எனக்கு துணிச்சல் உண்டு. தெரிஞ்சுக்கோ.''

பேசிக் கொண்டே விர் என்று பின்பக்கத்துக் கதவைத் திறந்தாள். ''சிங்காரம்!'' உரத்துக் குரல் கொடுத்தாள்.

ஆத்திரமும் அழுகையுமாக ஒலித்த அந்தக் குரலில் தான் இப்பொழுது எத்தனை கம்பீரம்? முகத்தை முன்றானையால் அழுத்தித் துடைத்துக்கொண்டாள்.

அவன் பக்கம் மீண்டும் திரும்பினாள்.

''நான் கெட்டவனை ஆத்தாளின் பாதத்தில் வச்சிட்டேன். இனி கொடுப்பதும் எடுப்பதும் அவள் கருணை. ஆனால் நான் வேண்டிக் கொண்டபடி பூக்குழியில் நிச்சயம் இறங்கிடுவேன். உன்னைப் பொறுத்தவரை தாயாகக் கருத வேண்டிய அண்ணன் மனைவி மேலே கொண்ட தீய எண்ணத்தை நெருப்பிலே போட்டுப் பொசுக்க. நீ கட்டாயம் பூக்குழியில் இறங்கித்தான் ஆக வேண்டும். மனசிலே மாசு இல்லாட்டா மருட்சி ஏற்படாது. பாவ எண்ணங்களுக்கு நீ மன்னிப்புக் கேட்டாக வேண்டும். நான் ஆத்தாளைத் துதிபாடி முன்னால் இறங்கறேன். நீயும் அவளையே நினைச்சுக்கிட்டு இறங்கு. அவள் உன்னைத் தன் பூப்பாவாடையால் ஏந்திக் கொண்டு மறுபக்கம் சேர்த்திடுவா. உம், கிளம்பு.'' உக்கிரமாக அவனை உறுத்துப் பார்த்தாள்.

''கூப்பிட்டீங்களா அம்மா?'' சிங்காரம் உள்ளே ஓடோடி வந்தான்.

''ஐயாவை அழைச்சிக்கிட்டுக் கோயிலுக்குப் போ. நாளைக்கு நடக்கப் போறதைப் பத்தி விவரமாப் பூசாரி ஐயா கிட்டே கேட்டுக்கட்டும் கொஞ்ச காலமா வெளியூரிலே தங்கிட்டதாலே அவருக்கு எல்லாமே மறந்து போயிட்டுது.''

ராணி போல என்ன மிடுக்கான பார்வை! கலங்கிய உணர்வுடன் அவளை நிமிர்ந்து பார்த்தான் காமேஷ்.

அவளது கண்கள்! அப்பப்பா! அவன் மனத்தினுள் அச்சம் கிளர்ந்தெழுந்தது. மறுநாள் எரியப் போகும் பூக்குழியின் செந்தழல் அந்த அழகிய கண்களில் கனன்றதோ? அச்சத்தினால் விழி பிதுங்க, மெய்சோர, ஆவி ஒடுங்க நின்றான்.



## 24

மறுநாள் காலை. முத்துமாரியின் தீமிதித் திருவிழா. முதல் நாள் இரவே திருநெல்லூரின் சுற்றிலுமிருந்த பல கிராமத்து மக்கள் விழாவில் கலந்து கொள்ள வந்து, காவிரிக் கரையிலே இரவு முழுவதும் தங்கி விட்டிருந்தனர். விடியுமுன்பே ஊர் மக்களும் அங்கே சேர்ந்து கொண்டதும், ஆற்றங்கரையிலே திரளான பெரிய கூட்டம்.

கோயில் நிர்வாகிகள், மாரியம்மன் கோயிலுக்கு முன்னிருந்த திறந்த வெளியில் வெட்டப்பட்டுத் தயாராக இருந்த குழிக்குள், விடியும் முன்னரே கட்டைகளைப் போட்டு எரித்துத் தணலாக்கிக் குவித்து வைத்திருந்தனர். அதை ஒட்டி சதுர வடிவில் ஒரு முழ ஆழத்துக்கு அமைக்கப்பட்டிருந்த சிமெண்ட் பூசிய பால் குழியையும் கழுவித் துடைத்து, அதில் சிறிதளவு நீர் நிரப்பித் தயாராக வைத்திருந்தனர்.

முத்துமாரியின் உற்சவ விக்கிரகத்தைப் பக்தர்கள் சுமந்து கொண்டு வந்து, ஆற்றங்கரையின் அருகே இருந்த அரச மரத்து மேடை மீது வைத்து விட்டிருந்தனர். சூரியன் உதிக்கு முன்பே காவிரியில் தலை முழுகி மஞ்சள் ஆடை உடுத்தி மஞ்சள் மலர் மாலை அணிந்து கொண்டு, தீமிதிக்குப் பக்தர்கள் தங்களைத் தயாரித்துக் கொண்டு விட்டனர். அத்துடன் தாங்கள் பூக்குழியில் இறங்கும் போது தாங்கிக்கொண்டு வரப் போவதாகப் பிரார்த்தனை எடுத்துக்கொண்டபடி, பால் காவடிகள், கரகங்கள் பால் குடங்கள், அக்னிச் சட்டிகள் இத்யாதிகளைத் தயாரிக்கத் தொடங்கினர்.

ஒரு மண்டலம் கடும் விரதம் இருந்த பூசாரி இளைத்துக் காய்ந்த குச்சி போலாகி விட்டிருந்தார். மஞ்சள் வேட்டியும் மாலையுமணிந்து, நெற்றியில் பட்டையாக விபூதியும் நடுவே

குங்குமமும் தரித்துக் கொண்டு, அவர் பூஜைக்கு ஆயத்தமாகி விட்டிருந்தார்.

சூரிய உதயத்துடனே உற்சவ விக்கிரகத்துக்கு அபிஷேக ஆராதனைகள் விமரிசையாக நடந்தேறின.

சிவப்புப் பட்டுச் சேலை உடுத்தி, செவ்வரளி மலர் மாலை சூடி, செக்கச் செவேலென்று குங்குமம் நெற்றியில் துலங்கத் தங்கக் கிரீடமும், காசு மாலை ஒட்டியாணமும் தக தகக்க தேவி அலங்கார நாயகியாகக் காட்சி தந்ததைக் கண்டு பக்தர்களிடையே பரவச ஆரவாரம்.

கற்பூர ஜோதியை அம்மன் திருமுகத்தருகே பூசாரி சுழற்றியதை வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்ற காமேஷ் மெய்சிலிர்த்துப் போனான்.

நாதசுவரம் இசைக்க, பக்தர்கள் சுமக்கப் பவனி புறப்பட்ட முத்துமாரியின் அலங்காரக் கோலத்தைக் கண்டு ஆனந்தப்பட்டு அழுத பக்தர்கள் சிலருக்கு ஆவேசம் வந்து விட்டது. இரண்டு பெண்கள் மயங்கி விழுந்தனர். குழந்தைகள் மகிழ்ச்சியில் கூச்சலிட்டனர்.

கரகம் எடுத்தவர்கள் முன்னால் ஆடிக்கொண்டு நடக்க, சிலம்பம் ஒலிக்க, தாரை தம்பட்டங்கள் சப்திக்க, பக்தர்கள் தேவியின் துதிபாட, முத்துமாரி ஊர்வலமாக ஆற்றங்கரையி லிருந்து புறப்பட்டாள்.

அந்தச் சில கிலோ மீட்டர் தூரம் வரை பக்தர்கள் பின்னால் கோஷமிட்டுப் பாடி ஆடிக்கொண்டு வந்த அதிசயத்தைக் கண்டகாமேஷ், அயர்ந்து போய் விட்டான்.

நகரத்து நாகரிக வாழ்விலே நாட்டமாக இருந்தவன். நம்பிக்கைகள் ஏதுமின்றி ஒட்டாது போலியாக வளைய வந்து கொண்டிருந்தவன் அவன். ஆயிரத்துக்கு மேல் திரண்டு



வந்திருந்த கிராமத்து மக்களின் முகத்திலே பரவி நின்ற பரவசத்தை வியப்போடு பார்த்தான்.

இத்தனை பேருக்குள்ளும் ஏதோ ஒரு நம்பிக்கை இருக்கவே தானே இங்கே கூடியிருக்கிறார்கள்?

பக்திக்கும் அன்புக்கும் அடிப்படையான உணர்வு தானே நம்பிக்கை!

இரவு முழுவதும் அடிவயிற்றைப் பிசைந்த திகில் உணர்வு கரைந்து மனத்துக்குள்ளே தானே ஒரு தெம்பு மெல்ல மெல்ல உருவாகிப் பலப்படுவதை அவன்புரிந்துகொள்ள முடிந்தது.

திரும்பிப் பார்த்தான். அவன் அண்ணி அகல்யா மஞ்சள் புடைவையை இறுக்கமாக இடையில் தார் பாய்ச்சி உடுத்திக் கொண்டிருந்தாள். பொன்னாக மின்னத் தேய்த்து, மஞ்சள் குங்குமப் பொட்டு வைத்து, கூழைப் பசுவின் பாலை நிறைத்து எடுத்து வந்த பால் குடத்தைத் தலையில் சுமந்து கொண்டு நெற்றியில் குங்குமம் துலங்க, உற்சவ விக்கிரகத்தின் பிரதிபிம்பமாகப் பக்தி பரவசத்துடன் பாடியபடி நடப்பதைக் கண்ட போது,அவனுள் இருந்த பயம் வேகமாகக் கரையத் தொடங்கியது.

அண்ணி அகல்யாவும் தீக்குழியில் முதல் முதலாகத்தான் இறங்கப் போகிறாள். அவளுக்கு இருந்த துணிவும் நம்பிக்கையும் ஆண்பிள்ளையான அவனுக்கு இல்லாவிடில்?

அண்ணி சொன்னதுபோல் அவனது மனத்தைக் கவ்விக் கொண்டிருந்த மாசு படிந்த எண்ணங்களை அம்பாளின் பூக்குழியில் பொசுங்கிப் பொடியாகிப் போகட்டும்!

தன்னுள் எண்ணிய மாத்திரம் அவனுக்குத் திடீரென்று ஆவேசம் வந்ததைப் போன்ற தெம்பும் துணிவும் ஏற்படவே,

'முத்துமாரிக்கு ஜே! முத்துமாரிக்கு ஜே! என்று கத்திக் கொண்டே பின்னால் நடந்தான்.

ஊர்வலம் கோயில் வாசலை நெருங்கிக் கொண்டிருந்த சமயம் ஆலயத்தின் நிர்வாகிகள் பரபரத்தனர். முன்னாடியே எரித்துக்கனலாகக் குவித்து வைத்திருந்த நீறு பூத்த நெருப்பைக் கிளறிவிட்டு, குழி முழுதும் பரத்திவிட்டனர்.

அன்னையின் அருளை வேண்டிக்கொண்டிருந்த பக்தர்கள், தங்கள் கையிலிருந்த சொம்பிலும் வெண்கலத் தம்ளரிலும் பத்திரமாக நிறைத்துக்கொண்டு வந்திருந்த பசும்பாலைப் பால்குழியிலே ஊற்றி நிரப்பத் தொடங்கினர். உற்சவ விக்கிரகத்தைச் சுமந்து வந்தவர்கள் பால் குழிக்கு முன்னால் அமைந்திருந்த மேடை மீதுஅம்மனை நிறுத்தி வைத்தனர்.

எதிர்ப் புறத்திலே தீமிதிக்க வேண்டிக் கொண்டிருந்தவர்கள், மற்றும் வரிசையாக ஒழுங்காகப் பூசாரிக்குப் பின்னால் கரகங்கள் பால் குடங்கள் முதலியவற்றைத் தாங்கியபடி நின்று கொண்டிருந்தனர். கோயில் உள்ளே இருந்து வந்த ஒருவர் ஈரமான மஞ்சள் துணியொன்றைக் கொண்டு வந்து பூசாரியிடம் கொடுத்தார். அவர் அருகிலிருந்த ஒரு பித்தளைக் கரண்டியால் கையளவு நெருப்பை அள்ளித் துணியில் போட்டு மூட்டையாகக் கட்டி முடிந்து அந்த நெருப்பு முடிப்பை மேடையில் எழுந்தருளியிருக்கும் அம்மனது பட்டுப் புடவை மடியில் வைத்துக் கட்டினார்.

கணகணவென்று எரிந்து கொண்டிருந்த பூக்குழியின் பிரகாசம், பளிச்சென்று எழுந்த சூரியனின் ஒளி இரண்டும் பட்டுச் செக்க செவேலென்று செங்கோலம் பூண்ட மாரியம்மன் திருவுருவம் முழுதும் நெருப்பாக ஜொலிப்பதைக் கண்ட பக்தர்கள் பலருக்கு ஆவேசம் வந்து விட்டது.



''முத்துமாரித் தாயே!'' அவர்களது கோஷம் வானைப் பிளந்தது. தேங்காய் உடைத்து அம்மனுக்குத் தூப தீப ஆராதனைகளை முடித்த பின்னர், பூசாரி தாம் சுமக்க வைத்திருந்த கரகத்தைத் தலையில் வைத்துக் கொண்டார். வலது கையில் வேப்பிலைக் கொத்தைப் பிடித்துக்கொண்டு விநாயகருக்குத் துதி பாடி விட்டுத் தாரை தப்பட்டைகளையும் மீறிய கணீர்க் குரலில்,

''ஆயிரம் கண்ணுடைய அலங்காரியே வாருமம்மா
பதினாயிரம் கண்ணுடையாள் பராசக்தியே வாருமம்மா''

என்று பாடியபடி தம்மை மறந்த நிலையில் தீக்குழிக்குள் காலை வைத்து, நிதானமாகக் கரகமாடியபடி நடக்கத் தொடங்கினார்.

தாரை தப்பட்டைகள் அதிர்ந்தன.

சிலம்பம் ஆர்ப்பரித்தது.

உடுக்கை ஓங்கி ஒலித்தது.

''முத்துமாரித் தாயே கருணை கொண்டு பாரம்மா'' ஜனங்களிடையே பரவசக் கோஷம்.

அடுத்தபடியாக நின்ற அகல்யா சட்டென்று திரும்பிக் காமேஷை உற்றுப் பார்த்தாள்.

ஊருக்குப் பெரிய மனிதரான கனகசபையின் மருமகள் கூடப் பூக்குழியில் இறங்கப் போகிறாங்களாமே! விஷயம் ஏற்கனவே பரவி விட்டிருந்தது. வேடிக்கை பார்க்க வந்த சிலர் கூட்டத்தை இடித்துத் தள்ளிக் கொண்டு முன்வந்து நிற்க முயன்றனர்.

''அவர் மகன் ஏன் இப்படி இளைச்சுக் கறுத்துப் போயிருக்கார்?''

''அவரும் இறங்கப் போகிறாரா?''

''அவுங்க அம்மாவுக்கு உடம்புக்கு முடியலையாமே?''

பற்பல விமரிசனங்களும் இடையிடையே இருக்கத் தான் செய்தன.

தன்முன் தெரிந்த மேடையில் திருக்கோலம் கொண்டெழுந்தருளியிருந்த முத்துமாரியின் கனல் விழிகளில் கருணையைத் தேடி உள்ளம் உருகி உணர்ச்சி பொங்கப் பிரார்த்தித்துக் கொண்ட அகல்யா,

''சமயபுரத்தாளே சாம்பிராணி வாசகியே
சமயபுரத் தெல்லைவிட்டுத் தாயாரே வாருமம்மா!
மாதாவே பெற்றவளே,மனம் வைத்துப் பாருமம்மா!
பார்வதியே, பெற்றவளே பக்ஷம்வைத்துப் பாருமம்மா!''

பொங்கிப் புரண்ட கண்ணீர் கன்னங்களில் வழிந் தோடத் தன்னை மறந்த நிலையில் இனிய குரலில் பாடிக்கொண்டே பூசாரிக்குப் பின்னால் தீக்குழியில் மெல்ல இறங்கி நிதானமாக நடந்தாள்.

''முத்துமாரித் தாயே! அம்மா, உன் மகிமையே மகிமை.''

கோஷமிட்ட பக்தர்கள் மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருக்கையில், பூவிதழ்கள் மீது நடப்பது போன்று மெல்ல நடந்து சென்றாள்.

அந்த அதிசயத்தைக் கண்டு அயர்ந்து போன காமேஷ் அவனையும் அறியாததொரு வேகத்திலே கைகளைச் சிரமேல் கூப்பிக்கொண்டு, கண்கள் பனிக்க நெஞ்சை உணர்வுகள் அடைக்க, 'தாயே! உன் பாதம் சரணம் அம்மா!' என்று கத்திக் கொண்டு, பூக்குழியில் இறங்கிப் பின்னால் நடந்து வெளியே வந்தான்.

என்ன அதிசயம்! தீ அவன் பாதங்களைச் சுடவே யில்லையே! கற்குவியல் மீது நடப்பது போன்றதொரு



விசித்திரமான அநுபவம். அவனுக்கா இப்படி ஓர் அற்புதம் நிகழ்ந்து விட்டிருக்கிறது!

முதலில் வெளி வந்த பூசாரி, எதிரே இருந்த பால் குழியில் இறங்கிக் காலை நனைத்துக் கொண்டு வெளிப் பட்டார். எல்லாரும்அவரைப் பின்பற்றினர்.

பின்னர் மேடையைச் சுற்றிலும் அவரவர்கள் சுமந்து வந்த காவடிகள், பால் குடங்கள், கரகங்கள் அனைத்தும் இறக்கி வைக்கப்பட்டன. பூசாரி மறுபடியும் தேங்காய் உடைத்து அம்மனுக்குத் தூப தீபம் காட்டி வழிபட்டார். பின்னர் பக்தர்கள் சுமந்து வந்த பால் குடத்துப் பாலையெல்லாம் ஒரு பெரிய அண்டாவில் ஊற்றி ஆட்கள் கோயிலுக்குள் எடுத்துச்சென்றனர்.

அந்தப் பாலைக் கொண்டு உள்ளே எழுந்தருளியிருந்த தேவியின் திருவுருவத்துக்குக் குளிரக் குளிர அபிஷேகம் நடந்தது.அதற்குப் பின்னர், அம்மனுக்கு மஞ்சள் புடைவை அணிவித்துச் செவ்வந்தி மாலை சூட்டி அலங்கரித்து, பூசாரி தீபாராதனை செய்து முடித்தார். ஊர் உபயமாகத் தயாரிக்கப் பட்டிருந்த உணவு வகைகள் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்பட்டன.

நேரம் நடுப்பகலைத் தாண்டி விட்டது. பூரணியின் துணையில் விட்டு வந்திருந்த மாமியாரின் நினைப்பு வரவே, அகல்யா வீட்டுக்குக் கிளம்பினாள்.

அதற்குள் ஆறி விட்டிருந்த பூக்குழியிலிருந்து ஒரு பிடி சாம்பலை அள்ளித் தன் முன்றானையில் பத்திரமாக முடிந்து கொண்டு வெளியே வந்தாள்.

கூட்டத்தின் முன்னதாக வந்து நின்று கொண்டிருந் தார்கள் அவளது பெற்றோர்கள்.

''அம்மா கிருபையாலே எல்லாம் நல்லபடியா நடந்திருச்சம்மா.'' கவலை நீங்கியவராக மகளைப் பெருமையுடன் பார்த்தார் குருநாதன்.

''ஆத்தா உனக்கு சகல நலன்களையும் கொடுக்கட்டும். அம்மா, அகல்யா! பூ மேலே நடக்கிறாப் போலப் பொறுமையா நடந்து வந்துட்டியே கண்ணே!'' பெற்றவள் மகளைப் பூரிப்புடன் அணைத்துக் கொண்டாள்.

நாள் முழுதும் பட்டினியாக இருந்த களைப்பு. பல கவலைகளால் உழன்ற உணர்வுக் குழப்பம் அவளுக்கு. மற்றுமொரு முறை கோயிலுக்குள் குடியிருந்த தெய்வத்தின் திருவுருவத்தை ஆசை தீரப் பார்த்தாள்.

'உலகத்து நாயகியே முத்துமாரி! தான் நேர்ந்து கொண்டதைச்செய்து முடிச்சுட்டேன். இனி நான் கேட்ட வரம் கொடுப்பதும் கொடுக்காததும் உன் கருணை.' தனக்குள்ளே பிரார்த்தித்துக் கொண்டபடி, கண்கலங்க, நடை தள்ளாட, மெல்ல வீட்டை நோக்கிப் பெற்றோர்களுடன் புறப்பட்டாள்.

சற்றுத் தூரம் மகளுடன் நடந்து வந்த குருநாதன் தம்பதியர், வீட்டை நெருங்கியதும் விடை பெற்றுக் கொண்டு பிரிந்தனர்.

உள்ளே நுழைந்த அகல்யா தலைப்பில் முடிந்து கொண்டு வந்த பூக்குழிச் சாம்பலைத் துளி எடுத்துத் தன் மாமியாரின் நெற்றியில் தடவினாள். சிறிது தானும் அணிந்து கொண்டு, சிறிது பூரணிக்கும் கொடுத்து விட்டு, மற்றதைப் பத்திரமாக ஒரு கிண்ணத்திலே போட்டு, பூஜை அறையிலே கொண்டு வைத்தாள்.

பின்தொடர்ந்து வந்த சிங்காரம் பற்களைக் காட்டி மகிழ்ச்சியுடன் சிரித்தான்.



''அப்பப்பா! என்ன கூட்டம். என்ன கூட்டம்! இது மாதிரி விழா நான் இதுவரை பார்த்ததே இல்லை.'' ஆர்ப்பரித்த வண்ணம், தன் மனைவியுடன் தன் வீட்டுக்கு நடையைக் கட்டினான். நடந்ததையெல்லாம் விவரமாகத் தன் மனைவியிடம் சொல்ல வேண்டும் என்ற ஆவல் அவனுக்கு.

அபிஷேகப் பாலைச் செம்பிலே நிறைத்து எடுத்துக் கொண்டு, மெல்ல நடந்து வீட்டுக்குள் காமேஷ் வந்த போது அகல்யா பூக்குழியில் இறங்கியபோதிருந்த மஞ்சள் ஆடையுடன் மாலையைக் கழற்ற மறந்து சிந்தனையுடன் ஹாலுக்குள் நின்று கொண்டிருப்பதைக் கண்டான்.

''அண்ணி!''

திடுக்கிட்டுப் போன அகல்யா திரும்பினாள்.

பால் செம்பை மேடை மீது வைத்து விட்டுச் சமாளிக்க இயலாதவனாகத் தடால் என்று தரையில் விழுந்து அவளை வணங்கினான்.

''கோயில்லே சித்த முன்னே பார்த்த அந்த முத்துமாரியை இந்த வீட்டுக்குள்ளே இப்பப் பார்க்கிறாப்பல எனக்குத் தோணுது. அண்ணி! அறிவு கெட்டதனமாக உங்ககிட்ட நடந்துகொண்டதை மறந்து மன்னிச்சுடுங்க. சுபாவத்திலே நான் அவ்வளவு கெட்டவன் இல்லை.

சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட வக்ரபுத்தி என்னை எப்படியெல்லாமோ செய்துடுச்சு.''

அவனது குரல் தழுதழுத்தது.

''எழுந்திரு. ஆண்பிள்ளையா அழகாத் துணிவா இருந்துக்கத் தெரிஞ்சுக்க.''

''அண்ணி! நீங்க கொடுத்த தெம்பிலே பூக்குழியிலே இறங்கிப் புனிதமாயிட்டேன். இனி என் வேலை முடிஞ்சது. நான் இன்னிக்கே கிளம்பி...'' அவன் முடிக்கவில்லை.

''நீ இங்கேயிருந்து இப்ப திடீர்னு கிளம்பிப் போக முடியாது. உனக்கு இன்னொரு பெரிய வேலை இருக்கு.''

திகைப்புற்று அவன் எழுந்து நின்றான்.

''போய் முதல்லே துணியை மாத்திக்கோ. ஏதாவது சட்டுனு சாப்பிடு. சிங்காரத்தை விட்டு உடனடியா டாக்டரைக் கையோடு அழைச்சு வரச்சொல். அவர் வந்தும் பயன் கிடையாது.''

''என்ன சொல்றீங்க அண்ணி?''

''சித்த முன்னே என் கையாலே ஒரு கரண்டி பால் வாயில் ஊற்ற நான் உள்ளே போன போது தெரிஞ்சுக் கிட்டேன். என் மாமியார் இறந்து சில நிமிஷங்கள் ஆகிவிட்டிருக்கும் போலத் தெரிஞ்சுது.''

''இறந்துட்டாங்களா!'' உரத்த குரலில் அலறி விட்டான் காமேஷ்.

''ஏன், கத்தறே? அவங்க போயிட்டாங்க. இனி நடக்க வேண்டியதைக் கவனிக்க வேண்டியது, நம்மெல்லோருடைய பொறுப்பாகி விட்டது. கொள்ளி போட அவங்க பிள்ளை இப்போ அருகில் இல்லை. அதனால் முதலில் ஆரம்பித்த நாடகத்தைத் தொடர்ந்து நீ இன்னும் சில நாட்கள் நடத்த வேண்டியிருக்கும். என் மாமியாருக்கு நீயே உன் அண்ணனுக்குப் பதில் கொள்ளி போட்டு...'' பேச முடியாமல் கண்களில் பெருகிய நீரை வழித்தெறிந்து விட்டு, உள்ளே சென்று விட்டாள்.



## 25

இந்தச் சில நாட்களில் அகல்யா பட்ட மன வேதனையைப் பெரும் சித்ரவதை என்றுதான் கூற வேண்டும்.

''வந்திருப்பவன் தன் கணவனில்லை, ஆள் மாறாட்டம் செய்கிற ஓர் அயோக்கியன்'' என்ற உண்மையை உணர்ந்து கொண்டபோது, அவள் உள்ளம் பட்ட பாடு!

''அப்படியென்றால், அவள் கணவன் ராஜ்குமார் என்ன ஆனான்?'' என்று எண்ணி ஏங்கித் தவித்த தவிப்பு!

வந்திருப்பவன் தன் கணவரது தம்பி என்பதும், ராஜ்குமார் கடலில் மூழ்கி இறந்து போனதாக அவன் கொடுத்த தகவலும், பத்திரிகைச்செய்தியும் அவளை எத்தனை பெரிய துயரத்தில் ஆழ்த்தி விட்டிருந்தன!

வெளியே சொல்லிக்கொள்ள முடியாமல், விசாரித்து உண்மையை உடனடியாகக் கண்டு கொள்ளவும் இயலாத ஒரு பயங்கரமான அவல நிலையில் சிக்கிக் கொண்டிருந்த அகல்யாவின் உள்ளம் இத்தனை நாட்களும் ஊமையாகத் தனக்குள்ளே அழுது கொண்டிருந்தது. அந்த மாபெரும் வேதனையை அவள் எப்படித்தான் சகித்தாளோ? அவளுக்கே அது அதிசயமாகத்தான் இருந்தது.

மாமியார் இறந்து விட்டாள் என்று மற்றவர்களுக் கெல்லாம் தெரிந்தவுடன், அவள் இதுவரை அடக்கி வைத்திருந்த துயரம் அனைத்தையும் கொட்டி அழுதாள். குமுறிக் குமுறி அழுதாள்.

காமேஷ் சொல்வதும் பத்திரிகைச் செய்தியும் உண்மையா?

''ராஜ்குமார் உயிரோடு இருந்தால் இத்தனை நாள் ஊருக்கு வந்திருப்பாரே.''

'முத்துமாரித் தாயே! தூய பக்தியுடன் உன்னை நெருங்க உன் நெருப்புப் பாவாடையில் தவழ்ந்து வந்த உன் குழந்தை நான்.'

'என் கணவரை நீர் கொண்டு போக விட்டு விட்டாயே? தர்மமா?'

தனக்குள்ளே பலமுறை கேட்டுக் கொண்டு வாய்விட்டு ஒவென்று கத்தி அழுதாள்.. தரை மீது புரண்டு விம்மிக் கண்ணீர் வடித்தாள்.

அவள் என்ன ஆதிமந்தியா? கடல் கொண்டு போன தன் காதலனைக் கதறி அழைத்ததும் கடல் கொண்டு வந்து கரையில் சேர்த்துவிட?

அற்புதங்கள் நிகழ்த்தும் வல்லமை படைத்த முத்து மாரியே, அவள் விஷயத்தில் கல்லாக இருக்கும் போது, அவள் கண்ணீருக்கு என்ன வலிமை இருக்கிறது?

தனிமையில் அவளை இப்படித் தவிக்க விட்டதற்குப் பதில், பூக்குழியில் இறங்கிய அன்றே முத்துமாரி அவளைத் தீக்கிரையாக்கித் தன் பாதத்தில் ஏற்றுக் கொண்டிருக்கலாமே!

பலவும் எண்ணி நெஞ்சு வெடிக்கும்போல அவள் குமுறி அழுது கொண்டிருந்தாள். சிங்காரமும் பூரணியும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள்.

''பெரியம்மாவுக்கு வயசாயிடுச்சு. பலவித நோய்கள் வந்து படாதபாடு பட்டுக் கொண்டிருந்தாங்க. பார்வைக் கோளாறு வேறு. தனக்கும் பிறருக்கும் தொல்லை இல்லாமல் மாரடைப்பிலே அவங்க பொசுக்குனு போனது நிம்மதியான சாவுன்னுதான் நாம நினைக்கணும். அவங்க படுத்த படுக்கையோட இன்னும் ஊறி, நாறிச் செத்தாக்க, நம்ம



எல்லார் மனசும் வேதனைப்படுமே? அவங்கப் படற கஷ்டத்தைப் பார்த்து மகன் சகிக்க மாட்டாரே,துடிச்சுப் போவாரே? அதுவரை ஆத்தா நம் மேலே கிருபை வச்சு அம்மாவைத் தக்க சமயத்திலே தன்னோட ஐக்கியப்படுத்திக் கிட்டா. அழாதிங்க சின்னம்மா,'' பூரணி அருகில் வந்து உட்கார்ந்து கொண்டு, மெல்லிய துண்டினால் எஜமானியின் கண்ணீரைத் துடைத்து ஆறுதல்கள் பல சொன்னாள்.

அகல்யா விடாமல் விசும்பி அழுது கொண்டுதான் இருந்தாள்.

''பாவம். மாமியார் உயிருடன் இருந்தபோது கட்டிக் காத்துப் பல பணிவிடைகள் செய்து உடல் சோர்ந்து போனது போதாது போல, இறந்து போனவங்களை நினைச்சு உருகி அழுது இப்படி இளைச்சுத் துரும்பாகப் போயிட்டாங்களே சின்னம்மா. இவங்களுக்குத்தான் எத்தனை ஒரு நல்ல மனசு?'' தனக்குள் அவள் எண்ணி மிகவும் வியப்படைந்தாள்.

''அம்மா சூடாகக் கொஞ்சம் காபி கொண்டு வந்திருக்கேன். ஒரு வாய் சாப்பிடுங்க. அன்னந் தண்ணி இல்லாமக் கிடந்தா உடம்பு என்னத்துக்காகும்?'' வற்புறுத்தி சிறிது காபியை, அவ்வப் பொழுது கொடுத்து உபசரித்தாள்.

அகல்யாவுக்கு உணவு கசந்தது. உறக்கம் ஒழிந்தது. துயரத்தில் ரத்தக் கண்ணீர் வடித்த உள்ளம் தன் புலம்பலை நிறுத்த மறுத்தது.

'உயிருக்கு மேலான கணவன் போனபின்பு, அவள் இனி வாழ்ந்துதான் என்ன பயன்?' என்றதொரு நினைப்பு மனத்திலே நிறைந்து நின்றது.

பதினோராவது நாள் சடங்கிலே வந்து கலந்து கொள்ள சேலத்திலிருந்து பார்வதி வந்திருந்தாள். ஊருக்குத் திரும்பு முன், அகல்யா உட்கார்ந்திருந்த அறைக்குள்ளே வந்தாள். கரங்களை அன்புடன் பற்றிக்கொண்டாள்.

''எல்லாம் ஒழுங்கா நடந்தேறிடிச்சு. பஞ்சரத்தினம் புண்ணியம் பண்ணினவ. காசும் பணமுமா செல்வாக்காத்தான் வாழ்ந்தா. ராஜ்குமார் தங்கமான பிள்ளை. தான் தலையெடுத்த பிறகு தாயாரை உள்ளங்கையில் வச்சுத் தாங்கினான். வீட்டுக்கு வந்த மருமகள் நீ எல்லாரையும் மிஞ்சிட்டே. பெத்த தாயாட்டம் பஞ்சரத்தினத்தைக் கடைசிவரை வச்சு ஆசையும் அன்புமாகக் கவனிச்சே. எல்லாம் அவ மனசுப்படியே செஞ்சு முடிச்சுட்டே. இந்த மாதிரி ஒரு பாக்கியம் எனக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ தெரியாது. என் தோழி கொடுத்து வச்சவ. உன்னைப் போல நல்லதொரு மருமகளை அடைஞ்சா. மேன்மையாப் போயிட்டா. நீ நல்லா இருக்கணும். பூவும் பொட்டுமா மகராசியா வாழணும்னு வாழ்த்தறேன். பஞ்சரத்தினம் எங்கேயும் போகமாட்டா, வெகு சீக்கிரம் இந்த வீட்டிலேயே ஒரு குழந்தையா வந்து பிறந்துடுவா. பிள்ளை, மருமகள் இரண்டு பேர் மேலேயும் அவளுக்கு உசிரு.'' பார்வதியின் குரல் தழுதழுத்தது. கலைந்து கிடந்த அகல்யாவின் நெற்றி முடியை மெல்ல ஒதுக்கிவிட்டு அவளைக் கட்டித் தழுவிக்கொண்டாள்.

உண்மையை அவளிடம் சொல்ல முடியாமல் அகல்யா விசும்பி அழுதாள்.

''அழாதேம்மா. இனி நீ தைரியமா இருக்கணும். இந்த வீட்டைக் கவனிக்கிற முழுப் பொறுப்பும் இனி உன்னுடையதாயிடுச்சே. மனசைத் தளர விடலாமா. எழுந்து முகத்தைக் கழுவிக்கொண்டு ஏதாச்சும் சாப்பிடு? தம்பி ராஜ்குமாரை நல்லாக் கவனிச்சுக்கோ'' என்று சொல்லிவிட்டுத் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு பெருமூச்சுடன் கிளம்பினாள்.

சடங்குக்கு வந்த யாவரும் புறப்பட்டுப் போய் விட்டனர். பொழுது அமிழும் வேளையில் அகல்யா முகத்தைக் கழுவி, முடியை வேகமாகச் சீவி முடித்துக்



கொண்டாள். குங்குமச் சிமிழைத் திறந்து விரலில் சிறிதளவு தொட்ட நெற்றி மீது வைத்துக் கொண்ட போது அவள் மேனி பயத்திலே நடுங்கியது.

கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தைப் பார்க்கப் பிடிக்காமல் வேகமாகத்திரும்பி ஹாலுக்கு வந்தாள். சுவரிலே பெரிய அளவில் தொங்கிய பஞ்சரத்தினம் படத்தின் அருகே தரையில் எரிந்து கொண்டிருந்த குத்துவிளக்கின் அருகே உட்கார்ந்து கொண்டாள். எத்தனை நாட்கள் தொடர்ந்து இந்த வேஷத்தில் நடக்க முடியும்?

கடலில் மறைந்து போன ராஜ்குமார் மரணமடைந்து விட்டிருந்தால், அவள் இனியும் பூவும் பொட்டுமாய்...?

குபீரென்று புரண்டு எழுந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டபோது அருகில் காலடி ஓசை கேட்டது. மெல்லத் திரும்பிப் பார்த்தாள்.

குருநாதனும் அவர் மனைவியும் தனது மகள் அருகே வந்து உட்கார்ந்துகொண்டனர்.

''உன்னை விட்டுப்போக மனசில்லை.ஆனாலும் நாங்க இங்கே தங்கியிருப்பது சரியில்லையே. எல்லாம் ஒரு வழியா முடிஞ்சு போச்சு. இனிமேல நம்ப வாழ்க்கையை நாமே சீர்படுத்திப் போவதுதான் முறை.'' அம்மா மகளின் தோளைத் தொட்டு ஆதரவுடன் சொன்னாள்.

''உன் மாமியார் நோயோட ரொம்ப வேதனைப் பட்டாங்க. மகன் வந்துட்டான் என்கிற மகிழ்ச்சியையாவது அநுபவிச்சுட்டுப் போனாங்களேன்னு நீ மனத்தைத் தேத்திக்கணும். இனி உன் கணவனைக் கவனிச்சுக் கொண்டு நிறைவா நீ வாழணும். இப்படி அழுது உடம்பைக் கெடுத்துக்கிறதிலே யாருக்கு லாபம்? போனவங்க திரும்பியா வரப்போறாங்க?'' குருநாதன் அன்புடன் கடிந்து கொண்டார்.

''அப்பா!'' என்று விம்மிய அகல்யா அவரது கரங்களைப் பற்றிக் கொண்டாள். கட்டுப்படுத்த முடியாத கண்ணீர் புரண்டு பெருக்கெடுத்துக் கன்னங்களில் ஓடியது.

'என்னம்மா நீ! ரொம்ப மனசைப்போட்டு அலட்டிக் கிறே? மாப்பிள்ளை கூட மருண்டு போய் வாசலிலேயே பொழுது முழுவதும் முழிச்சுக்கிட்டு நிற்கிறார். பார்க்கச் சங்கடமா இருக்கு. நீ கொஞ்சம் மனத்தைத் திடப்படுத்திக்கோ. உன் மாமியாருக்கு வேண்டியதைச் செஞ்சுட்டே, ஏன் இப்படி அழறே?'' தந்தை மகளை அதட்டிக் கேட்டார்.

'அப்பா! வாசலில் நிற்பவர் உங்க மருமகன் இல்லை. இந்த ஆள் மாறாட்டம் உங்க கண்களில் படவேயில்லையா அப்பா! அவர் ராஜ்குமாரின் தம்பி காமேஷ். நம்மையெல்லாம் ஏமாத்திக் கொண்டிருந்தார். தெரிஞ்சுக்குங்கோ. ரெண்டு பேரும் என் மாமியாரின் பிள்ளைகள் இல்லே, அதையும் புரிஞ்சுக்கோங்கோ.' என்று அலறி அழுது உண்மையைக் கொட்டி விட வேண்டும் என்ற ஆத்திரம் அவளுக்கு.

ஆனால் இத்தனை நாள் மூடி மறைத்தது ஏன்? என்று அப்பா கேட்டுவிட்டால், அவளைப் பற்றி அசிங்கமாக எண்ணிவிட்டால்? அப்பாவின் தவறான கணிப்பைவிடச் சாவு மேலான தண்டனை ஆயிற்றே!

''அம்மா! என்னால் தாங்க முடியலையே?'' விசும்பிய படி மகள் தாயின் மார்பில் முகத்தைப் பதித்துக்கொண்டாள்.

'தாயிடம் கூடச் சொல்லிக்கொள்ள முடியாத ரகசியமாகி விட்டதே, முத்துமாரி!' மனம் வேதனையில் வெடித்தது.

சிறிது நேரம் அவளது பெற்றோர்கள்கூட இருந்து ஆறுதல் பல சொல்லி விட்டுக் கிளம்பிவிட்டனர்.

எல்லாரும் போன பின்பு வீட்டுக்குள் மயானத்தைப் போன்றதொரு பயங்கர அமைதி நிலவியது.



மாடியினின்று வெளிப்பட்ட காமேஷ் மெல்ல படிகளில் இறங்கி வந்தான். சுவரோரமாகத் தரையில் அகல்யா உட்கார்ந்திருந்தாள்.

''பூரணி சாப்பாட்டை மேஜை மீது வைத்துப் போயிருக்கிறாள். எடுத்துப் போட்டுச் சாப்பிடு'' விரக்தியான குரலில் திருப்பிப் பார்க்காமல் உத்தரவிட்டாள்.

ஹாலில் எரிந்த விளக்கைத் தவிர வீடு இருளில் மூழ்கிக் கிடந்தது. அருகில் வேறு எவரையும் காணவில்லை.

துயரத்தின் எல்லையைத் தாண்டிவிட்ட அகல்யா தன் சூழ்நிலையைப் பாராட்டவில்லை. தனிமையைக் கண்டு அஞ்சவும் இல்லை. அசட்டையாக அமர்ந்திருந்தாள்.

''அண்ணி! எல்லாம் முடிஞ்சு விட்டது. இனி நீடித்து நான் இருப்பதில் அர்த்தமில்லை. அதனால்...''

அவள் நிமிர்ந்து பார்த்தாள். துயரம் கப்பிய அந்த முகம் அவன் மனத்தை நெருடியது. குற்ற உணர்வு நெஞ்சை அழுத்த, ஒரு கணம் பேச முடியாது தவித்தான்.

''அண்ணி! நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டிருக்கேன். ஆரம்பத்தில் எனக்கு இந்த வீடு, பணம் எல்லாத்தின் மேலும் ரொம்ப மோகம் இருந்தது உண்மை. ஆனால், இப்போ எனக்கு இவை மீது துளிகூட ஆசை இல்லை.''

மௌனமாக அவனை வெறித்துப் பார்த்தாள் அகல்யா.

''நான் சொல்வதெல்லாம் உண்மை. நம்புங்க எனக்கு இந்தச்சொத்தில் எதுவும் தேவையில்லை. இதெல்லாம் இனி உங்களுக்குத்தான் ரொம்பத் தேவை.''

''என் கணவர் இல்லாதபோது எனக்கு இந்த வீடும் பணமும் முக்கியம்னு நினைக்கிறியா?'' வறட்சியாக, ஈனமான குரலில் மெல்லக் கேட்டாள் அவள்.

தயக்கத்துடன் வார்த்தைகளை விழுங்கிக் கொண்டான் காமேஷ்.

''எனக்கு என் கையில் தொழில் இருக்கு. நான் மறுபடியும் வெளிநாட்டுக்குப் போய் எப்படியாவது பிழைத்துக்கொள்வேன்?''

''பள்ளி ஆசிரியர் என்கிற பதவி ஏற்கிற திறமை எங்கிட்ட இருக்கு. மறக்காதே,அதை வச்சுக்கொண்டு என்னாலும் பிழைக்க முடியும்.''

காமேஷ் வேதனையுடன் மௌனமாக நின்றான். கணவனைத் தன் உயிராகப் பாவித்து வாழ்ந்த இந்த நல்ல பெண்ணுக்கு, இப்படி ஒரு துன்பம் ஏற்பட்டது கொடுமையிலும் கொடுமை. தனக்குள் எண்ணி மருகினான்.

''அண்ணி, நான் மட்டமாக நடந்து கொண்டும் நீங்க பெரிய மனசு பண்ணி என்னை மன்னிச்சுட்டீங்க. இந்த ஒண்ணுக்காக நான் உங்களை ஒரு போதும் மறக்கவே மாட்டேன். உங்களுக்குக் கனவில் கூடத் தீங்கு நினைக்க மாட்டேன். இப்ப இந்த நிமிஷமே உங்ககிட்டே உத்தரவு வாங்கிட்டு, ஊருக்குப் புறப்படத் தயாராயிருக்கிறேன்'' என்றான்.

''நீ இனி அநாவசியமா இங்கே இருப்பது தவறு. போக வேண்டியதுதான் முறை. ஆனால் யாராவது கேட்டால்?'' அவள் தனக்குள்ளே மெல்லப் பேசிக் கொண்டாள்.

''யாராவது கேட்டால் வெளியூர்போயிருக்கார்னு சொல்லுங்க.''

''அப்போ எனக்கு ஓர் உதவி செய்வியா?'' மெல்ல அவள் எழுந்து நின்றாள்.

''என்ன சொல்லுங்க? முதல் காரியமாச் செஞ்சு முடிக்கிறேன்.'' ஆவலுடன் கேட்டான் காமேஷ்.



''நீ சென்னைக்குப் போனதும். உடனடியா என் கணவர் இறந்து போனது உண்மையா என்பதற்கு ஆதாரத்தை ஆஸ்பத்திரியிலிருந்தோ அல்லது அந்தப் பத்திரிகை ஆபீசிலோ விவரமா விசாரிச்சுக் கடிதம் போடணும். எனக்கு இது நிச்சயமாத் தெரிஞ்சாகணும். இதைச் செய்ய உனக்கு நாலு நாள் அவகாசம் கொடுக்கிறேன். செய்வியா?'' துயரத்தில் அவள் குரல் நடுங்கியது.

காமேஷின் நெஞ்சு நெகிழ்ந்து போயிற்று.

''அண்ணி! கட்டாயம் செய்கிறேன். அது நிச்சயம் என்று ஆகிவிட்டால், அதற்குப் பிறகு நீங்க என்ன செய்வதாக உத்தேசம்?''

''அதைப்பத்தி நீ கவலைப்பட வேண்டாம்'' சொல்லிக்கொண்டே மெல்லச்சென்று கதவைத் திறந்தாள்.

படிகளை விட்டு இறங்கி தெருவில் வீடு எழுப்பிய நிழல் ஒன்றுக்குள் மறைந்து போன காமேஷ் மெல்லத் திரும்பிப் பார்க்குமுன் படால் என்று கனமான வாயிற் கதவை அழுத்தமாகச் சாத்தி அகல்யா தாழிட்டுக் கொண்டு விட்டாள். யாருமில்லாத அந்த வீட்டுக்குள் அவள் மெல்ல நடந்தாள். குழல் விளக்கை அணைத்து விட்டு விடிவிளக்கை பொருத்தினாள். மாமியாரின் படத்தருகே தரைமீது உட்கார்ந்தாள்.

'நான்கு நாட்களில், ராஜ்குமார் கடலில் இறந்து போனது உண்மை என்ற ஆதாரத்துடன் காமேஷிடமிருந்து கடிதம் வந்து விட்டால்?'

தாங்க முடியாத துயரத்தில், தரை மீது குப்புறப்படுத்துக் கொண்டு, தேற்றுவார் இன்றிக் குலுங்கி அழுதாள்.

## 26

அவள் கொடுத்திருந்த நான்கு நாள் கெடு விரைந்து சென்று விட்டது. காமேஷிடமிருந்து எந்த விதமான தகவலையும் காணோம். காலையிலும் மாலையிலும் தபால்காரர் வரவை எதிர்நோக்கி, வாசலுக்குப் பல தடவைகள் நடந்து அவள் அலுத்துப் போனாள்.

இடையே வேலையாள் சிங்காரத்தின் அநாவசியத் தலையீடு வேறு.

''சொல்லாமக் கொள்ளாம ஐயா திடுதிப்புனு பட்டணமா போயிருக்கார்?''

''என்னவோ அவசர ஜோலியாம், போயிருக்கார்!'' பொங்கி வந்த எரிச்சலை அடக்கிக் கொண்டு பதிலளித்தாள்.

மகளைக் காண வந்த குருநாதன் தம்பதியருக்கு வியப்புத் தாங்க முடியவில்லை.

''என்னம்மா, இது சமயம் உன்னை விட்டு அப்படிப் பட்டணத்தில் என்ன வேலை?'' தாயார் எரிச்சல்பட்டாள்.

''சிங்காரமும் பூரணியும் துணைக்கு இருக்கிறாங்கன்னு மாப்பிள்ளைக்குத் தெம்பு ஏதோ முக்கிய காரியம் தொட்டுத்தான் அவசரமாப் போயிருக்கார். இல்லாட்டி நம்ம குழந்தையைத் தனியே விட்டுப் போக அவருக்கு மட்டும் மனசு கேட்குமா?'' அப்பா தம் மருமகனுக்காகப் பரிந்து பேசினார்.

''என்னைத் தனியாக இருக்க விட்டுவிட்டு உங்க மருமகன் ஒரேயடியாகப் போய் விட்டாரப்பா...''

உண்மையை இன்னமும் சொல்ல முடியாத ஓர் அவல நிலை. சுவரிலே தலையை மோதிக்கொண்டு கதற வேண்டும்போல், துயரம் அவளுள் பொங்கிப் புரண்டது.



உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, கேட்டவர்களுக்குச் சட்டென்று ஏதோ பதில் சொல்லி வைத்தாள்.

அன்று இரவு அவளுக்கு உறக்கமே இல்லை. கூடத் துணைக்குத் தங்கியிருக்க முன்வந்த தாயின் உதவியை மறுத்து விட்டாள். அவளுக்குத் தனியாக இருக்க இனி பயமென்ன? வாழ்நாள் முழுதும் தனியாக இனி இருக்க வேண்டிய நிலை வந்துவிட்டிருக்கிறதே!

காமேஷ் கடிதத்தில் அந்தப் பயங்கரச் செய்தியைத் தெரிவிக்கத் தயங்கிக் கொண்டு ஒத்திப்போட்டுக் கொண்டிருக்கிறான். சந்தேகமே இல்லை. ராஜ்குமார் கடலில் மூழ்கி இறந்து போனது உண்மை... உண்மையேதான்? விசும்பி விசும்பி அழுது அவளுக்குத் தலைவலி வந்து விட்டது. உறக்கமின்றி வீட்டுக்குள்ளே எழுந்து உலவினாள்.

இப்படிப்பட்ட நரக வேதனையுடன் அவள் நீடித்து வாழ வேண்டுமா? மீண்டும் மீண்டும் அதே கேள்வி.

ஆறாவது நாள் காலை சூரியன் இருளைச் சுருட்டிக் கொண்டு பளிச்சென்று புறப்பட்டு விட்டது.

காமேஷின் பதிலை எதிர்பார்ப்பதில் பயன் இல்லை என்று அவள் குளித்து முடித்து விட்டு ஒரு கடிதம் எழுத உட்கார்ந்தாள்.

''மேஜையின் மீது நீ எனக்காக விட்டுப் போயிருந்த முகவரி கிடைத்தது. நன்றி. புரசைவாக்கம் ராமநாயக்கன் தெருவில் உள்ள விஸ்வா பவனில்தான் நீ இன்னமும் தங்கி இருப்பாய் என்ற நம்பிக்கையில் எழுதுகிறேன். மூன்று நாட்களுக்கு முன் என் மாமியாரின் பீரோவை ஒழுங்கு செய்த போது ஒரு கடித உறை கிடைத்தது. இதைத்தான் என் மாமியார் ஒரு நாள் நடு இரவு தட்டுத் தடுமாறித் தேடிக் கொண்டிருந்தார்கள் என்ற உண்மை எனக்குப் புலனாகியது. மகனிடம் தந்துவிடச்சொல்லி என் மாமனார்எழுதிய கடைசிக் கடிதம் அதில் இருந்தது. நான் படித்துத் தெரிந்துகொள்வதில்

இனி தவறில்லை என்று பிரித்துப் படித்தேன். நீ சொன்னது முற்றும் உண்மை. என் மாமனார் எல்லாவற்றையும் விவரமாகத் தம் மூத்த மகனுக்கு எழுதி முடிவில் அவரது மன்னிப்பைக் கேட்டுக் கெஞ்சியிருந்தார். தம்பியான உனக்குத் தமையன் சொத்தில் ஒரு பங்கு கொடுத்து ஆதரிக்க வேண்டும் என்று வெகுவாகக் கேட்டிருந்தார். உன்னை எங்கே தேட வேண்டும் என்ற விவரமும் கொடுத்திருந்தார். என் கணவர் செய்யவேண்டியை கடமையை நான் செய்து முடிப்பேன். கவலைப்படாதே. உனக்குச் சௌகரியப்பட்டபோது, நீ வந்து உன் பங்குச் சொத்தை ஏற்றுக் கொள்ளலாம். ஏற்பாடுகள் செய்து விடுவேன்.

உன் அண்ணி அகல்யா''

கடிதத்தை உறையில் இட்டு ஒட்டி, முகவரி எழுதி முடித்தாள். சிங்காரத்திடம் கொடுத்துத் தபாலில் சேர்க்கச்சொன்னாள்.

''ஐயாவுக்குக் கடிதாசியா?'' சிங்காரம் கேட்ட போது அவள் மௌனமாகக் கோபத்தை அடக்கிக் கொண்டு, தலையை அசைத்தாள்.

பின்னர் பூரணியை வீட்டைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டுத் தனியே கோவிலுக்குப் புறப்பட்டாள்.

காலை பூஜை முடிந்து வெகு நேரமாகிவிட்டதால் ஆள் நடமாட்டமின்றிக் கோயில் வெறிச்சென்றிருந்தது. பின் பக்கத்துத் தோட்டத்திலே பூசாரி யாருடனோ பேசுவது மட்டும் லேசாகக் கேட்டது. வெளி வாயிலில் நின்றபடிஅவள் கோயிலுக்குள் பார்த்தாள்.

கர்ப்பக்கிருகத்தில் தொங்கிய சரவிளக்கின் ஒளியில் மினுக்கிட்ட அம்மனின் முகத்தைச் சிறிது நேரம் துயரமும் வியப்புமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அகில உலகமே அதிசயிக்கத்தக்க அற்புதங்களை நிகழ்த்திப் பிரமிக்க வைக்கும் ஆற்றல் படைத்த அம்பாளே



அவளைக் கைவிட்டு விட்டாள். இனி அவள் யாரை நம்பி வாழப் போகிறாள்?

அர்த்தமற்ற கொடுமையான அந்த வருங்காலத்தை எண்ணிய மாத்திரம் கண்கள் கனத்தன. நெஞ்சு துயரத்தில் விம்மியது. பார்வையை நீர் மறைக்க மெல்லத் தள்ளாடியபடி அவள் வீட்டுக்குத்திரும்பி நடந்தாள்.

வீட்டு வாயிற் கதவு பரத்தலாகத்திறந்து கிடந்தது. திடுக்கிட்டுப் போன அகல்யா முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டு, வேகமாக உள்ளே நுழைந்தாள்.

ஹாலில் சுவரில் மாட்டியிருந்த பஞ்சரத்தினம் படத்தருகே அவன் நின்று கொண்டிருந்தான்!

ஆனந்த மிக்க அதிர்ச்சி. வீடே சுற்றுவது போன்ற மலைப்பு.

''அத்தான்! நீங்க...நீங்க...'' பேச முடியாமல் திக்கிக் கொண்டு, விம்மியபடி ஒரே தாவலில் அவனை இறுக அணைத்துக்கொண்டு. 'கோ' வென்று கதறிவிட்டாள்.

கண்கலங்கிப் போன ராஜ்குமார், அவள் முகத்தை நிமிர்த்திக் கண்ணீரை மெல்லத் துடைத்து விட்டான்.

''அகல்யா! நான்தான், உன்ராஜ்குமார்தான் வந்திருக் கேன். அழாதே. என்னை நல்லாப் பார்.'' உணர்ச்சி வசத்திலே தடுமாறினான்.

''அத்தான்! நம்ப முத்துமாரி நம்மைக் கைவிடலே அத்தான். எப்பேர்ப்பட்ட அற்புதத்தைச் சாதிச்சிட்டா நம் ஆத்தாள். கடல் முழுதும் தேடி உங்களைக் கைப்பிடியாகக் கொண்டு வந்து ஒப்படைச்சுட்டாளே! என் வயித்திலே பால் வார்த்திட்டாளே, என் தாய். அவள் கருணைக்கு ஈடு இணை ஏது அத்தான்? என் உடம்பெல்லாம் நடுங்குது. என்னைக் கொஞ்சம் பிடிச்சுக்கோங்கோ.'' பதறினாள். ஆனந்தத்தில் விம்மி விம்மி அழுதாள்.

''உண்மையில் இது ஆத்தாளின் அற்புதந்தான். கடலுக்குள் இருந்த கற்பாறையில் மோதி மயக்கமாகி மூழ்கிவிட்ட நான், மறுபடியும் பிழைத்தது ஓர் அதிசயம். இந்த அற்புதத்தை நிகழ்த்தியவள் அவள்தான். இதற்கேது சந்தேகம்?''

''உங்களைப் பார்க்கமலே அத்தை...'' விக்கினாள் அகல்யா.

''எல்லாம் எனக்குத் தெரியும். காமேஷை நான் சென்னையில் சந்தித்தேன். எல்லாத்தையும் தம்பி விவரமாகச் சொன்னான். இப்படி நடக்க வேணும்னு இருந்தது, நடந்தது.''

''ரொம்பக் குழப்பமா இருக்கு அத்தான்.''

''நான் கடலில் மூழ்கிப் போனது உண்மை. கற்பாறையில்மோதிக் காயமாகி மயங்கிப் போன நான் அப்படியே நீருக்குள் மறைஞ்சு போனபோது என்ன நடந்ததுன்னு எனக்கே தெரியாது. முழிச்சுப் பார்த்தப்போ ஒரு தனியார் மருத்துவமனையில் இருப்பதை உணர்ந்தேன். ஆனால் எனக்கு நினைவுவரப் பல நாட்கள் பிடிச்சதாம். நர்ஸிங்ஹோமின் டாக்டர்தான் விவரமா எல்லாத்தையும் சொன்னார்.''

''அங்கே எப்படிப் போனீங்களாம் அத்தான்?'' விம்மலை அடக்கிக்கொண்டு வியப்புடன் கேட்டாள் அகல்யா.

''நான் மூழ்கின இடத்துக்குச் சற்றுத் தூரத்திலே ஓர் அமெரிக்கப்பயணி நீந்திக் கொண்டிருந்தாராம். அவர் நான் அலைகள் நடுவே தத்தளிப்பதைக் கவனித்துச் சிரமப்பட்டு நீந்திக் கொண்டு வந்து என்னைக் காப்பாற்றி இழுத்துக் கரை சேர்த்தாராம். 'நான் யார், எந்த ஊர்?' என்று ஒன்றும் தெரியாத போதும், என்னைக் கருணையோடு அந்தத் தனியார் மருத்துவமனையில் வைத்து தம் செலவில் வைத்தியம்



செய்ததுடன், எனக்காகச் சில நாட்கள் சென்னையிலேயே தங்கியிருந்தாராம். துணி வாங்கிக்கவும் ஊருக்குப் போகவும் பணத்தை வைச்சிட்டு, அவர் சில நாட்களுக்கு முன் போயிட்டார்.''

''யாருக்கு யார் வந்து உதவியிருக்காங்க பார்த்தீங்களா அத்தான்!'' கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வியப்புடன் வினவினாள்.

''நம் ஆத்தாள் அந்த ரூபத்திலேதான் வந்தாள். எல்லாம் நீ எனக்காக அவளிடம் மனம் உருக வேண்டிக் கொண்டதன் பயன், நம்பினவங்களை நம் தாய் கைவிட மாட்டாள் என்பது நம் விஷயத்திலே உண்மையாச்சு பார்த்தியா?''

கலைந்து புரண்ட அவளது கூந்தலை ஒதுக்கி, அவளைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

''அந்தப் பரோபகாரி யாருன்னு தெரிஞ்சா.''

''அவர் தமது முகவரியை விட்டுப் போயிருக்கார். அவரது மகன் கடலில் மூழ்கி மரணமடைந்து போன துயரத்தின் துடிப்புத்தான் அவர் அப்படிக் கொந்தளிக்கிற கடலில் நீந்தி என்னைக் காப்பாற்ற உசுப்பியதாம். டாக்டர் எல்லாத்தையும் சொன்னபோது என் மனசிலே அவர் முத்துமாரியாகத்தான் தென்பட்டார். நம்ப ரெண்டு பேரும் நன்றி தெரிவித்து அவருக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டு விடுவோம். அதோட அவர் செலவழிச்ச பணத்தை எப்படியாவது அவருக்குத் திருப்பி விட முயற்சி எடுப்போம்.''

''அப்புறம் அத்தான்.''

''பிறகு நான் தங்கியிருந்த ஹோட்டலுக்குப் போன போது காமேஷ் செய்த மோசடி விளங்கியது. அதை அவர்களிடம் காட்டிக்கொள்ளாமல், நேரே அவன் தங்கியிருந்த லாட்ஜுக்குப் போனேன். அப்பத்தான் வெளியே புறப்பட அவன் அறைக் கதவைச் சாத்திக்கொண்டிருந்தான்.

39768
5718026



என்னைப் பார்த்துப் பேயைக் கண்டது போல் பீதியோட அலறினான். எல்லாத்தையும் ஒப்புக்கொண்டான். எனக்கு வந்த ஆத்திரத்தில் அவனை அடிச்சு நொறுக்கணும் போலத் தான் இருந்தது. செய்யக் கூடாத மகா பாதகத்தைச்செய்து விட்டுத்தம்பின்னு வேறே உறவான்னு பொங்கிப் போனேன். ஆனால் அவன், உன்னைத் தன் தெய்வமா நினைச்சுப் பெருமையாப் பேசியதைக் கேட்டு மனசு குளிர்ந்து போய் மன்னிச்சுட்டேன். உடனே தாமதம் பண்ணாம, ராத்திரி பஸ் பிடிச்சு ஊர் வந்து சேர்ந்தேன். வழியிலே சிங்காரம் என்னைக் கண்டு ஆச்சரியப்பட்டு, 'இந்தாங்க உங்க கடிதாசி'ன்னு இதைக் கொடுத்தான். உன்னைக் கேட்காம அதைப் பிரிச்சு...''

''உங்க அப்பா எழுதின கடிதத்தை உங்களைக் கேட்காம நான் பிரிச்சுப் படிச்சதுக்கு.''

''நமக்குள்ளே ரகசியம் எதுவுமே கிடையாதுன்னு அர்த்தம் அகல்யா.''

அவளைத் தன் அருகே இழுத்துக் கொண்டான் ''உன் இஷ்டப்படியும் அப்பா சொல்படியும் காமேஷுக்கு நம்சொத்தில் பங்கு உண்டு. கவலை வேண்டாம்.

''அத்தான்! உங்க தம்பி விவரமாச் சொன்னதைக் கேட்டபிறகு, என் மேலே உங்களுக்குத் தப்பா...''

அவள் முடிக்கவில்லை. துயரத்துடன் திக்கினாள்.

''பூக்குழியிலே நடந்து பூவாக என் முன் வந்து நிற்கிறாள் என் அன்பு மனைவி அகல்யா. என்றும் எப்பவும் என் மனசிலே இன்பமான நினைவுதான் நிறைஞ்சு இருக்கும் அகல்யா'' என்று சொல்லிக் கொண்டே, தன் அவளை நெஞ்சோடு இறுக்கமாக அணைத்துக்கொண்டான்.

இத்தனை துன்பங்களுக்குப் பிறகு,இப்போது அவர்கள் மனத்தில்தான் எத்தனை நிம்மதி-நிறைவு ஆனந்தம்!

நிறைந்தது